கொங்கணவர்

அருளிய

நடுக் காண்டம்

கடைக் காண்டம்

தாமரை நூலகம், சென்னை - 26.

கொங்கணவர்

நடுக்காண்டம் 500. கடைக்காண்டம் 500.

பதிப்பாசிரியர்

எஸ்.பி. ராமச்சந்திரன்

தாமரை நூலகம்

எண். 7, என்.ஜி.ஓ. காலனி,
வடபழனி, சென்னை - 600 026.
தொலைபேசி எண் - 23620249 9940073194

தாமரை வெளியீடு எண் : 216
முதல் பதிப்பு ஆண்டு : ஜூலை, 1998.
பதிப்புரிமை பெற்றது (C)
இரண்டாம் பதிப்பு மார்ச் 2006
மூன்றாம் பதிப்பு பிப்ரவரி 2017
நான்காம் பதிப்ப டிசம்பர் 2024

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	*கொங்கணவர்* *நடுக்காண்டம் 500.* *கடைக்காண்டம் 500.*
பதிப்பாசிரியர்	:	எஸ்.பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி.ஓ. காலனி, வடபழனி, சென்னை - 600 026.
பதிப்பு ஆண்டு	:	டிசம்பர் 2024
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 x 8
நூலின் தன்மை	:	சித்த மருத்துவம்
தாளின் தன்மை	:	14.2 கி.கி. வெள்ளைத்தாள்
எழுத்தின் அளவு	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	256 + XX
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூலின் விலை	:	ரூ. 170.00
கணிப்பொறி	:	கார்த்தி கிராபிக்ஸ், சென்னை - 26.
அச்சிட்டோர்	:	*கிரியேட்டிவ் ஆப்செட்* *நுங்கம்பாக்கம், சென்னை - 34*

பதிப்புரை

சித்தர் நெறியில் மிகுந்த ஆர்வத்தோடு, நூல்களைக் கற்பதோடு யோக சாதனைகள் புரியவும் விரும்புகிற இளைஞர்கள் என்னிடம் வரும் போது மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

சித்தர்கள் எல்லாவற்றையும் பொதுப் படையாகத் தங்கள் நூல்களில் கூறிவைத்துள்லார்கள். அவர்கள் எதையுமே மறைக்கவில்லை. ஆயினும் எத்தனை நூல்களைப் படித்த போதிலும் இன்னும் தங்களுக்கு ஒன்றும் புரியாதது போலவே உணரும் தவிப்பு சித்தர் நெறியில் செல்ல முயலும் எல்லோருக்கும் உண்டாகிறது.

குரு முகத்தான் உண்மைகளை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது சித்தர்களின் கட்டளை. ஆனால் இன்றைக்கு முற்றும் உணர்ந்த குரு யார் இருக்கிறார். அப்படி ஒருவர் எங்காவது இருக்கலாம். ஆனால் பெரும்பாலானவர்களுக்கு அவரைச் சந்திக்கும் பாக்கியம் வாய்க்காமலே போய்விடுகிறது.

பொதுவாக தியானம் யோகம் என்ற பயிற்சிகளில் ஈடுபடும் பொழுது, மனதில் உறுதி ஏற, ஏற, எண்ணங்களில் வலு உண்டாக உண்டாக - அப்படி மன உறுதியும் எண்ணத்தில் வலுவும் ஏற்றிக் கொண்டவரிடம் சில அபூர்வ சக்திகள் ஏற்படுகின்றன. அவர் நினைப்பது நடக்கிறது. ஒரு அபாயத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று தீவிரமாகப் பிரார்த்தனை செய்தால் பலிக்கிறது. உடனே அவர் தம்மிடம் இறையருள் குடி புகுந்து விட்டதாக நினைத்துக் கொல்கிறார். இறையருளின் வெளிப்பாடுதான் அது. அதில் ஐயமில்லை ஆனால் அதனால் அவர் ஏதோ பெரிய சாதனையை அடைந்து விட்டதாகவோ, அடுத்த சித்தர்தான் தான் என்றோ நினைத்துக் கொண்டால் அதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறே இருக்க முடியாது.

அதேபோல் வெறும் கையிலிருந்து விபூதி, குங்குமம் கொட்ட வைக்கும் சாமியார்கள், சிலைகள். வேல், சூலம், போன்றவற்றை வரவழைத்துக் கொடுப்பவர்களைப் பார்க்கிறோம். இந்த சாமியார்கள் தங்களிடம் தெய்வீக சக்தி பூரணமாக வந்து விட்டதாகக் கூறிக் கொள்வதையும் கேட்டிருக்கிறோம். இவை யெல்லாம் சாதாரணமான ஜால வித்தைகளைத் தவிர இறையருளால் நடைபெறும் அற்புதங்கள் அல்ல.

இன்னும் சிலர் குறி சொல்வதன் மூலம் தங்கள் தெய்வீக சத்தியை வெளிப் படுத்துவார்கள். இதிலும் தெய்வீக சக்தி ஒன்றும் கிடையாது. அந்தமனிதரிடம் உள்ள ஒரு ஆற்றலால் அவர் நடக்கப் போகும் காரியங்கள் சிலவற்றைச் சொல்ல முடியலாம். இதில் சந்தர்ப்ப சூழ்நிலைகளும், மனித மனோபாவங்களும் தான் அதிகமாக - ஏதோ ஒரு தெய்வீக சக்தி இயங்குவதாக நம்ப வைக்கின்றனவே தவிர வேறில்லை.

சித்தர்கள் காய சித்தி, யோக சித்தி, ஞானசித்தி என்று தாங்கள் அடைய வேண்டிய சாதனைகளைப் பட்டியல் போட்டு வைத்துக் கொண்டு முயற்சியில் ஈடுபட்டார்கள். ஒவ்வொன்றுக்கும் பல ஆண்டுகள் பிடிக்கலாம். கடினமான முயற்சியும் உண்மையான உழைப்பும் தேவைப்படும். இரண்டும் இல்லாமல் சுலபமாக நான் சித்தர் நெறியில் முன்னேறிவிட்டேன் என்று யாராவது சொன்னால் 'ஐயோ பாவம்' என்று அவர் அறியாமை கருதி பரிதாபப் படத்தான் வேண்டும்.

ஆனால் காயசித்தி அடையாமல் மற்ற சித்திகலை அடைய முடியாது என்று சித்தர்கள் அடித்துக் கூறிய காரணம் வலுவான உடல்வேண்டும். பனி, மழை, வெயில் எல்லாவற்றையும் தாங்கக் கூடிய உடல் வலுவேண்டும். அப்பொழுது தான் தியானத் தீயை உடம்பில் தாங்க முடியும் என்பதால் தான் !

பிராணாயாமம் செய்யும் பொழுதே உடலில் வெப்பம் ஏறுவதைக் காணமுடியும். சில சமயங்களில் உடம்பில் தீப்பற்றிக் கொண்டதுபோல் இருக்கும். அப்படி யென்றால் சுழிமுனையில் மூச்சை நிறுத்திப் பரவெளியில் உள்ள பரம்பொருளைக் குறித்துத் தியானம் செய்வ தென்பது - அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

மூக்கைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால் தியானம் ஆகாது. உடம்பில் உள்ள நாடி நரம்புகள் அத்தனையும் ஒடுங்க வேண்டும், அவ்வளவும் சுழிமுனையில் வந்து கூட வேண்டும். அப்போது தான் ஓங்கார ஒளிவட்டம் தோன்றும்.

ஒரு நொடி அல்லது இரண்டு நொடி நேரம் இது கிடைத்து விட்டாலே ஆஹா ஒஹோ என்று குதிப்பார்கள். ஆனால் அது போதாது. தியான நிலையில் நாளுக்கு நாள் நேரத்தை அதிகப் படுத்திப் பழக வேண்டும். நாழிகைக் கணக்கிலிருந்து நாள் கணக்கு பின் வாரக் கணக்கு

மாதக் கணக்காகக் கூட தியான யோகத்தில் வயித்திருக்கும் சாதனையை அடைய வேண்டும். அதற்குக் கல்தூண் போன்ற உடல் வலு இருந்தால் மட்டும் முடியும். இல்லாவிட்டால் உடல் தானாகத் தீப்பற்றி எரிந்து விடும் இல்லாவிட்டால் வரண்டு கருகி விழுந்து விடும்.

உண்மையான தியானத்தில் மனம் லயிக்க வைத்துப் பாருங்கள் அப்போது தெரியும்.

பிராணாயாமம் அதாவது மூச்சுப் பயிற்சி, மூச்சை உள்ளே அடக்கிப் பிடித்தபடியாக மூலாதாரம், சுவாதிட்டானம் மணி பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆதாரங்களில் நிற்க வைத்து சுழிமுனை தியானத்திற்கு வந்து சேர்வதென்பது கல்தூண் போன்ற உடல்வலு உள்ளவர்களாலேயே சாதிக்க முடியும்.

சித்தர் நெறியின் இறுதி நோக்கம் தியானத்தில் வெற்றி பெறுவது மட்டும் அல்ல. அதற்கு அப்பாலும் பல படிகள் உள்ளன. பர வெளியில் சஞ்சரிப்பது என்பது அடுத்த படி. கூடு விட்டுக் கூடு பாய்வதும் அதன் ஒரு அங்கம் தான்.

அதைப் பற்றியெல்லாம் ஒன்றுமே தெரிந்து கொள்ளாமல் தங்களை ஞானிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் பித்தர்களே, ஏனென்றால் மனித ஆத்மா தன்னுடயே ஸ்தூல சரீரமாகிய இந்த தேகத்தை விட்டு வெளியே சென்று பார்க்க ஒருபோதும் சம்மதிப்பதில்லை. மரணம் ஒன்று மட்டும்தான் அதைப் பிரிக்க முடியும். ஆனால் சித்தர்கள், உயிரோடு இருக்கும் காலத்திலேயே உடலைவிட்டு வெளியேறவும் இயங்கவும் திரும்பவும் வந்து உடலில் பிரவேசித்துக்கொள்ளவும் அறிந்திருந்தனர்.

சித்தர் நெறியைப் பற்றி ஓரளவு தெரிந்தவர்களும் இதை ஒப்புக் கொள்வார்கள். ஆனால் தாங்களே அந்த நிலையை அடைய முடியும் என்று நம்ப மாட்டார்கள். அதைப்பற்றிச் சிந்திக்கவே அஞ்சவார்கள்.

எதற்காக இங்கே இதைப் பற்றிச் சொல்கிறோம் என்றால் சித்தர் நெறி என்பது ஏதோ பூஜை புனஸ்காரம், பஜனை, கூட்டவழிபாடு என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் தாங்கள் சரியான பாதையிலேயே சென்று கொண்டிருந்த போதிலும், செல்ல வேண்டிய தூரம் இன்னும் வெகுதூரம் இருக்கிறது. என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே.

சித்தர் நெறியில் செல்லத் துணிந்து விட்ட ஒரவர் சூக்குமதேகத்தோடு பர வெளியில் பிரவேசிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

இந்த உலகத்தோடு ஒட்டிக் கொண்டிருக்கும் வரை மனித வாழ்வில் எல்லாம் இயல்பாக நடை பெறுகிறது. ஆனால் இந்த உலகத்தைவிட்டு வெளியே ஒரு அடி எடுத்து வைப்பது கூட - மிகப் பெரிய காரியம். ஏனென்றால் புற உலக வாசிகள் அதை அனுமதிக்க மாட்டார்கள். அதனால் தான் இந்த உலக வாழ்க்கைக்கு அப்பால் என்ன இருக்கிறது. என்ற இரகசியம் இன்றுவரை அறியப்படாமலேயே இருக்கிறது.

இதைச் சொல்வதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தகுதி என்று சொல்வதற்கு அவ்வளவு பெரிய அளவில் ஒன்றும் இல்லாவிட்டாலும் - என்னுடைய பனிரெண்டாவது வயதில் நான் சூக்குமதேகத்தோடு வெளியே புறப்பட்டிருக்கிறேன். வெளியில் சென்றுவிட்டநான் மீண்டும் உடலை அடைந்துவிட்டது யார் செய்த புண்ணியமோ தெரியாது. ஆனால் மனித உலகிற்கு வெளியான உலகைப் பற்றி எனக்குத் தெரியும் என்று சொல்லிக் கொள்ளும் தகுதி எனக்கு உள்ளது என்று நினைக்கிறேன்.

இரண்டாவதாக சூக்கும உடலோடு வசிப்பவர்களை இரண்டு முறை நான் சந்தித்திருக்கிறேன் இது கற்பனையோ பித்தலாட்டமோ அல்ல. நூற்றுக்கு நூறு உண்மை.

அப்படி யென்றால் சூட்சும உடலில் வசிப்பவர்களோடு தொடர்பு கொள்ள முடியுமா என்ற கேள்வி எழலாம்.

முடியும் என்பதே எனது பதில்.

ஆனால்,

ஒரே நாட்டைச் சேர்ந்த இரண்டு ஒற்றர்கள் முதன் முதலாகச் சந்திக்கிறார்கள் அதற்கு முன் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்ததில்லை.

- முதலில் அவன் ஒற்றன் தானா? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

-இரண்டாவது அவன் தங்கள் நாட்டைச் சேர்ந்தவன் தானா? அல்லது எதிரியிக் ஆளா, என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலில் ஒருவன் ஏதோ ஒரு குறிச் சொல்லைக் கூறுவான். மற்றவன் அதற்குத் தகுந்த பதிலான வேறொரு குறிச் சொல்லைக் கூறிவிட்டால் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்வார்கள்.

மனித உலகத்திலேயே இவ்வளவு கட்டுப்பாடு இருந்தால் மனித உலகத்தில் இருப்பவர் வெளி உலகத்தில் இருப்பவரோடு தொடர்பு கொளவது - அதற்கும் சில கட்டுப்பாடுகள் விதிமுறைகள் இருக்க வேண்டும் அல்லவா? இந்தக் குறிச்சொற்களே மந்திரங்கள்,

பூஜைகள்

சித்தர்கள் அனைவருமே பூஜாவிதிகளைப் பற்றிப் பாடியுள்ளனர். கணபதி பூஜை, கந்தன் பூஜை, பிறகு பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மயேசன், சதாசிவன் கடைசியாக வாலை பூஜை வரை செல்கிறது சித்தர்களின் பூஜை.

பூஜை செய்வது என்பது நமக்கு சமுதாயப் பழக்கமாக ஒன்றிப் போய்விட்டது. அதனால் நாம் அதைப்பற்றி அதிகமாகச் சிந்திப்பதில்லை.

சித்தர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தங்களுக்கு முன் சித்தர்களாக இருந்து, செய்த தவங்களின் பயனாக இறைமை நிலையில் உயர்வு பெற்று பரவெளியில் கலந்து நிறைந்தவர்களாக இருப்பவர்களையே பூஜை செய்தனர்.

அவர்களுடைய ஆசியும் உறுதுணையும் இல்லாமல் தாங்கள் பரவெளியில் பிரவேசிப்பது என்பது முடியாத காரியம் என்பதை அறிந்து அவர்களை மகிழ்வித்து, தங்கள் மேல் நல்லெண்ணம் உண்டாகச் செய்து, தங்களுக்கு அனுகூலமாக அவர்கள் விளங்க வேண்டும் என்பதற்காகப் பூஜை செய்தார்கள்.

சித்தர் நெறியில் பூஜை ஒரு இன்றியமையாத படியாகும். மற்றவர்கள் நினைப்பதைப் போல் பூலோகத்தில் தங்களுக்கு ஆஸ்திகள் வேண்டும் அந்தஸ்து வேண்டும் எனபதற்காகச் சித்தர்கள் பூஜை செய்யவில்லை.

எந்தச் சித்தரும் தமக்கென்று சொத்து சேர்த்துக் கொண்டதாகவோ ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்து அரசாண்டதாகவோ வரலாறே கிடையாது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றபடி அவர்கள் பரதேசிகளாக வாழ்ந்தார்கள். அடுத்த வேளை உணவைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டதே கிடையாது.

அவர்களுடைய சிந்தனையெல்லாம் உலகத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களிலேயே லயித்திருந்தது. அதனால் பரவெளியில் வசித்த தங்கள் மூதாதைகளான சித்தர்களின் அருளாசி பெறுவதற்காகவே பூஜைகளை நடத்தினார்கள்.

மற்றவர்கள் செய்யும் பூஜைக்கும் சித்தர்களின் பூஜைக்கும் உள்ள வேறுபாடு. சக்கரங்கள்.

சித்தர்கள் வணங்கிய ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு சக்கரம் உண்டு. சக்கரம் வரைந்து கலசங்களை நிறுத்தி (ஸ்தாபித்து) அவை அவற்றுக்கு உரிய மந்திரங்களைச் சொல்லி. மந்திர எழுத்துக்களை எழுதி அங்கங்கு வைக்க வேண்டிய பலிப் பொருள்களை வைத்து ஒரு முறைப்படியாகப் பூஜை செய்தார்கள்.

சக்கரங்கள் என்பவை பரவெளியில் இயங்கும் தெய்வங்களின் சக்தியைக் கவர்ந்து இழுக்கும் காந்த மண்டலங்கள். அவற்றில் வ்ரையப்படும் எழுத்துக்கள் பரவெ்ளியில் உள்ள அத்தெய்வங்களுக்குப் புரியும்படியான குறிச் சொற்கள்.

முன்பே கூறினோம். இந்தக் குறிச் சொற்களின் துணையாலேயே பரவெளியில் வசிப்பவர்களோடு தொடர்பு கொள்ளமுடியும். அவர்கள் நம்மைப் புரிந்து கொள்ள்ச் செய்ய முடியும் என்ற அதே முறைதான் பூஜைகளில் கையாளப்படுகிறது.

பரவெளியில் வசிப்பவர்களுக்குப் படையல் போட வேண்டியது அவசியம் தானா என்று ரையாண்டி செய்பவர்கள் இருக்கிறார்கள். பரவெளியில் வசிப்பவர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு ஏற்பட்டால் அவர்களுக்குப் படையல் போட வேண்டியதும் அவசியம்தான்.

பஞ்ச பூதங்களாலான உடல்கள் அவர்களுக்கு இல்லை. அதனால் பஞ்ச பூதங்களாலான உணவு வகைகளை உட்கொள்ள வேண்டிய

அவசியம் அவர்களுக்கு இல்லை. ஆவி உருவமாக உள்ள அவர்கள் நீங்கள் படைக்கும் உணவுவகைகளின் ஆவியை அனுபவிப்பதாலேயே திருப்தியடைகின்றனர். மணத்தை நுகர்வதிலேயே மகிழ்கின்றனர்.

இந்த விளக்கம் போதுமானதாக இராது. ஆனால் முற்றிலும் பருப் பொரள்களால் ஆன உலகத்தில் வசித்து அவற்றையே நம்பிக் கொண்டுள்ளவர்களுக்கு வேறு எந்தவித விளக்கம் கூறினாலும் போதுமானதாக இராது.

சித்தர் நெறியில் செல்பவர்களால் இதைப் புரிந்து கொள்ள முடியும்.

பூஜைகளில் மந்திரச் சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. தியானங்களில் அச் சொற்களுக்கு மட்டுமே இடம் உண்டு. தியானம் செய்பவர் ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை உத்தேசித்து அவருக்குரிய மந்திரத்தை விடாமல் உச்சரித்தபடி தியானம் செய்யவேண்டும்.

இந்த மந்திரம் அந்த தெய்வத்தை அடையாளம் காட்டக் கூடியதும், வசியப்படுத்தக் கூடியதும், கட்டுப்படுத்தக் கூடியதும் ஆகும். ஆயிரம் உரு. வட்சம் உரு என்று ஒரு மந்திரத்தை ஜெபிக்கும்போது, அந்த மந்திரத்திற்குரிய தேவதை செபம் செய்பவன் மேல் அக்கரை கொண்டு அவனிடம் வந்து அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறது.

சின்ன தேவதையாக இருந்தால் அவனிடமே தங்கிவிடவும் கூடும். இல்லாவிட்டால் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று வந்து கேட்கவும் கூடும். அல்லது தன் அருள் சக்தி அவனைச் சூழ்ந்திருக்கும் படியாகத் தங்கிவிடுவதும் உண்டு. அது அந்த தேவதையின் சக்தியைப் பரவெளியில் வியாபித்திருக்கும் தன்மையையும் பொறுத்தது.

மந்திரங்கள் என்ற குறிச் சொற்களால் தெய்வங்களை வலுப்படுத்தமுடியும் என்பதற்கு என் அனுபவத்தில் ஏற்பட்ட ஒரு எடுத்துக் காட்டைக் கூற விரும்புகிறேன்.

தூக்கத்தில் போட்டு அமுக்கிக் கொள்ளும் அமுக்கான் என்ற குட்டிப் பேயிடம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடிய அனுபவம் பலருக்கும் இருக்கலாம். கை கால்களை உதறுகிற மாதிரி இருக்கும். உதற முடியாது. எழுந்து ஓட நினைப்போம் எழ முடியாது. வாய்விட்டுக்

கூவி அழைக்கிற மாதிரி இருக்கும். குரல் வெளியே வராது. அமுக்கான் போட்டு அமுக்கிக் கொண்டால் படுகிற கஷ்டங்களைச் சொல்ல முடியாது.

இதை ஒரு வகை நரம்புக் கோளாறு என்று சொல்பவர்கள் உள்ளனர். மனம் பாதிக்கப்படும் நிலைகளிலேயே அமுக்கான் அமுக்கிக் கொண்டதாக உணர்ச்சி ஏற்படும் என்கிறார்கள். எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். இங்கு எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையே கூறுகிறேன்.

அமுக்கான் என்ற இந்தக் குட்டிப்பேய் என்னை மிகவும் துன்புறுத்தி வந்தது. நான் மிகவும் கஷ்டப்பட்டேன் அவ்வாறு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது ஒரு இரவு என் மனதில் திடீரென்று ஒரு உணர்வு உண்டாயிற்று. 'ஓம் நம சிவய' என்ற மந்திரத்தை உச்சரித்தேன்.

பட்டென்று ஏதோ விலகிய மாதிரி இருந்தது. அழுக்கான் பேய் போன இடம் தெரியவில்லை.

அதன்பிறகு ஒன்றிரண்டு முறை அது என்னிடம் வந்தது. ஆனால் மந்திரத்தை உச்சரித்ததும் மாயமாகப் பறந்துபோய்விடும். பிறகு அது வ்ரவே இல்லை.

நான் அந்த மந்திரத்தை செபம் செய்து சாதனை செய்து கொள்ளவில்லை. சித்தி பெற்றுக் கொள்ளவில்லை. ஒனறுமே செய்யவில்லை. சாதாரணமாகவே அதை உச்சரித்தேன். அமுக்கான்பேய் ஓடிவிட்டது.

இது கதை அல்ல. கற்பனை அல்ல உண்மை. என் அனுபவ பூர்வமான உண்மை. மந்திரச் சொற்களுக்கு ஒரு ஆற்றல் உள்ளது. அந்த ஆற்றல் பரவெளியில் உலவுகின்றவர்களால் புரிந்து கொள்ளப்படுவதால் ஏற்படுகிறது.

இந்த உலகத்தில் வசிப்பவர்கள் பரவெளியில் வசிப்பவர்களோடு தொடர்பு கொள்ள உதவும் குறிச்சொற்களே மந்திரங்கள் ஆகும்.

பூஜைகளுக்கு அடுத்தபடியாகச் சித்தர் நெறியில் முக்கியமான இடம் பெறுவது தியானம்.

தியானத்தின் மூலம் நம்மைச் சூழ்ந்துள்ள பிரவெளியில் இயங்கும் இறையாற்றல்களில் ஏதாவது ஒன்றை நாம் அணுக முயல்கிறோம். அதை வசப்படுத்துகிறோம். அதை துணையாக்கிக் கொள்கிறோம். அப்படித் துணையாக்கிக் கொண்டு இகலோக வாழ்வில் சுகபோகங்களை அனுபவிக்க நினைக்கிறவன் ஆன்மீக ரீதியாகப் பாழாகப் போகிறான்.

இங்கே ஒவ்வொருவரும் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது. சாதாரண மனிதன் உலக வாழ்க்கையில் சொத்து சுகம் பெறுவதற்காகவும் தன் பிள்ளை குட்டிகள் நன்றாக இருப்பதற்காகவும் தான், பூஜை புனஸ்காரம் தியானம் வழிபாடு எல்லாம் செய்கிறான். பர உலகில் லட்சியம் இல்லாதவனுக்கு அது சரி.

ஆனால் சித்தர் நெறியில் செல்பவன் இகலோக வாழ்வில் இச்சையில்லாதவன் பணம், புகழ், பஜனை கோஷ்டிகள், பரிவாரங்கள், மடம் என்றெல்லாம் ஆசைப் படுவானானால் அவன் சாத்தானின் அவதாரம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அப்படிப் பட்டவர்களையே போலி குருமார்கள் என்று சித்தர்கள் சாடுகிறார்கள். தனக்கே வழி தெரியாதவன், உலகத்திற் கெல்லாம் செல்ல வழி காட்டுகிறேன் என்று சொல்வது போல் பிதற்றிக் கொண்டு திரியும் எத்தர்கண்டு. இவர்களை உதைத்துத் தூரத்துங்கள் என்கிறார் அகத்தியர்.

தியானம் இறை உணர்வை வளர்க்கிறது. இறைவனோடு ஒன்றச் செய்கிறது. தன்னை உணர்ந்து கொள்ளவும் தான் அவனே என்ற பெரு நிலையை அடையவும் உதவி செய்கிறது. இதைப் புரிந்து கொள்ளாதவன் சித்தர் நெறியில் செல்வதாகச் சொல்வதே பொய், அவன் போடுவது வேஷம், பேசுவது புரட்டு, அவனால் யாருக்கும் நன்மை இல்லை.

பூஜையாலும் தியானத்தாலும் சித்தர்கள் அஷ்டமா சித்திகளும் அடைந்து மகோன்னத நிலை பெற்றார்கள்.

பூஜைகள் இதற்குமுன் சித்தர்களாக இருந்து இறைநிலையடைந்தவர்களின் அன்பும் ஆசியும் வெறுவதற்காக ! தியானம் அவர்களைத் தம்மில் ஐக்கியம் அடையச் செய்வதற்காக !

சித்தர் நிலையை அடைபவர், சாதாரண மனிதர் வாழும் இந்த உலகத்திற்கும், உடலில்லாமல் ஆசிகளாக உள்ளவர் வாழும் பர

உலகுக்கும் ஒரு தொடர்பாக, பாலமாக விளங்குகிறார் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இந்த உலகத்தில் உள்ளவர்கள் அந்த உலகத்திற்கு வருவதை அவர்கள் விரும்புவதில்லை.

இங்கு உள்ளது போலவே அங்கும் ஆயிரக்கணக்கான வேறுபாடுகள் உள்ள ஆவிகள் வசிக்கின்றன. அவற்றிலும் நல்லவர்கள் கெட்டவர்கள் உண்டு.

பூதப் பிரேத பைசாச கணங்கள் என்றும்,
சித்தர் சாரணர் இயக்கர் இராட்சசர் என்றம்
கந்தர்வர் கின்னரர் கிம்புருடர் என்றும்
தேவர்கள் ரிஷிகள் என்றும்
இறைநிலையில் உள்ளவர்கள் என்றும் பலவேறு விதமான நிலைகளில் உள்ள ஆவிகள் இயங்குவதாகக் கூறுகின்றனர்.

தியான சாதனையால் பரவெளியில் பிரவேசிக்கும் ஆற்றல் பெற்றவர் துஷ்ட சக்திகள் தம்மைக் கண்டவுடன் பயந்து விலகும் படியாகவும் நல்ல சக்திகள் என்றும் தமக்குத் துணை புரியத் தயாராக இருக்கும்படியாகவும் உள்ள சக்தியைப் பெற வேண்டும். பூஜைகளும் தியானங்களும் இந்த ஆற்றலைப் பெற உதவுகின்றன.

மந்திர சித்தி

சித்தர்கள் மந்திர சித்தி பெறவேண்டியதன் அவசியம் எதனால் ஏற்படுகிறது என்பது இப்பொழுது புரிந்திருக்கும்.

பரவெளியில் உலவும் குட்டிப்பேய்கள் சித்தர்களைக் கண்டவுடன் தாமாக விலகி ஓடிவிடும். சக்தியுள்ள பேய்கள் சித்தர்களுக்குக் கவசமாக விளங்கும் தெய்வீக சக்தியைக் கண்டு விலகிவிடும். தெய்வீக சக்திகள் எப்பொழுதும் அவர்களுக்குத் துணையாக இருக்கும் - இந்த ஆற்றலை பெறுவதற்காக் சித்தர்கள் மந்திர சித்தியால் அஷ்டமா சித்திகளை அடைய வேண்டும்.

மந்திர சித்தி பெறாமல் சித்தர் என்ற நிலையை அடையவே முடியாது.

1. வசியம் - தம் வசப்பட்டு இருக்கச் செய்வது.

2. மோகனம் - தம்மிடம் மயங்கிக் கிடக்கும் படிச் செய்வது.

3. ஆகர்ஷணம் - தம்மால் கவரப்பட்டு எதிர்த்தவர் சுய நினைவற்ற நிலையில் இருக்கச் செய்வது.

4. உச்சாடனம் - உச்சாடித்தல் அதாவது ஒரு பொருளைத் தான் விரும்பியபடி எழுதல்.

5. தம்பனம் - அசையாமல் நிறுத்துவது.

6. பேதனம் - பிரிப்பது, திசைமாற்றி விடுவது, விலகச் செய்வது.

7. வித்வேடனம் - வெறுப்படையச் செய்வது. தாம் இருக்கும் திசையையும் திருப்பிப் பார்க்காமல் போகச் செய்வது.

8. மாரணம் - கொல்வது. தீய சக்திகள் விலகச் செய்ய முடியாதபோது அவற்றை அழித்து விடுவது.

சித்துகளைப் பெறுவது உலகத்திற்கு நன்மை செய்வதற்காகவே தவிரக் கெடுதல் செய்வதற்காக அல்ல. மாந்திரிகன் என்றாலே பில்லி சூனியம் வைப்பவன், மற்றவர்களுக்குக் கெடுதல் செய்பவன் என்ற அளவுக்குத் தவறான கண்ணோட்டம் ஏற்பட்டுள்ளது. சோதிடன் மருத்துவன், மாந்திரிகன், முதலானவர்கள் உலகிற்கு நன்மை செய்வதற்காகவே ஏற்பட்டவர்கள். தெய்வீக நில்லயில் உள்ளவர்கள். அந்த நிலையிலேயே நாம் அவர்களை வைத்துப் பார்க்க விரும்புகிறோம். போலிகளைப் பற்றிய கவலை நமக்குத் தேவை இல்லை. போலிகளைக் கண்டவுடன் அவர்களை நெருங்காமல் விலகிவிடவேண்டும். அவர்களை ஏறெடுத்துப் பார்க்கக் கூடாது. பேச்சைக் கேட்கக் கூடாது.

காய சித்தி, வாத சித்தி, யோக சித்தி, ஞான சித்தி, மந்திர சித்தி என்று சித்திகளைப் பெற்று சித்தராகும் வழியைச் சித்தர்கள் தெளிவாகவே கூறியுள்ளார்கள் இதைத் தவிர வேறு குறுக்கு வழி கிடையாது. தியானம் ஒன்றாலேயே மனிதன் அபூர்வமான ஆற்றலைப் பெற்றுவிட முடியும். ஆனால் அதைக் கண்டு புகழ் பெருமை என்று குறுக்கு வழியில் நுழைந்து விட்டானானால் அதோடு அவன் கதை முடிந்துவிடும். அவன் சித்தர் என்ற நிலையை அடையவே முடியாது.

இறுதி லட்சியத்தை அடையும் வரை மனைதத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். சித்திகளைப் பெற்றவுடன் சர்வ வல்லமை

படைத்து விட்டதாக மகிழ்ந்து விடக் வடாது. சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகளிலேயே இதற்கான சான்றுகளைக் காணலாம்.

கொக்கென்று நினைத்தாயோ சொல்கணவா? என்று ஒரு குடும்பப் பெண் கேட்டவுடன் வெட்கித் தலைகுனிந்து மறுபடியும் தவம் செய்யப்போன கொங்கணவரின் வரலாற்றை மறந்து விடக்கூடாது.

தம்முடைய நீண்ட அனுபவங்களின் வாயிலாகத்திரட்டிய உண்மைகளையே கொங்கணவர் முக்காண்டங்களாகக் பாடி வைத்தார். முதல் காண்டம் 500. நடுக்காண்டம் 500. கடைக்காண்டம் 500.

ஞானத்தை வெளிப்படையாகக் கூறும் நூல் இதைப்போல் வேறொன்று கிடையாது என்று எல்லோருமே புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். திருமூலர், அகஸ்தியர், போகர் - சித்தர்கள் அனைவருமே கொங்கணவர் கடைக் காண்டத்தின் பெருமையைப் பாராட்டியுள்ளனர்.

முக்காண்டங்களில் நடுக்காண்டம் கடைக்காண்டம் இரண்டும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கிடைத்தது. முதல் காண்டமும் கிடைத்தால் ஒரே நூலாக வெளியிடலாம் என்ற எண்ணத்தில் சுவடிகள் வைத்திருக்கும் நூலகங்களில் எல்லாம் சல்லடைபோட்டுச் சலித்துப் கிடைக்க வில்லை.

கிடைத்துள்ள மட்டும் மக்களுக்குப் பயன் படட்டுமே என்ற எண்ணத்தில் நடுக்காண்டம், கடைக்காண்டம் இரண்டையும் சேர்த்து வெளியிடுகிறோம். முதல் காண்டம் யாரிடமாவது இருந்து கொடுத்து உதவினால் அவர்கள் சித்தர் நெறிக்கச் மட்டுமல்ல. தமிழுக்கு தமிழ் நாட்டுக்குமே மாபெரும் சேவை செய்தவராவார்கள்.

எஸ்.பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

நடுக்காண்டம் 500.

*****

கடைக் காண்டம் 500

*****

உ

பரமபதி துணை

கொங்கண நாயனார் அருளிச்செய்த

நடுக்காண்டம் - 500.

காப்பு

ஆதியந்தமில்லாத வெளியுந்தாண்டி
    அகன்றுநின்ற மூலகுரு பாதம்போற்றி
சோதியந்தத் துள்ளிருக்கும் பெரியோர்பாதந்
    துரியவெளிக் குட்புகுந்த ரிஷிகள்பாதம்
நீதியென்று யெனையாண்ட போகர்பாதம்
    நித்தம்நித்த மிறைஞ்சிநின்று நினைவாய்ப்பாரு
வாதியென்ற பேரெடுத்தஞ் ஞூறுஞ்சொன்னேன்
    மனோமணித்தாய் பதங்காப்பு மகிழ்ந்துபாரே. (1)

பாரப்பா வாதியென்றால் பூசைவேணும்
    பரிவாகச் சிவன்வேணும் தியானம்வேணும்
நேரப்பா வாசியுட யோகம்வேணும்
    நேராக லட்சயத்தை நிறுத்தவேணுஞ்
சேரப்பா மதியமுர்த முண்ணவேணுஞ்
    செகமெல்லாம் வித்தையென்ற ஞானம்வேணும்
காரப்பா குருவினுட பதத்தைநித்தங்
    காத்தவர்க்குக் குறைவில்லை கர்மம்போமே. (2)

கர்மமென்றூந் தர்மமென்று மிரண்டுசொல்வார்
    கரையில்லாப் பிறப்பிறப்பு முண்டென்பார்கள்
மர்மமென்ற கருச்சொல்வேன் நன்றாய்க்கேளும்
    மகத்தான பெரியோர்கள் சொல்லார்சொல்லார்
சென்மமென்ற செந்துக்க ளெங்கேயாச்சு
    செந்துடனே திரும்பியது மெங்கேபோச்சு
தன்மமென்று சொல்லுதற்கு யுலகம் பேயாஞ்
    சாற்றினேன் தெளிவாகச் சாற்றினேனே. (3)

சாற்றுறேன் சராசரங்கள் சீவராசி
சகலபதம் புவனமொடு அண்டமெல்லாம்
ஏற்றுறேன் பூரணத்தி லுதித்ததப்பா
யெவ்வாறு வுதித்ததென்றால் சொல்லக்கேளு
தோற்றுறதோ யேழுவகை யோனிநாலுஞ்
சொற்பெரிய வித்துவதாய்ந் துலங்கும்போது
முத்திறத்தோர் மேகசலங் கடல்நீர்போலே
ஓகோகோ செகமெல்லாம் போதமாச்சே. (4)

போதமெங்கும் நிறைந்துநின்ற குருவேஅய்யா
பூரணமே சொன்னவகைப் போக்கங்கேது
நாதமங்கே யோங்கிநிற்கப் பூரணத்தைச் சேர்ந்தால்
நல்வினையும் தீவினையும் பிறப்பாம்போச்சு
கீதமங்கே கெட்டிருந்து பெண்ணைக்கட்டி
கெடுகிறதோர் மாண்பருக்குப் பிறப்பாமைந்தா
நீதமங்கே வாருதியிற் சலத்தைமேகம்
நேராக இறைத்ததுபோல் பிறப்புண்டாமே. (5)

உண்டான பிறப்பதுவு மிரண்டதானால்
ஓகோகோ பூரணத்தைத் தொட்டுமீளுந்
தண்டான பூரணத்தை நோக்கநோக்க
தனிற்பிறக்க வொட்டாது தன்னிற்சேர்க்கும்
வண்டான ததுகோடி மதுவையுண்டு
மருவியது பறந்தாற்போற் சொன்னமார்க்கம்
பண்டான மதுவையுண்டு கமலத்துள்ளே
பற்றிநின் றுறைந்தாப்போல் செனனம்போச்சே. (6)

போச்சென்று வொளிவென்றால் பூரணத்தைசேரு
புகழாக பிறக்கவென்றா லுலகத்திற்சேரு
வாச்சென்ற ரெண்டையுந்தான் காணவென்றால்
மக்களே காயசித்தி மகிழ்ந்துபண்ணு
நீச்சென்ற பூரணத்தைக் குளிகையிட்டுப்பாரு
நேராகச் செகமெல்லாம் நிலைத்துப்பாரு
பூச்சென்ற பூச்செல்லாம் வெளியாய்ப்போகும்
புகழாகப் பூரணத்தில் வாழ்வாங்காணே. (7)

வழலைச் சுண்ணம்

காணப்பா முந்திமுந்தி வழலைச்சுண்ணம்
கைமுறையாய்ப் பண்ணறிந்தா லுப்புக்கட்டும்
வீணப்பா யில்லாட்டா லுப்பில்வேதை
வெரும்பாட்டோ யெண்ணாதே விரைந்துகேளு
பூணப்பா பொருளுக்கு யுப்பேயென்று
புகழாகக் கைகொடுத்தார் போகநாதர்
பூணப்பா யூணியதை யுப்பைப்பார்த்தே
னோகோகோ யுலைத்தமுறை யுறைசெய்வேனே. (8)

உப்புக்கட்டு

உலைத்ததப்பா வலியுப்புக் கட்டக்கட்ட
ஓகோகோ கரிக்குடிக்கித் தெரிந்துபோகும்
மலைத்ததப்பா மனமென்றும் பின்னும் பார்க்க
மக்களே யென்னசொல்வேன் மங்கமாச்சு
நிலைத்ததப்பா யென்றிருந்தேன் சரக்குண்ணாது
நேராக்குறை யேதென்றே யெண்ணியெண்ணி
அலைத்ததப்பா வுப்பென்றுங் குருவைத்தேட
அரகரா அம்பலத்தி லறைந்திட்டாரே. (9)

அறைந்திட்டார் குருவென்று ஆட்டியைத்தானோக்கி
ஆறுதிங்கள் அர்ச்சித்து மாயிசொல்லாள்
இறந்திட்டுப் போவாயோ யென்றுயுன்னி
யிருந்துறைத்தேன் சமாதியிலே திங்களொன்று
உறந்திட்ட மனங்கண்டு ஆட்டிவந்து
உத்தமனே சிவன்சொல்லார் கேளுமென்றாள்
முறைந்திட்டு அண்டரண்டப் பதங்களெல்லாம்
மூவருக்கு மேலான முடிதிசொல்லே. (10)

சொல்லென்று யான்கேட்க யானறியேனென்று
துணையான பதமது விடுக்கேனையா
மையென்று யிடித்தென்னை மைந்தாமைந்தா
மயங்காதே யாதியுப்பை வளமாய்ப்பண்ணு
சொல்லென்று வுப்பேது யென்றுகேட்க
செப்பரிது செப்பரிது ஆயினாதம்
வல்லென்று பெரியோர்க்கு யீசன்சொன்னார்
வார்த்தையன்று கேட்டிருப்பேன் மறந்திட்டேனே. (11)

மறைத்திட்டாய் மறைத்திட்டாய் பாதகர்க்கு
மெய்யான மைந்தனுக்கு மகிழ்ந்து சொன்னீர்
கறைத்திட்ட கண்டான்று சொல்லக்கேட்டு
கைமுறையாய் யேழுலட்சங் காப்புச் செய்தாய்
குறைத்திட்டுப் போகாது பார்த்தேசொல்லு
குறையாமோ பிள்ளைகட்குச் சொன்னாலம்மா
நிறைந்திட்ட யுப்பதுவும் வழலைமைந்தா
நேராக யெண்ணையைத்தா னீக்கிப்போடே. (12)

நீக்குவது யெவ்வாறு அம்மாசொல்லு
நிலையான கல்லுப்பைச் சுண்ணம்பண்ணி
வாக்குவது பழச்சாற்றா லரைத்துக்கொண்டு
மைந்தனே வழலையின்மே லப்பிப்போடு
தாக்குவது ரவியி லெண்ணைகக்குந்
தனைப்பிறகு கவசத்தைத் தள்ளிப்போட்டு
ஆக்குவது கற்சுண்ணம் சீனச்சுண்ணம்
அப்பனே பழச்சாற்றா லப்பிப்போடே. (13)

போடப்பா வுலர்ந்தபின்பு சுண்ணத்துள்ளே
பொதிந்து வைத்துதீட்டு போகுமெண்ணை
நீடப்பா யிதைவாங்கிக் காரமேற்ற
நிலையில்லை கரையில்லை யிந்தப்போக்கு
ஆடப்பா யிதைத்தொட்டு உப்பைக்கட்டு
ஆடுமிது யண்டரண்டப் பத்துமட்டும்
மூடப்பா பாழும் மனையுந்தாண்டி
ஒகோகோ நிற்குணத்தி லொட்டிப்பாரே. (14)

ஓடுமிந்த வழலையுட வுப்பில்வேதை
உத்தமனே வழலைவிட்டா லொன்றுமில்லை
ஆடுமிந்த வழலைபட்டால் சுண்ணமெல்லாம்
ஆகாகா குளிகையுமாங் கவனமாகுஞ்
சாடுமிந்த வழலையதால் சரக்குச்சாகும்
சார்வறிந்தால் சங்கமுதல் பத்துமேறு
யோடுமிந்த வழலைதொட்டு மூடமூட
யோகோ கரையில்லா வோட்டந்தானே. (15)

ஒட்டமென்றால் சித்தோட்டம் நெட்டோட்டமல்ல
உத்தமனே யுகாந்தவெளி கடந்தேயோட்ட
மாட்டமென்றா லறிந்தமட்டு மாட்டோவல்ல
வகன்றவெளி பூரணத்தை யானந்தயாட்டு
காட்டமென்றா யொன்றிரண்டு கட்டமல்ல
கோடான கோடியினங் கட்டியாடும்
நீட்டமென்றால் கண்மட்டும் நீட்டமல்ல
நிலையில்லை வழலையிட்டு நேர்மைதானே. (16)

தானென்ற வழலைபட்டால் சுண்ணமெல்லாஞ்
சதகோடி நவகோடி சங்கவேதை
வானென்ற வலுகடங்குங் குளிகைவேகம்
மக்களே பரிசமுதல் தூமமாகும்
மூனென்ற வலுவுக்கு மிதுதான்வேணும்
வோகோகோ வழலையடா உயர்ந்தவேதை
கோனென்ற போகர்சொல்ல யானுங்கண்டேன்
குறிப்பாக தேவிசொல்லக் கூடினேனே. (17)

கூடினதோர் வழலைவிட்ட கட்டுமூன்று
குறிப்பாகச் சொல்லுகிறேன் விந்துகேளு
ஓடிமன மலையாதே உகந்துனக்கு
உண்மையா யுரைக்குகிறேன் வழலைமார்க்கம்
நாட்டியதோர் சாரத்தா லுப்புக்கட்டும்
நலம்பெரிய சீனத்தி லுப்புக்கட்டும்
மாட்டினதோர் சூடனுக்கு முப்புச்சாகு
மாதியென்ற கண்டருக்கு முப்புச்சாமோ. (18)

சாகுமிந்தக் கருவாறில் சரக்குக்கெல்லாஞ்
சாதகமாய்ச் சரக்குகளைச் சத்தேகொல்லு
மாகுமிந்தச் சரக்குவிடக் கொஞ்சம் சமவேதை
அப்பனே குளிகைக்கு யாகாயாகா
வாகுமிந்த மலராது பூத்தசுண்ண
மல்லிகைப்பூப் போலாகாத் தண்ணியுண்ணா
போகுமிந்த பரியாசங் கொஞ்சம்வேதை
புகழாகக் கையறியான் பூட்டும்வாறே. (19)

வாரான புடத்துக்கும் வழலைவேணும்
வரிசையுற்ற லவணத்தில் வழலைவேணும்
தாரானமெழுகுக்கும் வழலை வேணும்
சார்வான செயநீர்க்கும் வழலைவேணும்
கூரான குருவுக்கும் வழலைவேணும்
கொடியதொரு திராவகத்தில் வழலைவேணும்
நீரான நீருக்கும் வழலைவேணும்
நிலைத்துநிற்கும் புடத்துக்கும் வழலைதானே. (20)

தானென்ற வழலையுட மகிமைசொல்ல
சதாசிவனு முன்பின்னாய்த் தயங்கிப்போனார்
கோனென்ற வறாட்டியனுங் குறிப்புக்காணார்
கொக்கிறகு சூடிநின்றோன் கூறுங்காணார்
சேமனென்ற மனோன்மணியா ளீன்ற நாதஞ்
செயலறியார் நாதாக்கள் யானுங்காணேன்
பானமன்று பூண்டிருந்த மவுனத்தாய் சொல்லப்
பலபலவாந் துறையாடி யறிந்திட்டேனே. (21)

பரிந்திட்டுப் பரிந்திட்டு விரித்துப்பாடி
பார்த்தவரை விரைத்தேயா னின்னங்காணேன்
சொரிந்திட்ட மேகத்தின் திவளைபோலத்
துறைகோடி கலாகோடி காமங்கோடி
புரிந்திட்ட புரியஷ்ட குருப்போலாக
போகத்திலே வரவதிலே புகழோகோடி
சரிந்திட்ட பூரணத்தின் விசாலம்போல
தடையதுவே நின்றாடு வழலைகாணே. (22)

காணப்பா முன்சொன்ன தொத்ததொக்கு
கதிர்கோடி யாதியென்ற வழலையாட்டு
ஊணப்பா ஊணப்பா மூலத்துள்ளே
உத்தமனே நந்திவந்து வுபதேசிப்பார்
பூணப்பா பூணப்பா வாசியூதி
புருவமய்யத் தேநின்று புகழ்ந்துகொண்டு
யாணப்பா யாணப்பா வறாட்டியனைத் தாண்டி
யதுக்கடுக்கச் சென்றேறி மனோன்மணியைக்காணே. (23)

மணியான மனோன்மணியைப் பணிந்துபோற்றி
    மாதாவென் வரையிலிரு வினையைநாட்டு
அணியாகப் பிறப்பிறப்பு ரெண்டினாலே
    ஆசையென்ற வலைவிசிறிப் பெண்பொன்காட்டி
பிணியோடு வறுமைரெண்டாய் பெண்ணாண்ரெண்டாய்
    பேரின்பஞ் சிற்றின்பம் பிறவிரெண்டாய்
கணியான சீவசெந்து மிவையொவ்வாகி
    கரையற்ற யேழுவகைத் தோற்றம்நீயே. (24)

நீயென்று தானுணர்ந்தால் பிறவிபோச்சு
    நிலையாத சிற்றின்பம் நிலைத்துப்போச்சு
தாயென்று யறியப்பூ ரணப்பாலூட்டி
    சதாநந்த வெள்ளமதிற் றனிலேதோய்ந்து
ஓயென்று நின்றலைந்த பிறவிமாற்றி
    ஒப்பில்லாப் பூரணத்தி லுயரயேற்றி
பாயென்று தடங்காட்டித் தமரினுள்ளே
    பாச்சிவிக்கு மனோன்மணியைப் பரிந்துபோற்றே. (25)

போற்றுவது தெட்சணத்தால் போற்றவேண்டாம்
    புகழான வாமற்றாற் போற்றிப்பூசி
ஆற்றுவது விளைப்பாற்று மெங்கேயென்றால்
    அப்பனே பூரணத்தி லிருந்துபார்த்து
மாற்றுவது வொன்றுமில்லை யெல்லாம்போச்சு
    மனம்போச்சு சினம்போச்சு மயக்கம்போச்சு
கூற்றுவது மூலமுதலாறும்போச்சு
    குவிந்துநின்று ஒன்றுக்கு ளொன்றுமாச்சே. (26)

ஒன்றாச்சு இரண்டாச்சு அஞ்சுமாச்சு
    ஓகோகோ யெட்டாச்சு பனிரெண்டாச்சு
பண்டாச்சு பழங்கதைபோல் கோடாகோடி
    பலநினைவாய் பலகலையாய் பரப்புமாகி
குன்றாகி மலையாகி மேருவாகி
    கொடுமுடியாய் சிறுகல்லாய்ப் பாறையாகி
தண்டாச்சு மரமாச்சு சராசரங்களாச்சு
    சதகோடி சீவசெந்து செனித்தவா்றே. (27)

வாறான யிக்கூத்துக் கொக்குமொக்கும்
மைந்தனே வாலையுட மார்க்கத்தாட்டு
கூறான தென்சொல்வேன் தொகையோகோடி
குவிந்துயிடங் கண்டேனா னென்பாரில்லை
தாறான வழலையுட கருவைக்கண்டால்
சாதகமாய் ஞானத்தின் கருவுங்காண்பான்
வீறான வார்த்தையென்ன வேடமென்ன
விரித்தபுலித் தோலென்ன வெறுமையோர்க்கே. (28)

வெறுமைவந்து மீண்டுதென்றால் ஞானம்போச்சு
வேதாந்த சித்தாந்த மிரண்டும்போச்சு
வெறுமைவந்து மீண்டுதென்றால் மனம்போச்சு
மேகம்போல் கருவிவந்து விரவிப்போச்சு
வெறுமைவந்து மீண்டுதென்றால் அறிவும்போச்சு
மேன்மேலு மாசைவந்து மேலேயாச்சு
வெறுமைவந்தா லென்னநிஷ்டை யென்னஞானம்
வேரற்ற மரம்போல்தான் வீழ்வார்தானே. (29)

தாளகச்சுண்ணத்தால் வங்கச்சுண்ணம்

தானென்ற வழலையிலே வீரங்கூட்டிச்
சமரசமாய் மத்தித்துத் தாளகத்தில்பூசி
தானென்ற சுண்ணத்தில் வைத்தேயாட்டு
தனிற்றமஞ்ச ளற்றதுவுஞ் சலவையாகுந்
தானென்ற தாளகத்தை வங்கத்தப்பிச்
சமரசமாய்ப் புடம்போடச் சுண்ணமாகுந்
தானென்று வங்கத்தை நிமிளைக்கப்பித்
தாக்கியொரு புடம்போடச் சுண்ணமாமே. (30)

ஆமப்பா நிமிளையைத்தான் சாரத்தப்பி
ஆகாகா நீர்பறித்துச் சுண்ணமாகும்
வேமப்பா புடம்போட்டு ஊதிப்போடு
வெளியிலே பார்க்கத்தா ளகக்கொம்பாகும்
ஓமப்பா யிச்சாரங் கல்லுப்புக்கட்டும்
உத்தமனே கடுஞ்சுண்ணம் பூப்போலாகும்
சாமப்பா பூரத்தில் சாத்தியூதித்
.... (31)

ஊதியதோர் கண்டச் சுண்ணஞ் சிங்கிக்காகும்
உத்தமனே பொன்னீறுங் குளிகைக்காகும்
ஊதியதோர் குளிகையைச்சா ரணையைத்தீர்க்க
ஓகோகோ பூரணத்தைத் தொட்டுக்காட்டும்
ஊதியதோர் வாசிகொமு மூலமூது
உயரநின்ற பூரணத்தை யுற்றுப்பாரு
ஊதியதோ ரிவையறிந்தால் அவனேயோகி
உற்றுணர்ந்து பார்த்தாக்கால் வாதமாமே. (32)

வாதமென்ற தொழிலுக்குச் சூதமூலம்
வகைவகையான குருவுக்கு முப்பேமூலம்
நீதமென்ற பொருளதுகா ணிதுதான்மூலம்
நிகழ்கோண நடுமூலங் கண்டமாகும்
வேதமென்ற புருவமய்யம் மேலாமூலம்
வேறொன்று மரமொன்று துளிர்தானொன்று
போதமென்ற பொருள்காணு மூன்றினாலே
புகழான அடிமூலம் போக்குநன்றே. (33)

நன்றான போகத்தில் மனந்தான் சேரும்
நலங்கிய மாயத்தில் வாதனை வந்தோர்க்கு
கன்றான வாருதிக்குள் ரெண்டு கேளுங்
கலந்துநின்ற ரவியொன்று மதிதானொன்று
விண்டான ரெண்டுவினி லுப்பு வுப்பு
வேறொன்று மரமொன்று விளங்கப்பாரு
பண்டாக யதையடக்கி யிதைத்தான் கட்டும்
பரிவாக மனமடங்கப் போதமாமே. (34)

போதமுற்று நின்றவனே ஞானியோகி
புகழ்பெரிய உப்பறிந்தோன் வாதயோகி
நீதமுற்ற வுப்புக்குக் கருத்தானொன்று
நேராக நின்றதெனில் வழலைச்சுண்ணம்
காதமுற்றுத் தூரமல்ல ஞானக்கூறு
கண்ணுக்கு எடுக்கவது கருதிப்பாரு
வாதமுற்று நின்றதெல்லா முப்புக்குள்ளே.
.... (35)

மவுனமுற்று முனிவரன்று வாருதியையுண்டு
மகத்தான குண்டலியாற் கிழேவிட்டார்
மவுனமுற்று வாருதியு முப்பேயாச்சு
வாகான சத்தியுட தாதுமுப்பு
மவுனமுற்று யிதையிடவே யெல்லாஞ்சாகும்
மறுத்தொன்று சொல்லுதற்கு வழக்கங்காணேன்
மவுனமுற்று மனமொடுங்கிப் போதமாடு
மாயமெல்லாம் நீங்கியந்த வரையிலேறே. (36)

ஏறுதற்கு வகைசொல்வேன் நன்றாய்க்கேளு
எளிதாக மூலத்தே யிருத்தியூது
கூறுதற்கு நெடுமூலங் கண்டத்தூது
குறையாமல் நாலுமந்த யெட்டிற்சேருந்
தேறுதற்கு மேல்மூலம் புருவமையத்தூது
செகசால மல்லவிது கண்டபேர்க்கு
மாறுதற்கு யிதைவிட்டால் ஞானமில்லை
வாதத்தி லுப்பைவிட்டால் மருட்டிப்போச்சே. (37)

போச்சப்பா ஞானமெல்லாம் மாய்கையாலே
புகமுஞ்சிற் றின்பம்பே ரின்பமாச்சு
ஆச்சப்பா வுலகத்தி லென்னஞானம்
அறிந்துணர வேணுமென்றால் வாசியேறு
நீச்சப்பா பொறியாசை நிலையாமற்கொல்லும்
நேரான பதியைவிட்டுப் பாசமூடும்
கூச்சப்பா லவணமென்றால் சுண்ணத்துக்கு
குறையாது சரக்கெல்லாங் குத்திக்கொல்லே. (38)

இந்தொன்று - ரவியொன்று

கொல்லுகிற உப்பெங்கே யிருக்குதென்றால்
குலாவிநின்ற வாருதியி லண்டஞ்சூழ்ந்து
வெல்லுகிற யிந்தொன்று ரவிதானொன்று
வெவ்வேறாய் மேகத்தி னீராலாச்சு
சொல்லுகிறே னிந்தாலே ரவிதான் கட்டுஞ்
சூட்சமதை யறிந்தவனே வாதயோகி
மல்லுகிற மனத்தைமெள்ள பூரணத்திற்சேர்க்க
வாக்கடங்காப் பூரணத்தில் வாழுவாரே. (39)

பூரணத்தில் வாழுகிறோ மென்றுநாடி
புகழாகச் சடம்விட்டு வேறாய்நின்று
காரணத்தே நாமிருந்தோம் நாமேயென்று
கலந்துநின்று பிரபஞ்ச மெல்லாம்நாடி
கூரணத்தே நின்றுபொருள் விரிந்தாப்போலே
கோடான கோடி தொழி லுப்பிலாச்சு
வாரணத்தே நின்றிலங்கு மாயிவந்து
வாசலிலே காத்திருப்பா லுப்பைக்கட்டே. (40)

கட்டென்று சொல்லுவது யெளிதோமைந்தா
கைகலந்து கட்டுவது கட்டின்மெத்த
மட்டென்ற கட்டுக்கு விபரங்கேளு
மணிபோலே நின்றாடுங் கரியினுள்ளே
தெட்டென்ற கட்டானால் கரிக்குடித்துப்போகுங்
திறமான தொழில்களெல்லாஞ் சிதறிப்போகும்
ஒட்டென்று மனங்கட்டில் பூரணத்தையொட்டு
ஓகோகோ கட்டாட்டா லுலைக்கும்பாரே. (41)

பாரப்பா தெருத்தெருவே கூறுமுப்புப்
பரிவாகக் கட்டறியாப் பசாகுவாதி
ஆரப்பா வெனக்கீடு சூதங்கட்ட
அறிவேனா னென்றுசொன்ன வாரதொக்கும்
நேரப்பா யெதினாலே வாதமாச்ச
நிலையாகப் புடமதிலே நின்றுபோச்சு
வேரப்பா வாதத்துக்குப்பே சொன்னேன்
வெளியோடே மனங்கலக்க வெளியுமாச்சே. (42)

வெளியான பூரணத்தி லுப்பைக்கட்டி
வேதிச்சுப் புடம்போடச் சுண்ணமாகும்
களியான சுண்ணத்திற் சூதந்தொட்டு
கைமுறையாய்ச் சரக்கெல்லாஞ் சாகுஞ்சாகும்
அளியான சரக்கினுட வரிசைகண்டு
ஆடலாஞ் செகசால மற்றதெல்லாந்
தெளிவான யிந்திரிய மஞ்சுந்தள்ளி
சேர்மனத்தைப் பூரணத்திற் சித்தியாமே. (43)

சித்தியுள்ள பெரியோர்க்கு வாதஞ்சொன்னேன்
செகத்திலுள்ள காமுகற்குத் தொழிலைச் சென்னேன்
நித்தியமாம் யோகியற்கு யோகஞ்சொன்னேன்
நிலையான ஞானிகட்கு ஞானஞ்சொன்னேன்
பத்தியுள்ள சீஷனுக்குப் பலிக்கச்சொன்னேன்
பரமறியா மூடருக்குப் பரமுஞ்சொன்னேன்
முத்தியுள்ளோ ரலையாமல் சிவத்தைப்பண்ண
மோட்சத்தை யேறுதற்கு யேணியாமே. (44)

ஏணியிட்டு ஞானத்தி லேறவென்றால்
யென்செய்வே னெறித்தேறும் பசித்தேனாளே
கோணிவிட்டு மனம்நோகும் பசியில்கூடி
கூப்பிட்டால் வாராது ஞானக்கூறில்
தோணிவிட்டுக் கருவிவந்து சூழ்ந்துகொண்டு
சுற்றியந்தப் பசியினுள்ளே சுழத்திப்போடும்
ஆணியிட்ட யென்வித்தை வந்துதானா
லாகார வந்தவழி யடுத்தவாறே. (45)

அடுத்தசெக வரிசைசொல்வேன் லவணக்கூறு
அப்பனே வழலையுப்பை முன்னேபண்ணு
முடுக்கமுற்ற வழலையினா லுப்பைக்கட்டு
மூதண்ட வுப்பாலே பூரங்கட்டு
தடுத்தமூத்த பூரத்தால் தாளகத்தைக்கட்டு
தாளகத்தால் வங்கத்தைச் சாற்றிநீறு
ஒடுக்கமுற்ற வங்கத்தால் நிமிளைதனைக்கொல்லு
ஒடுங்குகின்ற நிமிளையால் சாரம்நீற்றே. (46)

நீற்றிநின்ற சாரத்தை தொட்டேயாட்டு
நேரான வாருதி யுமக்குப்பத்தா
ஆற்றிநின்ற சாரத்தைக் கண்டர்க்கப்பி
அனல்மேலே போட்டிடவே சுண்ணமாகும்
போற்றிநின்ற துறைக்கெல்லாம் வீரங்கட்டி
புகழாகப் போட்டுவரச் சுண்ணமாகும்
தோற்றிநின்ற கண்டர்தமைச் சூதத்தாட்டு
துடியான சரக்குமது சிங்கிக்காகும். (47)

ஆமப்பா யிச்சூதந் தங்கத்தூட்டு
அணைத்துமெள்ளப் புடம்போடச் சுண்ணமாமே
வேமப்பா அண்டரண்டந் தொட்டதெல்லாம்
வெகுவேதை பார்த்தாக்கால் வாதமாமோ
ஓமப்பா உப்பாலித் தனையுமாச்சு
யொருதுளி சுக்கிலத்தால் பிள்ளையாச்சு
நாமப்பா கண்டபடி அஞ்ஞூற்றிற் சொன்னேன்
நலமான வெள்ளிக்கி மிதுதான்போக்கே. (48)

போக்கோடே யேறுதற்கு மிதுவேபோக்கு
புகழாக வாதசித்தி ஞானசித்தி
வாக்கோடே யெனையாண்ட போகர்சொன்னார்
மருவியந்தக் கருவோடி விரித்துப்பார்த்தேன்
தாக்கோடே குருசொல்லக் காணவேணும்
தனித்தனியே சுட்டாறுங் காணார்காணார்
தூக்கோடே பால்குடித்த நாயைப்போலே
சுழன்றலைவார் வகையறியார் துறையிதாமே. (49)

துறைவிட்டுச் சுடுகிறதோர் வாதிகோடி
சுழன்றலைந்து காணாத வாதிகோடி
அறையாடிப் பொறியறியா யோகிகோடி
அம்மாவின் பூசையில்லாக் கசடர்கோடி
மறையொட்டி யெட்டாத ஞானத்தோர்க்கு
மகத்தான சூதவித்தை மைந்தாகேளும்
குறையொட்டி விட்டகுறை வந்துதானால்
கூரான ரெண்டினமுங் கூடுங்காணே. (50)

காணப்பா குளிகையிற்சா ரணையைச்செய்ய
கவனமது கொடுபோகுங் கலருஞ்சித்தி
ஊணப்பா குளிகையிட்டு வாசியேறு
ஓகோகோ யறுதலமு முறவாய்க்காணும்
வீணப்பா சமாதிகொண்டு பார்க்கப்பார்க்க
வெறுமனது பேயாக விரைந்துதள்ளும்
பூணப்பா குளிகையிட்ட யோகம்நேரு
பொற்பூவும் வாசனையும் போலதாச்சே. (51)

ஆச்சிந்தக் கூத்தெல்லா முப்பினாலே
　அப்பனே முப்பதுவும் பூரத்தாலே
வாச்சிந்த யுப்பறிந்தா லவனேவாதி
　வகையறிய மாட்டாதா னவனேமாடு
மூச்சிந்த விடங்காட்டு முப்புத்தாக்கு
　மூதண்டந் திரும்பிவிக்கும் முயன்றபூரம்
நீச்சென்ற நீச்செல்லாம் உப்புஉப்பு
　நிலைத்தவனே நிசவாதி நினைவாய்க்காணே. (52)

காணப்பா கல்லுப்பை மணியாய்வாங்கி
　கானகத்திற் புங்கம்வேர்ப் பாலையூட்டி
ஊணப்பா வுயர்ந்தபின்பு சாரத்தோடு
　உத்தமனே வழலையிட்டு ஆட்டிப்பூசு
நீணப்பா யிதையுணர்த்திச் சீனஞ்சூடன்
　நேரான வென்கருவா லரைத்துப்பூசி
ஆணப்பா புடம்போட வுப்புக்கட்டும்
　ஆச்சரிய மாச்சரிய மறிந்துபாரே. (53)

அறிந்தயிந்த வுப்பெடுத்துச் சுண்ணமூது
　அப்பனே யிந்தவுப்பை மெழுகுபண்ணு
அறிந்திந்த வுப்பாலே செயநீர்பண்ணு
　யடங்கிநின்று உருகையிலே சாரமூட்டு
அறிந்திந்த சாரத்தால் பூரங்கொல்லும்
　அப்பூரஞ் சீனத்தை யதட்டிக்கொல்லும்
அறிந்தந்த சீனத்தால் காரஞ்சாகும்
　அக்காரம் விரைவிலிடு வேதையாமே. (54)

வேதையிடு மென்முறையைச் சொல்லக்கேளும்
　வெவ்வேறாஞ் சுண்ணத்தில் வேதைகோடி
பாதையிது முந்திமுந்தி யுப்பேபாதை
　பாங்குதப்பில் உப்பினுட பாதைகாணேன்
காதையப்பா யுப்படக்கிக் கட்டவென்றால்
　கண்டவர்க்கு வெகுசுருக்கு கருத்தானொன்று
ஈதைவிட்டால் வேதையெல்லாம் விழலாய்ப்போகும்
　என்மகனே உப்பறிந்தால் பொருளதாமே. (55)

பொருளாலே சென்றேத்த அருளுங்காணும்
போக்கேது யென்றாக்கால் சொல்லக்கேளு
பொருளாலே சீவனத்தைப் புகழ்ந்துகொண்டு
போக்கான மூலத்தைச் சித்திபண்ணும்
பொருளான ஆறுதலம் நன்றாய்த்தேறி
பொருமிநின்ற மதியினுள்ளே பானம்பண்ணி
பொருளான குருபதத்தில் நின்றுகூடி
புகழ்பெரிய சமாதியுன் மனையோடேறே. (56)

ஏறப்பா நாதவிந்து விராட்டியனுந்தாண்டி
யெளிதான சத்திபதி னொன்றுந்தாண்டி
ஏறப்பா யுன்மனைக்கி அடுக்கச்சென்றால்
யெளிதல்ல வெளியொளியாங் காந்திமூன்று
ஏறப்பா யதுக்கடுக்க அந்தப்போதம்
யேறிமெள்ளப் பூரணத்தை யேறிச்சேரு
ஏறப்பா வென்றுசொன்ன பேச்சுக்கொஞ்சம்
யேறரிது மனக்குரங்கு யேறொட்டாதே. (57)

ஒட்டாத குரங்கதுபோ லுலகவாதி
உப்பறிந்து கொண்டவனே ஞானவாதி
மட்டாத கருக்கண்டான் மகத்தாம்வாதி
வாய்திறந்து பேசாதே வழலையுப்பை
கொட்டாத தேளதவும் பிள்ளைப்பூச்சி
கொட்டுகிற தேளதுவே உப்புச்சுண்ணம்
தட்டாத தலத்திருக்குந் தட்டான் காண்பான்
தனித்திருந்த உப்பதற்கு மருளும்தேரே. (58)

நேரான வருளாலே பதங்களாச்சு
நிலையான புவனமுத லண்டமாச்சு
வாரான வாருதியும் பூதமாச்சு
மகத்தான சீவசரா செந்துவாச்சு
ஆறான யினந்தோறு மாண்பெண்ணாச்சு
யங்கங்கே வுற்பனமு மயமுமாச்சு
சீரான தீதொக்கும் பொருளினாட்டுச்
செப்புகிறே னுப்பாலே சிறந்தகூத்தே. (59)

கூத்தனிங்கே யுண்டென்பா ருலகமாண்பர்
கூகூகூ கொல்லுகிற யெமன்தானென்பார்
கூத்தனெங்கே யிருந்தயிட மென்றுங்காணார்
கொடிதான மூலத்தே நின்றான் காண்பான்
கூத்தனுட யிடங்கண்டால் கூத்தைக் காண்பார்
கூறியதோர் மெஞ்ஞானக் கூறுங்காணும்
கூத்தனுட கூத்தொக்கு முப்புக் கூத்து
கூறினேன் சமனாகக் குழைந்து பாரே.. (60)

குழையவில்லை என்றுசொல்லி யென்னைப்பெற்ற
கூறான போகரன்று கூறினார்கேள்
விழையவில்லை மெஞ்ஞான மென்றிருந்தேன்
மெச்சுமெனக் கதிகம் சாபத்தாலாச்சு
மழையவில்லை பெண்ணான சிலைதான் மைந்தா
மகத்தான சாபத்தால் பெண்ணுமாச்சு
தழையவில்லை யிருவரன்று புல்கிவந்த
சாதகமாய்ப் பொருளுக்கு உப்பென்றாரே. (61)

உப்பாலே பொருளாச்சு கேளுகேளு
உத்தமனே மனத்தாலே போதமாச்சு
அப்பாலே சீவனுக்கு ஆதியாச்சு
அப்பனே மாயத்தால் ஞானமாச்சு
கொப்பாலே யஞ்சுமனக் குரங்குந்தாண்டி
குறியிலே சேரவொட்டாக் குணத்தைப்போல
உப்பாலே பொருளோடு அருளுஞ்சொன்னேன்
உணர்ந்துநன்றாய்ப் பார்த்துமைந்தா யுரைத்திடாயே. (62)

உரைத்திட்ட வுப்பாலே சித்தர்கோடி
ஓகோகோ ரிஷிகோடி வாதிகோடி
இறைத்திட்ட கேணியைப்போ லூற்றமாகும்
எடுத்தெடுத்து ஆடுகிறா ரின்னங்காணோ
முறைத்திட்ட படியல்லோ பிரட்டுவாதி
மூன்றென்பார் நாலென்பா ரோடிப்போகும்
மறைத்திட்டார் உப்பினுட வித்தையெல்லாம்
மகத்தான குருசொல்லக் கண்டிட்டேனே. (63)

கண்டிட்டேன் கண்டேனா னுப்பினாட்டு
கரையில்லை நிலையில்லை கவரோசங்கம்
ஒண்டிட்டே னிதனுடைய தொழிலைக்கண்டு
ஓடுதப்பா ஓடுதப்பா யுரைப்புக்காணேன்
பண்டிட்ட வுப்பாலே பத்துவிதவித்தை
பராபரைக்கு யீசனார் பகர்ந்தார்கேளு
மன்றிட்ட தூபமுதல் பதினாறுவேதை
மக்களே யிதனுடைய வரைகாணேனே. (64)

காணப்பா உப்பைவிட்ட வாதிகெட்டான்
காலத்தில் மனத்தைவிட்டு ஞானங்கெட்டான்
வீணப்பா வாசிவிட்ட யோகிகெட்டான்
வேதாந்தம் பார்த்துவிட்ட ரிஷியோகெட்டான்
பேணப்பா பூசைவிட்ட கிரியோன்கெட்டான்
பெண்ணாசை கொண்டிருந்த தவசிகெட்டான்
ஊணப்பா ஊணப்பா வுற்றுணர்ந்துபாரு
உப்பினுட வரையடங்கா முற்றுங்காணே. (65)

முத்தான பூரணத்தின் பிறவிகேளு
மூதண்டக் கதலியுட பூவினுள்ளே
வித்தார மாயடுக் கடுக்காய்நின்று
விரிந்துடனே பொலுபொலென வீழுங்கீழே
பத்தாக யெடுத்தடுக்கப் பரிமளமோவீசும்
பாங்கான நாதத்தின் நாதமைந்தா
அத்தான ரவிபடவே மாட்டிமாரும்
அப்பனே காற்றடிக்க அகன்றுபோமே. (66)

போமப்பா தீப்படவே நிர்மலமாய்நீக்கும்
புகழான அதன்பெருமை பூரணத்துக்கொக்கும்
ஆமப்பா யிதைக்கட்ட யாராலாகும்
ஆதியென்ற இந்தாலாம் உப்பாலாகும்
ஓமப்பா யித்தாலே கட்டிப்பின்பு
ஊதிநன்றாய்ச் சுண்ணம்போ லுரைக்கப்பண்ணு
சாமப்பா யிதினோடே சூதஞ்சேர்த்து
தாக்கியதை வில்லைதட்டித் தணலிலாட்டே. (67)

ஆட்டையிலே சேர்ந்துகொள்ளும் பிறகுவூது
அப்பனே கடுஞ்சுண்ணம் பூரமாச்சு
மூட்டையிலே வீரத்தி லருணம்போலாம்
முன்னேது பின்னேது அண்டநீறுங்
காட்டையிலே தங்கமப்பா நீறிப்போகும்
கைமுறையாய்த் தாளகமோ சலவையாகும்
நீட்டையிலே கெந்தியுட மஞ்சட்போகும்
நிமிடத்தில் கண்டருமோ வெள்ளையாமே. (68)

வெள்ளையென்ற சுண்ணமெல்லாம் பூரத்தாலே
வேரிதுக்கு யேதென்றால் வழலையுப்பு
கொள்ளையென்ற கொள்ளையெல்லாம் பூரந்தொட்டால்
கூறுகிறேன் சித்திரத்தை குறிப்பாய்க்கேளு
தள்ளையென்ற பூரத்தில் தாளகத்தைச் சேர்த்து
தனிவங்கத் தைப்பூசிப் புடத்தைப்போடு
உள்ளையொன்றி சுண்ணாம்பாம் வங்கச்சுண்ணம்
உத்தமனே நிமிளைக்குப் பூசியூதே. (69)

ஊதிநின்ற நிமிளைநீர்ச் சாரத்திலப்பு
ஓகோகோ லெகுவாகப் புடத்தைப்போடு
ஆதிநின்ற சாரத்தைக் கெந்தகத்திலப்பி
அடைவாக யெரித்துயெடு சுண்ணமாகும்
வாதிநின்ற புடமிதுதான் மைந்தாகேளு
மயங்காதே கெந்தியைத்தான் கண்டர்க்கிட்டு
ஓதிநின்ற கண்டரைத்தா னதிலேபோடு
ஒப்பில்லாத் துரியத்துக் கொக்குங்கேளே. (70)

கேளப்பா கண்டருடன் வீரங்கூட்டி
கெடியாகச் சிவப்பாகும் பரிமேலப்பி
நீளப்பா புடம்போடத் தங்கச்சுண்ணம்
நேரான தங்கத்தில் வேதைகோடி
சூளப்பா யிச்சுண்ணம் சூதத்தூட்ட
துடியாது மணிபோலே கரியிலாடும்
வீளப்பா யிச்சூதஞ் சுண்ணம்பண்ண
வெகுவேதை வெகுவேதை கரைகாணேனே. (71)

கரையில்லை சூதமென்ற சுண்ணமொன்று
கைமுறையாய் நாலிடையாந் தங்கத்தூட்டு
நிறையில்லா யஞ்சுசுண்ணக் குகையில் வைத்து
நேராகப் புடம்போடச் சுண்ணமாகும்
நரைதிரையில் லாக்காய சித்திபண்ணும்
நடனவொளி யடுக்கநன்றாய் வழியுங்காட்டுந்
துரையில்லாச் சேனையுண்டோ வென்றாயானால்
துரைச்சூதஞ் சரக்கெல்லாந் தூதாளாச்சே. (72)

தூதாளை யேவிநின்ற துரையைப்போல
துடியான பரிச்சூதஞ் சுண்ணந்தொட்டு
வாதாள சரக்கோடு வேதைபோட
மண்ணென்ன கல்லென்ன மச்சமாச்சு
பாதாள பேதியிது கபனபேதி
படுமுன்னே கண்பேதி சத்தபேதி
ஏதாள வேணுமென்றா லதிலேவைக்கும்
மெடுத்தாடுந் துரைகோடி யெனச்சொல்வேனே. (73)

சொல்லறியார் சொல்லறியார் சூதப்போக்கை
சுகமாக மனங்கொண்ட மட்டுமாடும்
சொல்லறியார் பரிச்சுண்ணப் போக்கைப்போலே
சுகமாக ரசிதத்தைச் சுண்ணம்பண்ணுஞ்
சொல்லறியார் சீதவித்தை கோடாகோடி
துரைகோடி கரைகோடி சூட்சங்கோடி
சொல்லறியார் ரெண்டினத்தால் கூட்டுதற்கு
சூட்சமொரு கருவுண்டு சொல்லக்கேளே. (74)

கேளப்பா அண்டம்போல் சாரஞ்சீவி
கெடியான மிளகோடு அபினிபூரம்
நீளப்பா மேனியிலைச் சாற்றாலாட்டி
நேராகப் பூசியதை ரவியிற்போட்டு
வாளப்பா யுலர்ந்தபின்பு வரிசைகேளும்
வாகான சேங்கொட்டைத் தைலமூட்டு
தாளப்பா யிளங்கன்றின் சாணியப்பி
தனிச்சுண்ணச் சீலைசுத்தி ரவியிற்போடே. (75)

போட்டுலர்ந்த பின்பதனை யெடுத்துக்கொண்டு
புகழான வங்கமது வுருக்கும்போது
நீட்டுவங்க மதிலழுத்தி யாறவைத்து
நேராகப் பிளந்தெடுக்கச் சராஞ்சுத்தி
பாட்டுலர்ந்த வெங்காரம் பல்லுப்போல்வெட்டி
பருவமுட நாயுருவிச் சாற்றிற்கேளு
ஆட்டுமிந்த வீரமொடு பூரம்போட்டு
அதில்கலக்கிச் சாரத்தைத் தோய்த்துப்போடே. (76)

தோச்சதிலே போட்டுவரத் தினந்தான்மூன்று
தோயாமல் நாலுநாள் உலரப்போட்டு
ஆச்சதிலே காரசத்தி சாரசுத்தி
யதுக்குளரை யிதுக்குளரைப் பலந்தான்தூக்கி
பாச்சதிலே பரிச்சூதச் சுண்ணமைந்தா
பாங்காக அரைப்பலந்தான் கூடப்போட்டு
மாச்சதிலே மத்தித்துக் கட்டிவைத்தால்
மகத்தான குருவாக மாட்டியாடே. (77)

ஆடலாம் வாதமென்ற அங்கமெல்லாம்
அறிவுகொண்டு யிழுத்ததெல்லா மாகுமாகும்
நீடலா மப்படியே ரசிதச்சூதம்
நேரான காரமொடு சாரமூட்டி
ஊடநவ லோகமுப ரசமும்பண்ணு
உத்தமனே பத்திமுதல் வெள்ளியாகும்
காடெல்லா திரிந்தலைந்து சுட்டாலென்ன
காரத்தின் கடைமயிருக் கொவ்வாவாரே. (78)

ஒவ்வாது ஒவ்வாது வொன்றுமைந்தா
ஒகோகோ சுண்ணமென்ற சூதத்திற்கு
கவ்வாது கவ்வாது மற்றவித்தை
கரையற்று ஆடாது யெந்தப்போக்கும்
சவ்வாது சவ்வாது குருவிலூட்டி
சகலமுமே மணிபோலே நின்றேயாடுந்
தவ்வாது புழுகோடு குருவைக்கூட்டித்
தாக்கியெல்லா மூதிடவே சுண்ணமாமே. (79)

ஆமப்பா யிக்குருவா லுப்பைக்கட்டி
அப்பனே சுண்ணாம்பா யாகவூது
ஓமப்பா யிதனோடே வீரங்கூட்டி
ஒன்றாக மத்தித்து அண்டத்தப்பா
வேமப்பா அண்டமது மெழுகுமாகும்
விளங்கினதோர் பரிசனத்தில் வேதையாகுஞ்
சாமப்பா சரக்குயிந்த மெழுகைக்கண்டால்
சதகோடி வேதையென்ன அண்டந்தானே. (80)

தானென்று நின்றதொரு வுப்புச்சுண்ணஞ்
சம்பழச்சார் வழலையின்மேல் சாற்றிப்போட
கானென்ற யெண்ணெயெல்லாங் கக்கிப்போடும்
சுழற்சி'யந்தக் கவசத்தை மருக்கால்கேளும்
வேனென்ற வெண்கண்டர் வீரம்பூசி
விளங்கிநின் றுலர்ந்தபின் சுண்ணத்தில் வைத்து
யானென்ற தீயெறிக்க யெண்ணெயெல்லாங்கக்கி
யம்மம்மா கடுங்காரம் யேறும்பாரே. (81)

பாரப்பா வழலையுட சாரத்தாட்டிப்
பார்க்கையிலே சலமாகுஞ் சலத்தினுள்ளே
நேரப்பா கற்பூரப் பலகைபோட்டு
நேராக வாரியிட்டு ஊதச்சுண்ணஞ்
சேரப்பா சவளையாழிச் சுண்ணத்துள்ளே
சிவப்பாகும் பரிசமுதல் தூமவேதி
ஆரப்பா யிதினாட்டைக் காணப்போறார்
அறுபத்து நாலுவித்தை யாடுங்காணே. (82)

காணப்பா யிச்சுண்ண முபரசங்கள்நீறுங்
கைமுறையா யின்னீரும் அண்டநீறும்
ஊணப்பா சரக்குமுத லோகநீறும்
உத்தமனே கரையில்லை சுண்ணப்போக்கு
தூணப்பா துரும்பாகுந் துரும்புந்தூணாந்
தூலத்தில் கலக்கமது சொர்ணமாகும்
பூணப்பா வாதத்தில் வாதுவந்தால்
பொன்னிரும்பா மிரும்புபொன்னாம் பூட்டியாடே (83)

ஆடலாம் வெகுகோடி யாட்டுமைந்தா
அறிந்ததுவு மறியாது மொக்கஆடுங்
கூடலாங் குளிகையதில் நூற்றிப்பத்து
கொடுங்குளிகை யெட்டுமிதிற் கூட்டலாகும்
ஊடலாம் பூரணத்தில் சென்றுஆடி
உயர்ந்துநின்ற நிற்குணத்தி லுன்னியாடி
நாடெலாந் திரிந்து நால் திசையுங்கண்டு
நந்திமுதல் நால்வரைப்போ லிருக்கலாமே. (84)

இருக்கிறதோர் நந்திமுதல் நாலாம்பாட்டான்
எவ்வாறு யிருப்பார்க ளென்றுபார்த்தேன்
செருக்கிறதோர் பூரணத்தி னுள்ளேசொக்கி
துரியத்தின் சுடர்போலத் தேகமாகி
திருக்கிறதோர் மனத்தையந்த பூரணத்தில்வைத்து
செகத்தையெல்லா மித்தையென்று தெளிந்தார்நால்வர்
அருக்கிறதோர் அருக்கமெல்லா மனந்தான் மைந்தா
அந்தருக்கைத் தீர்த்தவனே ஞானியாமே. (85)

ஆமிந்த யுலகத்தி லிருந்தபேர்கள்
அம்மம்மா ஞானமெல்லா மறிந்தேனென்று
ஓமிந்தப் பெண்டுவிட்டேன் பிள்ளைவிட்டேன்
உடுத்திருந்த சீலைவிட்டேன் வீடுவிட்டேன்
தாமிந்தச் சங்கைவிட்டேன் தளங்கள்விட்டேன்
சகலமெல்லாம் விட்டகன்ற தியாகியானேன்
போமிந்தப் படியிட்டும் ஞானியல்ல
போக்கறியான் சொல்லுகிற புதுமைதானே. (86)

தானென்ற கருவறிந்தோன் விட்டாலென்ன
சமுசார மாயைதொட்டிருந்தாலென்ன
ஊனென்ற யுடம்பெடுத்தா லெல்லாமுண்டு
ஓகோகோ கோபமென்ற முனையைப்போக்கு
ஆனென்ற அகங்காரம் சித்தம்போக்கி
அப்பனே சஞ்சலத்தை யகலவிட்டு
வானென்ற மனங்கூட்ட அதுவேஞானம்
வாய்ஞானத் தாலொன்றும் வாறாவாறே. (87)

வாராது வாராது யெண்ணப்பட்டும்
வருகிறது போகாது யென்னைவிட்டும்
நேராது நேராது யென்னதொட்டும்
நேரிலது குருசொல்லில் நேர்ந்துபோகுங்
தீராது தீராது பிறவிவாசம்
தேனுக்கு ஊரிசியைப்போல் தெளிந்தோன்வாதம்
சாராது சாராது யெந்தநூலின்
சாஸ்திரந்தா னேதுசெய்யுஞ் சண்டாளர்க்கே. (88)

தீயோர் செய்கை

சண்டாள னிந்த நூலாகா தென்பான்
சாதகமா யமைத்தநூல் நல்லதென்யான்
சண்டாள னாவதென்ன பெரியோர்சொன்ன
சாஸ்திரத்தை யேதென்ற சண்டிமாடு
சண்டாளன் பொருளாலே அருளேதென்பான்
சாஸ்திரத்தைப் பாராத சவுங்கச்சென்மம்
சண்டாளன் பொருள்விட்டுத் துறவியாகி
சண்டனுள் நாய்போலே சுழலுவானே. (89)

சுழலாமல் கரையேற யென்னவென்று
சூஸ்திரத்திற் பார்ப்பார்கள் பெரியோர்வல்லோர்
அழலாமல் வறுமையிலே யென்னபாவம்
அதனாலே யெமவித்தை யடுத்துப்பார்பார்
விழலாமோ பிறவியிலே யென்னபுத்தி
வேதாந்தம் பார்த்துணர வேணுமென்பார்
விழலாமோ நரசென்மம் யெடுத்ததய்யோ
வெளியோடே மனமுறைத்து மேவுவாரே. (90)

பூரணப்பெருமை

மேவுவதுக் கெப்படித்தா னென்றால்கேளும்
விரைந்துண்ண லுறங்குவது சஞ்சாரத்தில்
தாவுவது மேல்மூலத்திருந்து கொண்டு
சத்திநிறம் பூரணத்தைப் பாருபாரு
கூவுவதோர் சாவலுக்கு யிரவிவார
குறிகண்ட வாறுபோ லுனக்குங்காணும்
பாவுவது மனமந்தப் பூரணத்தைப்பரவும்
பறந்தூதுங் குழவிவைத்த புழுப்போலாமே. (91)

ஆமப்பா மனமொன்றாய் நோக்கநோக்க
அடுத்துவந்து போதமுன்னை யழைத்துக்கொள்ளும்
வேமப்பா நல்வினையாந் தீவினைகளெல்லாம்
வெறும்பேச்சுச் சொன்னதினால் போதமாச்சு
நாமப்பா யிப்படியே நிலைத்துக்கண்டோம்
நாதாந்தப் போக்கினுட பதத்தைப்போற்றி
காமப்பா லாசைகொண்டு வாதிகெட்டு
கரையேற்ற மில்லாமல் கவிழ்ந்திட்டானே. (92)

குண்டலி யோகம்

கவிழ்ந்திட்ட குண்டலியைக் காலாலாட்டி
கனலோடே யாறுவரை கலந்துயேறி
கவிழ்ந்திட்ட யசபையிலே சென்றுகூடி
களங்கமற்ற அதனுடைய யமுர்தமுண்டு
கவிழ்ந்திட்ட யசபையிலே யேட்டைத்தள்ளி
கடைநாலைப் பார்பாரு மைந்தாமைந்தா
கவிழ்ந்திட்ட மனங்கூட யெல்லாங்காணும்
கவியாட்டால் பொரியோடே கலந்துபோமே. (93)

யோகியின் தன்மை

போமப்பா பொரிவந்து புகுந்துதானால்
பூட்டுகிற லெட்சயமும் போகும்பொய்யாய்
சாமப்பா சடமலைந்து யிரணங்கெட்டு
சாராதே பொருளுமென்று தயங்கியேங்கி
நோமப்பா மனம்புண்ணாய் நொந்தாலென்னா
நுணுக்கத்தில் நுணுக்கமென்ன பிர்மவித்தை
ஓமப்பா யிதுக்கொக்கும் பூரத்தாட் டு
உற்றுணர்ந்து பார்த்தவனே யோகியாமே. (94)

யோகியென்றால் சையோக மல்லஅல்ல
உத்தமனே சிவயோகி ராஜயோகி
யோகியென்றா லடையோகி யோகியல்ல
யொன்றாகக் கண்டிருந்த ஞானயோகி
யோகியென்றா லாசையுள்ளோன் யோகியல்ல
யுருப்பெற்ற ரசயோகி சித்தயோகி
யோகியென்றால் கர்மமுற்றோன் யோகியல்ல
ஒருநொடிக்குள் பூமிசுற்றுங் குளிகையோறே. (95)

குளிகையின் போக்கு

குளிகைதனைக் கண்டறியா ருலகவாதி
கூறான சாரணையைப் பண்ணமாட்டார்
குளிகைதனைப் பண்ணிநல்ல பெண்களோடே
கூடுதற்குத் தம்பனமாய்க் குலாவிச்செய்வான்
குளிகைதனில் சத்திட்டு யுபசரங்களூட்டி
குணத்தோடே வாயில்வைத்து ஞானம்பாரார்
குளிகைதன்னிற் களையறிந்து கோபந்தீர்ந்து
கொடுகவனத் தோடறியார் குலாமர்தானே. (96)

தானென்ற குளிகையிலே வேதைசொல்ல
சதகோடி சிவகோடி சங்கந்தாண்டும்
கோனென்ற மூலகுரு வாடியாடிக்
குறிப்பறிய மாட்டாமற் கூறிப்போனார்
வானென்று யாடுதென்றால் செலத்தைத்தூக்கு
மருமத்தைச் சொல்லுதற்கு வாய்தானுண்டோ
பானமன்று உண்றிருந்த யெந்தாய்சொன்னாள்
பராபரமும் சூதமும்நேர் பாரென்றாளே. (97)

வெங்காரக் கட்டு

பாரப்பா வெண்கார மாடுமாட்டு
பணபேதி சதபேதி சத்தபேதி
தூரப்பா வாதமென்ற விருட்சத்துக்குத்
தொடுமுன்னே யுருக்கினமாஞ் சுண்ணமாகுஞ்
சீரப்பா கண்டிதனில் நீரைக்கொல்லச்
செகசாலத் தொழிலெல்லாந் திறமாயாடும்
ஆரப்பா யிதன்பெருமை யறியவல்லார்
அரனறிவா ராத்தாதா னறிவாள்தானே. (98)

அறியாத வெடியுப்புக் கல்வத்திட்டு
யந்திடைக்கி நாலிலொன்று கல்லுப்பிட்டு
மறிவாகப் பழச்சாற்றா லாட்டுஆட்டு
மைந்தனே யதுமெழுகா யானபின்பு
பிறிவாக யிருபதுக்கு வொன்றுகேளும்
பேரான வழலையுடச் சுண்ணம்போட்டு
நெறியாக வழித்துவைத்துப் புடத்தைப்போடு
நேராகச் சுண்ணாம்பு முப்புப்பாரே. (99)

பாரப்பா சுண்ணாம்பைப் பனியில்வைக்க
பனிச்சென்று சலமாகுந் தெளிவைவாங்கி
சேரப்பா யிதினுள்ளே வீரம்பூரம்
சேர்த்தரைத்து வெங்காரப் பலகைக்கப்பு
நேரப்பா ரவிபடவே காரங்கட்டும்
நேர்பாகச் சூடனுட புகையில்வாட்டி
நீரப்பா முன்னீரால் சூடனாட்டி
நினைவாகப் பலகையின்மேல் பூசிப்போடே. (100)

போட்டுவைக்க வேபட்ச முழுக்கட்டாகும்
புகழ்பெரிய காரத்திற் காரமேற்றி
மூட்டிவைக்கச் சிப்பிநீர்க் குள்ளேவைத்து
முனையாகத் தீமூட்டிற் சுண்ணமாகும்
ஊட்டுவைக்கக் காரமதில் ரெட்டிப்பூட்டி
உற்றரைக்கச் செயநீராங் காரவேகம்
பூட்டுவைக்க யிதுக்குள்ளே வீரம்போடு
புகழாகச் சிவப்பேறும் போக்கைக்கேளே. (101)

கேளப்பா வெண்காரந் துவைத்துக்கட்டுங்
கெடியாகச் சரக்கெல்லாந் துவைக்கக்கட்டும்
நீளப்பா பூரமதிற் காரசாரம்
நிறைநிறையாய்த் துவைத்துடனே கட்டும்வாட்டத்
தாளப்பா காரவித்தை சரக்கைக்கொல்லச்
சவ்வாது பட்டதெல்லா மணிபோலாடும்
ஆளப்பா புனுகுபட்டா லெல்லாஞ்சுண்ணம்
அதுக்கதுக்கு முறைசொல்லத் தடங்காதேடே. (102)

ஏட்டிலே யெழுதவென்றால் காரவித்தை
யென்னாலே கூடாது யென்னசொல்வேன்
மூட்டிலே முட்டவென்றால் சுண்ணாம்பாட்டு
பூவுலகுங் கொள்ளாது முன்பின்தோணா
ஆட்டிலே யுருக்கினத்தை யாடவென்றால்
அகாரசிவ உகாரநம சிவத்தாலாகும்
நாட்டிலே யிருந்தவனோ யித்தைக்காண்பான்
நாதாக்க ளறிவார்கள் .காரந்தானே. (103)

வேதைப்போக்கு

காரமென்று யேதுக்குப் போதாச்சு
கடுங்கார மதுமேலே யெரிந்ததானால்
வீரமென்ற வீரமது குதிரையாச்சு
மேல்வைக்குங் கல்லணைதான் வங்கமாச்சு
பூரமென்ற கடுவாளம் வாய்க்குமாச்சு
புகழாக முகவட்டுத் துருசுமாச்சு
வாரமென்ற அரிதாரம் அங்கவடியாச்சு
அக்குதிக் கடிவாறும் சாரமாச்சே. (104)

ஆச்சப்பா சவுக்கதுவுங் கெந்தியாச்சு
அதுமேலே ராவுத்தன் சூதமாச்சு
வீச்சப்பா லாடமது நிமிளையாச்சு
வீதியெங்கே யென்றாக்கா லகண்டவீதி
மூச்சப்பா பறிந்துதென்றால் மலைபொன்னாகும்
மூதண்டஞ் சுற்றிவருங் குதிரைவேகம்
ஓச்சப்பா சதகோடி யிவ்வேதைக்குள்
உத்தமனே காரத்தி னுண்மைகேளே. (105)

உண்மையின்னஞ் சொல்லுகிறேன் காரத்தோடே
உத்தமனே வீரமிட்டு ஆட்டிநன்றாய்
வன்மையென்ற வழலையின்மே லப்பிப்போட
வாருதிபோ லெண்ணைவரு மைந்தாபாரு
தன்மையென்ற சவுக்காரங் கடுங்காரமேற்ற
சகலசரக் கிதைக்கண்டால் தயங்கிச்சாகும்
அண்மையென்ற சவுக்கார மாடுமாட்டு
அதன்காரம் யாரோடு சொல்லுவேனே. (106)

சுண்ணப்போக்கு

சொல்லரிது சொல்லரிது சுண்ணமார்க்கம்
தொட்டதெல்லாம் பட்டுடனே வேதையாகு
மல்லரிது மல்லரிது சகலவஸ்தும்
மணிபோலே நின்றாடும் வழலைவேகம்
வெல்லரிது வெல்லரிது சகலம்நீறும்
வெறுநீரோ வல்லவது வேதைகோடி
கொல்லரிது கொல்லரிது வழலைப்பாம்பை
கொன்றவனே முழுவாதி குறிப்பைக்கேளே. (107)

குறிப்பான வழலையில்சா ரத்தையாட்டி
கொப்பளிக்குஞ் செயநீரு மைந்தாபாரு
நெறிப்பான யிந்நீரிற் பூரம்போட்டு
நேராக வாரியிட்டு வாதச்சுண்ணம்
பொறிப்பான பூரத்தில் வீரமாட்டி
புகழுங்கல் லுப்பிலப் படியேபோட்டு
மறிப்பானோ வாதிமகன் வாதிவுப்பை
மைந்தனே யிந்தவுப்பைச் சுண்ணமூதே. (108)

ஊதியதோர் கல்லுப்புச் சுண்ணத்தோடே
உத்தமனே வீரமிட்டுத் தாளகத்துக் கப்பி
ஆகியதோர் தாளகத்தை வைத்து ஆடி
அப்பனே சுண்ணமாம் வங்கத் தப்பு
கோதியதோர் புடம்போட வங்கச்சுண்ணம்
குறிப்பாக யிச்சுண்ணஞ் சாரத்தப்ப
வேதியதோ ரிச்சுண்ணம் வைத்து ஆட்ட
வெள்ளெலும்பு போலிருக்குஞ் சுண்ணமாச்சே. (109)

சுண்ணமென்ற சாரத்தை வீரத்தப்பித்
துடிப்படவே வைத்தாட்டி ஊதிப்போடு
சுண்ணமென்ற சுண்ணமல்ல வீரச்சுண்ணஞ்
சூட்டியதில் வீரமிட்டு துருசுக்கப்பு
சுண்ணமென்ற அஞ்சுசுண்ணக் குகையிலூது
துப்புரவாய்க் கண்டருமே சுண்ணமாகுஞ்
சுண்ணமென்ற கண்டரைத்தான் சூதத்தாட்டு
துடியாது சூதமென்ற யானைசாமே. (110)

ஆனையென்ற சூதமிதில் செத்துதானால்
அப்பனே மற்றதுக்கிங் கேதுசொல்வேன்
ஆனையுடன் போராடிக் குத்திக் கொண்டால்
அவனல்லோ முழுவாதி யவனேவீரன்
ஆனையுடன் போராடி யறியார்மாண்பர்
அரகரா வாதமெல்லாம் மீவேனென்பார்
ஆனையுடன் ஆட்டல்லோ வாதமாட்டு
அறிந்தவனே சிவயோகி யறியானாயே. (111)

அறியாமூடர்

நாயென்றா லோகத்துக் காகுமாகும்
நல்லசென்மம் நல்லசென்ம மறிவுமெத்த
சீயென்ற சென்மமென்ன திருட்டுவாதி
செகத்திலுள்ளார் தூசித்தால் வாதம்போச்சு
வாயென்றால் கிழிச்சதனில் மண்ணைப்போட்டு
வாதமூன்று யென்றுசொல்லி யாடுமக்காள்
பாயென்ற குளிகையிட்டுப் பாய்வாயென்று
பரிவாக மயிர்பிடித்துப் பரித்துச்சன்னே. (112)

சன்னப்பா வாதமில்லை யென்றானானால்
தருதுரும்ப ருண்டென்பா ரில்லையென்பார்
கண்ணப்பா கண்டாக்கால் மெய்தானென்பார்
காட்டுகிற தொழிலாளி யார்போவென்பான்
மண்ணப்பா முந்திமுந்தி யவன்வாயிற்போட்டு
மயிர்பிடித்துக் கொண்டங்கே வேதைகாட்டு
பொன்னப்பா வுலகத்தில் நாலாசாதி
உலுத்தருஞ் சண்டாள ருண்டேபாரே. (113)

வீரமணி

பாரப்பா துருசிகொண்டு கட்டிவீரம்
பணிவாக மணிபோலே யெடுத்துக்கொண்டு
நேரப்பா யிதிலொன்று தங்கம்நாலு
நேர்ந்துருக்கி யிதையிட்டு மணிபோலாக்கி
நேரப்பா யிதன்மேலே துருசிவீரம்
நிறமான புழுகோடு வழலைச்சுண்ணம்
ஓமப்பா பூசியதை யுலர்த்திப்பின்பு
உத்தமனே அஞ்சுசுண்ணக் குகையாலூட்டே. (114)

குகையோடே புடம்போடத் தங்கம்நீறும்
கொடியநீர்க் கொள்ளிதனைக் மொக்குமொக்கும்
வகையோடே வாங்கியிதை யரைத்துக்கொண்டு
மக்களே முன்சார காரங்கூட்டி
துகையோடே வில்லைகட்டி சுண்ணாம்பப்பி
சூட்டியொரு புடம்போடச் சுருக்குமெத்த
பகையோடே கொன்றுதின்னுஞ் சரக்கையெல்லாம்
படுமுன்னே மலைமுதலாய்ப் பழுக்கும்பாரே. (115)

பிழுக்குஉப்பா பழுக்குமப்பா ஒடுங்கல்லும்
பணபேதி சனபேதி சத்தபேதி
இருக்குமப்பா தொட்டதெல்லாங் கோடாகோடி
யெம்மட்டோ யெம்மட்டோ யானுங்காணேன்
முழுக்குமப்பா முழுக்குமப்பா வாதமெல்லா
மூதண்டம் பேதிக்கு முன்பின்னில்லை
அழுக்குமப்பா அழுக்குமப்பா ரசங்களெல்லாம்
அரகரா சிவசிவா யறியிலேனே. (116)

பொற்குரு வேதை

அறியாத பொற்குருப்போல் வெள்ளிபண்ணில்
அம்மம்மா சிலையேது மனந்தானேது
மறியாது மரமேது அஸ்திதானேது
மண்ணேது கல்லேது மலைதான்வெள்ளி
குறியாது குறிப்பதிலே கோடாகோடி
கூப்பிட்டால் கேட்காது வாதக்காடு
பிறியாத சீஷனுக்கு யிக்குருவைச்சொல்லி
பேரின்ப மார்க்கமெல்லாம் பிலக்கப்பண்ணே. (117)

பண்ணப்பா பொற்குருவா லுப்பைக்கட்ட
பறக்குமப்பா பறக்குமப்பா தாண்டியாடி
பண்ணப்பா பொற்குருவால் வழலைநீற்று
பார்க்கரிது பார்க்கரிது பாடமாட்டேன்
பண்ணப்பா பொற்குருவால் துருசுச்சுண்ணம்
பாருலகுங் கொள்ளாது விண்கொள்ளாது
பண்ணப்பா பொற்குருவால் சாரச்சுண்ணம்
பறந்துஒரு பொட்டிடவே மலைபொன்னாமே. (118)

புத்திகூறல்

பொனனாமோ பொன்னாமோ வென்றுசொல்லி
போக்கறியா வாதிநின்று புலம்பினார்கள்
பன்னாமோ பன்னாமோ சாஸ்திரத்தைவென்று
பலபலவாம் நினைவாலே கெடுக்கிறார்கள்
தின்னாமோ தின்னாமோ கல்லுப்பென்று
தேறாமல் வெகுவாதி செத்துப்போனார்
முன்னாமோ பின்னாமோ வென்றுசொன்ன
மூடர்க்கு வாதமென்னா மோசந்தானே. (119)

மோசமையா சூதத்தைக் கட்டாவிட்டால்
முன்னுமில்லை பின்னுமில்லை முடக்குமில்லை
தூசமையா படர்ந்தகண்ணால் நோட்டம்பார்த்து
கதையொக்கும் வாதியிட்ட கருவதெல்லாம்
பாசமையா சூழ்ந்துகொண்டா லென்னஞானம்
பரியாச மோகெடுவாய் ஞானம்போச்சு
வீசுமையா சுக்கிலந்தான் பிள்ளையாச்சு
வேதைக்கு மவ்வளவு பீசங்கூட்டே. (120)

கூட்டுவது பரிச்சூத முண்டுதானால்
குலாவியொரு பொட்டாலே மேருபொன்னாம்
ஆட்டுவது யென்னயின்னம் வாதஆட்டு
அறிந்தமட்டு மாடலா மறியார்கோடி
மூட்டுவது யென்னயினி யேங்கவேண்டாம்
முறைமுறையாய்த் தொட்டதெல்லாம் வேதையாகும்
பூட்டுவது முந்திமுந்தி யொன்றேபூட்டு
புகழறிந்தால் வெகுபூட்டு ஆடலாமே. (121)

ஜெனன மார்க்கம்

ஆமப்பா செனித்தவுடல் மறிக்கும்போது
அவரவர்தா னினைவதிலே சென்றுபுக்கும்
ஓமப்பா செந்துவிலே நோக்கமானால்
உத்தமனே செந்துவென்ற வுடலைக்கொள்ளும்
காமப்பா பூரணத்தில் நின்றுயென்ன
நலமான பூரணத்தை நாடிப்போகுங்
காமப்பால் மோகத்தை நினைத்தோராகில்
கைமுறையாய்க் கோழியென்ற செனனமாமே. (122)

செனனமில்லை மரணமில்லை ஞானிக்கப்பா
சிவதீட்சை யானதினால் செப்பக்கேளு
செனனமில்லை மரணமில்லை யோகியோர்க்கு
செகமெல்லா மித்தையென்று யிருந்ததாலே
செனனமில்லை மரணமில்லை செகத்திலப்பா
சிவராஜ யோகரிஷி முனிவர்க்கெல்லாம்
செனனமில்லை மரணமில்லை காயசித்தி
செய்துகொண்ட பெரியோர்க்குச் செப்பக்கேளே. (123)

பூரணம்

கேளப்பா பூரணந்தா னெவ்வாறென்றால்
கெடியான கருப்புமல்ல சிவப்புமல்ல
வாளப்பா மஞ்சளல்ல பச்சையல்ல
மாவெளுப்பு தானுமல்ல மஞ்சுமல்ல
நீளப்பா நினைவேதோ நோக்கங்காணோம்
நேரான வெட்டவெளி நேர்ந்தோன்காண்பான்
தாளப்பா யிதுக்குமனந் தன்னைக்கட்ட
சச்சிதா னந்தத்திற் சாரும்பாரே. (124)

சாருவது யெங்கேயென்றால் மூக்கிற்சாருஞ்
சமத்தோடு யிருந்தால்தத் துவத்தைச்சாரும்
சாருவது யெங்கென்றால் பிடரியிலுஞ்சாரும்
சாதகமாய் நெஞ்சினுள்ளே தாக்கச்சாரும்
சாருவது மூலத்தில் நோக்கச்சாரும்
சகலசித்து மஷ்டாங்கந் தன்னைச்சாருஞ்
சாருவது மஞ்சுதலஞ் சாருமப்பா
தப்பாம லட்சயத்தைத் தாக்கிச்சாரே. (125)

தாக்கியஞ்சு தலங்கண்டோன் மகத்தாம்யோகி
தப்பாது தப்பாது யிதுவேபோக்கு
தாக்கியஞ்சு தலங்கடந்தோன் ஞானயோகி
தவசியென்றால் வனதவசி சத்தில்சேர்வான்
தாக்கியஞ்சு பதமறிந்து அகாரத்தில் புக்க
சச்சிதா னந்தமென்ற நாமமானார்
தாக்கியஞ்சு லட்சயமே சாதுக்கப்பா
தாயான குருசொல்லச் சார்ந்துயேறே. (126)

ஏறுவது கடினத்துக் கொக்குமொக்கு
மென்மகனே வாதமென்ற யேற்றமெத்த
தேறுவதோர் மனயேற்றம் போலேமைந்தா
செயலான சரக்கெல்லாஞ் சுண்ணாம்பாகு
மூறுவதோ ருத்தமேல் கோடாகோடி
உத்தமனே வாதமுறை யுரைக்கமாட்டேன்
மாறுவதோர் மனந்திரும்பி விரிந்ததானால்
மட்டுண்டோ லெக்குண்டோ மைந்தாசொல்லே. (127)

சொல்லறியோஞ் சொலறியோங் கண்டத்துள்ளே
சொக்கிநின்று வந்தசுந் தரமேஐயா
மல்லறியோ மல்லறியோ மேறமாட்டோம்
மனங்கட்ட வகையறியோம் வழியுங்காணோம்
நில்லறியோம் நில்லறியோம் நெறியினுள்ளே
நேராகச் சாஸ்திரத்தில் நிலைக்கமாட்டோம்
புல்லறியோம் புல்லறியோம் பிள்ளைகளைப்பெற்ற
புகழ்பெரிய நிற்குணமே போக்கைச்சொல்லே. (128)

போக்குமினி யென்னசொல்வேன் மக்காள்மக்காள்
புகழாகப் பொருளைமுந்திப் பண்ணிப்பார்த்து
தாக்குமிந்த மூலத்தை மனத்தைக்கட்டி
சாதகமா யாறுதலந் தாண்டியேறி
தேக்குநல்ல மதியினுள்ளே பானம்பண்ணி
செயலான மனோன்மணியைக் கண்டுபோற்றி
தூக்குமந்தத் தமரோடே மனத்தைக்கட்டி
சுகமாகப் பூரணத்தில் சொக்கியாடே. (129)

சீனக்சுண்ணம்

ஆடுதற்குச் சீனமொன்று சொல்லக்கேளு
அம்மம்மா கடுங்கார மாட்டிப்பாரு
ஊடுதற்கு யிதைக்கட்ட யறிந்தானானால்
உலகமெல்லாம் பொன்னாகு மோடுந்தூரம்
மூடுதற்கு முட்டவென்றால் முட்டப்போகா
மூதண்டந் தொட்டாடக் குளிகையாகும்
நீடுதற்கு யிதைக்கொண்டு ஆடக்கேளு
நேராகச் சொல்லுக்குள் நினைவாய்ப்பாரு. (130)

பாரப்பா புளியெட்டு வெடியுப்பெட்டு
பரிவான சாரமரைக் கல்லுப்பொன்று
நேரப்பா சூடனரை யிந்துப்பொன்று
நேராக யிடித்துநன்றாய்த் தீயைமூட்டி
ஓமப்பா கொடியசுண்ண மாகுமாகுங்
குறையாமல் பனியில்வைக்கச் செயநீராகுந்
சீரப்பா யிந்நீரில் வீரம்பூரந்
திறமாக வழலையுட சுண்ணம்போடே. (131)

சுண்ணப்போக்கு

போட்டரைத்துச் செயநீரில் படிகைக்கப்பு
புகழான ரவியிலிடச் சுண்ணமாகும்
கூட்டரைத்துக் கடுங்கார மிதற்குயேற்ற
கொடியதொரு வேகமுறும் நன்றாய்க்கேளு
மாட்டரைத்து யிந்திடைக்குச் சாரங்கூட்டி
மைந்தனே செயநீராம் வாய்பேசாதே
பூட்டரைத்து யிந்நீரில் பூரம்போட்டு
புகழாக வாரியிட்டுப் பொலிவாயூதே. (132)

பொலிவாகக் கற்பூரச் சுண்ணமாகும்
போக்கிலே வெகுகோடி சொல்லமாட்டேன்
கெலிவாக வழலைக்குச் சீனஞ்சுண்ணங்
கெடியாக வீரமிட்டு அப்பிப்போடு
வலிவாக யெண்ணெயெல்லாங் கக்குங்கக்கும்
வாங்கியந்தக் கவசத்தை யெறிந்துபோட்டு
மலிவாக வீரமொடு பூரச்சுண்ணம்
மாட்டியதை ரவியினுள்ளே மயங்கப்போடே. (133)

போட்டெடுத்த கவசமுடன் கிழிஞ்சிநீரில்
புகழாகத் தீயெரிக்கச் சுண்ணமாகும்
மூட்டெடுத்துக் கடுங்கார மிதின்மேலேற்று
மூதண்டங் கிழிந்தாடும் வழலைச்சுண்ணம்
ஆட்டெடுத்த யம்பலவர்க் கொக்குமொக்கும்
அதிகார வழலையுட அதிகவேகம்
நீட்டெடுத்த விடமெல்லாம் நீறாய்போகும்
நிலையில்லை கரையில்லை நினைவாயாடே. (134)

ஆடவென்றால் வழலையிலே வீரஞ்சேர்த்து
அப்பனே தாளகத்துக் கப்பியூது
நீடவென்றால் சுண்ணாம்பா மாலின்தேவி
நேரான கெந்தகத்துக் கிதைத்தான்பூசு
சூடவென்றால் தீமூட்டச் சுண்ணமாகுந்
துடியான கெந்தகத்தை வீரத்தப்பி
ஊடவென்றா லூதுமெல்ல வீரச்சுண்ணம்
உத்தமனே வீரத்தை வங்கத்தப்பே. (135)

அப்பியந்த வங்கத்தைப் புடந்தான்போடு
    ஆகாகா பூப்போலே சுண்ணமாகும்
ஒப்பியந்த வங்கத்தைத் துருசுக்கப்பி
    ஓகோகோ யூதிடவே சுண்ணமாகுஞ்
செப்பியந்தக் துருசைத்தான் சாரத்துக்கப்பி
    சேர்ந்துமெள்ளத் தீயிட்டு வூதச்சுண்ணம்
கொப்பியென்று கொட்டுகிற சத்திக்கொக்குங்
    கூறரிது சாரவித்தை கூறுவேனே. (136)

சாரவித்தை

கூறுகிறேன் சாரத்தை நிமிளைக்கப்பி
    கூசாம லூதுமைந்தா சுண்ணமாகும்
மாறுகிறே னிமிளைதனைத் தங்கத்தப்பி
    வகையாகப் புடம்போடத் தங்கம்நீறும்
ஏறுகிறேன் தங்கத்தைச் சூதத்தூட்டி
    யெடுத்துடனே மணியாகு மேலேகேளுந்
தேறுகிறேனிச்சூதங் குளிகையூட்டி
    தெளிவாக ஊதுநன்றாய்ச் சுண்ணமாமே. (137)

சுண்ணமென்ற சூதத்தை வீரத்தப்பி
    சுகமாக வாட்டுநன்றாய்க் கட்டிப்போகும்
வண்ணமென்ற தங்கம்நா லிதுதானொன்று
    மாட்டியொன்றா யுருக்கியதை மணிபோல்வாங்கி
கண்ணமென்ற அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
    தூக்கியொரு புடம்போடச் சுண்ணமாகுங்
கண்ணமென்ற கன்னக்கோல் வாதத்துக்கு
    கைமுறையு மிதுவாச்சு கண்டுகொள்ளே. (138)

கண்டுகொள்ளு மிச்சுண்ணந் தூமவேதை
    கரையில்லை சத்தமுதல் பரிசவேதை
தொண்டுகொள்ளு மண்டமுதல் பத்துமட்டுஞ்
    சொன்னமென்ற யிதினாலே துறையோகோடி
துண்டுகொள்ளும் நாழிகொள்ளுங் குறுணியாகுஞ்
    சொற்பெரிய கலமாகுந் தூணியாகும்
பண்டுகொள்ளும் நெற்பயிர்போல் கோடாகோடி
    பரவுமையா ளிதன்கூறு பாடுவேனே. (139)

பாடுவேன் குருவாலே மைந்தாகேளும்
பர்வதமும் மண்மரமும் பொன்னேயாகும்
ஆடுவே னாடிவே னாடியாடி
அளப்பறிய மாட்டேனான் கோடிகாலந்
தேடுவேன் தேடுவேன் என்னசொல்வேன்
தென்னிலைபோ லறிந்தாடுஞ் செப்பமாட்டேன்
கூடுவேன் கூடுவேன் நாகப்போக்கு
கூறரிதாம் பூரணத்தில் கூடினேனே. (140)

அண்டச்செந்தூரம்

கூடினதோர் பரிவீரச் சுண்ணத்துள்ளே
குலாவியதோர் வீரமிட்டு அண்டத்தப்ப
நாடினதோர் அண்டமெல்லாந் தோலோடொக்க
நலமங்கி யண்டம்போல் செந்தூரிக்கும்
மூடினதோ ரண்டமுமிப் படியேயாகும்
மூதண்ட வேதையிதி லறிந்துபோடு
சாடினதோர் சாட்டமெல்லா மண்டச்சாட்டஞ்
சதகோடி பத்துமென்பார் நான்காணேனே. (141)

காணாத அண்டத்தின் மெழுகுகோடி
கட்டுநீத் தினமுருக் கினமோகோடி
பூணாத செயநீரோ களங்குகோடி
பொன்னீரோ வெள்ளியுட நீரோகோடி
தோணாத யுபரசத்தின் சத்தோகோடி
துடியாமல் சூதமென்ற கட்டோகோடி
ஆணாத பாஷாணக் கட்டோகோடி
ஆகிறதைக் கெடுக்கயிதி லாகும்பாரே. (142)

ஆகுமப்பா கட்டினத்தைச் சுண்ணம்பண்ணும்
அந்தந்த யினங்களுஞ்செந் தூரம்பண்ணும்
போகுமப்பா வெகுதூரங் களங்கம்பண்ணும்
பொற்குருவால் வெகுபூட்டாம் பூட்டியாடும்
மாகுமப்பா வுபரசத்தின் சத்தால்வேதை
மட்டுண்டோ லெக்குண்டோ மணிக்கியூட்டு
சாகுமப்பா நவலோகந் தனித்தனியேவேதை
சரங்கோப சாங்கமிதில் சாற்றினேனே. (143)

சாற்றிய அண்டவித்தை பிண்டவித்தை
    சமுசியமாய் மயங்காதே நன்றாய்ப்பூசி
நீற்றிய நீற்றெல்லா மிதுக்குள்நீறும்
    நேரான கட்டுவகை கெந்திக்கட்டு
ஊற்றிய வூற்றெல்லா மிதுக்கொவ்வாது
    ஓகோகோ உயர்ந்தவித்தை குளிகைதீரும்
போற்றிய போற்றெல்லாம் பதத்தைப்போற்றும்
    புகழாகக் கிட்டினத்தைச் சொல்லக்கேளே. (144)

கிட்டினங்கூறல்

சொல்லுகிறே னண்டத்தின் மெழுகதொன்று
    சுட்டண்டத் தோலொன்று வங்கமொன்று'
புல்லுகிறேன் புழுகொன்று கூட்டியாட்டி
    புகழாகக் கரத்தில்வைத்து பொன்னீர்மீட்ட
மல்லுகிறேன் வெங்கலமாய்க் கிட்டமாகி
    மற்றதொன்று மில்லாமல் மண்ணாய்ப்போகும்
வெல்லுகிறேன் யென்றுசொன்ன வாதிமுன்னே
    வேதையெல்லாம் பொய்யாக்கி விடுவித்தாட்டே. (145)

ஆட்டிடவே வெகுவித்தை கேளுமைந்தா
    ஆச்சிந்தப் பொன்னென்று யவன்தான்சொன்னால்
ஒடையிலே அதைவாங்கிப் பார்த்துப்போடு
    ஓகோகோ யிரும்பாகும் கிட்டமாகுந்
தாடையிலே போட்டவனை விபரங்கேளு
    சமர்த்துண்டோ யிருந்தாக்கால் பின்னுஞ்சொல்வான்
பாடையிலே சென்றபினா முயிராமோடா
    பார்த்தொருக்கால் முன்போடு உயிராய்ப்போமே. (146)

போமென்று கோஷித்து ஆடுஆடு
    புகழாக யெவருக்கு மஞ்சவேண்டாம்
ஓமென்று மூலகுரு வர்க்கமானால்
    உத்தமனே பேசாதே உயர்ந்தபாட்டர்
நாமென்று மவருடைய சீஷவர்க்கம்
    நாதாந்த வேதாந்த வர்க்கமய்யா
ஆமென்று யெனையீன்ற போகர்சொன்னார்
    அறுபத்து நாலுமாத் ததிகந்தானே. (147)

அதிதமென்ற மூலகுரு யனாதிகோடி
அப்பனே சித்தருண்டு ரிஷிகளுண்டு
நிதிதமென்ற குளிகைமுறை யறியாரப்பா
நேராகப் பூரணத்தை நேர்ந்துநின்றார்
பதிதமென்ற சொரூபமணி பார்த்துவல்லோர்
பார்மகனே சூதவித்தை யாகக்காட்டி
துதிதமென்று மெனைத்துதித்தார் யானிறைஞ்சிநிற்க
சேர்த்தியந்தா ணாருமைந்தா வெனக்கேட்டாரே. (148)

கேட்டவர்க்குக் கைலாசம் பரம்பரையில்வந்த
கெடியான மூலருட பிள்ளையுடபிள்ளை
நீட்டவர்க்கு மேலான போகனாதர்
நேராக அவருடைய பிள்ளையான்தான்
ஆட்டவற்குச் சூதவித்தை வருமோவப்பா
ஆச்சரிய மாச்சரிய மறியோம்நாங்கள்
கூட்டவர்க்கு அவருடைய குழந்தைநீயோ
கொள்கியுன்போல் யெவர்களுமே கூறக்காணேன். (149)

கூரான ரசத்தொழிலைச் செய்துநாங்கள்
கொள்கிமனத் தோடேபோ ராடிநித்தம்
வாரான லட்சயத்தைப் பார்த்துப்பார்த்து
மனமுறைத்து மெஞ்ஞான வரையிற்சென்றோம்
வீரான மனத்தைப்போல் ரசத்தைக்கட்ட
வெகுசுளுவு வெகுசுளுவு யறியோமப்பா
தீரான சிவயோகஞ் சனத்திற்சித்தி
செய்வார்க்கு மெஞ்ஞானஞ் சித்தியாமே. (150)

சடத்தின் கூறு

ஆமப்பா சடமெல்லாம் பிரமன்கூறு
அதுக்குள்நின்ற ரத்தமோ மாலின்கூறு
ஓமப்பா யிதுக்குள்ளே புரியட்டஞ்சொல்வேன்
உத்தமனே சூட்சமென்ற தோற்றங்கேளுந்
தேமப்பா சிகாரமென்ற சிவன்தானொன்று
சேர்ந்துமெல்ல வகாரமென்ற மயேசனொன்று
நாமப்பா யகாரசதா சிவன்தானொன்று
சார்ந்துநின்ற விந்துவதின் மேலுமாச்சே. (151)

ஆச்சப்பா விந்துவின்மேல் நாதமொன்று
அதின்மேலே சத்தியொன்று அறிந்துபாரு
ஓச்சப்பா யிதின்மேலே சிவன்றானொன்று
ஒத்தசிவ னாரென்னில் விராட்டியன்தான்
பாச்சப்பா யதன்மேலே பரைதானொன்று
பாருமிந்த யெட்டுப்புரி யட்டமாச்சு
வாச்சப்பா யிதனாலே பிறப்பிறப்புமாச்சு
வாகான புரியட்டக் கூத்துத்தானே. (152)

கூத்தெல்லாம் புரியஷ்டக் கூத்தேகூத்து
கோடான கோடிசென்ம மெடுத்தேயாடும்
கூத்தெல்லாம் புரியட்டத் தோற்றமேழு
குலாவியது விரிந்தாடி வஞ்சுமாச்சு
கூத்தெல்லாம் எண்பத்து நான்குலக்ஷம்
கூரான ஜீவபேதம் நாலுயோனி
கூத்தெல்லாம் பார்த்தறிந்த பெரியோரய்யா
கூட்டோடே தள்ளியதன் மேல்நிற்பாரே. (153)

ஞானம்

மேலான பரைமேலே முப்பாழ்கேளு
விளங்கியொன்று வெளிப்பாழா மதுக்குமேலே
சேலான யொளிப்பாழாய் நிற்கும்பாரு
சேர்ந்துமெள்ள வதைத்தாண்டில் செப்பக்கேளு
கோலான வெளியொளிப்பாழ் கூட்டிப்பாரு
குறிமூன்று வரைதாண்ட வுன்தாய்நிற்பாள்
பாலான மொழியுடையாள் தமரின்வாசல்
பரமவள்தான் போதமவள் பாருபாரே. (154)

பாரப்பா போதமென்ப தலட்சேபேரு
பரிவான யகண்டமென்று மகட்கேபேரு
சேரப்பா அவள்திட்டா தவளேபோதஞ்
சேர்ந்துடனே தமர்க்குள்ளே சேரலாகும்
ஆரப்பா கண்டவர்கள் கண்டவீதி
ஆதியில்லை அந்தமில்லை யறியப்போகா
நேரப்பா காண்பரிது கடினமெத்த
நிலையாத மனக்குரங்கு நேரொட்டாதே. (155)

ஒட்டாதே யென்றுசொல்லி யோகிசென்று
உன்னியுன்னிப் பரையளவு மோடினாலும்
கட்டான பிறவிவரு மய்யோஅய்யோ
கலந்துவந்து பிறந்தாலும் யோகியாவான்
மட்டான பரையளவும் புரியட்டமாச்சு
வரைகடந்த வெளிப்பாழை யடுத்தானானால்
முட்டாதே வெளிப்பாழே யகண்டமென்று
முனையான சுழிகண்டால் பிறக்கொட்டாதே. (156)

சத்திநிலை

பிறக்காமல் அதுக்குள்ளே சுழன்றுநின்று
பின்னுமொரு வரையேற யிதுவேயென்பான்
மறக்காம லதுக்குள்ளே மயங்கியேங்கி
மருத்துமொரு வரையேறி யிதுதானென்பான்
திறக்காமல் மூன்றுவரை திறந்துயேறி
சேர்ந்துநின்ற வுன்மாதா யிதுதானென்பான்
பறக்காமல் ரவிகோடி ஒளிதான்வீசும்
பரிவான மதிகோடி பகருங்காலே. (157)

பகராத காந்தியவட் கொவ்வாயொவ்வா
பார்க்கரிது பார்க்கரிது கண்கொள்ளாது
பகராத காந்தியுள்ள தாயைக்கண்டால்
பரமவள்தான் சிவமவள்தான் பாருபாரு
பகராத நிற்குணத்தி நிர்மலத்தி
பரமான போதத்தி பரமேயென்று
பகராத யகண்டத்தி யகண்டத்தந்தி
பாப்பணத்தி சற்குணத்தி பரையென்சொல்லே. 158)

சொல்லியவ ளருளாலே மேலேசொல்லத்
துரியமற்ற வெட்டவெளி சொல்லும்போச்சு
மல்லியவள் மனம்போச்சு புத்திபோச்சு
மாயமெல்லா மூவரையின் கீழேபோச்சு
தில்லையென்ற வம்பலமும் தாண்டிப்போச்சு
சேரவெட்ட வெளியாகத் தெளிந்துபோச்சு
எல்லியது படர்ந்துநின்ற நிற்குணத்தி
ஏகவெளி யகண்டமது அறியுந்தானே. (159)

அறிவதொன்றி லாசைகொண்டால் வருமோமைந்தா
அவரவர்க்கு விட்டகுறை யாலேயெய்தும்
நெறியதொன்றில் மனங்குவிந்து பிடித்தாயானால்
நேராக யேறலா மில்லாட்டில்லை
பிறியவொன்றில் மனம்பிறிந்தால் பேய்போலாச்சு
பேறான தீனியினால் பெருமைபோச்சு
குறியதொன்றில் பார்த்தேறப் பசியொட்டாது
கூரான யிரைக்கியிந்தச் சீமைநேரே. (160)

வெடியுப்புக் கம்பி

ரேரான வெடியுப்பின் பிறப்பைக்கேளு
நிலையான உவர்நிலத்தின் மண்ணைக்கொட்டு
நீரான துவராகக் கீழேஊறும்
நெருப்பான வூரலைத்தான் காய்ச்சவுப்பாய்
பேரான சத்திசிவ மானவுப்பு
பிரபலமா மிதன்பெருமை பேசப்போகா
வாரான வுப்பினொடு படிதான்மோரும்
வார்த்ததனைக் காய்ச்சிடவே கம்பியாமே. (161)

கம்பியென்ற உப்பாலே பரிசவேதை
கட்டியதோர் சந்தான தூமவேதை
கம்பியென்ற வுப்பாலே களங்குவேதை
கனல்பட்டால் தெரிசனத்தில் காணும்வேதை
கம்பியென்ற வுப்பாலே செந்தூரவேதை
காட்டுமுன்னே கல்மண்ணும் பழுக்கும்வேதை
கம்பியென்ற உப்பாலே சுண்ணவேதை
கரையில்லை துரையில்லை கண்டு ஆடே. (162)

உப்புக்கட்டு

ஆடுதற்கு வகைகேளு முப்பை க்கட்டு
அப்பனே சீனமென்ற சுண்ணத்தாலே
நீடுதற்குத் தாளகத்தைச் சுண்ணப்பண்ணி
நேரான தாளகத்தால் வங்கம்நீற்றி
ஊடுதற்கு வங்கமுடன் வீரங்கட்டி
உருவான வெடியுப்பா லப்பிப்போடு
கூடுதற்கு ரவியில்வைத்து வறுப்புச்செய்து
குறையாமல் சுண்ணத்தில் வைத்து ஆட்டே. (163)

ஆட்டியதை யெடுமைந்தா யெலும்புபோலாம்
, அரகரா முழுக்கட்டு மாச்சுபாரு
கூட்டியதில் சவுக்காரம் புழுகுவீரங்
குறையாம லிப்படியே ஊதிப்போட
காட்டியிதில் கடுஞ்சுண்ணங் காணுங்காணுங்
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கரைகொள்ளாமல்
மூட்டியிதில் சாரத்தை யிடைக்கிடைதான்சேர்த்து
முனைந்தாட்ட முத்துப்போற் செயநீராமே. (164)

நீரிலே கற்பூரம் பலகைபோட்டு
நேராக ஊரியிட்டு வூதச்சுண்ணம்
ஊரிலே கடிப்பல்ல பாறையுப்பு
யுருவாக உடைத்துநன்றாய் மணிபோல்வாங்கி
சூரிலே சுண்ணமுடன் வீரம்போட்டு
குமுறநன்றாய் வெண்கருவா லரைத்துப்பூசு
வாரிலே கற்பூரச் சுண்ணவேகம்
மணிபோலே யுப்படங்கும் புடத்தைப்போடே. (165)

போடுவது யேதென்றால் நாயுருவிநீற்றில்
புகழாக வுப்பைவைத்துப் புடத்தைப்போடு
நீடுவது யுப்பெடுத்து வுருக்கிப்பாரு
நேராகப் பொன்போலே நின்றுஆடும்
நாடுவது யெதைநாடு மிந்தவுப்பு
நலமான சூதத்தை நாடிக்கொல்லும்
ஊடுவது யிந்தயுப்பில் சரக்கையூட்டி
ஒன்றுக்குள் கோடிகவர் யுரைக்கிறேனே. (166)

உப்பின் போக்கு

உரைக்கிறே னிந்தவுப்பைச் சுண்ணமூது
ஒருசங்க மிரண்டுசங்க மோடுவோடும்
உரைக்கிறே னிந்தவுப்பை மெழுகுபண்ணு
உத்தமனே சரக்கெல்லா மெழுகாயோடும்
உரைக்கிறே னிந்தவுப்பைச் செயநீர் பண்ணு
ஒடுதொட்டுக் கல்லரையுஞ் செயநீராகும்
உரைக்கிறே னிந்தவுப்பைச் செந்தூரித்தால்
உபரசமும் நவலோகஞ் சிவக்குந்தானே. (167)

சிவப்பெல்லாஞ் செந்தூர மாகுமக்காள்
சேர்ந்துநின்று கருத்தாக்கால் களங்கமாச்சு
சிவப்பெல்லாம் வெளுத்தாக்கால் சுண்ணமாச்சு
செகத்திலே பலபலவாஞ் சுண்ணங்கோடி
சிவப்பெல்லாஞ் சகங்காட்டு முப்புவித்தை
சிவசிவா சூட்சமெல்லா முப்புக்குள்ளே
சிவப்பெல்லா மவைநாமஞ் சூடுஞ்சூதம்
தெறிந்தவனார் சிவயோகி யறிவான்தானே. (168)

அறிவான கல்லுப்புச்சுண்ணந்தன்னை
அப்பனே கெந்தகத்தி லப்பிஆட்டு
பிறிவான கெந்தகந்தான் சுண்ணமாகும்
பேரான சுண்ணத்தைத் தாளகத்திற்போடு
நெறியாக ஆட்டுயிதைச் சுண்ணமாகும்
நேரான தாளகத்தை வங்கத்தப்பு
தறிவாகப் புடம்போடு வங்கம்நீறும்
தனிவங்கஞ் சூதத்தில் சாற்றிக்கொள்ளே. (169)

சாற்றிநின்ற சூதத்தைச் சுண்ணம்பண்ணு
தனிச்சூதச் சுண்ணத்தை நிமிளைக்கப்பு
மாற்றிநின்ற யிதையூது நிமிளைச்சுண்ணம்
வாகான நிமிளையைத்தான் தங்கத்தப்பு
போற்றியிதைப் புடம்போடத் தங்கச்சுண்ணம்
புகழாக யிச்சுண்ணஞ் சாரத்தப்பு
ஆற்றிநின்ற சாரத்தை மணலில்வைத்து
அரைத்ததனை ஊதிடவே சுண்ணமாமே. (170)

சுண்ணமென்ற சாரத்தைத் துருசுக்கப்பு
சுக்கானா மிதையூது சுண்ணமாகும்
சுண்ணமென்ற துருசுதனை வீரத்தப்பி
சுகமாக வைத்தெரிக்கச் சுண்ணமாகும்
சுண்ணமென்ற வீரத்தைக் கெவுரிக்கப்பி
துடியாக் ஊதுமைந்தா சுண்ணமாகும்
சுண்ணமென்ற கெவுரிதனைச் சூதத்தாட்ட
துடியாமல் மணியாகுஞ் சூதந்தானே. (171)

சூதத்தின் வேதை

தானென்ற சூதத்தை குகைவைத்தூது
தவளம்போல் சுண்ணாம்பாந் தானேபாரு
வானென்ற யிச்சூதம் வராகனொன்று
வரையாக நாலுயிடை தங்கத்தூட்டு
கானென்ற அஞ்சுசுண்ணக் குகையிலூது
கடுஞ்சுண்ண மாகப்பூப் போலேயாகுங்
கோனென்ற குருவிதுதா னிதிலேவித்தை
கோடான கோடியென்றால் வாய்தானோமோ. (172)

நோமென்று சொன்னகுரு பணந்தானொன்று
நுகரான வீரமொன்று கெவுரியொன்று
காமென்று துருசொன்று பூரமொன்று
காரமொன்று சூதமிதில் யேழுங்கூட்டி
ஓமென்ற பொடியாக்கித் திரிதிரித்து
உத்தமனே நெய்வார்த்து விளக்கையேற்றி
ஆமென்று அவித்துடனே புகைதான்பட்டால்
ஆகாகா நவலோகந் தூமமாமே. (173)

ஆமப்பா முறைதுறையாஞ் சுண்ணமொன்று
அரிதான வீரமொன்று நிமிளைமூன்று
தாமப்பா அரைத்துடனே சிவப்பேயாகும்
தன்னுக்குள் சாதிலிங்கக் காரம்போட
ஓமப்பா நவலோக முபரசங்களெல்லாம்
உத்தமனே உபசரிக்க வேதையாகும்
நாமப்பா பார்த்தபடி கருவைச்சொன்னோம்
நலமான மைந்தர்களே நாட்டிடீரே. (174)

நாட்டியதோர் வெள்ளிதனைக் குருவால்காட்டு
நலமான வெள்ளியது சுண்ணமாகும்
ஊட்டியதோர் வீரமிட்டுக் காரமிட்டு
ஒன்பதுப ரசமுந்தொட்ட டாலோவெள்ளி
காட்டியதோர் குருகாண்ட மிதுதான் மைந்தா
கருமறைத்துச் சொன்னாக்கா லொன்றுமில்லை
ஆடியதோர் செயநீர்சுண் ணாம்புநீற்ற
அப்பனே அமுரிக்கு ளறிந்துகொள்ளே. (175)

அறிந்தறிந்து கருவெல்லாம் நன்றாய்ப்பாரு
அங்கங்கே சொல்லிவைப்பே னாய்ந்துபாரு
மறிந்தறிந்து மறக்காதே மக்காள்சொன்னேன்
மறந்துவிட்டால் சொல்லுதற்கு யெனைப்போலாரு
பிறிந்தறிந்து நன்றாக ஆடிப்பாரு
பெரும்பாதை பெரும்பாதை கவரோசங்கம்
செறிந்தறிந்து பாராமற் பட்டபாடு
சிவசிவா பூரணமாய்ச் செப்புவேனே. (176)

ஆதிக்குரு

செப்புவேன் நன்றாகக் கேளுமக்காள்
திராவகத்தின் கருவெல்லாம் புகைநீர்மைந்தா
செப்புவேன் செயநீர்க்கு கருவேதென்றால்
சேர்ந்துநின்ற நவச்சாரம் போனால்போச்சு
செப்புவேன் சுண்ணத்தில் செந்தூரமென்ன
சீரான சவ்வீரஞ் சேர்ந்தாலாகுஞ்
செப்புவேன் வாதத்துக் காதியென்ன
செப்பாதே வழலையென்ற சுண்ணந்தானே. (177)

தானென்ற களங்கத்துக் காதியேது
சமரசமாய் மால்தேவி யோடலாகுங்
கானென்ற மெழுகுக்கு ஆதியேது
காட்டியதோர் செயநீர்தான் கண்டுகொள்ளு
கோனென்ற வேதைக்கு ஆதியேது
கொடியதொரு புடத்தங்கங் கூட்டிஆட்டு
வேனென்ற கட்டினத்துக் காதியேது
விளங்கியதோர் சுண்ணவரை விரைந்துபாரே. (178)

விரைந்துநின்ற வாதத்துக் காதியென்ன
வேதாந்தங் காட்டுகிற சூதஞ்சூதம்
விரைந்துநின்ற நீற்றினத்துக் காதியென்ன
வேரான வெண்காரம் விளங்கிப்பாரு
விரைந்துநின்ற நீத்தினத்துக் காதியென்ன
மேலான கற்பூரச் சுண்ணஞ்சுண்ணம்
விரைந்துநின்ற வூசரத்துக் காதியென்ன
விளங்கியதோர் கல்லுப்பு விரைந்துகாணே. (179)

காணப்பா யினக்குறையுங் கருக்கிடையுஞ்சொன்னேன்
கைமுறையா யதுவதுவைக் கலந்துபாரு
ஊணப்பா முந்திமுந்தி வழலையுப்பால்
ஓகோகோ வாதமெல்லா முடிந்துபோச்சு
பூணப்பா கிருவணத்தால் போகுந்தூரம்
புகழான மலைதனக்குப் பூட்டலாகும்
வீணப்பா யிந்தமுறை விட்டால்வேதை
விளங்கியிந்தத் தொழிலெல்லாம் குருவைக்கேளே. (180)

அறியாமூடர்

குருசொல்லப் பொருள்காணும் அருளுங்காணும்
குலாமரய்யோ குருவின்றிச் சுடுவார்கோடி
குருசொல்ல லட்சயமும் ஞானங்கூடுங்
குறிப்பறியா மனத்தாலே பார்ப்பேனென்பார்
குருசொல்லாத் தொழிலுக்கு வேதையில்லை
குருடனுக்கு வூமைசென்று பணிந்தவாறு
குருசொல்ல வேணுமென்பார் நல்லோரெல்லாம்
குலாமரென்றால் குருவென்றால் போவென்பாரே. (181)

போமென்று சுட்டலைந்து பொய்யேயென்பான்
புகழாக அவன்வாயில் போடுமண்ணை
வாவென்றால் வறியோர்க்கு வருமோசொல்லு
வறுமைவந்தால் போவென்றால் போமோசொல்லு
ஆவென்றால் பெருவயிற் றுண்ணப்போமோ
ஆச்சரியங் காலில்லா னோடப்போமோ
கூவென்றால் செவிடனங்கே யேனென்பானோ
கொள்கையிந்த வாரொக்குங் குருவில்லார்க்கே. (182)

ஆற்கநின்ற மெஞ்ஞானி சடத்தைவென்றால்
அதுவேது வென்றாக்கால் சொல்லக்கேளும்
பார்க்கநின்ற தேகத்தில் சூட்சதேகம்
பரிவான புரியட்டந் தன்னில்நின்று
சேர்க்கநின்று நாலோடே கூடிப்போவோஞ்
செயலான சடமெனக்கு யேது;க்கென்பான்
கார்க்கநின்று சடங்கார்ப்பான் யோகியானால்
கலந்துநின்ற ஞானிசடங் காத்திடானே. (183)

காத்திடான் ஞானியென்ற குருவேஅய்யா
காரணமே நிற்குணமே கருணையோனே
மாத்திடா சித்தென்னா குளிகையென்னா
மாயத்தைப் பண்ணுகிற மயக்கமென்ன
போத்திடா ரெண்டுக்கும் புகழைக்கேளும்
பொலிவான சித்ததிகம் புகழ்ந்துசொல்வேன்
ஆத்திடா செகத்தோடு சித்துமாடி
அண்டரண்டப் பதமுதலா யறிந்தேன்பாரே. (184)

அறிந்தமட்டோ சிறுபிள்ளாய் செடத்தோடொக்க
அவனிருந்த நிற்குணத்துக் கப்பால்சென்று
மறிந்தமட்டோ திரும்பிவந்து கோடிகற்பம்
மகத்தான சமாதியிலே வாழ்ந்தார்வாழ்ந்தார்
பிறந்தமட்டோ சமாதிவிட்டுப் பின்னுமாடிப்
பேரண்டப் பெரியோரைக் கண்டுபேசி
நெறிந்தமட்டோ மேருவிலே நின்றுவாழ்ந்து
நேரான புகழ்கடலில் நேர்ந்தார்காணே. (185)

நேர்ந்துகொண்டு மாயிபதம் போற்றிசெய்து
நேரான நாலுயுகச் சித்தரையுங்கண்டு
நேர்ந்துபதந் தாண்டிமனோன் மணியைப்போற்றி
நேரான முப்பாழின் நேர்மைகண்டு
நேர்ந்துகண்டு அறுமுகனைத் தமர்க்குள்புக்கி
நிலையான பூரணத்தி லுகாந்தமோடி
நேர்ந்துகண்டு சிலைபோல யிதிலேசொக்கி
நேறுவதுந் திரும்புவதும் மதியந்தானே. (186)

தானென்ற சித்தர்வல் லமைக்குமைந்தா
சகஸ்திரத்துக் கொன்றொவ்வா ஞானிவாழ்வு
வானென்று வெளிகடந்து புக்குவான்காண்
வாய்மூடில் பிடரிநின்று பேசுமோசொல்
கோனென்ற மூலவர்க்கத் துள்சித்தாக
கொடுஞ்சுறுக்கு கொடுஞ்சுறுக்கு பூரணத்தேசென்று
பானென்று பண்ணுவார் பாகந்தீர்த்து
பரிவாக மூழ்கியதில் மீழ்வார்தாமே. (187)

தாமென்று மதுவென்று மிரண்டுமற்று
சாங்கமற்றுப் பாங்கமற்றுச் சமாதியற்று
ஓமென்ற நிற்குணம்போ லொன்றாய்நிற்க
உத்தமர்க்கு அடுத்துமுறை யுணர்வாய்க்கேளு
ஆமென்று நின்றதெல்லாங் கண்டிப்பென்பார்
ஆகாச வெளிமுதலாய்க் கண்டிப்பென்பார்
ஓமென்ற கண்டமுதல் கண்டிப்பென்பார்
ஒன்றுமற்ற நிற்குணமே பொருளென்பாரே. (188)

பொய் ஞானி

பொருளாலே வாடுகிறார் சித்தரெல்லாம்
போக்கறியா னுலகத்தில் குருநானென்று
மருளாலே மயக்கிநின்று உபதேசித்து
மனிதரைத்தான் மாமாய்கை வலையிற்போட்டு
இருளாலே கூகைகா கத்தைக்கொண்ட
இதுவொக்கு முலகத்தி லிருந்தஆசான்
அருளாலே யேதாலுங் குருவால்தோண
நலமாகப் பூரணத்தில் நாட்டார்பாரே. (189)

நாட்டாத பாபத்தால் விவேகம்போச்சு
நலமில்லா மனத்தாலே ஞானம்போச்சு
மூட்டாத வாயுவினா லோகம்போச்சு
மூதண்டக் குளிகைவிட்டால் கெவுனம்போச்சு
ஆட்டாத ஆசையினால் சடந்தான்போச்சு
அப்பனே நூல்விட்டா லறிவுபோச்சு
ஒட்டாத சுண்ணம்விட்டால் வாதம்போச்சு
ஓகோகோ குருபோனா லொக்கப்போச்சே. (190)

ஒக்குமிந்த ஆட்டுவெடி யுப்புக்கையா
உத்தமனே பூமியுட நாதமுப்பு
தக்குமிந்த வுப்பாலே வாதிகட்கு
சதகோடி நவகோடி அறிந்துஆடும்
சொக்குமிந்த வுப்பாலே வுபரசங்களெல்லாம்
தூரவென்றால் வெகுதூரந் தூரவேதை
மக்குமிந்த வுப்பாலே கெந்திமுதலெல்லாம்
வாகான வுப்பினுட வரைதான்முற்றே. (191)

சாரப்பெருமை

வகையடங்காச் சாரத்தின் பெருமைகேளு
வாகான யொன்பதுட அமுரிகூட்டி
நிரையடங்கா வுப்போடு காரசாரம்
நேராகக் காய்ச்சிவிட்டால் பறங்கிமைந்தா
கரையடங்கா யதன்பெருமை பாடவென்றால்
காப்பேது கரையேது சாரத்துக்கு
துரையடங்கா யிதுக்குள்ளே சொக்கிப்போவான்
சொல்லுவது இனியென்ன துரையைக்கேளே. (192)

கேளப்பா அண்டம்போல் சாரஞ்சீவிக்
கெடியான அபினியொடு மிளகுபூரம்
நீளப்பா மேனிச்சார் விட்டுஆட்டி
நிலையாக வதின்மேலே யரக்கைப்பூசி
வாளப்பா சாணாங்கிச் சீலைசுற்றி
வகையாக வங்கத்தி லழுத்திமைந்தா
ஆளப்பா பிளந்தெடுக்கச் சாரஞ்சுத்தி
அதையெடுத்துச் சுண்ணாம்பு செய்யக்கேளே. (193)

செய்வதுதான் வங்கமென்ற சுண்ணத்தோடே
சிறப்பாக வீரமிட்டு ஆட்டிப்பூச
மைவதுதான் சலம்பொதியு மணலில்வைத்து
மல்லிகைப்பூ போலாகு மெடுத்துக்கொண்டு
கைவதுதான் யெட்டிலொன்று பூரச்சுண்ணம்
கலக்குமிந்த யிடைகூட்டு வழலைச்சுண்ணம்
பைவதுதா னரைத்துமெள்ள வில்லைதட்டி
பாங்காக வூதிடவே சுண்ணமாமே. (194)

ஆமப்பா சாரமது சுண்ணமானால்
அண்டரண் டங்களெல்லா மதுக்குலாச்சு
சாமப்பா சூதமுதல் தங்கம்நீறும்
சங்கமென் றும்பற்பமென்றுஞ் சொல்லக்கூடா
வேமப்பா தொட்டவிடம் பட்டவிடமெல்லாம்
விடுபட்ட மதயானை போலேயாடும்
ஓமப்பா உலகமெச்சும் சாரவித்தை
யோடுகிற வரிசைசொல்ல யொடுங்காவாரே. (195)

செயநீர்

வாரான சாரத்தில் காரமிட்டாட்ட
மழைமேகம் பொழிந்தாப்போல் சலமாய்நிற்குந்
தாரான செயநீரில் பூரநீரிட்டு
தனிக்குகையில் வாரியிட்டு ஊதச்சுண்ணம்
வீரான யிச்சுண்ணங் கெந்தகத்தப்பி
விரைந்தெரித்து ஊதிடவே சுண்ணமாகும்
கூரான யிச்சுண்ணம் வீரத்தாட்டி
கொடியதொரு வழலைக்கு அப்பிப்போடே. (196)

வழலைச்சுண்ணம்

அப்பிமெள்ளத் தீயாட்டி லெண்ணெய்போகும்
அதன்பிறகு கடுங்கார மதிலேயேற்று
ஒப்பியிந்த வழலையுட வேகஞ்சொல்ல
உத்தமனே முடியாது யுரைப்பேன்சற்று
தப்பியிந்தச் சுண்ணத்தில் வீரத்தாட்டி
தாளகத்தில் மேற்பூசி ஊதச்சுண்ணம்
செப்பியிந்தத் தாளகத்தை வீரத்திற்பூசி
சேர்த்துமே ஊதுமெள்ளச் சுண்ணமாமே. (197)

ஆமிந்தச் சுண்ணத்தைச் சூதத்திலூட்டி
அப்பனே மணியாகு மதனைவாங்கி
தாமிந்தக் கல்வத்தில் நொறுக்கிக்கொண்டு
தாளகமுங் கல்லுப்பு வழலைபோட்டு
சேமிந்தக் கிழிஞ்சிகட்டி ஊதிப்போட
சிறப்பான சுண்ணாம்பாஞ் செப்பக்கேளு
போமிந்தச் சுண்ணாம்பை வங்கத்தப்பி
உத்தமனே புடம்போடச் சுண்ணமாமே. (198)

சுண்ணமென்ற வங்கத்தைச் சாரத்தப்பி
சுகமான மணல்புடமா யூதிப்போடு
சுண்ணமென்றால் கடுஞ்சுண்ணஞ் சாரமப்பா
சூட்டினதோர் விரல்தெரிக்குஞ் சுண்ணவேகஞ்
சுண்ணமென்ற சாரத்தைத் துருசுக்கப்பச்
சுக்கானா மூதிடவே சுண்ணமாகுஞ்
சுண்ணமென்ற துருசதனைத் தங்கத்தப்பி
துடியாகப் புடம்போடு சுண்ணந்தானே. (199)

சூதமணி

தானென்ற பரிச்சுண்ணஞ் சூதத்தூட்டி
தயங்காதே மணியாகுந் தன்னைவாங்கி
கானென்ற அஞ்சுசுண்ணக் குகையிலூது
கடுஞ்சுண்ண மாகுமிந்தச் சூதந்தானே
கோனென்ற சுண்ணமொன்று தங்கம்நாலில்
கூட்டிநன்றா யுருக்கியதை மணியாய்வாங்கி
வானென்ற அஞ்சுசுண்ணக் குகையிலூத
மல்லிகைப்பூப் போலாகுஞ் சுண்ணம்பாரே. (200)

சூதமணிச் சுண்ணம்

பாரிந்தச் சுண்ணத்தால் வேதைகோடி
பலபலவாந் துரைகோடி பரிசங்கோடி
நேரிந்தக் களங்கஞ்செந் தூரங்கோடி
நிலையான குருக்கோடி மெழுகுகோடி
ஆரிந்தப் போக்கறிந்து செய்யப்போறார்
அரகரா சிவசிவா அறியப்போகா
தூரிந்தப் படியென்று யறியமாட்டார்
சொல்லரிது சொல்லரிது சுண்ணப்போக்கே. (201)

போக்கான யிச்சுண்ணம் வீரத்தாட்டி
புகழான துருசின்மேற் பூசியூத
தாக்கான கடுஞ்சுண்ணம் கண்டராச்சு
தனிச்சுண்ண முறைசொல்லச் சார்பைக்காணேன்
வாக்கான மனமெட்டா புத்தியெட்டா
மவுனமுற்ற மெஞ்ஞான வரைக்கதொக்கும்
நோக்கான நடுநோக்கா யோடும்வேதை
நூறுசங்கம் நிகரல்ல நுணுக்கமுற்றே. (202)

நுணுக்கமுற்றுத் துருசியிலே வீரம்போட்டு
நுகரான அண்டமொன் றதிலேபோட்டு
துணுக்கமுற்று பத்தண்டஞ் செந்தூரமாகும்
துறந்தபின்னும் பொட்டிட்டால் சுண்ணமாகும்
அணுக்கமுற்று வண்டத்தி லனந்தம்வேதை
ஆடுவதை விரித்துரைக்க ஆயிரநாவேணும்
சிணுக்கமுற்று அணிந்தாக்கால் வாதமாமோ
செப்பிடவே குருவேணும் சேர்ந்துதேடே. (203)

தேடுவது யெங்கேயென்று சோம்பினாக்கால்
சித்தியில்லை முத்தியில்லை சேரப்போச்சு
நாடுவது யெங்கென்று விட்டாயானால்
நாயாகிப் பேயாகிப் பிறப்பாய்சொன்னேன்
ஓடுவது யெங்கேயென்று ஊசென்றானால்
ஓகோகோ லட்சயங்க ளொன்றுமில்லை
ஆடுவது யெங்கென்று விட்டாயானால்
அழிந்துசடம் போகுமப்பா அறிந்துகொள்ளே. (204)

அறிந்துகொள் அண்டமென்ற சுண்ணத்தாலே
அற்புதமோ நிற்புதமோ சுண்ணமாகும்
பிறிந்துகொள்ச் செந்தூரஞ் சங்கந்தாண்டி
பேரான களங்கமென்றா லக்கோயில்லை
மறிந்துகொள்ளுஞ் செயநீரோ மெழுகோபற்பம்
வாகான கட்டினமோ கோடாகோடி
பறிந்துசென்று குளிகையிலே லேசதாகும்
பரமாயும் நந்தியெனப் பகருங்காலே. (205)

காலென்று காற்றுப்போல் சுற்றியாடும்
கடல்போல உலகமெல்லாம் கவிழ்ந்துபோகும்
மேலென்ற வெளிகாட்டும் விண்ணிலாடும்
வேதாந்த சாரமெல்லாம் விடுவித்தோங்கும்
கோலென்ற மூலத்தில் லிங்கம்பேசும்
கொடியதொரு கண்டத்தி லெட்டும்பேசும்
மாலென்ற புருவமய்யம் மூலம்பேசும்
வானடர்ந்து சந்திரனும் பேசுமப்பா. (206)

பேசுமப்பா குருபதத்தி லகாரம்நின்று
பேரான விந்துமுதல் நாதம்பேசும்
கூசுமப்பா சத்தியென்ற மாயாமாயம்
கூரான வெட்டதுவுங் குவிந்து பேசும்
தூசுமப்பா பரத்தினொளி நன்றாய்க்காணும்
சுகமாக யிம்மட்டும் புரியட்டமாச்சு
வீசுமப்பா முப்பாழுந் திறந்துகாணும்
வேதாந்த மவுனத்தாய் வெளியாவாளே. (207)

சத்திசொருபம்

வெளியான வுன்தாயைக் கண்டாயானால்
 விரவிநின்ற ரவிகோடி வன்னிகோடி
தளியான மதிகோடி காந்திகாணும்
 தாயையங்கே நோக்கவென்றால் கண்கொள்ளாது
சுளியான சுளியினுள்ளே சிக்கினாப்போல்
 சொக்குமங்கே மனஞ்சற்றும் சோர்ந்திடாதே
குளியான தமர்வாசல் நன்றாய்ப்பாரு
 கூரான வுன்தாயைத் தியானம்பண்ணே. (208)

பண்ணுவதும் பண்ணாது மிரண்டுமில்லை
 பார்க்கிறதும் பார்க்காது மிரண்டுமில்லை
எண்ணுவது மெண்ணாது மிரண்டுமில்லை
 யேறுவதும் யேறாது மிரண்டுமில்லை
உண்ணுவது முண்ணாது மிரண்டுமில்லை
 உறங்குவது முறங்காது மிரண்டுமில்லை
கண்ணுவதுங் காணாது மிரண்டுமில்லை
 கருத்துணர்ந்த தவயோகி தமரிற்புக்கே. (209)

புக்கிடவே பூரணத்திற் கண்டவீதி
 போடதிலே குளிகையென்ற குதிரையேறி
ஒக்கிடவே கரையில்லை பாருபாரு
 ஓகோகோ பூரணத்தி லொளியேகாணும்
அக்கிடவே செல்லுவான் திரும்புவானே
 அப்பனே ஞானமெல்லாம் கைக்குளாகுந்
தொக்கிடவே தூலசடம் போகுமார்க்கம்
 துலையாத வெளிகடந்த சூட்சஞ்சொல்லே. (210)

சொல்லுமையா கண்டமென்ற குருவேநீறும்
 துரியமென்ற அந்தத்திற் சோதியோனே
மல்லுமையா தூலமெப் படிதான்போச்சு
 மக்களே சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளும்
செல்லுமல்லோ முளைக்கம்பம் வெண்டாய்ப்போகும்
 நேரிதுபோற் குளிகையிட யிப்படியுமாகும்
அல்லுமல்லோ இரவிகண்டால் வெளிச்சமாகும்
 அப்படியே ஞானத்தால் சூட்சமாமே. (211)

சூட்சமாந் தூலசடங் கமலினிக்கி
சொற்பெரிய சூட்சம்விட்டால் காரணமாய்நிற்கும்
சூட்சமாய்ச் சாரணையின் முறையைக்கேளு
துலங்கியதோர் பாஷாண மறுபத்துநாலுஞ்
சூட்சமாய் உபரசங்கள் சொல்லக்கேளுஞ்
சுகமாக ஒருநூறு யிருபத்தொன்று
சூட்சமாய் லோகங்கள் பத்துஒன்று
துடியான ரத்தினங்கள் ஒன்பதாச்சே. (212)

ஆச்சப்பா துகையெல்லாம் யிருநூற்றைந்து
ஆகமொத்த மானால் சாரணைதானொன்று
வாச்சப்பா ஐந்துதிரம் பண்ணநீயும்
வாகான அஷ்டமா சித்தியாச்சு
ஓச்சப்பா யிப்படியொன் பதுவும்நாலும்
உத்தமனே கமலினியா மணியேயாச்சே
கூச்சப்பா பதினாறுந் தீர்த்தாயானால்
கொடிதான சொரூபமென்ற குளிகையாச்சே. (213)

குளிகைக்குப் பேரதுவும் சகடமாச்சு
குமட்டியதில் பூணானால் சேவமாச்சு
குளிகைக்குக் குளிகையிது நன்றாய்க்கேளு
கொடியதொரு சாரணையில் வேகமேறும்
குளிகைக்குச் சாரணையைச் செய்யாமல்தான்
சூரான வுலகத்தோர் கெட்டுப்போனார்
குளிகைக்கு வரவறிந்து செய்வதாரு
குவட்டிலுள்ள சித்தருக்குக் கூடுங்காணே. (214)

கூடுமப்பா கட்டினமோ காரசாரம்
குலாவியதோர் சுண்ணாம்புங் காரசாரம்
ஆடுமப்பா ஆட்டெல்லாங் காரசாரம்
அப்பனே வாதமெல்லாங் காரசாரம்
நீடுமப்பா குளிகையெல்லாம் காரசாரம்
நேரான துரையெல்லாங் காரசாரம்
ஓடுமப்பா காயசித்தி காரசாரம்
ஒகோகோ லோகமெல்லாஞ் சாரந்தானே. (215)

சாரம்விட்டால் சாரமில்லை விசாரமாச்சு
சகலதுறை சகலகன்மம் தயங்கிப்போச்சு
காரம்விட்டால் காரமில்லை சுண்ணாம்பெல்லாம்
கைமுறையாய்க் கடுங்கார மேற்றுயேற்று
பூரம்விட்டால் சுருக்கில்லை சுண்ணாம்புக்குப்
போளம்விட்டால் தொழிலில்லை வருணத்துக்கு
ஆரம்விட்டு உப்புவிட்டால் புடமேபோச்சு
அப்பனே நாலையுந்தா னறிந்துகொள்ளே. (216)

சரக்குகள் மடிதல்

கொள்ளப்பா காரத்தால் சாரஞ்சாகுங்
குலாவியதோர் சாரத்தால் காரஞ்சாகுந்
தள்ளப்பா வுப்பாலே பூரஞ்சாகுந்
தனிப்பூரச் சுண்ணத்தா லுப்புச்சாகும்
விள்ளப்பா தாளகத்தால் கெந்திசாகும்
விளங்கியதோர் கெந்தியால்தாளகமுஞ்சாகும்
முள்ளப்பா துருசுனாற் சூதஞ்சாகும்
உத்தமனே சூதத்தால் துருசுசாமே. (217)

சாமப்பா சீனத்தால் சூடன்சாகுந்
தனித்தொரு சூடனால் சீனஞ்சாகும்
வேமப்பா காரத்தால் பூரஞ்சாகும்
விளங்கியதோர் பூரத்தால் காரஞ்சாகும்
மோமப்பா வுப்பாலே யிந்துசாகும்
உத்தமனே விந்துவா லுப்புச்சாகும்
வாமப்பா வங்கத்தால் வெடியுப்புச்சாகும்
விளங்கியதோர் வெடியுப்பால் வங்கஞ்சாமே. (218)

வங்கமென்ற கருவங்கம் நிமிளையைக்கொல்லும்
வளமான நிமிளைவங் கத்தைக்கொல்லும்
சிங்கமென்ற சூதந்தங் கத்தைக்கொல்லும்
சிறப்பான தங்கம்சூ தத்தைக்கொல்லும்
பொங்கமென்ற சவுக்கார மெவையுங்கொல்லும்
போகமுனி கமலமுனி மூலருந்தான்
சங்கமென்ற கைபாகஞ் செய்பாகங்கள்
சடையுடையோ னாதியென்று புகழ்ந்திட்டாரே. (219)

புகழ்ந்திட்ட நாகந் தங்கத்தைக் கொல்லும்
புகழான வங்கம்வெள் ளியைத்தான்கொல்லும்
புகழ்ந்திட்ட இரும்பதுதான் செம்பைக்கொல்லும்
போக்கான யப்பிரேகஞ் சூதத்தைக்கொல்லும்
புகழ்ந்திட்ட நாகமது லிங்கத்தைக்கொல்லும்
போக்கோடே லிங்கத்தால் கருநாகஞ்சாகும்
புகழ்ந்திட்ட பூநாகந் தீபனத்தைப்பண்ணும்
பூட்டுகிற சாரணைக்குப் போக்கிதாமே. (220)

போக்கான யிச்சேர்வை லோகச்சேர்வை
புகழ்பெரிய செந்தூரக் களங்கச்சேர்வை
தாக்கான குருச்சேர்வை சுண்ணச்சேர்வை
சாருகிற கட்டினமுருக் கினமுஞ்சொன்னேன்
வாக்கான என்வாக்கின் வலுமைகண்டு
வளமுடனே மனதோர்மை யாகநீயும்
நோக்கான புத்திகொண்டு மக்காள்மக்காள்
நுன்னிமையாய்ப் பார்த்தாடு காரந்தானே. (221)

சூடன்

காரமென்ற கடுங்காரஞ் சூடஞ்சொல்வேன்
கருவாழைக் கிழங்கோடு கருவாப்பட்டை
காரமென்ற சீனமொடு வெடியுங்கூட்டி
கைமுறையா யெறித்தாக்கால் புடம்போலாகும்
ஆரமென்ற தீய்க்கொழுத்த நிர்மலமாய்ப்போகும்
அப்பனே வாசனைதான் கருவாப்பட்டை
பூரமென்று யிதைச்சொல்வார் சூடனென்பார்
புகழான கடுங்காரப் போக்கைக்கேளே. (222)

கேளப்பா யிதைக்கட்ட யாராலாகுங்
கெடியான வாதிசொல்வார் சித்தர்சொல்வார்
நீளப்பா யிதுசெத்தால் பரிசவேதை
நேரான தூபமுதற் தீபவேதை
தேளப்பா சரக்குக்குப் பொல்லாச்சூடன்
தெளிவாகக் கட்டுவது கடினமெத்த
வாளப்பா யிதைக்கட்ட வரிசைசொல்வேன்
மக்களே வகையாகப் பார்த்திடீரே. (223)

கற்பூரக்கட்டு

பார்த்திடீர் சீனமென்ற சுண்ணத்தோடு
பரிவாக வெடியுப்புச் சூடன்கூட்டி
போர்த்திடீர் யரைத்தெடுக்கச் சுண்ணமாகும்
புகழான சாரமிட் டதனோடாட்டி
பார்த்திடீர் செயநீரா மந்தநீரில்
பாங்கான சூடனைத்தான் துவைத்துப்போடு
ஆர்த்திடீர் பதங்கண்டு சங்குநீற்றில்
ஆற்றிமெள்ளத் தீயெரிக்கக் கட்டுந்தானே. (224)

கற்பூரச் சுண்ணம்

கட்டியதோர் சூடனுக்குக் காரமேற்றி
கடியதொரு யஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
ஒட்டியதோர் சூடனுட சுண்ணவேகம்
ஒகோகோ கடுஞ்சுருக்கு யுரைக்கப்போகா
தட்டியதோர் துறையெல்லா மிதனால்வேதை
சாகாத சரக்கெல்லா மிதனால்சாகும்
நெட்டியதோர் கடுநெட்டு யிதிலேபோக்கு
நேராக அறிந்தவனே வாதியாமே. (225)

ஆமப்பா யிச்சுண்ணம் வீரத்தாட்டி
அப்பனே துருசின்மே லப்பிப்போடு
ஓமப்பா அஞ்சுசுண்ணக் குகையிலூத
உத்தமனே கடுஞ்சுண்ணந் துருசதாகும்
வேமப்பா யண்டரண்ட மிடைக்கிச்சாரம்
வேதித்து அரைத்தாக்கால் செயநீராகும்
சாமப்பா யின்னீரில் பூரந்தோய்த்துத்
தாக்கிநன்றா யூதிடவே சுண்ணமாமே. (226)

ஊதிடவே பொரிப்போலகற் பூரச்சுண்ணம்
உத்தமனே யிச்சுண்ணம் வீரத்தாட்டி
கோதிடவே வழலையின்மேல் அப்பிப்போடு
கொடியதோரு ரவிபடவே யெண்ணெய்கக்கும்
போதிடவே யிதினோடே உப்புநீற்றில்
புடம்போடச் சவுக்காரச் சுண்ணமாகும்
வாதிடவே கடுங்கார மதிலேயேற்றி
வைத்தெரித்தால் வழலைமெத்த வேகந்தானே. (227)

வேகமென்ற வழலையைத்தா னுப்பிலப்பி
வெகுவேக மாயூது முப்புச்சுண்ணம்
தாகமென்ற உப்பைகெந் தகத்துக்கப்பி
தாக்கியிதைத் தீயாட்டி யூதிப்போடு
பாகமென்ற கெந்தியைவீ ரத்துக்கப்பி
பரிவாகச் சுண்ணாம்பா மூதுவூது
தாகமென்ற வீரந்தா ளகத்துக்கப்பி
தணலாட்டி யூதிடவே சலவையாமே. (228)

சலவையென்ற தாளகத்தை வங்கத்தப்பி
தாக்கியொரு புடம்போடத் தவளமாகுஞ்
சலவையென்ற வங்கத்தை நிமிளைக்கப்பி
சாதகமா யூதிடவே சுண்ணமாகுஞ்
சலவையென்ற நிமிளைதனை சாரத்தப்பி
சாதகமாய்ப் புடம்போடச் சுண்ணமாகுஞ்
சலவையென்ற நாகத்தைச் சாரத்தப்பி
சார்பாகப் புடம்போட்டுத் தணலிலூதே. (229)

தணலிலே வெந்தொடுங்குஞ் சாரச்சுண்ணம்
தாக்கப்பா வீரமிட்டுத் துருசிமேலே
தணலிலே வைத்தூது துருசுச்சுண்ணம்
சதகோடி விரிந்தாடுஞ் சிங்கிக்காகுந்
தணலிலே யிச்சுண்ணந் தங்கத்தில்பூச
தவளம்போல் சுண்ணாம்பாந் தங்கம்பாரு
தணலிலே தங்கத்தை வீரத்தப்பி
தாக்கியொரு புடம்போடச் சுண்ணமாமே. (230)

சுரபிக்குளிகை

போடப்பா துருசின்மேல் வீரச்சுண்ணம்
புகழான யஞ்சுசுண்ணக் குகையிலூது
ஆடப்பா யெடுத்துஅண் டத்தில்போட்டால்
அப்பனே தூபமுதல் பரிசவேதை
நீடப்பா கெந்திமுதல் சாரவேதை
நிலையாமல் சுரபியென்ற குளிகையாகும்
நேரப்பா சணபேதி தீபவேதை
நேரான தாம்பூல வேதையாமே. (231)

வேதையென்று சொல்லுவது யெல்லாமாகும்
விளங்கியதைக் கண்டுதேச் சுண்ணமாகும்
பாதையென்ற வழலையுப்புச் சிக்கிற்றானால்
பலபலவாந் துறையாகுங் குளிகையாகும்
போதையுண்டு போதத்தால் பாருபாரு
புகழான சவுசஷ்டி கர்மசித்தி
காதையென்று யிதைவிட்டு வாதம்பார்த்தால்
கால்காசுங் காணாது கலங்குவாரே. (232)

கட்டுவகை

கலங்காமற் சொல்லுகிறேன் லோகப்போக்கை
கைமுறையாய்த் தங்கமிட நாகங்கட்டும்
நலங்காமல் நாகமிடத் தங்கங்கட்டும்
நலமான வங்கமிட நிமிளைகட்டும்
துலங்காமல் யப்பிரேக சத்தேயானால்
துடியாகச் செம்புகட்டுஞ் சுண்ணமாகும்
புலங்காமல் பூனாகச் சத்தேயானால்
புகழாக யிருவங்கங் கட்டிப்போமே. (233)

கட்டுமப்பா கருவங்கங் கௌரிசத்தால்
கரையில்லை வேதையுமாங் களங்கங்கோடி
மட்டுமப்பா கெந்திசத்து இரும்பில்போட
வகையேது துகையேது கரைகொள்ளாது
தொட்டுமப்பா காந்தசத்தில் தாளகத்தைத்தாக்க
துரையிதிலே யென்னவென்று சொல்லப்போறேன்
மூட்டுமப்பா வெள்ளியிலே வங்கரசந்தாக்க
மூதண்டங் கிழிந்தாட வெள்ளியாமே. (234)

ஆமப்பா யிந்தவகை லோகமெல்லாம்
அப்பனே செந்தூரம் பண்ணலாகும்
போமப்பா களங்காகுஞ் சுண்ணமாகும்
போக்கறிந்து விரித்தாக்கால் போகுஞ்சங்கம்
காமப்பால் வித்தைசிவ யோகிக்காகுங்
கைமுறையா யறிந்தவித்தை சமுசாரிக்காம்
போமப்பா யிதுக்குயென்ன ஆதியென்றால்
உத்தமனே வழலையென்ற சுண்ணந்தானே. (235)

சுண்ண ஆதி

தானென்ற சுண்ணத்துக் காதியென்ன
சாதகமாய் முந்திமுந்தி வழலைச்சுண்ணம்
தானென்று மிதையரைத்துக் கடைவார்கோடி
சாரமில்லை சாரமில்லை யுப்புப்போச்சு
தானென்று கவிசித்து பெரியோர்கோடி
சந்தயமாய்க் கால்வாசி கூடுங்கூடுந்
தானென்று சுண்ணமிட்டு வறுப்பார்கோடி
தன்னுக்கு ளரைவாசி சாகும்பாரே. (236)

பாரப்பா கட்டியின்மேல் சுண்ணம்பூசி
பாங்காக ரவியில்விட்டுப் பிறிப்பாரெண்ணெய்
நேரப்பா யிதுமுக்கால் நேர்ந்துயாடும்
நிலையாகச் செயநீரில் துவைத்துக்கட்ட
வாரப்பா யெண்ணெயெல்லாம் வடியுங்கீழே
மகத்தான சுண்ணமிது வழலைச்சுண்ணம்
ஆரப்பா யிதினாட்டைக் காணப்போறார்
அரகரா சிவசிவா ஆடுந்தானே. (237)

ஆடுமென்று சொல்வார்கள் வழலைப்போக்கை
அறிவார்க ளாருமில்லை யறிவான்வாதி
கூடுமென்று சொல்வார்க ளினந்தான்கோடி
கூட்டறியார் மாட்டறியார் குருட்டுவாதி
நாடுமென்று சொல்வர்பல வேடம்பூண்டு
நாட்டிலே திரிந்தலையும் சண்டிமாடு
சாடுமென்று சொல்வருபரசத்தின்வித்தை
சாற்றறியார் பார்க்கறியார் தயங்குவாரே. (238)

தயங்காதே சுண்ணத்தின் கருவைச்சொல்லி
சாற்றுகிறேன் சாற்றுகிறேன் கேளுமக்காள்
தியங்காதே கற்சுண்ணங் கிளிஞ்சிச்சுண்ணஞ்
சேர்ந்துநின்ற சங்குகெந் தகத்தின்சுண்ணங்
கயங்காதே நண்டுக்கல் சுண்ணமுதலஞ்சுங்
கரையேறக் கலந்துகொண்டு கருத்தானப்பா
மயங்காதே யின்னமுண்டு மாட்டியாட்ட
மக்களே சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளே. (239)

சுண்ணக்கரு

கேளப்பா வெண்கருவாஞ் சுண்ணம்நீராங்
கெடியான பழச்சாறாம் வாய்நீராகும்
தாளப்பா யிதுபத்துஞ் சுண்ணத்துக்கு
சமரசமா யறிந்தவனே வாதயோகி
வாளப்பா சாஸ்திரத்தின் வழியைவிட்டு
வகைவிட்டுத் துறைவிட்டு மார்க்கம்விட்டு
ஊளப்பா வூளையிட்டுச் சுட்டாலென்ன
உட்கருவும் புறக்கருவு மறியான்தானே. (240)

அறியாமல் கேள்விகொண்டு வாதஞ்சுட்டு
ஆத்தாமல் பொய்யென்றா லென்னசொல்வேன்
கறியாமல் தோட்டத்திற் காயவைத்து
கழுவியதோர் சட்டியிலே பார்க்கலாமோ
பிறியாமல் குருவைவிட்டுக் காணமட்டும்
பேராகக் கண்டபின்பு குருவின்வார்த்தை
நெறியாமல் நின்றவர்க்கே வாதசித்தி
நேரான ஞானசித்தி நிலைக்குங்காணே. (241)

காணப்பா நூலிருந்தும் குருதான்வேணும்
காட்டுகிற துறைக்கெல்லாம் கரைவேணும்
பூணப்பா யின்னூலில் வெளியாய்ச்சொன்னேன்
புகழாக யெனைப்போலே மற்றோர்சொல்லார்
தோணப்பா சொன்னதனு பவித்துச்சொன்னேன்
சூட்சமுற்ற புத்தியுள்ளார் கண்டுகொள்வார்
வீணப்பா வல்லஅல்ல யென்னூற்சாரம்
வேதாந்த சாரமதின் வித்தைபாரே. (242)

வித்தையொன்றின் சத்தால்திக் கெல்லாங்கட்டும்
வெகுநாளே யுடலிருந்தால் வேதைகோடி
வித்தையொன்றின் யஷ்டமா சித்தியாடும்
விளங்கிநின்று சிவயோகம் வேறுங்காட்டும்
வித்தையொன்றின் புரியட்டம் வெளியேயாகும்
விளங்கியதோர் நிற்குணத்தில் மேவலாகும்
வித்தையொன்றின் வெகுகாலஞ் சமாதிமூட்டும்
விளங்கியதோர் சூதத்தின் விருதுதானே. (243)

வெட்டு மார்க்கம்

விருதிட்டு வெட்டுவது யாரையென்றால்
விளங்கிநன்றாய்ச் சொல்லுகிறேன் கேளுமைந்தா
கருகிட்டுப் பரிசமொடு சத்தரூபம்
கலந்துநின்ற ரசமோடு கெந்தமைந்தும்
பருதிட்டு வெட்டினா லவனேஞானி
பலபலவாய்க் கவலையற்றால் மனமேறாது
பொருதிட்ட கருவியெல்லாம் நீக்கிமூலம்
புகுந்தவனே சிவயோகி புகழலாமே. (244)

புகழேது மகத்தினா லாவதேது
பொழுதுதொட்டு விடியமட்டும் பேச்சாலேது
மகளேது தாயேது பெண்டீரேது
மாயமென்ற வரிசையினால் மயங்கிற்றய்யோ
நிகழேது நிகழ்ச்சியென்ற கோபமேது
நேரான மைந்தருட பாசமேது
அகளேது சையோக சுகமங்கேது
அப்பனே மலசலம்போ லெண்ணிடாயே. (245)

எண்ணியெண்ணி மனஞ்சலித்து விட்டஞானி
யெங்கிருந்தே னெங்குவந்தே னெவிடந்தானென்
நண்ணிநண்ணி மனங்கலந்த யோகியானால்
கற்றான யொளிப்பாழி லுருகவேணும்
பண்ணியெண்ணிப் பார்க்கநல்ல வாதியானால்
பருவமுடன் வழலையைத்தான் பார்க்கவேணும்
மண்ணிமண்ணின் வித்தல்லோ யிந்தத்தேகம்
வாழ்கிறதா விடுகிறதா கண்டுசொல்லே. (246)

சொல்லுவது ஞானியென்றால் சடத்தைப்போடு
சுகமாக யோகியென்றால் சடத்தைப்பேணு
மல்லுவது சித்தனென்றால் மும்மூலம் பாரு
வகையறியத் தெரியாட்டாற் கிரிகையிலேநில்லு
கொல்லுவது மாகாது சீவன்றன்னை
குவிந்துநின்ற பூசைக்குத் தோஷமில்லை
அல்லுவது மறிந்தவனே விவேகவாதி
அறிவதற்கு வெகுபாடு அறிந்துகூடே. (247)

கூடென்று சொன்னாக்கால் கூடப்போமோ
குருதொட்டுக் காட்டிடவே கூடலாகும்
ஆடென்று சொன்னாக்கா லாடலாமோ
ஆசான்தான் சொன்னபின்பு ஆடவேணும்
நாடென்று சொன்னாக்கால் நாடலாமோ
நற்குருவின் சொற்கேட்டு நாடவேணும்
ஊடென்று சொன்னாக்கால் ஊடப்போமோ
உத்தமனே குருசொல்ல ஊடலாமே. (248)

குரு உபதேசம்

ஊடலாம் லட்சயத்தைக் குருசொற்கேட்டு
உரைத்துநின்றால் மனமதிலே ஒன்றிப்போகும்
நீடெல்லா முறைத்தபின்பு வேறாய்நின்று
நிலையான பூரணமா யெங்குந்தானாய்
நாடலாம் நாம்போத நாமேயென்று
நம்மாலே பிரபஞ்சம் விரிந்ததென்று
ஆடலாம் அட்டமா சித்தியெல்லாம்
அப்பனே நீவேறாய் நின்றுபாரே. (249)

நின்றவனே மெஞ்ஞானி நிலைத்தசித்தன்
நேரான சிவயோகி வாசியோகி
நின்றவனே ராஜயோகி அனந்தயோகி
நிலையாத பிறவியெல்லாம் நிகழ்ந்தயோகி
நின்றவனே யாரென்று பார்த்தாயானால்
நிறைந்தமன மசைவற்று நின்றமார்க்கம்
நின்றவனார் நேர்ந்தவனார் ரெண்டும்பார்க்கில்
நிகரில்லா தேகுமது நினைவில்காணே. (250)

நினைவாலே பிடித்தலைதல் சரிதைமார்க்கம்
நேர்ந்தபின்பு கிரிகையிலே யிறங்கிச்செய்தல்
நினைவாலே பார்ப்பதுவே யோகமார்க்கம்
நிலைத்துடனே ஞானத்தில் நேர்ந்துபோவார்
நினைவாலே குருசொல்ல வாதமாச்சு
நீகாத்த சுண்ணாம்புத் தொழிலுமாச்சு
நினைவாலே கர்மதர்ம மிரண்டுமாச்சு
நேரிதுக்குத் துரிசினுட வித்தைதானே. (251)

துருசு வைப்பு

வித்தையிலே உத்தமந்தான் துருசுவித்தை
விளங்கியதின் பிறப்புநன்றாய் விரித்துச்சொல்வேன்
பத்தையிலே செம்புப் பாத்திரமும் பண்ணி
பரிவாக வெடியுங்கல் லுப்புப்போட்டு
முத்தையிலே தயிர்வார்த்துப் பழச்சார்வார்த்து
முனையான குதிரையுட சத்தம்வார்த்து
அத்தையிலே குழிவெட்டி லத்திபோட்டு
அதின்மேலே மண்ணிட்டு மூடுவாரே. (252)

மூடிவைப்பா ராறுதிங்க ளெட்டுத்திங்கள்
முனையான பசுமைநிறத் துருசதாகும்
நீடிவைப்பா ரிதையெடுத்துத் துருசியென்று
நேராக இதையெடுத்துக் குருவேசெய்வார்
கூடிவைப்பா ரிதுக்குளிந்த மகிமையென்னா
குலாவிநின்று சிவன்செம்பு சத்தியுப்பு
நாடிவைப்பா ரிதினாலித் தனையுமாச்சு
நாமறியோம் நலமில்லாத் துருசுப்போக்கே. (253)

துருசுக்கட்டு

போக்கான துருசிதனைக் கட்டசொல்வேன்
புகழாக மனமுன்னிக் கேளுமக்காள்
தாக்கான வெடியுப்புப் புளியுங்கூட்டி
-சமனாக யிடித்துநன்றாய்த் தீயைமூட்டி
வாக்கான பனியில்வைக்கச் செயநீராகும்
மக்களே கடுஞ்சுண்ண மிந்தநீர்தான்
நாக்கான சாரத்தி லிந்நீர்விட்டு
நலமாக நெட்ட்டங்க ஆட்டு ஆட்டே. (254)

நெட்டடங்கிச் சாரமங்கே செத்துதப்பா
நேராக அதையெடுத்துப் புடத்தைப்போடு
பட்டடங்கா யிதையெடுத்துப் பனியில்வைக்க
பாங்கான செயநீராஞ் சாரந்தானும்
மட்டடங்கா யிதினுள்ளே காரங்கூட்டி
மத்தித்துத் துருசின்மேல் மாட்டிப்போடு
குட்டடங்கப் பிழையுங்கள் துருசுகட்டும்
குலாவியிதை நேர்பாகப் பூசிவாட்டே. (255)

வாட்டயிலே கிளிப்போலே யிருகிக்கட்டும்
மருவியது பிலப்படப்பின் னொருக்கால்வாட்டு
நீட்டயிலே அத்துருசு நின்றுதானால்
நிலைத்துதப்பா வாதமென்றும் நினைவாய்க்கேளு
மூட்டயிலே குருவாகுஞ் சுண்ணமாகும்
மூதண்டக் களங்காகுஞ்செந் தூரமாகும்
ஆட்டயிலே மெழுகாகுஞ் செயநீராகும்
ஆகாகா யிதின்போக்கை யறிவாராறே. (256)

அறியாத துருசின்மேல் வழலைச்சுண்ணம்
அப்பனே வீரமிட் டாட்டிப்பூசி
மறியாத அஞ்சுசுண்ணக் குகைவைத்தூத
மல்லிகைப்பூப் போலாகுந் துருசுச்சுண்ணம்
நெறியாக யிதிற்சார மிட்டேயாட்ட
நேராகச் செயநீரா மிதுக்குள்கோடி
விறியாத யிந்நீரில் பூரமிட்டூது
புகழ்பெரிய சுண்ணாம்பாம் பூரந்தானே. (257)

தானென்ற பூரத்தை வீரமிட்டாட்டி
சாதகமாய் வழலையின்மே லப்பிப்போட
நானென்ற யெண்ணெயெல்லாம் ரவியிற்கக்குங்
கடுஞ்சுறுக்கு கடுஞ்சுறுக்கு வழலையப்பா
கோனென்ற வழலையிலே வீரமிட்டாட்டி
கூறான தாளகத்திற் பூசியூத
வானென்ற வெளுப்பதுபோல் சலவையாகும்
வங்கத்தை வீரமிட்டு அப்புவாயே. (258)

அப்பியந்த வங்கத்தைப் புடத்தைப்போடு
ஆச்சரிய மாச்சரியஞ் சுண்ணமாகும்
உப்பியிந்த வங்கத்தில் வீரமிட்டாட்டி
உத்தமனே நிமிளையின்மேற் பூசியூத
நொப்பியிந்த நிமிளைகடுஞ் சுண்ணமாகும்
கொடிதான சுண்ணத்தில் வீரங்கூட்டி
தப்பியிந்தச் சாரத்திற் பூசிமைந்தா
சாதகமாய் மணலில்வைத்துத் தீயைமூட்டே. (259)

ஆட்டினதோர் சாயத்தில் பூரச்சுண்ணம்
அப்பனே வீரமிட் டரைத்துக்கட்டி
கூட்டியதோர் ரஞ்சுசுண்ணக் குகைவைத்துக்
கூறரிது வெகுவேகஞ் சாரச்சுண்ணம்
நீட்டினதோர் விரல்தெறிக்கும் வாதமென்றால்
நேர்ந்துயிந்தச் சாரத்தில் வீரங்கூட்டி
காட்டினதோர் துரிசியின்மேல் அப்பிப்பாரு
கடுஞ்சுருக்காம் கல்போலாங் கண்டுகொள்ளே. (260)

கண்டுகொண்ட துருசியைப்போல் வேகங்கானேன்
கடலோட்டம் வேகம்போல் கலந்துபோகும்
பண்டுகொண்ட பாடெல்லா மறியாமாந்தர்
பறக்கிறது மிறக்கிறது மிதனாலாச்சு
மொண்டுகொண்டால் வாருதிக்குக் குறைவுண்டாமோ
மூதண்டங் கிழிந்தாடுந் துருசின்வேகம்
தொண்டுகொண்ட யிந்தவித்தை குருதான்சொல்வார்
தொட்டதுபோல் திரிந்தாக்கால் சும்மாவாச்சே. (261)

ஆச்சப்பா தினமொருக்கால் யேட்டைப்பார்ப்பான்
அதுயென்ன யிதுவென்ன வென்றுகேட்பான்
போச்சப்பா வாதமது யில்லையென்பார்
புகழாகக் கண்டவர்தா னாரோவென்பார்
நீச்சப்பா வாதமங்கே உண்டோவென்பார்
நேராகக் குருசொல்ல வேணுமென்பார்
ஊச்சப்பா நூலாலே பலனேதென்பார்
உலுத்தனவன் சொல்லுகிற வுணர்வுதானே. (262)

சிங்கி

உணர்வாகச் சிங்கியொன்று சொல்வேன் மக்காள்
உற்றுணர்ந்து பார்த்தாக்கா லுண்மைதோன்றும்
தணர்வாக வுடும்பாமை அழுங்குபன்றி
தாயீசற் தவளைமயில் நாயுங்கோழி
கணர்வாகக் கொழுப்பெடுத்து உருக்கிக்கொண்டு
கணக்காக ஒன்பதையும் களஞ்சுதூக்கு
பணர்வாகப் புழுகைந்து சவ்வாதைந்து
பருவமுடனொன்றாகப் பண்ணிக்கொள்ளே. (263)

பண்ணினது பரிச்சுண்ணம் பூரச்சுண்ணம்
பரிவான துருசென்ற சுண்ணமூன்றும்
ஒண்ணினது ஒருகளஞ்சு வகையொன்றுக்கு
ஒக்கவிட்டு மத்தித்துக் கலத்திலப்பு
நண்ணினது ரவியில்வைத்துக் காந்திபட்டால்
நலம்பெறவே தைலமாம் வழித்துவாங்கி
கண்ணினது நில்லாமல் நன்றாய்வாங்கி
கடக்கவொரு பீங்கானில் வைத்துக்கொள்ளே. (264)

வைத்ததிலே போடுதற்கு மருந்துகேளும்
வாகான வெண்காரஞ் சாரங்கெந்தி
கைத்ததிலே தாளகமும் வீரம்பூரம்
கஸ்தூரி கருநாபி தொட்டியோடு
மொய்த்ததிலே வகையொன்று பணந்தானொன்று
முனையாமல் தூக்கியிந்த யொன்பதையுமக்காள்
தைத்ததிலே யுரைத்துநன்றாய் தைலம்சேர்த்து
சாங்கமாய் வைமகனே சிங்கியாச்சே. (265)

சிங்கியொடு பொட்டிட்டால் சிவந்தசூதம்
திரும்பாது அரும்பாது சேர்ந்துவெண்ணெய்
பங்கியொரு கிளிகட்டிச் சூடனிலேயாட்டி
பருவமுடன் கரண்டியிலே யுருக்கிக்கொண்டு
அங்கியென்ற குகையில்வெள்ளி பொன்போலாடும்
ஆனையென்ற சூதமது பட்டுதய்யோ
கங்கைகொன்றை தும்பைமதி அருகுசூடி
கனிவாக முன்னின்று பேசுவாரே. (266)

சூதகுளிகை

பேசுவார் சூதஞ்சாரணை தான்செய்து
பேராக யெடுத்துத்தா வடமாய்க்கொள்ளு
வாசிவா யென்றுசொல்லி மூட்டியாட
வந்துமுன்னே பஞ்சகர்த்தா நிற்பார்பாரு
ஆசுவார் கேட்டதெல்லா மீவார்யீவார்
அஷ்டமா சித்தியெல்லா மாடலாகுந்
தூசிவா வெளிகடந்தா லெல்லாம்போச்சு
சுகமாக நிற்குணத்தின் சோதிநன்றே. (267)

நன்றான யித்துறைபோல் பதினாறங்கம்
நலமாகத் துருசுவந்த விடங்களெல்லாம்
கன்றான சிங்கிபண்ணச் சூதங்கட்டும்
கரையேது கணக்கேது லெக்கோயில்லை
குன்றான மலையோடு மண்ணும்பொன்னாம்
கூடியிந்தக் குளிகையைச்சா ரணையேசெய்ய
ஒன்றான துரியமட்டுந் தொட்டேயாடும்
உத்தமனே காயசித்தி யுடனேயாமே. (268)

சூதக்கட்டு

ஆமப்பா சிங்கிகொண்டு கட்டுஞ்சூதம்
அப்பனே சுண்ணாம்பா யூதிக்கொண்டு
ஓமப்பா யிதுவொன்று தங்கம்நாலில்
உட்டியதை யஞ்சுசுண்ணக் குகையிலூது
வேமப்பா யண்டரண்டந் தொட்டதெல்லாம்
வேதைவெகு போக்குவகை சொல்லமாட்டேன்
போமப்பா பலகோடி பிறித்தாடுவார்க்கு
பொற்குருவும் பொற்சுண்ணம் போக்கிதாமே. (269)

போக்கான குருவைப்போல் வெள்ளிபண்ணு
புகழான வெள்ளிவித்தை பொற்போலாகும்
தாக்கான வேதையிதி லென்னசொல்வேன்
சாதகமாய்ச் சிவசத்தி ரெண்டுவித்தை
வாக்கான தூரமுதற் பரிசவேதை
வகையெட்டு மிதுக்குள்ளே யாடலாகும்
நோக்கான நோக்கோடே கோடிபோக்கு
நுணுக்கத்தில் நுணுக்கமிதில் வரைகாணாதே. (270)

வரைகாணாச் சவுக்காரந் தொட்டுயேறு
வகைவகையாய்ச் சுண்ணமென்ற துரைகள்தோறும்
நிரைகாணா வேதையொரு கோடாகோடி
நேராகப் பிறித்துரைக்க வென்னால்கூடா
கரைகாணாக் கடல்காண நினைத்தாப்போல
கண்டமட்டு மாடிடலாம் கணக்கோயில்லை
பரைகாணா யிதினாட்டைப் பார்க்கப்பார்க்க
பாவித்துச் செகசாலம் போலேபாரே. (271)

பாரப்பா சுண்ணாம்பாய் வெந்ததெல்லாம்
பச்சையிட வேதையாமில் லாட்டார்க்கேளும்
நேரப்பா மேல்நிற்கு மூடக்கொள்ளாது
நேரமில்லை யென்மேலே நினைவாய்ப்பாரு
ஆரப்பா யெனைப்போலே சொல்லப்போறார்
அஞ்ஞூற்றில் வாதமெல்லா மடக்கிப்போட்டேன்
காரப்பா குருபதத்தை மனங்கோணாமல்
காத்தவர்க்கு யிந்தநூல் கைக்குள்ளாமே. (272)

ஆமப்பா சடமென்னா ஊத்தைப்பாண்டம்
அதுமேலே ஆசையென்ன மோகமென்ன
ஓமப்பா முந்திமுந்தி மூலம்பார்த்து
உத்தமனே அறுதலமு மூட்டிப்பாரு
காமப்பால் மதியினுள்ளே நிற்குமப்பா
கலந்துண்ணக் காயசித்தி யாகுமாகுஞ்
சோமப்பால் மதியினுள்ளே சத்தியென்று
துலங்கியதோர் மதிகோடி காந்தியாமே. (273)

குருபாதம்

காந்தியென்ற குருபதந்தா னாதவீட்டில்
கலந்ததே பத்மாசனி யென்றசத்தி
காந்திநின்ற ரவிகோடி யாத்தாள்மேனி
கண்ணடங்கா ஒளியாகும் பார்க்கப்போகா
காந்திநின்ற வதின்மேலே கமனசத்தி
கனல்கோடி ஒளியாகக் காணுங்காணும்
காந்தியென்ற சிவத்தினுள்ளே தாயாஞ்சத்தி
கதிர்மதியுங் கோடிகொண்ட ஒளிபோலாச்சே. (274)

ஒளியான பரத்தினுள்ளே யொட்டிநீங்கா
உத்தமனே ரவிகோடி வன்னிகாந்தி
ஒளியான முதற்பாழி லனந்தைப்பெண்தான்
ஒருகோடி ரவிமதிபோல் ஒளிவேகாணும்
ஒளியான வெளிப்பாழில் விருதைநிற்பாள்
உத்தமனே ரவிமதியாம் வன்னிகோடி
ஒளியான வெளியொளிப்பாழ் வரையினுள்ளே
உள்மனதுக் கதுதானு முயர்ந்தவீடே. (275)

வீட்டிலே நின்றுரைந்து மயக்கந்தீர்ந்து
விளங்கியதின் மேலேயம் பரமதான
காட்டிலே விழுந்தாக்கால் வழியோகாணார்
கைமுறையா யிந்தவழி கருதியேறு
வீட்டிலே விட்டாக்கால் ஞானமாமோ
நினைவாலே கூட்டாட்டால் யோகமாமோ
காட்டிலே யிருந்தாலென் நாட்டில்வாழ்ந்தென்
குறியாக மனமுறைந்தால் கூடுங்காணே. (276)

கூடுகிற வரிசையிது ஞானவீதி
குருடனுக்கும் வெட்டவெளி யாகச்சொன்னேன்
ஓடுகிற வரிசையிது யோகத்துக்கு
உத்தமனே வாசிகொண்டு ஊதியேறு
ஆடுகிற வரிசையிது உலகமெல்லாம்
அப்பனே குளிகையிட்டு ஆடிப்பாரு
போடுகிற வரிசையிது ஆங்காரத்தைப்
புகழ்பெரிய மூலவன்னிக் குள்ளேபோடே. (277)

மூலவன்னி துலங்கினா லாறுங்கொள்ளும்
மும்மூலம் வெளியாகு மேலுங்காணும்
கோலவன்னி யண்டசத்தி கூறும்காணும்
கொள்கியதோர் பராபரையின் குறிப்புங்காணும்
மேலவன்னி நிஸ்கலமும் வெளியாய்த்தோணும்
வேதாந்த அந்தமெல்லாம் வெளியாய்க்காணும்
மாலவன்னி நிராகாரத் தட்ங்கினோர்க்கு
மனோன்மணியாள் நடனசங்கீதந்தானே. (278)

தானென்றும் நீயென்று மிரண்டுமற்றால்
சர்வசங்கை தீர்ந்துகொண்டால் ஞானியாவாய்
வானென்றும் மேகமென்றும் மனத்துட்கண்டால்
மவுனமுற்ற நின்றமெஞ் ஞானியப்பா
ஊனென்றும் முயிரென்றும் உன்னுட்கண்டால்
ஓகோகோ மெஞ்ஞானி உற்றவிடமய்யா
கோனென்றுஞ் சீஷனென்ற சொல்மறந்தால்
குறிகெட்டு நின்றதொரு ஞானியாமே. (279)

ஞானிநா னென்பார்கள் வாய்ப்பேச்சாலே
நல்வினையுந் தீவினையு மிரண்டுங்காணார்
ஞானிநா னென்பார்கள் பாசவலைநீங்கார்
நலமற்ற போகத்தில் ஆசையாவார்
ஞானிநா னென்பார்கள் தான்வேறாய்நில்லார்
நாடுகிற பதியைவிட்டு நாய்போலேதிரிவார்
ஞானிநா னென்பார்கள் யேகவெளி காணார்
நாதாந்தப் பேரொளியை நாடார்தாமே. (280)

ஆறுதலங்காண

தாமென்ற பதத்தவர்க ளல்லோஞான
சார்வாகுஞ் சகலசித்துங் கவனங்கொண்டு
ஓமென்ற குண்டலியைக் கண்டாயானால்
உயர்ந்தாறு தலங்காணு மமுதமூறும்
போமென்ற சொல்லற்று வரவுமற்று
போக்கத்து நீக்கத்து போதந்தானாய்
ஆமென்ற தத்வமற்று நாணமற்று
அடங்கிநின்ற பொருளொக்குந் துருசியாட்டே. (281)

ஆட்டான போராட்டு ஆட்டுதற்கு
அப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
மூட்டான வெகுமூட்டுப் போகப்போக
மூதண்டங் கிழிந்தாடும் வீரவேகம்
சூட்டான சூட்டெல்லா மிதினாலாச்சு
சுணணாம்பு வகையெல்லா மிதினாலாச்சு
பூட்டான பூட்டெல்லா மிதினாலாச்சு
பொற்சுண்ண மிதினாலே பிறந்தவாறே. (282)

வாதஆதி வீரம்

வாரான வீரத்தால் செந்தூரமாச்சு
வகைவகையாய் நவலோகந் தண்ணீராச்சு
தாரான உபரசங்கள் சத்துமாச்சு
சகலமுமே மெதுவாகத் தவளமாச்சு
நீரான யினங்களெல்லாம் வேதையாச்சு
நிமிஷத்தில் தங்கமையாற் சாவுபோச்சு
சூரான வாதத்துக் காதிவீரங்
கொடுஞ்சுறுக்கு கொடுஞ்சுறுக்கு குணத்தைக்கேளே. (283)

வீர உற்பத்தி

கேளப்பா கல்லுப்பு வெடியுப்புஞ்சாரங்
கெடியன்ன பேதியுடன் சீனிக்காரம்
நாளப்பா துருசியுட னாறுங்கூட்டி
நலமாக யிந்திடைக்கி ரசந்தான்வாங்கி
சூளப்பா திராவகத்தால் ரசத்தைக்கொன்று
துடியாக யிதினோடே கலந்துகொண்டு
தூளப்பா குப்பியிட்டு யெரிக்கமேலே
நோக்கிநின்ற பதங்கமது வீரந்தானே. (284)

வீரமென்றால் மகாஞான சுத்தவீரன்
வேதைக்கோ ரணவீரன் சுண்ணவீரன்
காரமென்றால் கடுங்கார முண்ணச்சாகான்
கைமுறையா யிதைவிட்டால் வேதைபோச்சு
சாரமென்றால் கடுஞ்சாரம் பட்டால்போகுஞ்
சரக்கினொடு சூதத்தின் போக்குவேகம்
தூரமென்றால் வெகுதூரம் தொட்டாலோடும்
துடியான வீரத்தைக் கட்டக்கேளே. (285)

கட்டுகிறேனாறுவகைச் சரக்குஞ்சூதங்
கண்ணிமைக்குள் கடல்போலே யாகப்பாரு
வட்டுகிறேன் பரிச்சுண்ணம் வீரத்தாட்டி
வாகான சீனம்விட்டால் கருக்கும்பாரு
ஒட்டுகிறே னிதைப்பூசி வீரம்மேலே
உப்பான சீனமொடு சீலைசெய்து
தட்டுகிறேன் தனல்மேலே போட்டுவூத
தளராமற் றாடங்கிக் கட்டுங்காணே. (286)

காணப்பா யிவ்வீரங் கட்டைக்கொண்டு
காட்டயிலே நவலோகஞ் சுண்ணமாகும்
பேணப்பா யிதுக்குள்ளே வேதைகோடி
பிறித்துரைக்கப் போகாது போக்கோகோடி
தோணப்பா யிதின்மேலே வழலைபூரஞ்
சூட்டியே யஞ்சுசுண்ணக் குகையிலூது
ஊணப்பா கரியிலிட்டு ஊதச்சுண்ணம்
உத்தமனே கடுஞ்சுண்ண வேகமாச்சே. (287)

ஆச்சப்பா யிச்சுண்ணந் தாளகத்திற்பூசி
அப்பனே வைத்தூதச் சுண்ணமாகும்
ஊச்சப்பா காரீயம் சூதம்நேரே
ஊட்டியே சுண்ணமிட்டு யாட்டிக்கொண்டு
பாச்சப்பா வெடியுப்புக் கம்பிமேலே
பரிவாக ரவியிலிட்டு வருத்துப்போடு
வாச்சப்பா பின்புஅதைப் புடத்தைப்போடு
மக்களே வெள்ளெலும்பு போலேயாமே. (288)

வெள்ளெலும்பாம் வெடியுப்பு செந்தூரிக்க
விதஞ்சொல்வேன் விதஞ்சொல்வேன் விரைந்துகேளும்
வெள்ளெலும்பா மொருகம்பி வாங்கிக்கொண்டு
வீரமொடு பரிச்சுண்ண வீரமிட்டுப்பூசி
வெள்ளெலும்பை ரவியினுள்ளே போட்டாவிந்த
வேகமது வுடன்சென்று பாய்ந்துபாய்ந்து
வெள்ளெலும்பு சிவத்தெலும்பா மிதிலேவித்தை
விரைந்ததிலே வேதைசொல்வேன் மேவிக்கேளே. (289)

வெடியுப்பு வேதை

மேவியதோர் வெடியுப்பைக் காரீயத்தீய
விளங்கியதில் பனிரெண்டு மாற்றுக்காணும்
மேவியதோர் ருப்பைநவ லோகத்தீய்ந்தால்
வேதையென்ன பதினாறு மாற்றுகாணும்
மேவியதோ ருப்பையுப ரசத்திலீய
விடுபட்ட ஆணிக்குள் விரவியாடும்
மேவியதோர் வெடியுப்பு வேதைகேளும்
மேகம்போல் வெகுசுறுக்கு விரவும்பாரே. (290)

பாரப்பா யிந்தவுப்பைச் சுண்ணத்திட்டு
பாங்கான தானகத்திற் றாக்கியூது
நேரப்பா சலவைகொண்டு சுண்ணாம்பாகும்
நேர்ந்துயிந்தச் சுண்ணத்தை வங்கத்தப்பி
சாரப்பா புடம்போடு சுண்ணமாகும்
சார்ந்தஇந்தச் சுண்ணத்தைக் கெந்திக்கப்பி
ஊரப்பா வைத்தெரிக்க உப்புச்சுண்ணம்
ஊதிடவே மல்லிகைப்பூப் போலாம்பாரே. (291)

பூப்போலே ஆகுவதென் குருவின்வாக்கு
பூரணத்தில் மனதொன்றாய்ப் பொருந்தச்செய்து
பூப்போலே நின்றவுப்பில் வீரங்கூட்டிப்
புகழாக நிமிளையின்மே லப்பியூதப்
பூப்போலே நிமிளையப்பா யிந்தநீற்றை
புகழ்பெரிய சாரத்துக் கப்பியாட்டு
பூப்போலே சாரமுமாஞ் சாரச்சுண்ணம்
பொற்தகட்டில் வீரமிட்டுப் பூசிப்போடே. (292)

போட்டுவொரு புடந்தனிலே தங்கச்சுண்ணம்
பொய்க்குருவோ மெய்க்குருவோ அறிந்துபாரு
ஆட்டவொரு புடத்தாலா யிரத்தெட்டண்டம்
அணுக்கொண்டே ஆடுபே ரண்டமட்டும்
நீட்டவொரு மலைகாணேன் யெதிரிகாணேன்
நேராக முன்வந்து நிற்பார்காணேன்
பூட்டவொரு பாற்காணேன் முன்பின்காணேன்
மூதண்டம் பொற்குருதா னாடும்போக்கே. (293)

குளிகை

போக்கான பொற்குருவாற் சூதங்கட்டிப்
புகழாகச் சுண்ணாம்பாய்க் குகையிலூதி
மாக்கான சுண்ணத்தால் வீரங்கட்டி
மருவியதோர் வீரத்தைச் சுண்ணமாக்கி
தாக்கான திதுவொன்றில் தங்கம்நாலில்
தாக்கியிதை மணிபோலே வாங்கிக்கொண்டு
சாக்கான கற்பூர சுண்ணம்வீரஞ்
சாரித்து யிம்மணிமேற் பூசிவையே. (294)

பூசியதோர் குளிகைதனைக் குகையில்வைத்து
புகழாகப் புடம்போடச் சுண்ணமாகும்
காசியதோர் சரஸ்வதி யமுனைகெங்கை
கைக்குள்ளே யாச்சுகுரு பதத்தைப்பூசு
வாசியதோர் சித்திகண்டா லிந்தச்சித்தி
வாகான பொற்சுண்ண வேகமாகும்
மாசியதோ ரத்துநின் றமரிருந்தவீட்டில்
மருவிநின்று அமுர்தமுண்ண வாய்க்கும்பாரே. (295)

வாய்க்குமப்பா யிச்சுண்ண வீரத்தாட்டி
வகையான தங்கத்தி லப்பிப்போடு
மாய்க்குமப்பா பரிச்சுண்ணம் வேகமெத்த
மக்களே யிதைவிட்டுச் சூதங்கட்டு
சாய்க்குமப்பா அஞ்சுசுண்ணக் குகையிலூது
சலவைபோல் சுண்ணாம்பாஞ் சூதந்தானும்
தாய்க்குமப்பா காலிடையி லிதுவொன்றிட்டு
சாதகமா யுருக்கியொரு மணியாய்வாங்கே. (296)

வாங்கினதோர் மணிமேலே பூசுதற்கும்
வகையான கற்பூரந் துருசுசுண்ணம்
தாங்கினதோர் சவ்வீரம் புழுகுசாரஞ்
சமரசமாய்க் கூட்டியந்த மணிமேலப்பி
ஓங்கினதோர் அஞ்சுசுண்ணக் குகைக்குள்வைத்து
உரைக்கவொரு புடம்போடச் சுண்ணமாகும்
பாங்கினதோ ரிச்சுண்ண மாடுமாட்டை
பகுந்துரைக்க நாவில்லை பண்பாய்க்காணே. (297)

பண்பான சுண்ணத்தில் வீரமூட்டிப்
பரிவான லிங்கமிட்டுக் காரமிட்டு
நண்பான லோகமுப ரசங்கள்தன்னில்
நாட்டிடவே யிருபத்தி ரெண்டுமாற்று
தண்பான சுண்ணஞ்சவ் வாதுகூட்டி
தடவினால் சரக்கெல்லா மணிபோலாகும்
உண்பான சரக்கிலொரு கோடாகோடி
உயர்சுண்ணச் செந்தூர வகையிதாமே. (298)

பதினாறு வேதை

வகையான யிக்குருவிற் புழுகைப்பூட்டி
மாட்டியல்லோ சரக்கெல்லா மூதச்சுண்ணந்
துகையான தொவ்வொன்றில் கோடிச்சுண்ணம்
துறைதோரும் விரிக்கவென்றால் வயதுகோடி
பகையான யினங்கண்டு பாய்ச்சச்சுண்ணம்
பரிவான மித்துருவில் மணிபோலாடும்
புகையான தூமமுதல் பதினாறுவேதை
பொன்முதலாய் வெள்ளிவரை பிரித்து ஆடே. (299)

பிறித்தறிந்து யாடவென்றால் வயதோகொஞ்சம்
பேயரென்ன சென்மமெடுத் தாரேலோகச்
மறுத்தறிந்து நோய்கோடி வறுமைகோடி
வயதுசென்று கிழமான மயக்கங்கோடி
நெறித்தறிந்து யென்னவித்தை யென்னஞானம்
நேராகப் பார்க்கவென்றா லாசையொட்டா
குறித்தறிந்து நோக்கவென்றால் மனங்கூடாது
கொள்கிநின்று பெண்ணாசை கொல்லுந்தானே. (300)

சடம் விழுந்தால்

கொல்லுகிற ஆசையினால் பெண்ணைக்கொண்டு
கூறான மைந்தர்களைப் பெற்றுநீயும்
செல்லுகிற காலமீமக் களூதில்மக்கள்
செலமுமிறைப் பார்களென்றே யெண்ணியெண்ணி
மல்லுகிற போகத்தா லிறந்துபோனால்
மக்களார் பெண்டீரார் தம்பியாரு
அல்லுகிற சடமெடுத்துத் தர்மஞ்செய்தால்
அவரவர்க்கே யல்லாம லுனக்கங்கேதே. (301)

ஏதப்பா பெண்டீரா லாவதேது
யீன்றெடுத்த பிள்ளையினா லாவதேது
கோதப்பா பந்துவினா லாவதேது
கொண்டதினால் கொடுத்ததினா லாவதென்ன
வாதப்பா சொல்லிநித்தம் பிறட்டால்தேடும்
மகத்தான திரவியத்தா லாவதென்ன
போதப்பா போதுமென்ற போதம்பார்த்தால்
புகமுனக்கு யிதுலாபம் புகழ்ந்துகாணே. (302)

புகழ்ந்துநின்ற வுலகத்தில் வந்துயானும்
புத்திரனைப் பெறாமலையோ மலடனானேன்
நிகழ்ந்துயினிக் கதியேது தற்பனங்களேது
யென்செய்வேன் கடைத்தேற யெண்ணுமாண்பர்
மகிழ்ந்துநீ புத்திரரைப் பெற்றாயானால்
மக்களாற் கடைத்தேற வண்மையுண்டோ
அகிழ்ந்துநின்ற பிள்ளைவே தாந்தியாகில்
அண்டத்திற் சேரவிவன் பிதிற்குநன்றே. (303)

விட்ட குறை

நன்றான தாயவள்தான் மோகமுற்று
நலமான பிதாவோடு கலந்ததாலே
ஒன்றான விந்தாலே விட்டகுறைவந்து
வுருத்தறிக்கு மவ்வுருவை யவனவளுங்காணார்
கன்றான கெற்பத்தில் சுமந்துபெற்று
கண்ணோடு மூக்கோடு போற்றியாட்டி
நின்றான பாசத்தால் வளர்த்தாள்மாதா
நேசமாய் வித்தையெல்லாம் பிதாசொன்னாரே. (304)

சொன்னதோர் பிதாவுக்கு மிவனாலென்ன
சுமந்துபெற்ற மாதாவுக் கிவனாலென்ன
பன்னதோர் பலகலையாங் காமக்கூத்து
பழகினான் கன்மமென்ற காமவித்தை
பொன்னினதோ ரித்தனையு மாட்டியாட்ட
புகழான சிற்றின்பமாயமாச்சு
என்னதோ ரென்னசொல்வே னய்யோஅய்யோ
எழுநரகந் தனிலுழல விருத்தல்நன்றே. (305)

நன்றான புத்திரன்பூ ரணத்திற்சேர்ந்தால்
நலமான பிதிர்நூறு வமிசமுத்தி
நன்றான மாதாவின் வமிசம்நூறு
நண்பாக முத்திபெறும் பாருபாரு
நன்றான புத்திரன்தா னாகாவிட்டால்
நரகத்துக் கேதுவா யெய்துமய்யோ
நன்றான புத்திவந்தால் சாதகந்தான்கேளும்
நாதாந்தப் பெருவெளியை நாட்டிப்பாரே. (306)

பெருவெளியே பிதாவாச்சு சேய்நீயாச்சு
பேராக வுருக்கொண்டு யெடுக்குமுன்னே
அருவெளியே சித்திரத்தைக் கேளுமக்காள்
அதையடுக்கப் பூரணந்தான் நின்றுகொண்டு
கருவழியே யேழுவகை யோனியானால்
கண்கொள்ளாக் கரைகொள்ளாச் செந்துவென்றால்
ஒருவழியோ யொருமுகமோ வொன்றோதேகம்
ஓகோகோ பலவாறா யுதித்தல்தானே. (307)

உதித்திட்ட செந்துவெல்லா மோடியோடி
முறங்கிறது விழிக்கிறது மெட்டுக்குள்ளே
பதித்திட்ட யெட்டகன்று பரைகாணாமல்
படுகிறதோர் பிறவியெல்லாம் பாழாய்ப்போச்சு
மதித்திட்ட சென்மமது ஞானசென்மம்
வாக்கான பூரணத்தை மருவிப்போகும்
கொதித்திட்ட நீர்போலே சிறிதுஞானம்
கொள்கியதோர் கற்பூரத் தீபமாமே. (308)

ஒடுக்க விபரம்

ஆமப்பா லிங்கத்திலடங்கிப் போகும்
அதுவுமொரு பட்சந்தா னதுவல்லாமல்
போமப்பா சடத்தைவிட்டுப் போக்காய்ச்செல்லும்
புகழாக யிதுவுமொரு பட்சமாகும்
போமப்பா யிதுநாளி லொடுங்குவதுமரிது
உத்தமமாம் வித்தையிது சிவத்தார்க்கெய்தும்
நாமப்பா சடத்தோடு பூரணத்தில் வாழ்ந்தோம்
நம்போலே பிள்ளைகளே வாழுவீரே. (309)

வாழுகிற தெப்படியோ வென்றால்மக்காள்
வகையாக யோகத்தை நின்றுதேறி
ஆழுகிற ஞானத்தில் விந்துகொண்டு
அதினாடே மனதொன்றிப் போனபின்பு
நீழுகிற பிரபஞ்ச மெல்லாம்நானே
நிலையான சராசரமும் யானேயாச்சு
தாழுகிற யென்வகையில் யானேயாச்சு
சகலமுமே நானென்று நில்லுநில்லே. (310)

நில்லாட்டால் பிரபஞ்சத் தென்னசெய்யும்
நேராக வெகுநாள்தான் சடத்தைவாழ்த்து
அல்லாட்டால் சித்தென்ன குளிகையென்ன
ஆழுகிற ஆட்டென்ன பூரணத்தில்
செல்லாட்டால் வாதமென்ன கற்பமென்ன
செகத்திலுள்ள மனுடரைப்போல் நீயொன்றாச்சு
சொல்லாட்டால் குருவென்ன சீடனென்ன
தொல்லுலகில் வேடமிட்ட குருத்தானாச்சே. (311)

குருவென்ற தாருக்கு நாமமையா
குறித்தபூ ரணத்தைக்காட் டினவனாச்சு
கருவென்ற கருவறிந்து மேல்வெளிகாட்டிக்
கைமுறையாய்ச் சேர்ப்பவனே யாசானாசான்
தருவென்ற புருவமய்யத் தமர்ந்துநீயும்
சாதகமாய்ச் சோதியிலே கலந்தாயானால்
திருவென்ற வுதையத்தில் வெளிச்சமேது
சேர்ந்திடும் ராக்கால மிருட்டுமேதே. (312)

இருட்டேது யிருட்டேகு மிரவிமுன்னே
யேகவெளி யென்னாளு மிருப்பதென்னோ
அருட்டேது வெளிக்குள்ளே வெளியைப்பாரு
அம்மம்மா ஒளிக்குள்ளே ஒளியைப்பாரு
மருட்டேது ஒன்றுமில்லை வெளியேயாச்சு
மக்களே அந்தயிடம் மகத்தாம்போதம்
திருட்டேது யெத்தியுண்ணும் குருவேயானால்
செப்பறியார் செகசாலஞ் செப்புவாரே. (313)

செப்புவது யென்னவென்றால் செப்பக்கேளும்
செகமெல்லா மிருதயந்தான் பிரமமென்று
ஒப்புவது அவனியெல்லாம் பூரணந்தானென்று
ஓகோகோ நான்மூத்தோ னென்றுசொல்லி
ஒப்புவது மலைக்கிறது மெனக்குள்ளென்று
உபதேச மிதுவென்பார் குருட்டுமாண்பர்
தப்புவதுஞ் சிக்கிறது மிரண்டுங்கண்டால்
தானவனாய் நின்றதுவா மென்றுகேளே. (314)

கேளப்பா சொல்லறியா னுலகத்தாசான்
கெடியாயிப் படிசொல்லிப் பணம்பரிப்பான்
நாளப்பா போக்கிசீ வனத்தைப்பண்ணி
நலமான சீடனுக்குப் பிழைப்புண்டாக்கி
சூளப்பா வுலகமிப் படியேபோச்சு
சொக்கியந்த மாயத்தே சுழன்றேபோனார்
தாளப்பா திறந்துவிட்டா லவனேயாசான்
சாதகமாய்க் குருதேடிச் சார்ந்துகேளே. (315)

உலகஞானி

கேளப்பா வுலகமெல்லாம் வசனஞானம்
கெடியாகச் சங்கமென்ற பெயருமிட்டு
வாளப்பா சிவராச யோகஞ்செய்வார்
வஞ்சகமாய்க் கொலைகளவு பொய்யுஞ்சொல்வார்
தாளப்பா பிடித்துநிற்பார் குருவேயென்பார்
சச்சிதானந்தவெள்ளக் கடலேயென்பார்
கோளப்பா சொல்லியொரு குடிகெடுப்பார்
குறிப்பான வுலகத்து ஞானிதானே. (316)

தானென்ற பொருளாறு பூரணந்தானாறு
சஞ்சார விலட்சணனாய்த் திரிவேனென்பார்
மானென்ற விழியுடைய பெண்ணைக்கண்டால்
மகிழ்வாகப் பின்சென்று மயக்கமாவார்
தீனென்ற தீனியிலே ருசியைப்பார்ப்பார்
செகசாலம் பேசியே புரட்டுச்செய்வார்
ஊனென்ற வுடம்புநீர்க் குமுழியென்பார்
உத்தநோய் வந்தாக்கா லுணருவாரே. (317)

வானென்ற ஞானமென்ன வெரும்பேச்சென்பார்
வாதமென்ன குளிகையென்ன வாய்ப்பேச்சென்பார்
கானென்ற காயசித்தி உண்டோவென்பார்
ககனமென்ன யோகமென்ன பொய்யேயென்பார்
ஊனென்ற வுடம்புக்குத் திடமதாக
உண்டுசுக மனுபவித்த லதுவோஞானம்
தானென்ற ஆணவத்தை யற்றேனென்பார்
தந்திரமாய் யிவைபேசித் திரிவார்பாரே. (318)

பாரப்பா யிப்படித்தா னுலகஞானம்
பார்த்தவர்கள் வெகுகோடி மாண்டுபோனார்
ஆரப்பா அறிந்தவர்கள் ஞானமார்க்கம்
ஆதிசித்த ரிஷிகளிலே யனேகங்கோடி
நேரப்பா நொந்தவர்கள் கரையோயில்லை
நினைவாக யிந்தமுறை யுனக்குச்சொன்னேன்
ஊரப்பா நரகத்தில் வீழ்கவேண்டாம்
உத்தமனே யதுக்கொக்கும் வீரத்தாட்டே. (319)

ஆட்டான கெந்தகத்தைக் கட்டக்கேளு
ஆதிசத்தி முதலனந்த மதுமாவேகம்
நீட்டான யிதனாலே யெரிச்சலொடுபுகைச்சல்
நிமிஷத்தில் மாண்டுபோய்ச் சாம்பலாகும்
பூட்டான திதைக்கட்டக் செகந்தான்பொன்னாம்
புகழான கெந்தகத்தில் போக்கோகோடி
கோட்டானை யுரித்தசிவ னிதுக்குள்சிக்கி
கூடுகிற துறைக்கெல்லாம் வேதையாமே. (320)

கெந்தகக்கட்டு

துறைக்கெல்லாம் வெகுசுறுக்கு கெந்திவேகம்
துடியாமற் சூதத்தை யமுத்திக்கொல்லும்
மறைக்கெல்லா மெட்டாப்பூ ரணத்தைக்காட்டும்
மவுனமுற்று உண்டாக்காற் காயசித்தி
குறைக்கலாம் நீட்டலா மிதிலேவேதை
கோடான கோடிகவரென்னசொல்வேன்
அறைக்கலா மிதினாலே யறந்தான்செய்தால்
ஆத்தாளுக் கீசனன்று யருளும்வாறே. (321)

அருளான கெந்தகத்தைக் கட்டக்கேளும்
அப்பனே வழலையுடன் வீரச்சுண்ணம்
அருளான மேற்பூரந் துருசுச்சுண்ணம்
அதுநாலு மொத்தரைக்கச் சிவப்பேயாகும்
அருளான கெந்தகத்திற் பூசிப்போட
அப்பனே மஞ்சளத்துத் தந்தம்போலாம்
அருளான யிதின்மேலே காரசாரம்
ஆதியுப்புச் சுண்ணமுடன் மூன்றுமப்பே. (322)

அப்பியிந்தக் கெந்தகத்தைக் கிளிஞ்சிநீற்றில்
அமுத்திமெள்ளத் தீயெரிக்கக் கல்லாய்ப்போகும்
ஒப்பியிந்தக் கெந்தகத்தைக் குகையில்வைத்து
ஊதிடவே சுண்ணாம்பா முறிந்தவேகம்
செப்பியிந்தச் சுண்ணத்தில் வீரமிட்டாட்டி
செயலான கல்லுப்பி லப்பியூது
தப்பியிந்தக் கல்லுப்புச் சுண்ணமாகும்
சாதகமாய் வீரமிட்டுத் தாளகத்திலப்பே. (323)

தாளகத்தை யூதிடவே சலவைச்சுண்ணந்
தனிச்சுண்ணம் வங்கத்தில் வீரமிட்டப்பு
கோளகத்தே வங்கமது கடுஞ்சுண்ணமாகும்
கொடியதொரு வங்கத்தில் வீரமிட்டாட்டி
நாளகத்தே நிமிளைக்கி யப்பியூது
நலம்பெறவே கடுஞ்சுண்ண நிமிளையாகும்
ஆளகத்தே யிச்சுண்ணஞ் சாரத்தப்ப
ஆகாகா ஜலம்பொசியு மணலில்மூடே. (324)

மூட்டிப்பின் ஜலம்பொசிந்து வெண்டுபோலாம்
மூதண்டச் சாரத்தை யரைத்துஊது
ஆட்டியபின் கடுஞ்சுண்ண மாகுஞ்சாரம்
அப்பனே வீரமிட்டுத் துருசுக்கப்பு
ஊட்டியபின் சுக்கானா மூதிப்போடு
ஓகோகோ கடுஞ்சுண்ணந் துரிசியாச்சு
நீட்டியபின் துருசியுடன் வீரமிட்டு
நேராகத் தங்கத்திற் பரிசம்பண்ணே. (325)

பரிசித்துப் புடம்போட்டு ஊதிப்போட
பாங்கான பரிச்சுண்ணம் வேகம்மெத்த
பரிசித்தால் சூதத்தி லுருண்டுகட்டும்
பாங்கான மணிமேலே பூரச்சுண்ணம்
பரிசித்து வீரமிட்டு ஆட்டிப்பூசி
பரிச்சுண்ணங் குகையில்வைத்துப் பாங்காயூது
பரிசித்த சூதமது சுண்ணாம்பாகும்
பதினாறு மிதுவொன்று பாய்ச்சியாட்டே. (326)

பாச்சியதோர் குளிகையின்மேல் துருசுவீரம்
பக்குமாய்ப் பூசியதைக் குகையில்வைத்து
ஆச்சியதோர் தணலிலிட்டு ஊதச்சுண்ணம்
அப்பனே வெகுவேக மண்டம்பொன்னாம்
காச்சியதோர் நவலோக முபரசமும்பொன்னாம்
கல்மலையுங் கானகத்து மரமும்பொன்னாம்
தாச்சியதோ ரொன்றுமில்லை யெட்டெட்டுமாடுந்
தங்கத்திற் சூதம்நின்ற தாக்குத்தானே. (327)

தாக்கான குருவில்சவ்வாது கூட்டி
    தனித்ததொரு கெந்தகத்திற் பூசிவாட்டி
ஏக்கான குகையிலிட்டு வுருக்கஆடும்
    இவ்விடைக்கு நாலிலொன்று தங்கம்போட்டு
வாக்கான இவ்விடைக்குச் சூதம்போட்டு
    மருவியதோர் நாகமிதிற் பாதிபோடு
தூக்கான யிடைக்கெல்லா மெட்டிலொன்று
    சுகமாக வீரமிடக் களங்கமாமே. (328)

களங்குச் செந்தூரம்

களங்கத்தை வேதையிடு ஆயிரத்துக்கொன்று
    கனகமென்ற பதினாறு மாற்றுமாகும்
களங்கத்தை யுபரசத்திற் தாக்கினாக்கால்
    கைமுறையாய்த் திசைமாற்றுக் காணுங்காணும்
களங்கத்துக் கிடைக்கிடைதான் தங்கங்கூட்டி
    கலந்துருக்கி யவ்விடைக்குச் சூதங்கூட்டி
களங்கத்தை யரைத்துமொரு புடத்தைப்போட
    கனகமயச் செந்தூர மாகும்பாரே. (329)

செந்தூரம் நெடுந்தூரம் போகுமப்பா
    சேர்ந்தபதி னாயிரத்துக் கொன்றுவேதை
செந்தூர மிப்படியே தொந்தித்தேற
    செப்பரிது கோடிமட்டும் வேதையாகும்
செந்தூர மிப்படிக்கட் டினங்கள்சீராய்ச்
    செய்துகொண்டால் கணக்கேது லக்கமேது
செந்தூரச் சரக்குமுதல் யுபரசங்கள்
    சேர்த்தேறச் சேர்த்தேற வேகமாமே. (330)

வேகமென்ற சுண்ணாம்பில் புழுகோவீரம்
    வேதித்தும் சாக்கோடு அப்பிவூது
பாகமென்ற சரக்கெல்லாம் சுண்ணாம்பாகும்
    பாச்சியிதை யினந்தோரு மேத்தயேத்த
ஆகமென்ற பூரணம்போல் கோடிதொந்தம்
    அம்மம்மா கரையில்லை தொந்தம்சொல்ல
தாகமென்று யெடுத்தவன்காண் சலத்தைத்தேடி
    தவித்துநின்ற வாறொக்கு முலகத்தோரே. (331)

உலகத்தோர் பண்ணுகின்ற வாதமல்ல
உத்துநின்று சிவயோகி பண்ணும்வாதம்
உலகத்தோர் செய்வதெல்லாம் பத்தேமாத்து
உத்தமியைப் பூசைசெய்தால் வாக்குங்காணும்
உலகத்தோர் வாதத்தால் வாமத்திற்புக்கி
உற்றுணர்ந்து பாராமல் வாதம்பொய்யென்று
உலகத்தோர் வாமத்தைத் தூசிப்பார்கள்
உத்தமனே ரவிகோடி நாதமெண்ணே. (332)

எண்ணப்பா யுப்பான சுண்ணத்துள்ளே
இயல்பான வீரமிட்டு கல்நார்க்கப்பி
பண்ணப்பா புடம்போடக் கல்நார்ச்சுண்ணம்
பாங்கான யிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
கண்ணப்பா கற்பூரச் சிலையிற்பூசி
கனக்கவொரு புடம்போடு அதுவுஞ்சுண்ணம்
மண்ணப்பா யிச்சுண்ணங் கெருடபச்சைக்கப்பி
மாட்டியொரு புடம்போடச் சுண்ணமாமே. (333)

சுண்ணமென்ற பச்சையிலே வீரமிட்டாட்டி
சுகமாக வழலையின்மே லப்பிப்போட
சுண்ணமென்ற யெண்ணையெல்லாஞ் சுண்ணாம்புண்ணுஞ்
சோபிதமா யதுவாங்கிக் கடுங்காரமேத்து
தண்ணமென்ற சாரமதிற் சமனாய்க்கூட்டி
தாக்கவொரு சலமாகுஞ் சலத்தினுள்ளே
சுண்ணமென்ற கற்பூரப் பலகைபோட்டு
காயவைத்து வாரியிட்டு வூதிப்போடே. (334)

ஊதினால் கடுஞ்சுண்ண மாகும்பூரம்
உத்தமனே யிதையெடுத்து வீரங்கூட்டி
ஆதினால் நவலோகத் தப்பியூத
அம்மம்மா நவலோகச் சுண்ணமாச்சு
ஏதினா லெதிலாச்சு பூரம்நீற்றால்
என்னசொல்வேன் நவலோகச் சுண்ணமாச்சு
ஊதினால் வீழுமோடா கொம்பில்மாங்காய்
உத்தமனே சுண்ணத்தை யூதிப்பாரே. (335)

பாரப்பா நவலோகச் சுண்ணமெல்லாம்
 பட்டவிடந் தொட்டவிட மெல்லாங்கட்டும்
நேரப்பா வீரமிட்டால் வேதையாகும்
 நேராக நூறுதொந்தம் நேர்ந்துயேறும்
போரப்பா பொன்னாகுங் குளிகையாகும்
 புகழான காயசித்திப் போக்குமாகும்
ஆரப்பா யிதின் போக்கை யறிந்துசொல்வார்
 அரகரா சிவசிவா அரிதுதானே. (336)

அரிதரிது நவலோகச் சுண்ணத்தோடு
 அப்பனே வீரமிட்டுப் பூசியூது
அரிதரிது வுபரசங்க னெல்லாஞ்சுண்ணம்
 அம்மம்மா அதைத்தொட்டு சுண்ணங்கோடி
அரிதரிது சரக்கெல்லாஞ் சுண்ணாம்பாகும்
 அதுக்கதுக்குத் தொந்தித்தால் கோடியாகும்
அரிதரிது சுண்ணாம்பு வித்தைமைந்தா
 அறிந்தவனே முழுவாதி அறிந்துபாரே. (337)

அறிந்துபார் கெருடபச்சை சுண்ணந்தன்னில்
 அதில்வீரம் மத்தித்துத் தாளகத்திலப்பி
அறிந்துபார் சுண்ணத்தில் வைத்தெரிக்க
 அரிதான தாளகமோ சுண்ணமாகும்
பிறிந்துபா ரிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
 பேரான வீரத்தி லப்பியூது
நெறிந்துபார் வீரமது சுண்ணாம்பாகும்
 நேரான வீரத்தில் வீரங்கூட்டே. (338)

கூட்டியதோர் வீரத்தைத் தங்கத்தப்பி
 கூசாமல் புடம்போடு தங்கச்சுண்ணம்
ஆட்டியதோர் பரிச்சுண்ணஞ் சூதத்தாட்ட
 ஆகாகா மணியாகு மதுக்குமேலே
நீட்டியதோர் வீரமிடு பூரச்சுண்ணம்
 நிறப்பாகப் பூசியதைச் குகையிலூது
மூட்டியதோர் கடுஞ்சுண்ணஞ் சூதமாகும்
 முகிழ்விரிந்து பூப்போலே விரியும்பாரே. (339)

விரியுகிற சூதத்தில் வீரமிட்டாட்டி
விளங்கியதோர் துருசுக்கு அப்பியூது
அரியுகிற சுண்ணாம்பாந் துருசுமைந்தா
அப்பனே வீரமிட்டுக் கெந்திக்கப்பி
சொரியுகிற பரிமேகம் கெந்திச்சுண்ணம்
தொகையென்ற பெண்வேதை சொல்லப்போகா
தெரியுகிற யிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
திறமான நிமிளைக்கி அப்பிப்போடே. (340)

அப்பிநின்ற நிமிளையைத்தான் ஊதச்சுண்ணம்
அப்பனே யிதையெடுத்து வங்கத்திற்போடு
ஒப்பிநின்ற வங்கமது சுண்ணமாகும்
உத்தமனே வங்கத்தைச் சாரத்திலப்பு
செப்பிநின்ற சாரமது சுண்ணமாகுஞ்
சேர்ந்திந்தச் சாரத்தைத் துருசுக்கப்பு
தப்பிநின்ற துருசியது சுண்ணமாகுஞ்
சாதகமாய்த் துருசியது சிங்கிக்காமே. (341)

ஆமப்பா துருசியிலே சவ்வாதுகூட்ட
அப்பனே சரக்கெல்லா மணிபோலாகும்
ஓமப்பா துருசியிலே புழுகுகூட்ட
உத்தமனே யண்டமுதல் சரக்குஞ்சுண்ணம்
சேமப்பா துருசியிலே காரசாரஞ்
சேர்ந்திடவே சகலமுமே சத்தாமூணும்
வேமப்பா யண்டரண்டந் துருசினாட்டு
வேரில்லை படரில்லை வெளிபோலாச்சே. (342)

வெளியான வெளிக்குள்ளே ரேகைபாரு
விளங்கிநின்ற கழிக்குள்ளே வன்னிபாரு
நெளியான கால்கொம்பில் நாதவிந்துபாரு
நேராக அத்தலையில் நின்றுபாரு
ஒளியான வொளிக்குள்ளே யொளியைப்பாரு
ஓகோகோ வொளிகடந்த வொளியைப்பாரு
தளியான தலமேது சக்கரங்களேது
தள்ளியிதை உன்னிதத்தில் சார்ந்துபாரே. (343)

உன்னிதத்தி லேறுவது யாருமைந்தா
உத்துநின்ற மனதுமனோன் மணித்தாயாகி
தன்னிதத்தில் பசுபதி பாசந்தீர்ந்து
சாதகமா யிப்பதியி னுள்ளேசேர்ப்பாள்
பன்னிதத்தில் தினந்தோறும் சுத்திவஸ்தும்
பரத்துக்கே யென்றுசொல்லிக் கொண்டுநோக்க
அன்னிதத்தி யாகநில்லா ளென்னைப்பெற்றாள்
யாவர்க்குந் தாயாகி நிற்பாள்பாரே. (344)

தாயான பூரணியே யகண்டரூபி
சச்சிதா னந்தவெள்ளச் சார்பினாளே
பேயான பிள்ளையைநீ பெற்றிட்டாக்கால்
பேய்ப்பிள்ளை யென்றுதள்ளப் பேச்சுண்டோசொல்
ஓயான வெளிமுதலாய் வாயுவன்னி
உற்றஜலம் பூமியென வுருவெடுத்துநீதான்
மாயான மாயமென்றுங் கருவியென்றும்
வாசனையாம் ஆசையென்றும் வைத்தாய்நீயே. (345)

நீயென்றும் நானென்று மிரண்டாய்க்கண்டால்
நிட்சயமாய்ப் பிறவியுனக் காச்சுதென்பாய்
தாயென்றும் பிள்ளையென்றுஞ் சொன்னேனானால்
சங்கத்தி யாகியல்லோ சமுசாரியானேன்
காயென்றும் வித்தென்றுஞ் சொல்வேனானால்
காட்டியதோர் மரம்போலே பிறவியாச்சு
ஓயென்றும் வேதாந்தத் தந்தம்நின்றால்
ஓகோகோ ஒருநாளும் பிறவிதானே. (346)

பிறவாத நெறிவேணு மென்பார்கோடி
பேரான காயத்தை வென்றார்கோடி
மறவாத குளிகையிட் டாடவென்பார்கோடி
மதியமுர்தம் வேணுமென்பார் கோடாகோடி
திறவாது சையோகம் வேணுமென்பார்கோடி
திருட்டுவித்தை திலதவித்தை வேணுமென்பார்கோடி
உறவாத வாதவித்தை வேணுமென்பார்கோடி
உத்தமியே யவரவர்க்குக் கொடுத்தாய்நீயே. (347)

கொடுத்தல்லோ யவரவர்க்கு முன்னாய்நின்று
குவிந்தபின்பு நல்வினைதீ வினையுமானாய்
அடுத்தல்லோ போற்றயெத் தனையோசென்மம்
ஆகியெடுத் தாலுனையே பணியக்கிட்டும்
தடுத்தல்லோ யாட்கொண்டாய் விட்டகுறையாலே
தாயேனான் பிறக்கரிது யென்பாரில்லை
மடுத்தல்லோ மோகத்திற் காமனாய்ச்சென்று
வஸ்துவென்ற சத்தியிலே மயங்கினாரே. (348)

மயங்கினார் தீனியினால் சையோகத்தால்
மந்தகா சத்துடனே வரவுதப்பி
தியங்கினார் கிரும்மிஞ்சி வாந்தியாகி
சிற்றின்ப மோகத்தால் சேர்ந்துகெட்டார்
துயங்கினார் கரணமா லிங்கணத்தில்
சுத்தினார் பத்தினார் பதத்தைப்பார்த்து
முயங்கினா ரிதுவெல்லா முத்தியென்றார்
மூடரையா வுலகத்து வாமிதானே. (349)

வாமியென்ற நாமமது யாருக்காச்சு
மகத்தான பஞ்சகர்த்தா வுக்குமாச்சு
வாமியென்ற நாமமது ரிஷிகட்காச்சு
மருவிநின்ற சிவயோகி தனக்குமாச்சு
வாமியென்ற நாமமது சித்தர்க்காச்சு
மகத்தான மெஞ்ஞானம் பெரியோர்க்காச்சு
வாமியென்ற நாமமது வாதிக்காச்சு
மற்றவர்க்குப் பசுவென்ற நாமந்தானே. (350)

தானென்றா வுனைப்போற்ற வல்லானானால்
சாபமெல்லாம் வஸ்துவுக்குத் தீர்க்கவேணும்
ஊனென்ற தேகத்துக் குபாசிக்கவேணும்
உத்தமனே கலைகளெல்லா மூட்டவேணும்
பானென்று பாணிச்சால் பரத்துக்கென்று
பரவினையாய்க் கொண்டிருந்து பரத்தைநோக்கி
கானென்ற மாய்கைவிட்டுப் பரத்திற்சேர்த்து
கழருவார் சிவயோகி ரிஷிகள்தானே. (351)

சிவயோகி ரிஷிகளுமெடுத்த திந்தப்பூசை
சேர்ந்துநின்ற மறையோர்க ளெடுத்ததிந்தப்பூசை
தவயோக சைவருக்கு மெடுத்ததிந்தப்பூசை
தவசுடைய பெரியோர்க்கு மெடுத்ததிந்தப்பூசை
மவயோக மவுனிக்கு மெடுத்ததிந்தப்பூசை
மருவி நின்ற சனகாதி தெடுத்ததிந்தப்பூசை
புவியோகி ரசவாதிக் கெடுத்ததிந்தப்பூசை
புகழ்பெரிய பூசைக்கிக் கெந்தகந்தான்நேரே. (352)

ரசத்தின் பெருமை

நேரான ரசத்தினுட பெருமைகேளும்
நிலையான யீசனுட விந்துவிந்து
மானான கெவனமுதல் காயசித்தியாகும்
மகத்தான வாதமுமாம் வசியமுதலெட்டும்
சீரான சிவனன்று தியானத் தேநிற்கில்
ஜெந்துசத்தி செனித்ததினா லிந்தவிந்து
பாரான குளிரோம்பி மலைகள்தோறும்
பறந்துதப்பா பறந்துதப்பா சூதந்தானே. (353)

சூதமது யேதென்றே யெண்ணவேண்டாஞ்
சுத்தசை தன்யமது சிவத்தின்கூறு
வாதமது யேதென்றே யெண்ணவேண்டாம்
மகத்தான பூரணத்தின் மார்க்கம்மார்க்கம்
வேதமது யேதென்றே யெண்ணவேண்டாம்
விளங்கியதோர் பூரணத்தில் விரிந்தநூல்தான்
போதமது யேதென்றே யெண்ணவேண்டாம்
புகழான மனந்தானே போதமாச்சே. (354)

ஆச்சப்பா சூதமங்கே யில்லாவிட்டால்
அப்பனே கெவுனமென்ற குளிகைபோச்சு
போச்சப்பா வாதமென்ற சொல்லும்போச்சு
பேரான காயசித்தி பேரும்போச்சு
மூச்சப்பா அற்றயிடம் நோக்கிறதும்போச்சு
மூதண்டச் சித்தரென்ற நாமம்போச்சு
ஒச்சப்பா மந்திரமாஞ் சித்திபோச்சு
ஒகோகோ சித்தெல்லா மோடிப்போச்சே. (355)

ஆச்சப்பா வெவ்வேறு கவரோகோடி
அதுக்கதுக்கு யினங்கோடி ஆட்டம்கோடி
ஓச்சப்பா குருகோடி சுண்ணங்கோடி
உற்றசெய நீரோடு திராவகமோகோடி
போச்சப்பா கரையுமில்லை கணக்குமில்லை
போக்காகப் பெரியோர்கள் சொன்னநூல்தான்
நீச்சப்பா கடுநீச்சுக் காணப்போகா
நேரான நூலினுள்ளே நிலைகாணாதே. (356)

நிலைகாணப் போகாத நூலைப்பார்த்து
நேராகச் சுட்டதினால் கருக்காணாது
தலையான கால்காணுங் கால்தலையாய்க்காணும்
சாஸ்திரத்தை யெப்படித்தான் பெரியோர்சொன்னார்
மலைகாண லெக்கிட்ட அம்புபோல
வைத்திலரே வைத்திலரே வல்லோரய்யோ
கலைகாணப் போகாது அர்த்தமாகா
கண்கட்டிக் காட்டிலே விட்டவாறே. (357)

விட்டிடமுந் தொட்டிடமுந் தெரியாதப்பா
வேதையொன்றுந் துறையொன்றுங் காணாதப்பா
கட்டிடமுங் கலந்திடமுங் காணாதப்பா
கரையிதுக்கு யெவ்வளவு யென்றுங்காணார்
நட்டிடமு மெடுத்திடமுங் காணாதப்பா
நலமான முற்றியொன்றுந் தெரியாதப்பா
தொட்டிடமுந் தொடாதிடமுந் தெரியாதப்பா
சூட்சமுற்ற பெரியோர்கள் சொன்னநூலே. (358)

சொன்னார்கள் வல்லோர்கள் நூலோகோடி
சூஸ்திரத்தை மறைத்து சாஸ்திரங்கள்செய்தார்
சொன்னார்கள் குருப்போக்குக் கருப்போக்குமறைத்து
சுத்தரச வாதியென்றா லெடுத்துக்கொள்வார்
சொன்னார்கள் பொருட்கருவை வெட்டவெளியாக
சோதிகெட்ட வந்தகன்போல் துலாவிப்பார்க்க
சொன்னார்கள் சொன்னார்கள் பெரியோரய்யா
சொல்லியென்ன சொல்லியென்ன சித்தர்க்காமே. (359)

ஆமப்பா யெனையீன்ற நாலாப்பாட்டர்
அகண்டபரி பூரணமா மூலநாயன்
ஓமப்பா யப்படியே மறைத்துச்சொன்னார்
ஓகோகோ அறுகாண்டம் பாடிச்சொன்னேன்
நாமப்பா யிப்படியே சொன்னோமானால்
நாட்டிலுள்ள பெரியோர்க்குத் தெரியாதென்று
தாமப்பா அறுகாண்டங் கிழித்துப்போட்டு
சாதகமாய் முக்காண்டஞ் சொன்னேன்பாரே. (360)

பாரப்பா ஆயிரத்தில் முக்காண்டஞ்சொன்னேன்
பகிர்ந்ததனை அஞ்ஞூறாய்ச் சுருக்கிச்சொன்னேன்
நேரப்பா களங்கமுதல் சுண்ணமார்க்கம்
நிலையான செயநீரும் சத்துமார்க்கம்
சேரப்பா குருக்கிடையுங் கிராவணத்தினோடு
செயரசமும் பாழாகத் திறங்களெல்லாம்
ஆரப்பா யெனைப்போலே திறந்துசொன்னார்
அருநெல்லிக் கனிபோலே கைக்குள்ளாச்சே. (361)

கைக்குள்ளாய்ச் சொன்னதெல்லாம் பெரியோர்பார்த்து
கடையிலே போட்டாரே மூலருடபேரன்
மெய்க்குள்ளாய்க் கருமறைத்துச் சொல்லாதேயோர்
வேதாந்த மிப்படியே வெளியாய்ச்சொன்னார்
பைக்குள்ளே கையிட்டு பணமெடுத்தாப்போல்
பாயுமப்பா யுலகமெல்லா மென்றுயெண்ணி
மைக்குள்ளாங் குகையினுள்ளே யென்னூல்வைத்து
வாதுவந்த விடங்களிலே வாசிப்பாரே. (362)

வாசித்து மூலகுரு பேரனாலே
மகத்தான கீர்த்திகொண்டா ரென்பார்நல்லோர்
வாசித்து வாசித்து யிப்படித்தானுண்டோ
வாதநூல் யென்பார்கள் வல்லோரையா
வாசித்து வாசித்து அடக்கமில்லையென்பார்
வாய்மூடிப் பிடரிநின்று பேசுமென்பார்
வாசித்துப் பெரியோர்கள் நாயேன்பாட்டை
மகத்தாகக் கொண்டாடி வைத்திட்டாரே. (363)

வைத்திட்ட பெரியோரும் ரிஷிகளெல்லாம்
மைந்தன்மேற் சந்தோஷ மாகச்சொன்னார்
வைத்திட்ட இதுபோல்நூ லுண்டோவென்று
வாகாக நாலுதிக்குந் தேடிப்பார்த்தேன்
கைத்திட்ட சட்டமுனி யென்னூற்கொக்க
கண்டேனே கிரவுஞ்ச மலையினுள்ளே
வைத்திட்ட நூல்களுக்கும் நிகண்டுகாட்டி
மகத்தான பெரியோரை வணங்கினேனே. (364)

வணங்குவதேன் மூலருட பேராஅய்யா
மகத்தான கொங்கணரே ஞானமூர்த்தி
வணங்குவதே னருளோடு பொருளாம்ரெண்டும்
வகைவகையாய் நவம்போல திறமாய்ச்சொன்னார்
வணங்குவதேன் மூலவர்க்கங் கைலாசவர்க்கம்
மகத்தான சித்தவர்க்கம் நீங்களய்யா
வணங்குவதேன் நீர்சொன்ன மூன்றுகாண்டம்
வரிசையிட்ட பொற்கம்பி போலவாச்சே. (365)

ஆச்சப்பா மெத்தநன்று யும்முடையநூல்தான்
அய்யாயுன் நூலுக்கு நிகண்டுவேண்டாம்
ஆச்சப்பா யிப்படித்தான் பாடச்சொல்லி
ஆத்தாள்தான் சொன்னாளோ ஆசான்சொல்லோ
ஆச்சப்பா உன்னூலைச் சித்தர்கண்டால்
யாருக்குங் காட்டார்க ளொளிப்பாரய்யோ
ஆச்சப்பா யிப்படியே யின்னூலைச்சித்தர்
அமுக்கினார் குகைக்குள்ளே யமுக்கினாரே. (366)

அமுக்கியல்லோ பலநூலை வெளியிற்போட்டார்
அதினாலே கெட்டார்க ளுலகத்தோர்கள்
அமுக்கியல்லோ சித்தரெல்லாஞ் சந்தேகமாக
ஆதிசிவன் சொன்ன நூல் வெளியிலிட்டார்
அமுக்கியல்லோ போட்டார்க ளென்றுயான்தான்
அதுவெல்லாந் துகைப்படுத்தி நிகண்டுசெய்தேன்
அமுக்கியல்லோ யென்நிகண்டை யொளித்துப்போட்டார்
அப்பனே யாச்சரியங் கண்டுக்கொள்ளே. (367)

கண்டுகொண்ட கயிலாச முனியேயய்யா
 கபடுமெத்தக் கபடுமெத்த சித்தருக்கு
பண்டுகொண்ட சித்தரிஷி களுக்குமாகும்
 பரவினா லுலகத்தி லாகாதென்று
ஒண்டுகொண்டே யொளித்தார்க ளதுவும்நன்று
 உத்தமனே யில்லாட்டா லுலகம்பேயாம்
தண்டுகொண்ட ஞானிசிவ யோகிக்காகும்
 சங்கையிலாக் காமுகற்கு மாகாதென்றேன். (368)

ஆகாது யென்றொளித்தாரதுவும் நன்று
 அல்லாட்டா லுலகமெல்லாம் பொன்னாய்ப்போகும்
சாகாது ஜனங்களெல்லாம் காயசித்தி
 சாதகமாய்ச் சித்தரென்ற நாமம்போச்சு
பாகாது மெஞ்ஞானப் பரவிப்போகும்
 பாவென்ன நிகண்டென்ன கண்டேனென்பார்
வேகாத தலையோடுஞ் சாகாக்காலும்
 வெட்டவெளி யாமென்றே மறைத்திட்டாரே. (369)

மறைத்திட்டால் மெத்தநன்று யென்றுசொல்லி
 வாகாகப் பணிந்துயெந்தன் குகையில்வைத்து
நிறைத்திட்ட சிங்கியினாற் சூதங்காட்டி
 நேராகச் சுருக்கியதைக் குகையில்வைத்து
முறைத்திட்டந் தப்பாமற் சுண்ணாம்பாக்கி
 மூட்டியிந்தச் சூதத்தாற் வீரங்கட்டி
கரைத்திட்ட வீரத்தாற் கல்லுப்புக்கட்டி
 கல்லுப்பைக் கடுஞ்சுண்ண மாகவுதே. (370)

பூரச்சுண்ணம்

ஊதியதோ ருப்புடனே வீரஞ்சேர்த்து
 உத்தமனே வெண்கருவா லாட்டிக்கூட்டி
சோதியதோர் சுண்ணத்தில் வைத்துகாட்டு
 குறையாமற் கடுஞ்சுண்ணம் பூரமாகும்
ஆதியதோர் தொந்தமிட்டால் நூறுதொந்தம்
 அப்பனே பூரந்தா னறிந்துபாரு
ஓதியதோர் பூரத்தில் வீரமிட்டாட்டி
 உத்தமனே தாளகத்திலப்பி யூதே. (371)

தாளகச் சுண்ணம்

அப்பியதோர் தாளகமுஞ் சலவைச்சுண்ணம்
அதையெடுத்து வீரமிட்டு வங்கத்தப்பி
ஒப்பியதோர் புடம்போட வங்கச்சுண்ணம்
உத்தமனே வங்கத்தை நிமிளைக்கப்பி
செப்பியதோர் கனலிலிட்டு யூதச்சுண்ணஞ்
சேர்ந்துநின்ற நிமிளையைத்தான் சாரத்தப்பி
கப்பியதோர் கனலிலிட்டு எரித்துவாங்கி
கைமுறையாய் வீரமிட்டு வில்லைகட்டே. (372)

கட்டியதோர் சாரத்தை யூதச்சுண்ணங்
கடுஞ்சாரச் சுண்ணத்தில் வீரமிட்டாட்டி
ஒட்டியதோர் துருசியின்மே லப்பியூது
உத்தமனே கடுஞ்சுண்ணந் துரிசியாகுந்
தெட்டியதோர் துருசியிது சிங்கிக்காகுஞ்
செகமெல்லா மிதினாலே வாதமாச்சு
அட்டியதோர் துருசுக்குச் செம்புமாய்ந்தால்
அதினாலே வாதமென்ற அங்கமாச்சே. (373)

அங்கமென்ற பதினாறு துருசியாலே
ஆதிவிந்து கட்டுவதுந் துருசியாலே
சிங்கமென்ற சிங்கியது துருசியாலே
சேரவெல்லாங் கட்டுவதுந் துருசியாலே
தங்கமென்ற குருவெல்லாந் துருசியாலே
சாதகமாய்ச் சத்தெல்லாந் துருசியாலே
பொங்கமென்ற பொங்கமெல்லாந் துருசியாலே
பொன்பிறந்த பிறப்பெல்லாந் துருசுவுப்பே. (374)

துருசுவென்ற வுப்பாலே சிங்கிபண்ணி
சூதத்திற் தாக்குமைந்தா துடித்துச்சாகும்
பரிசியிந்தச் சூதத்திற் கற்பூரச்சுண்ணம்
பாங்காய் வீரமிட்டு ஆட்டிப்பூசி
கருதியதைத் தணலிலிட்டுக் குகையில்வைத்து
கணக்காக வூதிடவே சூதச்சுண்ணம்
நெருதியென்ற சுண்ணமொன்று கிளிப்போற்கட்டி
நேரான நாலிடையாந் தங்கத்தூட்டே. (375)

ஊட்டியிந்த மணியெடுத்துத் துருசுச்சுண்ணம்
உத்தமனே வீரமிட்டு ஆட்டிப்பூசி
நீட்டியிந்தக் குகையில்வைத்து ஊதுவூது
நேராகப் பரிச்சூதச் சுண்ணமாகும்
பூட்டியிந்தச் சுண்ணத்தில் வீரஞ்சீனம்
புகழாக அரைத்துநன்றாய்த் தங்கத்தப்பி
நாட்டியதில் கல்லுப்புச் சுண்ணம்பூசி
நலமான சீலைசுத்தித் தணலிலூதே. (376)

ஊதிடவே வீரமங்கே கட்டிப்போகும்
உத்தமனே அவ்வீர மொன்றுதாக்கி
போதிடவே உப்பதினா லிதுவொன்றிட்டு
புகழ்பெரிய மணியாக யெடுத்துக்கொண்டு
மாதிடவே துருசியொடு பூரச்சுண்ணம்
மருவியதில் வீரமிட்டு ஆட்டிப்பூசி
கோதிடவே புடம்போடக் குகைதான்ரெம்பி
கூகைநீரதுபோலக் குப்பலாமே. (377)

குப்பமென்ற பரிவீரச் சுண்ணத்துள்ளே
கொள்கியதோ ரினச்சேர்வை சுண்ணச்சேர்வை
ஒப்பமென்ற செந்தூரஞ் செயநீர்சேர்வை
ஓகோகோ சத்துமுதல் வேதைமார்க்கங்
கப்பமென்ற வாதமென்ற கடலுக்கப்பா
கரையேது கணக்கேது காண்பாராரு
உப்பன்றோ யித்தனைக்கும் வாதியாக
உத்தமனே ஆடியது உண்மைதானே. (378)

காணப்பா வீரமென்ற சுண்ணத்துள்ளே
காணுமைந்தா சவ்வீரஞ் செகப்புமெத்த
பூணப்பாலிங்கமிட்டுக் காரம்போட்டு
பொட்டிடவே நவலோக மலையும்பொன்னாம்
ஊணப்பா துத்தமொடு துருசுவீரம்
உறவான சூதமிட்டுத் திரியிலூட்டி
நீணப்பா விளக்கேற்றி 'பவித்ததூமம்
நேரான கற்குகைதான் பொன்னாய்ப்போமே. (379)

மாற்றுக்காணும் வகை

பொன்னானா லதுக்குள்ள மாத்தைக்கேளும்
புகழாக அறுபத்து நாலுமாத்து
பன்னான பெரியோர்க்குக் காணுங்காணும்
பலபலவாஞ் சனங்களுக்குப் பத்தேகாணும்
மன்னான ரிஷிகளுக்கு நூறுகாணும்
மகத்தான சித்தருக்குத் தொண்ணூறாகும்
தன்னான ஞானிக்கு ஆயிரமேமாற்றாம்
சண்டாள ஜென்மமென்றால் காணாதொன்றே. (380)

ஒன்றாகக் கண்டதெல்லாம் ஞானமாச்சு
உத்தமனே ரென்றதென்னா யோகமாச்சு
நன்றாக நின்றதென்னா நிற்குணத்தின்நேர்மை
நடராச மூர்த்திகுருச் சொல்லவேணும்
வென்றாக வெல்வதென்ன ஐம்புலனைமைந்தா
வேதாந்த அந்தமென்ன விளக்கிப்பாரு
கன்றான கண்மேலாய்த் துடைத்தாப்போல
கலந்தெடுக்கும் பூரணந்தான் கண்டுநோக்கே. (381)

மேல்மூலம், நடுமூலம், கீழ்மூல விபரம்

நோக்குவது யெவ்வாறென் றெண்ணவேண்டாம்
நுட்பத்தைச் சொல்லுகிறே னன்றாய்கேளு
நோக்குவது புருவமய்யம் மேல்மூலம்நின்று
நுகராத கீழ்மூலம் குண்டலியைப்பாரு
நோக்குவது நடுமூலங் கண்டத்தைப்பாரு
நோக்காம லெட்டினுட கருவுங்காணும்
நோக்குவது தமர்சேர மேலேபாரு
நூல்போட்ட யேணியைப்போல் வெளியுமாமே. (382)

வெளிகடக்க வெளிகடக்க அகண்டவீடு
மேவயிலா மேவயிலா மண்ணுண்டானால்
ஒளிகடக்க வொளிகடக்க வுந்தன்போதம்
ஓகோகோ ஒட்டிப்பா ரதுவும்பேசும்
வெளிகடக்க முப்பாழுந் தாண்டுந்தாண்டும்
மேல்நோக்கச் செல்கிறவன் குளிகைஞானி
வெளிகடக்க ஒளிகடக்க யொன்றுமில்லை
வெளிமூச்சுப் பேச்சில்லை சூதநேரே (383)

நாகசுத்தி

நேரான நாகத்தின் சுத்திகேளும்
நிலையான சாரநீர் வாங்கிக்கொண்டு
வாரான நாகத்தை யுருக்கிச்சாய்க்க
மைந்தனே நாகத்தி னூறல்போச்சு
தாரான வில்லையைப்போ லெடுத்துக்கொண்டு
தனிமேலே சூதமென்ற சுண்ணம்வீரம்
சோரான சோரனுக்குப் பூசிக்காய்ச்சி
துடியான அஞ்சுசுண்ணக் கவசம்பண்ணே. (384)

பண்ணியதோர் கவசத்தை யுலரப்போட்டு
பாங்கான சுண்ணாம்பு கீழ்மேலிட்டு
ஒண்ணியதோர் கலக்கவொரு புடத்தைப்போடு
உத்தமனே கடுஞ்சுண்ண நாகமாச்சு
சண்ணியதோர் சன்னெல்லாந் தகர்த்துப்போடும்
தாகமுட னேற்றகுருக் கேற்றமென்ன
சண்ணியதோ ரிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
தங்கத்திற் பூசியொரு புடத்தைப்போடே. (385)

தங்கச்சுண்ணம்

போடப்பா புடமொன்று தங்கச்சுண்ணம்
புகழாக யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
நீடப்பா துருசினியின்மே லப்பியூது
நேராகச் சுண்ணாம்பாந் துருசுதானும்
மூடப்பா யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
உத்தமனே கல்லுப்பி லப்பியூது
ஆடப்பா கடுஞ்சுண்ண முப்பேயாச்சு
அரகரா யிதுக்கிரைதான் பூரமாச்சே. (386)

தாளகச் சுண்ணம்

பூரத்தை யுப்போடே சேர்த்துவூது
புகழாக நூறுதொந்தம் பூரங்கட்டும்
காரத்தை மெத்தையிலே யேத்தியேத்தி
கடுஞ்சுண்ண் மாகுதற்குப் பூரமூதி
வீரத்தைச் சேர்த்தாக்கால் ரெத்தம்போலாம்
விளங்கியிதைத் தாளகத்திற் பூசிப்போட்டு
தாரத்தைச் சுண்ணாம்பில் வைத்துஆட்ட
தாக்கான சலவையொத்த சுண்ணாம்பாமே. (387)

வங்கச்சுண்ணம்

ஆமப்பா தாளகத்தில் வீரமிட்டாட்டி
ஆச்சரியம் வங்கமென்ற கட்டியில்பூசி
ஓமப்பா புடம்போடப் பொருமிநீறும்
உத்தமனே கடுவேகம் வங்கச்சுண்ணம்
சாமப்பா யிதைக்கண்டால் சூதயானை
தாக்கினால் தயிர்போலாங் கல்லுப்போலாம்
ஏமப்பா ஏமப்பா வென்றால்பேசும்
யெடுத்ததுறை யெட்டெட்டு மாடலாமே. (388)

நிமிளைச் சுண்ணம்

ஆடலாம் வங்கத்தில் வீரமிட்டாடி
அப்பனே நிமிளையின்மே லப்பிப்போடு
ஊடலாம் புடம்போட நிமிளைச்சுண்ணம்
உத்தமனே வீரமிட்டு சாரத்தப்பு
நீடலாங் கசியுமது மணலில்வைத்து
நீட்டதிலே வீரமொடு பூரச்சுண்ணம்
கூடலாம் வெண்கருவா லரைத்துக்கட்டி
குமுறியிதை யூதிடவே சுண்ணமாமே. (389)

ஆமப்பா சாரத்தில் வீரமிட்டாட்டி
அப்புஅப்பு துருசிலே சுக்கானாகும்
சாமப்பா சுண்ணமென்ற குகைவைத்தூது
தாமப்பா வுப்போடே தவளமாகும்
வேமப்பா அண்டரண்டந் தொட்டதெல்லாம்
வேதையென்ற சொல்லெல்லா மிதுக்குள்ளாச்சு
ஓமப்பா யிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
உத்தமனே தங்கத்திற் பூசிப்போடே. (390)

பூசியொரு புடம்போடத் தங்கம்நீறும்
பொன்னினால் சூதத்தைக் கட்டிக்கொண்டு
மாசியொரு புடம்போடச் சூதச்சுண்ணம்
மைந்தனே யிதுவோடே வீரமிட்டாட்டி
ஆசியொரு துருசிக்கிப் பூசிப்போடு
அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து வூதச்சுண்ணம்
தாசியொரு பெண்ணிவள்தான் பிரபஞ்சமெல்லாம்
சணத்திலே யுண்டாக்கி யழிப்பாள்தானே. (391)

பிறப்பிறப்பு

அழிக்கிறதும் படைக்கிறதும் யாராலாகும்
ஆத்தாளா மனோன்மணியா ளாகுமாகும்
தெழிக்கிறதும் அழிக்கிறதும் யாராலாகும்
சிற்சத்தி யென்றதொரு பெண்ணாலாகும்
ஒழிக்கிறதும் விடுகிறதும் யாராலாகும்
உத்தமியா ளுன்மனையா ளாகுமாகும்
சுழிக்கிறது மிடுக்கிறதும் யாராலாகும்
சுத்தசை தன்யமென்ற தாயாலாமே. (392)

தாயான வுன்மணித்தாய் வர்ணமப்பா
சரக்கிலே துருசியென்ற வுப்புவுப்பு
மாயான மாயமெல்லா மவளைப்போல
மருவியிந்தத் துருசுநின்று ஆடுமாடும்
காயான காயசித்தால் குளிகைசித்தால்
கண்டுடனே தெரிசனத்தில் வேதையாகும்
சேயான யீரெட்டு வேதையாகும்
செப்பரிது செப்பரிது துருசுப்போக்கே. (393)

போக்கான துருசியிலே சிங்கிபண்ணி
பொட்டிட்டால் ஒருசேரு சூதங்கட்டும்
வாக்கான சூதத்தை உருக்கிக்கொண்டு
மைந்தனே சுண்ணாம்பா யாகவூது
தாக்கான யிதுவொன்று தங்கம்நாலு
சாதகமா யுருக்கியொரு மணியாய்வாங்கி
நோக்கான வீரமொடு கற்பூரச்சுண்ணம்
நுகரரைத்து மணிமேலே பூசிவையே. (394)

வையப்பா அஞ்சுசுண்ணக் குகையினுள்ளே
வைத்துமொரு புடம்போடச் சுண்ணமாகும்
கையப்பா கண்டதொழில் கடினவேகம்
கற்பகமாய் விருட்சமது காமதேனு
மெய்யப்பா யிதினோடே வீரங்காரம்
மேதியப்பா லிங்கமிட சிகப்புமெத்த
பொய்யப்பா யெண்ணாதே யிதிலேவேதை
பொட்டொன்று மலையொன்று பொன்னுமாமே. (395)

பொட்டொன்றா லுபரசங்கள் சத்தாய்ப்போகும்
போக்கான நவலோகம் நீறிப்போகும்
பொட்டொன்றா லண்டமெல்லாஞ் செந்தூரம்மாகும்
போக்கதிலே வெகுகோடி புகலமாட்டேன்
பொட்டொன்றால் மரமுதலாய் மண்ணும்பொன்னாம்
போக்கேது நீக்கேது பூட்டப்பூட்ட
பொட்டொன்றால் பருவதங்கள் சாம்பலாகும்
பூட்டுகிற கற்கண்டு பூட்டியாட்டே. (396)

ஆடயிலா மாடயிலா மனந்தம்போக்கு
ஆதியில்லை அந்தமில்லை யறியப்போகா
நீடயிலா நீடயிலா மொருகவரைத்தொட்டு
நிலைகாணப் போறானோ வாதிமகனப்பா
ஊடயிலா மூடயிலா மொன்றைவிட்டுயெட்டு
ஓகோகோ பத்துமென்ன வாய்தான்கொள்ளா
ஓட்யிலா மோடயிலாங் கவனவீதி
உற்றசிவ சித்தமய மூணிப்பாரே. (397)

பாரப்பா யிக்குருவில் வீரம்பூரம்
பரிவாகப் புழுகிட்டே யாட்டிக்கொண்டு
நேரப்பா சரக்குகளி லெல்லாஞ்சுண்ணம்
நிலையேது தலையேது கவரோகாணார்
ஓரப்பா குருவில்சவ் வாதுசார
ஊட்டினால் சரக்கெல்லா.மணிபோலாடும்
காரப்பா குருபதத்தை நித்தம்நித்தம்
காத்தார்க்கு வகைவகையாய்க் காட்டுவாரே. (398)

காட்டுவார் குருவின்மேல் பத்திவைத்தால்
கண்முன்னே யிருப்பதுபோ லிருப்பாராகில்
மூட்டுவார் சமாதியுள்ளே லட்சயத்தைக்காட்டி
முப்பாழின் வெளிகடக்கக் குளிகையீய்வார்
நீட்டுவா ரண்டமென்ற தமரிலோட
நிலைகாட்டி யிப்படித்தா னென்பானாசான்
கூட்டுவார் நிர்மலத்தி லிதுதானென்பார்
கோடான கோடியுக மிருக்கலாமே. (399)

இருக்கலா மிருக்கலாம் ஞானத்துள்ளே
எத்தனைநா ளிருந்தாலும் யோகமொன்று
சொருக்கலாஞ் சொருக்கலாம் மனஞ்சென்றாக்கால்
சோதியுட னந்தம்வரை தோன்றுந்தோன்றும்
சுருக்கலாம் சுருக்கலாம் வேதாந்தம்பார்த்தால்
தொல்லுலகில் சாஸ்திரங்க ளெல்லாம்கீழாம்
பெருக்கலாம் வழலைகண்டால் சுண்ணஞ்சுண்ணம்
பேரேது வூரேது பிரித்துக்காணே. (400)

உலகஞானி

காணப்பா வுலகத்து யோகஞானி
கடந்தேறக் கடினமெத்த யேதென்றாக்கால்
தோணப்பா நோயாலே மனமலைந்துகெட்டு
சூட்டுகிற லட்சயத்தை நாடொட்டாது
ஊணப்பா வூணப்பா யென்றாலென்னா
உத்தமனே வறுமைவந்தா லூணொட்டாது
வீணப்பா வீணப்பா வுலகஞானம்
வெகுபேரில் கோடியிலே ஒருவன்தானே. (401)

ஒருவரல்லோ உலகத்தே ஞானியாவார்
உற்றநடுக் காண்டமஞ் ஞூற்றைப்பாரு
மருவநல்ல மலைதோறும் நாதாக்கள்சித்தி
மருவிவிட்டால் நூலோடு வாசிசித்தி
பருவநல்ல காயசித்தி குளிகைசித்தி
பாங்கான யோகசித்தி ஞானசித்தி
தருவநல்ல யெம்சித்தி யானதினால்மைந்தா
சாதகமாய் நவகோடி சித்தராச்சே. (402)

ஆச்சப்பா நவகோடி சிந்தென்பார்கள்
அப்பனே யெத்தனைபே ரெண்ணக்கூடா
போச்சப்பா உலகத்தைப் போலேரெட்டி
பூமியெல்லாம் சித்தமய மாகப்போச்சு
வாச்சப்பா உலகத்தோர் சேரச்சேர
வளர்ந்துதப்பா சித்தர்மய மாகயெங்கும்
யோச்சப்பா யிதுக்குள்ளே மூலவர்க்க
முத்தமனே மலைதோறு முறவுண்டாச்சே. (403)

உறவுண்டு யென்றாக்கால் மாண்பரெல்லாம்
ஓகோகோ நிருவிகற்பத் துறைந்தார்கோடி
உறவுண்டு யென்றாக்கால் பெண்ணுறவோவல்ல
உத்தமனே ஞானத்தை ஒட்டும்பந்து
உறவுண்டோ வென்றாக்கால் வங்கணமோவல்ல
யோகத்தால் குளிகையிட்டு உறவுபாரு
உறவுண்டு யென்றாக்கால் பேத்துறவோவல்ல
உத்தமனே வாசியுட உறவுதானே. (404)

தானென்ற வுறவுக்குட் சேர்ந்தால்மக்காள்
சங்கற்பம் விகற்பமொன்றுஞ் சாரொட்டார்கள்
ஊனென்ற தலமாறுங் காட்டுவார்கள்
உயர்ந்தகுரு பதத்தினுள்ளே ஊட்டுவார்கள்
தேனென்ற மதியமூர்த மூட்டுவார்கள்
செகமெல்லா மித்தையென்று தெளிவிப்பார்கள்
வானென்ற கடந்தவஸ்து வித்துவென்று
வாயிலே குளிகையிட்டுக் காட்டுவாரே. (405)

காட்டாம லுகத்தோன் பார்த்தானானால்
கடுமரத்தி லெறும்பூர்ந்து கொம்பில்தேடி
மூட்டான யதீதமென்ற பழத்தைக்கண்டு
மொய்த்ததுக்கு மொக்குமொக்கு மூலயோகம்
நீட்டான குருசொல்லத் தெளிந்தானால்
நிலையான புருவமய்யக் கொம்பில்நின்று
தாட்டான பட்சியைப்போல் பழத்தைத்தின்பான்
சாதகமாங் கேசரிமுத் திரையைக்காட்டே. (406)

காட்டுவார் சித்தனென்றால் தேகமுத்தர்
கண்ணிமைக்குள் காயசித்தி பண்ணிவைப்பார்
ஒட்டுவார் மதியளவுங் கவுனவீதி
உத்தமனே அண்டமெலாஞ் சுத்திசெய்வார்
மூட்டுவார் நிர்விகற்ப முகாந்தமட்டும்
முன்னூறு பிர்மவரை முடிவுதாண்டி
ஆட்டுவார் மனக்கயிற்றால் வாசிதன்னை
ஆச்சரியம் கேசரியா லாட்டுவாறே. (407)

கேசரிதா னவர்களுக்குப் பூச்சரமாய்க்காணும்
    கெடியான அண்டமெல்லாங் கைக்குட்காணும்
கேசரிதா னவர்க்கசனப் பட்சிபோல
    கீழேது மேலேது சித்தர்க்குமைந்தா
கேசரிதா னாவதென்ன ஆகாசந்தான்
    கெடியாக அதினாலே அஞ்சுமாச்சு
கேசரியில் சஞ்சரித்தால் அவனேசித்தன்
    கெடியான ரசவாதி கீர்த்தியோனே. (408)

கீர்த்தியென்ற ரசவாதம் வந்தால்மைந்தா
    கெடியான வாசியென்ற யோகம்வேணும்
கீர்த்தியென்ற ரசயோகம் வந்தால்மைந்தா
    கிடையாத ஞானத்தே கிட்டவேணும்
கீர்த்தியென்ற யேமசித்தி யானால்மைந்தா
    கெவுனமுற்று உலகமெல்லாஞ் சுற்றவேணும்
கீர்த்தியென்ற ராசயோகம் வந்தால்மைந்தா
    கீழேழும் மேலேழுங் காணநன்றே. (409)

காணுவான் நன்மைரச வாதியென்றால்
    கடைகெட்ட வாதிவிட்ட குறையேயானால்
பூணுவான் மாயத்தில் பெண்ணைக்கூடி
    போகிப்பான் தாகிப்பான் பிறப்பான்கோடி
தோணுவா னிருவினையின் பாவத்தாலே
    சுழலுவான் ராட்டினம்போல் சொக்கிச்சொக்கி
ஊணுவா னொருக்காலும் கடைத்தேறமாட்டான்
    ஓகோகோ உலகத்தில் வாதிதானே. (410)

உலகமெல்லா மிப்படியே கெட்டுப்போச்சு
    ஓகோகோ யோகமெல்லா முழலாச்சு
உலகமெல்லாஞ் சாங்கியமென்ற ஞானம்போச்சு
    உறைத்துநிற்க மாட்டாமல் மனம்பேயாச்சு
உலகமெல்லாஞ் கெட்டவா சனையிற்கூடி
    உத்தமனே கிரிகையிலே யுழன்றார்கோடி
உலகமெல்லாஞ் சரியையிலே நின்றார்கோடி
    ஓடுகிற கானலைப்போ வொடுங்கினாரே. (411)

ஒடுங்கினார் மாயத்தே யுலகத்தோர்கள்
உத்தமனே அதினாலே மனம்பேயாச்சு
ஒடுங்கினார் சித்தரெல்லாம் பூரணத்தினுள்ளே
ஓகோகோ சித்தரென்ற நாமமாச்சு
ஒடுங்கினார் மனோன்மணியா ளொளிதானுள்ளே
உற்றசிலம் போசையுமே கேட்கலாச்சு
ஒடுங்கினார் ரிஷிகளெல்லாம் நிருவிகற்பத்துள்ளே
உரையற்ற விடமதுதான் உயர்த்திகாணே. (412)

உயர்த்தியென்ன தாழ்த்தியென்ன மூன்றுபேர்காண்
ஒருவரவர் கைநீத்து யொருவர்தோர்ப்பார்
உயர்த்தியென்ன பின்னொருவ ரோடமெத்த
ஓகோகோ யெப்படியுங் கரையில்சேரு
உயர்த்தியென்று சொன்னாக்கால் மனமோசத்தி
ஊட்டுறது மாட்டுறது மனத்தினாலே
உயர்த்தியென்ற மும்முறை பாராமல்கெட்டு
உலகமெல்லாம் வாய்ப்பேச்சா லுழன்றார்பாரே. (413)

பாரப்பா உழன்றுதிரி யாதேநீயும்
படுகுழியில் விழுகாதே பாழாமாய்கை
நோய்சூழ்ந்து தென்றால்வி வேகம்போச்சு
நிமிஷத்தில் பஞ்சிலிட்ட தீய்ப்போலாச்சு
பாரப்பா சொன்னாலும் செவிகேளாது
பாசமென்ற அரவுகடி தலைக்கேயேறும்
சேரப்பா மலைகளிலே சித்தரோடு
சேர்ந்தயிந்தக் கூத்தெங்கும் நாகத்தாட்டே. (414)

ஆட்டான தாளகந்தா னாதிவித்தை
அப்பனே சிவனுடைய கங்கைநாதம்
கூட்டான அஷ்டலெட் சுமியாய்நின்று
கூத்தாடி வுலகமெல்லாம் மண்ணாய்நின்றாள்
நீட்டான செகசால மவட்குளாச்சு
நிமிஷத்தே லோகமெல்லாஞ் சொர்ணமாகும்
மூட்டான தமக்கைவந்து மூண்டாளானால்
மூதேவி பெருமையென்ன வறுமைதானே. (415)

வறுமையினாற் சுடுவார்க ளுலகவாதி
வாய்க்குமோ மூத்தாள்தான் முகத்தில்நிற்க
சிறுமையினாற் சுட்டலைந்தால் வாதமாமோ
செப்புகிற குருவேணுந் திருமுன்வேணும்
பொறுமையினாற் சாந்திமுற்று நிற்கவேணும்
புகழாகச் சிவயோக மூட்டவேணும்
நெறுமையினால் மெஞ்ஞானம் பார்க்கவேணும்
நேராக வாதமங்கே நிலைக்குந்தானே. (416)

தானென்ற ஆணுவத்தால் சுடுவார்கோடி
சாதகமாய்ந் கெட்டதென்ன வென்பார்கோடி
கானென்ற காட்டினுள்ளே அலைவார்கோடி
கைமுறையாய்ச் சாறுவிட்டு அரைப்பார்கோடி
கோனென்ற குருகாணே னென்பார்கோடி
கூட்டுகிற வரிசையில்லை யென்பார்கோடி
தேனென்ற மொழிகேட்டுச் சுடுவார்கோடி
செகமெல்லாங் கெட்டுதிந்தத் திறந்தான்காணே. (417)

திறமாகச் சிலதுபேர் காரஞ்சாரம்
சிக்கிற்றுச் சிக்கிற்றுத் தெளிந்தேனென்று
குறமாகப் பாடினதோர் பாட்டுப்போல
குலாவியொன்றை யொன்றோடே கூட்டிப்பார்த்து
நிறமாகத் தப்பித்துக் கட்டுமாயில்
நேரல்ல விதுவென்று பின்னையொன்று
அறமாகச் செய்வமென்று பாய்ந்துபாய்ந்து
அலைகிறா ருலகமெல்லா மலைகிறாரே. (418)

அலைகிறவன் வாதமில்லை பாருவென்பான்
அப்பனே லோகம்பொன் னாமோவென்பான்
துலைகிறதோர் வினைதுலைந்தால் காணுமென்பான்
சூட்சாதி சூட்சமப்பா வாதமென்பான்
குலைகிறதோர் கருவியினா லெண்ணியெண்ணி
குறுக்குவழி யாகவொன்றைக் கூட்டிப்பார்த்து
உலைகிறதோர் சுணங்களைப்போல் வாதிகோடி
உறவாடிப் பார்த்திருந்து மூதுவாரே. (419)

ஊதுவா ரொருகோடி கரிக்காசுங்காணார்
உறைத்துநின்ற வூத்தாலே கெட்டுதென்பார்
கோதுவார் புடம்போட்டோர் காசுங்காணார்
குமுறித்துப் புடம்மெத்தப் போச்சுதென்பார்
வாதுவார் பதங்கம்வைத்து யெரிப்பாரய்யா
வகைமோச மதினாலே தீஞ்சுதென்பார்
மாதுவார் சூதத்தைந் கட்டுகிறேனென்பார்
மருவிநின்ற புடத்தாலே புகைந்துபோமே. (420)

போமப்பா குருசொல்ல வாதமாகும்
புகழுற்ற விவேகியென்றுஞ் சும்மாசெய்வார்
ஓமப்பா குருசொல்லை உணர்ந்துசெய்வார்
உலுத்தனென்றால் சுட்டெரிவா னொன்றுமில்லை
ஆமப்பா யென்றொருவன் அடுத்திருந்துசொல்வான்
அதைக்கேட்டு மெய்யென்று குருமொழியைவிட்டு
காமப்பால் வித்தைநன்று யென்பான்பாவி
கழுவியதோ ரெலும்புகவ்வும் நாய்போலாச்சே. (421)

தாளகச் சுத்தி

ஆச்சப்பா தாளகத்தைச் சுத்திகேளு
அப்பனே சுண்ணாம்புக் கல்லில்வைத்து
சாச்சப்பா நீர்வாரு ஐம்பத்தொன்று
சண்டாள வூற்றெல்லாங் கருப்பாய்ப்போகும்
காச்சப்பா யதன்பிறகு கூழுப்பாண்டம்
காடிவிட்டுக் கொதிப்பித்து யிருத்துப்போட்டு
போச்சப்பா யிதைப்பாரு சுத்தியாகும்
உத்தமனே யிதைச்சுண்ண மாக்கக்கேளே. (422)

தாளகச் சுண்ணம்

கேளப்பா துருசியென்ற சுண்ணத்தோடே
கெடியான வீரமொடு பூரச்சுண்ணம்
நீளப்பா மத்தித்துத் தாளகத்திலப்பி
நேராக வூதிடவே சுண்ணமாகும்
மாளப்பா யிச்சுண்ணம் வீரங்கூட்டி
மாட்டியிதைத் துருசுக்கு அப்பியூது
தாளப்பா யிதுவல்லோ வாதத்துக்கெல்லாம்
சரக்கெல்லாந் துருசுக்குக் கீழுமாச்சே. (423)

கல்லுப்புச் சுண்ணம்

ஆச்சுதிந்தத் துருசியிலே வீரமிட்டாட்டி
யப்பனே கல்லுப்பி லப்பியூது
மாச்சுதிந்தக் கல்லுப்புச் சுண்ணாம்பாகும்
மகத்தான சுண்ணமிது வுப்புச்சுண்ணம்
தோச்சுயிந்தச் சுண்ணத்திற் சாரங்கூட்ட
துடியான செயநீராம் நீருக்குள்ளே
வாச்சுதிந்தக் கற்பூரப் பலகைபோட்டு
வாரியிட்டு வூதிடவே சுண்ணமாமே. (424)

வங்கச் சுண்ணம்

சுண்ணமென்ற கற்பூரம் வீரமிட்டுஆட்டி
துடியான தாளகத்தில் பூசியூது
சுண்ணமென்ற சலவையுமாந் தாளகந்தானப்பா
தொட்டிடமும் பட்டிடமுஞ் சுண்ணாம்புக்காடு
சுண்ணமென்ற தாளகத்தை வங்கத்திற்பூசி
சூட்டியொரு புடம்போட வங்கச்சுண்ணம்
சுண்ணமென்ற வங்கத்தால் சரக்கெல்லாங்கட்டும்
துளிபட்டாற் சூதமங்கே சுற்றிச்சாமே. (425)

சாமப்பா உபரசங்கள் சத்தாய்போகும்
தாக்கயிலே சரக்கெல்லா மீயமாகும்
வேமப்பா யண்டரண்ட மகராசந்தான்
(வங்கம்) விட்டிடமுந் தொட்டிடமுந்தெரியாதாடு
ஆமப்பா யிச்சுண்ணந் தங்கத்தைநீற்றும்
ஆதியென்ற ரசத்துக்குச் சிங்கமிந்தவங்கம்
ஓமப்பா யிப்படியே சுண்ணமெல்லாமாடு
ஒன்றொன்றை விரித்தாட யுகங்கொள்ளாதே. (426)

நிமிளைச் சுண்ணம்

கொள்ளாத வங்கத்தை வீரமிட்டுஆட்டி
குலாவியதோர் நிமிளையின்மேற் பூசியூது
அள்ளாத சுண்ணாம்பாம் நிமிளைவேகம்
அண்டரண்டங் கடந்தாடு மறியப்போகா
தள்ளாத பிரமனுட லிகிதந்தள்ளுஞ்
சாதகமாய் வெகுகோடி காலம்வாழ்ந்து
தள்ளாத சூதத்தை நிமிஷத்திற்கொல்லும்
துடியான தங்கத்தை நீற்றுங்காணே. (427)

சாரச்சுண்ணம்

நீற்றியதோர் நிமிளையிலே வீரமிட்டாட்டி
நேராகச் சாரத்திற் பூசுபூசு
போற்றியதோர் கசிவெடுக்க மணற்குள் வைத்து
புகழாகப் புடம்போடு தந்தம்போலாம்
ஆற்றியதோர் சாரத்தில் வீரம்பூரம்
அப்பனே கூட்டியதைக் கருவாலாட்டி
ஏற்றியதோர் வில்லைகட்டி ஊதச்சுண்ணம்
ஏதுசொல்வேன் சாரத்தின் வீரந்தானே. (428)

வீரமென்றால் வெகுவேகஞ் சாரச்சுண்ணம்
வேதைமுறை யென்னாலே சொல்லக்கூடா
தாகமென்றால் வெகுதாகஞ் சூதத்தைக்கண்டால்
சலம்போல பாவிக்குஞ் சாரநீறு
பாகமென்றால் சரக்கெல்லாம் பாகம்பண்ணும்
பணப்பேதி சினப்பேதி சத்தபேதி
நாகமென்றா லிதுபட்டால் தூமவேதை
நலமான சாரத்தைக் கரைகாணேனே. (429)

துருசுச் சுண்ணம்

கரையில்லாச் சாரத்தில் வீரமிட்டாட்டி
கவ்விடவே துருசியிலே பூசிக்காண
நிரையில்லாத் துருசியைத்தா னூதச்சுண்ணம்
நேராக வெகுசுறுக்கு துருசுவேகம்
வரையில்லாத் துறையாடுங் கோடாகோடி
வாய்திறந்து பேசவென்றால் வார்த்தையில்லை
துரையில்லா வூரிதுவோ வெண்ணவேண்டாம்
துடியான துரையாச்சு துருசுதானே. (430)

துரிசிகொண்டு ஆடுவதே வாதஞானம்
சூட்சத்தை யறிவார்கள் பெரியோரையா
பரிசிகொண்டு வேதிக்குந் தூமவேதை
பட்டதெல்லாங் குருவாகுஞ் சிங்கிக்காகும்
தெரிசிகண்டால் சுரபியுமாங் காமதேனு
தேசமெல்லாம் பொன்னாகுஞ் சுண்ணமாகும்
உரிசிகொண்டு கண்டவரார் சித்தன்வாதி
ஓகோகோ மற்றவர்க்குத் தெரிந்திடாதே. (431)

சூதச் சுண்ணம்

தெரியாது துரிசியிலே சிங்கிகூட்டி
சினக்கவொரு பொட்டிட்டால் சூதஞ்சாகும்
மறியாத சூதத்தை யுருக்கிக்கொண்டு
மறுபடிதான் சுண்ணாம்பா யூதுமைந்தா
பரியாத பதினாலு மிதுதானொன்றும்
பாய்ச்சியொரு மணியாக வாங்கிவைத்து
அறியாத வீரமொடு பூரச்சுண்ணம்
அப்பியல்லோ குகைதனிலே வைத்துவூதே. (432)

ஊதப்பா சுண்ணாம்பாம் கோசபீசம்
உத்தமனே வாதமெல்லா மிதுக்குள்ளாச்சு
ஏதப்பா யிதைவிட்டால் வாதமுண்டோ
யெடுத்தெடுத்த துறைக்கெல்லா மிரண்டும்வேணும்
சூதப்பா செய்கிறதோர் வாதியானால்
சுட்டறியான் தங்கத்தைச் சுடுவான்பாவி
மாதப்பா கடாட்சித்தால் வாதமாகும்
மதிகெட்ட பசுவானால் வாதம்போச்சே. (433)

வாதமென்றா லேதுக்கு நாமமாச்சு
மகத்தான ரசத்தையல்லோ மாய்க்கவேணும்
போதமென்றா லேதுக்கு நாமமாச்சு
புகழான மனத்தைவசப் படுத்தவேணும்
வேதமென்றா லேதுக்கு நாமமாச்சு
வேதாந்த சாரத்தை யறியவேணும்
நாதமென்றா லேதுக்கு நாமமாச்சு
நாதாந்த யோகத்தை நாட்டநன்றே. (434)

நன்றுமில்லை தீதுமில்லை விண்ணைப்பார்த்தால்
நானுமில்லை நீயுமில்லை நடனங்கண்டால்
ஒன்றுமில்லை ரெண்டுமில்லை யுரைத்திட்டாக்கால்
ஓடுகிற குளிகையில்லை மனமுமில்லை
கண்ணுமில்லை முகமுமில்லை வாயுமில்லை
கானலொடு பரிசமொடு சத்தமில்லை
பண்ணுமில்லை பழக்கமில்லைக் கருவியில்லை
பராபரம்போல் நின்றவர்க்குத் தபசுநேரே. (435)

வங்கத்தின் பெருமை

நேரான வங்கத்தின் பெருமைகேளும்
நிலைத்தமக ராசன்தான் வங்கமப்பா
பாரான பூமியிலே சூதந்தங்கிப்
படர்ந்துநின்று செனித்திட்ட வங்கமாச்சு
ஓரான வாசனைக்குஞ் சூதங்கட்டும்
உத்தமனே சுனைப்பட்டால் தங்கம்நீறுஞ்
சாரான நவலோக முபரசங்களெல்லாஞ்
சணத்திலே சரக்கெல்லாஞ் சேரச்சாமே. (436)

சாமப்பா தொட்டசரக் கெல்லாஞ்சுண்ணஞ்
சதாசிவத்தின் மேல்நின்ற மணிவரைக்கும்
வேமப்பா அண்டமென்ற பத்துவேகும்
விட்டிடமுந் தொட்டிடமு மேமமாகும்
ஓமப்பா வங்கமென்ற சிங்கஞ்சிங்கம்
உட்பாய்ந்தால் விடுமோடா உப்புக்கப்பா
ஆமப்பா வங்கமென்ற கம்பந்தன்னில்
ஆதியென்ற மதயானை கட்டலாமே. (437)

கட்டலாங் கட்டலாம் வங்கத்தூணில்
கரையேது கணக்கேது சூதஞ்சாகும்
யெட்டலாம் யெட்டலா மனந்தவேதை
யென்னவென்று சொல்லிடுவேன் வங்கத்தாட்டு
நெட்டலாம் நெட்டலாஞ் சுண்ணமெல்லாம்
நிலையேது தலையேது நினைவோகொள்ளா
தட்டலாந் தட்டலாம் வேதையெல்லாம்
தங்கமெல்லாம் வெங்கலமாய்த் திறாவாய்ப்போமே. (438)

போமப்பா யேமமெல்லாங் கெட்டுத்தூளாய்ப்
புகழாகச் செய்தாக்கா லிரும்புபொன்னாம்
ஆமப்பா வங்கத்தைச் சுண்ணம்பண்ண
யாராலு முடியாது அறிவான்வாதி
ஓமப்பா வறுப்பார்கள் புடஞ்செய்வார்கள்
உத்தமனே சுனையில்லை காரமில்லை
நாமப்பா கண்டபடி அஞ்ஞூற்றில்சொன்னோம்
நலமாகப் பார்த்துரைத்து நாடிப்பாரே. (439)

நாட்டியிந்த முறையெல்லாம் பார்க்கவெண்ணில்
நலமாகக் குருபதத்தைக் கார்த்திருந்து
மூட்டியிந்தக் குருச்சொன்னால் துறையுங்காணும்
முட்டாளாய்ச் சுட்டாக்கா ளொன்றுமில்லை
ஆட்டியிந்தக் குருக்கண்டா லெல்லாஞ்சுண்ணம்
ஆசான்தான் சொன்னதினா லறியவேணும்
காட்டியிந்த வழலைச்சுண்ணம் தொட்டாலாடுங்
காட்டாட்டால் யென்னூலைக் கலந்துபாரே. (440)

சட்டைமுனி நூல் பாரெனல்

கலந்தெந்தன் நூல்பாரு மனதையூணிக்
கயிலாய சட்டைமுனி நூலைப்பாரு
மலைந்துநின்று அலையாதே நூலில்லாட்டால்
மகத்தான குருபதத்தைத் தோத்திரம்பண்ணு
நலைந்துநின்ற பத்திகண்டால் குருதான்சொல்வார்
நாய்போலே திரிந்துவிட்டால் சொல்லார்சொல்லார்
அலைந்துநின் றலைந்ததினால் வாதமாமோ
அறிவுகெட்ட சென்மங்க ளென்றுசொல்லே. (441)

சொல்லப்பா வாதிகிட்டத் திரிந்துசுற்றி
சூட்சமெல்லா நானறிவே னென்றுசுட்டு
அல்லப்பா பணம்போச்சு சோற்றுக்காகும்
அதுவுமன்றி யிதுவுமன்றி அழிஞ்சுபோச்சு
வில்லப்பா வலைந்தாலோ அம்புதைக்கும்
வெறுமரம்போல் நின்றாக்கால் தைக்குமோடா
கல்லப்பா வாசிமன மிரங்கிப்பார்த்தால்
கடாட்சித்துச் சொன்னாக்கால் சொல்லுவாரே. (442)

சொன்னாக்கால் யெப்படித்தான் சொல்வானாசான்
துணையான நிழல்போலக் காத்தால்சொல்வார்
சொன்னாக்கால் பொய்சொல்லார் நிலைத்தவாதி
சோதிப்பான் குணங்களெல்லாந் துணிவுகாண்பான்
சொன்னாக்கால் பொய்சொல்லித் சுடுவித்தாக்கால்
சுணங்கனவன் வாதியல்ல துப்புமேலே
சொன்னாக்கா லொருசொல்லில் காட்டிவிப்பான்
சூட்சமது அவர்பதத்தைச் சுற்றிக்காரே. (443)

காரப்பா கார்க்கையிலே பத்திகொண்டு
 கைகாட்டும் வேதையென்று கேட்கவேண்டாம்
பாரப்பா தொண்டுபண்ணித் திரியும்போது
 பாய்ச்சுவார் வேதையப்போ நீயும்பாரு
ஏரப்பா எருதுழைத்து உழுதாலல்லோ
 எந்நாளுஞ் சீவனத்துக் காகுமாகும்
நேரப்பா குருபதத்தைக் காத்தாலல்லோ
 நிகரில்லா யேமவித்தை காட்டுவாரே. (444)

ஏமவித்தை

ஏமவித்தை யென்றாக்கால் யெளிதோமைந்தா
 யெடுத்தசடத் தவக்குறையா லெய்துமெய்தும்
யேமவித்தை கண்டாக்கால் ஞானசித்தி
 யெட்டுமெட்டுஞ் சித்தியாம் யோகசித்தி
யேமவித்தை யென்றாக்கால் போதஞ்சித்தி
 யெளிதிலே மனஞ்செயிக்குங் குளிகைசித்தி
யேமவித்தை காணிலிரு வினையுமெய்தும்
 இல்லாட்டால் யெண்ணியெண்ணி யேங்குவாரே. (445)

ஏங்கினால் வருமோதான் மகத்தாஞ்சித்தி
 யெந்தெந்த நூல்பார்த்து மெளிதிற்காணார்
பாங்கினா லென்னூல்பார் சட்டைமுனிநூல்பார்
 பாலோடு சர்க்கரையும் பழம்போலாச்சு
தாங்கினா லூணிப்பார் வெட்டவெளியாகும்
 தப்பான சொல்லில்லை கருமறைப்போயில்லை
வாங்கினா லொருவேதை வெகுவேதையாகும்
 மயங்கினால் முட்டாள்தான் மயக்கம்பாரே. (446)

மயக்கம்

மயக்குவது யெதினாலே ஆச்சுதென்றால்
 ஆயிபதம் பூசிக்காப் பாவத்தாலே
மயக்குவது யெதினாலே யாச்சுதென்றால்
 வாசிகொண்டு வூதாத மனதினாலே
மயக்குவது யெதினாலே யாச்சுதென்றால்
 மாயத்தி லழுத்திநின்ற மயக்கத்தாலே
மயக்குவது யெதினாலே ஆச்சுதென்றால்
 மக்களே வேதாந்தம் பாரார்காணே. (447)

காணாத மூடரொரு கோடிகோடி
கார்த்திருந்து பாராத கசடர்கோடி
ஊணாதே ஊணிநின்று உலைவார்கோடி
ஒப்பற்ற ஞானமெங்கே யென்பார்கோடி
பூணாதே பூணும்பின் னென்பார்கோடி
புகழான சாங்கியமென் றிருப்பார்கோடி
தோணாது தோணியெங்குந் தானாய்நின்று
சுத்தசை தன்யத்தைத் துடரார்பாரே. (448)

துடராதே ஞானம்விட் டென்னசடமானார்
சுணங்கமல்லோ சணப்பொழுதில் விஷமத்தில்வீழ்ந்து
அடராமல் கண்மூடிப் போதத்தைப்பார்த்து
ஆனதின்பின் னுதவியல்லோ மறந்துபோச்சு
படராமல் மாயத்தை மனதைக்கட்டிப்
பார்க்கவல்லோ நரசென்ம மெடுத்ததல்லால்
உடராம லுண்டுடுத்திச் சையோகித்து
உத்தசென்ம மதையுமொழித் திடலாகாதே. (449)

காயசித்தி

ஆகாதே ஆகாதிந் நரசென்மந்தான்
அனந்தநா ளிருந்துதவ மெடுத்தசென்மம்
போகாதே போகாது காயசித்தில்
புகழான யோகத்தே நின்றுதேறு
ஏகாதே யேகாது ஞானத்தேறில்
இதுக்கல்லோ நரசென்மம் வேணுமென்றார்
வேகாதே வேகாது மதத்தின்பிறப்பு
வெந்துபோம் ஞானத்திற் விரைந்துயேறே. (450)

ஏறப்பா வென்றாக்கா லேறுவானோ
யெளிதாக விட்டகுறை வந்தாலேற்றும்
தேறப்பா வென்றாக்கால் தேறுவானோ
செகமாய்கை யொழிந்தாக்கால் மனந்தான்தேறும்
ஆறப்பா வென்றாக்கா லாறுவானோ
ஆங்காரந் தீய்ந்தாக்கால் கோபமாறும்
மாறப்பா வென்றாக்கால் மாறுவானோ
மாயத்தின் நேசமற்றால் மாறுவாரே. (451)

நேசமற்று நின்றதல்லோ நிருவிகற்பம்
நினைவழிந்து போனதல்லோ நிராகாரந்தான்
நாசமற்று நின்றநிற் குணத்தின்வீதி
நல்வினையுந் தீவினையும் ரெண்டும்பாழாம்
வேஷ்மொற்ற பிரபஞ்சத் தடுத்துநின்று
வெகுநாளா யுலைந்தலைந்து மனதைத்தேற்றி
காசமற்ற கண்போல ரவியைப்பார்த்து
கலப்பார்கள் பெரியோர்கள் கண்டுகொள்ளே. (452)

கண்டுகண்டு மனந்தேறி யெல்லாந்தள்ளி
கற்பமில்லை யென்றிருந்த லெட்சயத்தைத்தள்ளி
உண்டுஉண்டு கழித்ததெல்லாம் பொய்யென்றெண்ணி
உற்றுப்பார் வெட்டவெளி யொன்றுமில்லை
அண்டுஅண்டு கண்டத்தி லப்பாசொன்னேன்
அறியாம லிருந்தாக்கால் பிறவிவாய்க்கும்
மொண்டுமொண்டு யிரைக்கின்ற மேகநீர்போல்
மோசமப்பா பிறவிவந்து முளைக்குந்தானே. (453)

முளையிலே பிடுங்கிவிட்டா லொன்றுமில்லை
மூதளிர்த்து மரமானால் பிடுங்கப்போமா
கிளையிலே படர்ந்துநின்ற கொடிபோல்மைந்தா
கெடுமாயை வாசனையால் வந்துசுற்றும்
குளையிலே பொன்னோலைத் தளுக்கைப்பார்த்து
குவிந்துநின்ற தலம்பாரு மெள்ளப்பண்ணுந்
தளையிலே அகப்பட்டுச் சாகநன்றோ
சாதகமாய் மெஞ்ஞானந் தாக்கியேறே. (454)

சாரச் சுண்ணம்

தாக்கான தாளகமாஞ் சுண்ணத்தோடே
சாதகமாய் வீரமிட்டு ஆட்டிக்கொண்டு
வாக்கான வங்கத்திற் பூசிக்கொண்டு
மருவியொரு புடம்போடு வங்கச்சுண்ணம்
போக்கான யிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
புகழான சாரத்தி லப்பியூது
நோக்கான சுண்ணாம்பாஞ் சாரச்சுண்ணம்
நுகரயிதில் வீரமிட்டு வழலைக்கப்பே. (455)

கல்லுப்புச் சுண்ணம்

அப்பியதோர் வழலைதன்னை ரவியிற்போட்டு
அதின்பிறது சுண்ணாம்பில் வைத்துஆட்டு
ஒப்பியதோர் சவுக்காரஞ் சுண்ணம்பாகும்
உத்தமனே கடுங்கார மதிலேயேற்றி
செப்பியதோர் வீரமிட்டுக் கல்லுப்பிலப்பி
கினக்கவொரு புடம்போட்டு ஊதிப்போடு
கொப்பியதோர் கல்லுப்புக் கடுஞ்சுண்ணமாச்சு
கொட்டுமது கொட்டுமது சினைத்தேளாச்சே. (456)

கற்பூரச் சுண்ணம்

ஆச்சப்பா உப்போடே சாரமிட்டாட்டி
அப்பனே செயநீராம் நீருக்குள்ளே
ஒச்சப்பா வீரமிட்டுச் சிவந்தநீராம்
உத்தமனே கற்பூரப் பலகைபோட்டு
வாச்சப்பா வாரியிட்டு வூதச்சுண்ணம்
மருவியிதில் வீரமிட்டால் ரெத்தம்போலாம்
பாச்சப்பா யிதைத்தாள கத்தின்மேலே
பரிவாகப் போட்டு ஊதச் சுண்ணமாமே. (457)

வங்கச் சுண்ணம்

சுண்ணமென்ற தாளகத்தில் வீரத்தாட்டி
துடியான வங்கத்திற் பூசிக்காய்ச்சி
தண்ணமென்ற புடம்போட வங்கச்சுண்ணம்
சாதகமாய் வங்கத்தில் வீரத்தாட்டி
பண்ணமென்ற பரங்கிக்கிப் பூசிவாட்டி
பக்குவமா யூதுமைந்தா வீரச்சுண்ணம்
வண்ணமென்ற வீரத்தில் வீரத்தாட்டி
மகத்தான நிமிளைக்கிப் பூசிப்போடே. (458)

நிமிளைச் சுண்ணம்

பூசியதோர் நிமிளைதன்னை ஊதச்சுண்ணம்
புகழான நிமிளையிலே வீரத்தாட்டி
ஆசியதோர் சாரத்தி லப்பியாட்டி
அதின்பிறகு வில்லைகட்டி யூதச்சுண்ணம்
காசியதோர் மேருவதாம் நிமிடங்காட்டும்
கரைகொள்ளா வேதையுஞ்சா ரத்திலாமே
நாசியதோர் நர்த்தனத்தில் நின்றபதிகாட்டும்
நலமான வித்தையிது சாரம்பாரே. (459)

பார்க்கிறதோர் நாதாக்கள் ரிஷிகள்காணார்
பாவிமக்காள் நீங்களெங்கே காணப்போறீர்
சேர்க்கிறதோ ரினங்கண்டு சேர்ந்துஆடில்
தீராது தீராது உகாந்தகற்பம்
கோர்க்கிறதோர் மணிபோலே யகண்டவரையேறும்
குறுக்கினால் குறுக்குமது விட்டால்நீறாம்
சாக்கிறதோர் கடைசியெல்லாந் தள்ளிப்போட்டு
யேற்றிவிக்கும் போதத்தி லிருந்துவாழே. (460)

துருசுச் சுண்ணம்

போதத்தி லிருத்தியதோர் சாரச்சுண்ணம்
புகழாக வீரமிட்டு ஆட்டிக்கொண்டு
வாதத்திற் தலையான துருசுக்கப்பி
வாட்டிமெல்ல வூதிடவே சுண்ணமாகும்
காகத்திற் சூதத்தைக் கண்டுதானால்
கரும்பாம்பின் வாயிலுற்ற தேரையாகும்
வேதத்தின் முறையிதுதான் மலரோன்சொல்லும்
வேதாந்தப் பெரியோர்கள் சொன்னவாறே. (461)

மாரான துருசியிலே சிங்சிகூட்டி
மகத்தான சூதத்தைக் கட்டியாட்டி
தாரான சீனமிட்டு மத்தித்தேதான்
தனிப்பரங்கிப் பலகைமேற் பூசிவாட்டி
கூரான வுபரசத்தின் சுண்ணமப்பி
கொடுஞ்சீலை சுற்றியதைக் காயவைத்து
சேரான பக்குவமா யதையெடுத்து
நிலையாக வைத்துமேதணலிலூதே. (462)

ஊதையிலே வயிரம்போல் வீரங்கட்டும்
உத்தமனே யிதுரெண்டுந் தங்கமாகும்
ஊதையிலே யுருக்கியொரு மணியாய்வாங்கி
உட்பூரந் துருசியது ரெண்டும்பூசி
ஊதையிலே யஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
உத்தமனே மல்லிகைப்பூப் போலேயாகும்
ஊதையிலே வெகு நேரா யறிந்துவூது
உத்ததிலே வாய்க்காட்டால் நீறாகாதே. (463)

ஆகாதே போச்சுதென்று மலைக்கவேண்டாம்
அப்பனே பின்னொருக்கால் சூட்டியூது
வேகாதே நின்றாக்கால் சுண்ணமெல்லாம்
வேதையில்லை சுணைப்பேற நன்றாயூது
சாகாதே சாவதென்னா பச்சைச்சுண்ணஞ்
சாதகமாய்ச் சேர்ந்தாக்கால் வேதையாகும்
நோகாதே யிதைப்பார்த்து தொழிலைப்பண்ணு
நோக்கான நோக்கையுண்ணி நோக்குநோக்கே. (464)

பின்சென்மம்

நோக்கினார் சிவயோக சித்தனாவார்
நோக்காட்டால் கடைகெட்ட பாவியாவார்
ஆக்கினசேர் ருண்ணலாமென் றிருக்குமுன்னே
அதற்குமுன்னே சீவகலை பிறந்துதானால்
போக்கினால் பின்னிந்தச் சென்மவருமோடா
புத்திகெட்ட பிள்ளைகளே புக்கியேறு
வாக்கினால் மனத்தினால் காணக்கூடா
மகத்தான பூரணத்தில் மருவநன்றே. (465)

மருவியதோர் பரியோடே வீரச்சுண்ணம்
மகத்தான யெட்டெட்டு வேதையாடும்
உருவியதோர் கத்தியிலே விழுந்தபழம்போலே
ஓகோகோ வாதமெல்லாந் துண்டுதுண்டாயாடும்
கருவியதோர் யுண்மையொக்கு மதிலேவேதை
கண்ணிமைக்குள் சென்மம்நா றெடுத்தாப்போலாடும்
சருவியதோ ரண்டமொடு கோடிசங்கமாடுஞ்
சாதகமாய் வங்கமது போதம்நேரே. (466)

நிமிளை நாலு விபரம்

நேரான நிமிளையுட பெருமைகேளும்
நிகரான நாலுவகை சாதியுண்டு
வாரான பொன்னிமிளை ரசிதத்தோடு
மருகியதோர் கஞ்சமொடு நாகந்தானே
தாரான நாலுவகைக் குள்ளேமைந்தா
சதகோடிக் கேயோடும் யேமவர்ணம்
பாரான கஞ்சமென்றால் நாலாயிரத்துக்கோடும்
மருவியதோர் ரசிதத்தின் பண்புகேளே. (467)

ஜெயகெந்தி

பண்பான ரசிதமென்றால் நூற்றுக்கோடும்
பாங்கான கருப்பென்றால் பத்துக்கோடும்
நண்பான யிதுநாலுந் தேவிநாதம்
நலமாக மலைதோறும் பிறக்கும்பாரு
கண்பான யிதின்வேதை கரைசொல்லப்போகா
காணப்பா செயகெந்தி யிதுக்குநாமம்
தண்பான தவமுடையோர் செப்பும்வித்தை
சாதகமாங் காமுகற்குத் தவறிப்போமே. (468)

தவறாமல் காணவென்றால் சிதம்பரத்தைப்பூசி
சத்தியமா யஞ்செழுத்தை மனத்தாலோது
தவறாமல் காணவென்றால் வாமத்தேநில்லு
சாதகமாய் வஸ்துவுட சுத்திகொண்டு
தவறாமல் காணவென்றால் பத்திகொண்டு
தலமாறுங் கண்டுசதா சிவத்தில்நில்லு
தவறாமல் காணவென்றால் ஞானவழிகூடு
தனிநாலும் விட்டாக்கால் வாதம்நீச்சே. (469)

நீச்சென்று அருள்புரிந்தீர் குருவேயையா
நிர்மலமே நிற்களமே நிறைஞ்சனமேகேளும்
வாச்சென்ற வர்ணந்தான் நீச்சிற்கண்டேன்
வாதவித்தை விளையாட மருவினார்கள்
பூச்சென்று சொன்னீரே யிதுவென்மாயம்
புத்தியற்றுச் சொல்கிறனோ போதித்தானா
ஆச்சென்று சொல்வார்கள் கண்டவார்த்தை
அவனுடைய கிரிகையைநீ யறிந்துபாரே. (470)

அறிந்துநின்றே பார்த்திடுமம் பலமாம்பூசை
அத்தோடே வாமமவன் கூடிச்செய்வான்
மறிந்துநின்று போதையிலே வாசிவைத்து
மனமுறைத்தால் ஞானத்தின் வழியிற்செல்வான்
பிறிந்துநின்று அவ்வழியை விட்டால்மைந்தா
பேய்வாதி பேய்வாதி யங்கொன்றில்லை
சொறிந்துநின்ற சிரங்கரித்து வறுமைபூண்டு
சுற்றுவாரவர்தோஷஞ் சுற்றுந்தானே. (471)

சூதம்கட்ட தோஷம்

தோஷமென்ன வென்றாக்கால் சொல்லக்கேளு
சூதமென்ற சிவனுடைய சுக்கிலந்தான்
தோஷமென்ன சுட்டாக்கால் ரவிகோடிநாகம்
சுகமாக யிதைக்கட்ட மதிகோடியோகம்
தோஷமென்ன கெந்திமுதல் பராபரைக்குநாதம்
சுட்டாக்கா லென்னாளும் நரகில்மாய்வான்.
தோஷமென்ன உபரசங்கள் காரஞ்சாரம்
சுட்டவனோ கடத்தேறாத் துரோகியாமே. (472)

ஆமப்பா யிதையறிந்து வல்லோரெல்லாம்
ஆசான்தான் சொன்னபின்பு அறிந்துசெய்வான்
ஓமப்பா யில்லாட்டால் நூல்முறையேசெய்வார்
உத்தமர்கள் செய்வார்க ளிப்படித்தான்மைந்தா
வாமப்பா லுண்டுகொண்டு ஆத்தாளைக்கேட்பார்
வல்லமையாய்த் தேகசித்தி பண்ணினோர்கள்
சோமப்பா லுண்டுகொண்டு பார்ப்பார்கோடி
சுத்தரச வாதமங்கே சித்தியாமே. (473)

சித்திக்கும் வாமிக்குஞ் சிவயோகிக்கும்
செகமெல்லாஞ் சுற்றுகிற சித்தருக்கும்
சத்திக்கு மனதானால் வாமமீவாள்
சார்பாகச் சிவயோகஞ் சேரச்செய்வாள்
ஒத்திக்குங் குளிகைதந்து ஆடச்செய்வாள்
உன்மனைக்கு மனதுவந்தா லுயரயேத்தி
முத்திக்கும் ஞானவழி யிதுதானென்பாள்
மூவருக்குந் தாயான மூலந்தானே. (474)

மூலமென்ற பராபரையைப் போற்றுபோற்று
முத்திபுத்தி சித்துனக்கு வேணுமென்றால்
ஆலமுண்ட அரனைநித்தம் போற்றுபோற்று
அகண்டவெளி காணுதற்கே ஆசையானால்
நீலமுண்ட மேனியாம்குண் டலியைப்பாரு
நேர்பரைபோல் பளிச்சென்று நெட்டிட்டேறு
ஓலமென்ற திசைநாதங் குருபதத்திற்காணும்
உத்தமனே மதியமுர்த முண்ணலாமே. (475)

அமுர்தமுண்டால் காயசித்தி யாகுமாகும்
அப்பனே பொற்சிலைபோல் திரேகமாகும்
அமுர்தமுண்டால் தென்வடக்குக் கடலைத்தாண்டும்
அதுகடந்து மேருவுக்கு மப்பாற்கூடும்
அமுர்தமுண்டா லரைதனிலே பனிரெண்டாண்டு
அப்பனே யிருக்கலாம் ஞானசித்தி
அமுர்தமுண்டா லவனல்லோ ஞானயோகி
அதனாலே சித்தரென்ற நாமமாச்சே. (476)

சித்தரென்றும் வாமிசிவ யோகியென்றும்
செப்பியதோர் மகிமைவந்த திறத்தைக்கேளும்
நித்தரென்ற சிவன்விந்து கூடினதால்மைந்தா
நிறையான மூவருக்குங் கீர்த்தியாச்சு
பத்தரென்று முத்தரென்றுஞ் சொல்பேருண்டு
பரிவாக அவர்களுக்கும் வாதசித்தி
புத்தரென்றுஞ் சமணரென்றும் சமயமாறு
புகழ்பெரிய ஆயியைத்தான் பூசிப்பாரே. (477)

பூசிப்பா ரொருகோடி ரிஷிகளப்பா
பொற்பூவா லர்ச்சிப்பார் சித்தரப்பா
வாசிப்பா ரென்றுமனோன் மணிக்குள்யோகி
மகத்தான மெஞ்ஞானி போதத்தேநிற்பார்
ஆசிப்பார் வேதாந்தி வுடலைத்தூக்கி
அதனுடைய லகிரியினால் கண்டத்தேத்துந்
தூசிப்பார் சண்டாளர் பானமுண்டு
சொக்கிநின்று வறுமையிலே சுழலுவாரே. (478)

சுழலாமல் பராபரையைப் பூசைபண்ணி
சுத்தசை தன்யத்தை மனதில்வைத்து
அழலாதே நிற்குணமே நிற்மயமேயென்று
அகண்டபரி பூரணமே யென்றுயர்த்திக்கொண்டு
உழலாதே யுன்மனையை யெண்ணியெண்ணி
உகந்துன்னை வாவென்பா ளுன்மனைத்தாய்
தழலாதே மனங்கூடிச் சென்றுயேறு
சாதகமாய்ப் பிறவியற்றுச் சாறுவாயே. (479)

நிமிளைச் சுண்ணம்

சாரான நிமிளைக்கும் வங்கச்சுண்ணம்
 தாக்கிப்பார் வீரமிட்டு ஊதுவூது
சேரான சுண்ணாம்பாம் நிமிளைச்சுண்ணம்
 சீரான விதுக்குள்ளே வீரமிட்டாட்டி
நீரான சாரத்தி லப்பியூது
 நேரான சுண்ணாம்பு முன்போல்பண்ணு
ஆரான சாரத்தை வீரமிட்டாட்டி
 அப்பனே துருசுக்கு அப்பியூதே. (480)

துருசுச்சுண்ணம்

ஊதையிலே சுண்ணாம்பாந் துருசுதானும்
 உத்தமனே யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
காதையிலே வழலைக்கு அப்பிப்போட்டு
 கணக்கான சுண்ணாம்பில் வைத்தேயாட்டு
மாதையிலே வழலைகடுஞ் சுண்ணமாகும்
 மைந்தனே யிதையெடுத்து வீரத்தாட்டி
பாதையிலே சூடனுக்கு அப்பிப்போட்டு
 பரிவாக வெண்கருவா லரைத்துக்கட்டே. (481)

சூடச்சுண்ணம்

கட்டியதோர் சூடனைத்தா னூதச்சுண்ணம்
 கலந்ததிலே வீரம்கல் லுப்புக்கப்பி
நெட்டியதோர் தணல்மேலே ஊதச்சுண்ணம்
 நேராக யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
தெட்டியதோர் காரத்துக் கப்பிப்போட்டு
 சேர்ந்துலர்ந்த வில்லைதனை யெரித்துவூது
கொட்டியதோர் சுண்ணாம்பாங் காரச்சுண்ணம்
 கொள்கியதில் வீரமிட்டுக் குமுறஆட்டே. (482)

சீனச்சுண்ணம்

ஆட்டியதோர் காரம்சீ னத்துக்கப்பி
 அதையுலர வைத்துச்சுண் ணாம்பில்தாக்கி
மூட்டியதோர் தீயெரித்து வூதச்சுண்ணம்
 மூதண்டங் கிழிந்தாடுஞ் சீனவேகம்
ஓட்டியதோர் சீனத்தில் சாரமிட்டாட்டி
 உத்தமனே செயநீராம் நீருக்குள்ளே
காட்டியதோர் கற்பூரப் பலகைபோட்டு
 கலக்கியதை வாரியிட்டுக் குகையிலூதே. (483)

மால்தேவிச் சுண்ணம்

குகையோடே சுண்ணாம்பாய்க் கற்பூரம்நீறும்
கூப்பிட்டால் வாதங்கை கட்டிநிற்கும்
வகையோடே வீரமிட்டு எடுத்துஆட்டி
மாலினுட தேவிக்குப் பூசியூது
சதையோடே சுண்ணாம்பாஞ் சலவைமிஞ்சி
தொட்டவிடம் பட்டவிட மெல்லாமீயம்
நகையோடே யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
நலமான வங்கத்தி லப்பிப்போடே. (484)

வங்கச்சுண்ணம்

போடப்பா புடமொன்று வங்கச்சுண்ணம்
புகழாகப் பூப்போலே பொருமிநீறும்
ஆடப்பா யிதைத்தொட்டால் கவரோகோடி
அரகரா சிவசிவா அறியப்போகா
நீடப்பா வங்கத்தில் வீரமிட்டாட்டி
நேரான நிமிளைக்கி அப்பியூது
சாடப்பா கடுஞ்சுண்ண நிமிளையாச்சு
சரக்குமுதற் சூதமெல்லாம் தாக்கச்சாமே. (485)

சாரச்சுண்ணம்

தாக்கப்பா நிமிளையிலே வீரமிட்டாட்டி
சாரத்தின் மேலப்பிச் சார்பாயூது
வாக்கப்பா கொள்ளாது சாரமாட்டு
வாய்திறக்கப் போகாது வல்லோர்காணார்
நோக்கப்பா நோக்கிநின்ற பிரபஞ்சம்போல்
நுழைந்ததெல்லாம் நுழைந்தாடும் சாரவேகம்
நாக்கப்பா கொள்ளாது பாடவென்றால்
நாதாந்தத் தீசனன்று சொன்னவாறே. (486)

துருசிச்சுண்ணம்

வாறுகேள் சாரத்தில் வீரமிட்டாட்டி
மகத்தான துருசியின்மே லப்பியூது
கூறுகேள் துருசியது வேகமெத்த
கொடியதொரு சிறுநாகங் கடித்ததொக்கும்
மேறுகே ளிறங்காது கெருடர்க்குமஞ்சா
யென்னசொல்வேன் துருசியுட சுண்ணத்தாட்டை
மாறுகே ளிதையெடுத்துச் சிங்கிகூட்டி
மக்களே சூதத்திற் பொட்டுப்போடே. (487)

சூதக்கட்டு

பொட்டிட்டாற் சூதமங்கே உருண்டுசாகும்
புகழாகச் சூடனிலே வாட்டிக்கொண்டு
மட்டிட்டா லெண்ணைகுத்திக் கரண்டியாலே
மக்களே காரமிட்டுக் குகையிலாட்டி
கெட்டிட்ட பொன்போலே கண்விட்டாடும்
நேராக விதுவல்லோ சூதக்கட்டு
தொட்டிட்ட கட்டெல்லாஞ் சாரணைக்குஆகா
செப்புகிறேன் சாரணையைச் செப்புவேனே. (488)

சாரணை

செப்புகிறேன் சூதமப்பா பலந்தானொன்று
சேர்ந்துநின்று ஆடையில்பூ நாகச்சத்து
ஒப்புகிறேன் பலமொன்று யிதுக்குளீய்ந்து
உத்தமனே புடம்போட்டு நீத்தாயானால்
அப்புகிறேன் சூதத்தில் தீபனமோமெத்த
அசுரரைப்போல் வாங்கிடுமே கொடுத்ததெல்லாம்
துப்புகிறேன் பின்புகெந்திச் சத்தையீய்ந்து
துடியாகப் புடமிட்டுத் தீர்த்துயேறே. (489)

ஏறியபின் அப்பிரேகச் சத்தையூட்டி
இயல்பாகப் புடமிட்டுத் தீர்ந்தபின்பு
மாறியபின் சரக்கறு பத்திநாலும்
வகையான உபரசம்நூற் றிரண்டுபத்து
தேறியபின் நவலோகம் மூட்டித்தீர்ந்து
செயலாக ரத்தினமொன் பதையுமூட்டி
கூறியபின் னிருநூற்றி யஞ்சுமானால்
கொடியதொரு குளிகையது ககனமாமே. (490)

ககனகுளிகை

ககனமிது லட்சவரை காதமோடும்
கலந்துயிந்தப் படியொருக்கால் தீர்த்தாயானால்
ககனமிது பத்துலட்சங் காதமோடுங்
கண்டுயிதைப் பின்னொருக்கால் தீர்த்தாயானால்
ககனமிது கோடிலட்சங் காதமோடும்
கண்டுமிதைப் பின்னொருக்கால் தீர்த்தாயானால்
ககனமிது நிற்பதமாங் காதமோடுங்
கடுவேகமாகு மின்னந் தீர்த்துப்பாரே. (491)

தீர்த்ததுவை பின்னொருக்கால் நீத்தாயானால்
சேர்ந்துநின்ற மதியளவுந் தொட்டிட்டோடும்
தீர்த்ததுவின் பேரென்ன அஷ்டமாசித்தி
சேர்ந்திதனைப் பின்னொன்று தீர்த்தாயானால்
தீர்த்ததுவின் பேரென்ன கமலினியுமாச்சு
தீயுண்ணுங் காற்றையுண்ணுஞ் சலத்தையுண்ணும்
தீர்த்ததுவின் பின்னேழு தீர்த்தாயானால்
செகமெல்லா மோடுகின்ற சொரூபமாமே. (492)

சொரூபமென்ற நாமமிதில் வந்ததென்ன
தொத்தாதார் பூரணத்தைத் தொத்திநின்றால்
அரூபமென்ற சடமாகுங் கத்தியோடும்
அப்பனே கற்பூர தீபம்போலாம்
நிரூபமென்ற நிஷ்களத்தில் யேத்தியாடும்
நேராக யிரவியிலே யிறங்கலாகும்
துரூபமென்ற துருவினுட தமரிலேற்று
சூட்சாதி சூட்சமுற்ற காயமாமே. (493)

சொரூபமணி

ஆமப்பா முத்தியொரு சாரணையாஞ்சூதம்
அப்பனே ரெண்டிடையாந் தங்கமெட்டு
ஓமப்பா யுருக்கியொரு மணியாய்வாங்கி
உத்தமனே துரிசியொடு பூரச்சுண்ணம்
காமப்பால் விட்டரைத்து வீரம்போட்டுக்
கலந்தரைத்துக் குளிகைக்குப் பூசிப்போடு
சாமப்பா சூதமொடு தங்கம்ரெண்டும்
சாதகமா யஞ்சுசுண்ணக் குகையில்வையே. (494)

வைத்துஒரு புடம்போடப் பொருமிநீறும்
மகத்தான வஸ்துவினா லானசுண்ணம்
வைத்துயிதைப் பூசியப்பா ஆயிமுன்னே
வாதமுதல் காயசித்தி குளிகையாச்சு
வைத்துயிதில் வீரமிட்டுக் காரங்கூட்டி
மைந்தனே லிங்கமிட்டால் சங்கம்வேதை
வைத்துயிதில் புழுகிட்டுக் காரங்குத்தி
மத்தித்து லேதிக்க யெல்லாம்நீறே. (495

நீறாச்சு சகலமெல்லா மொன்றிற்கோடி
நீத்தினத்தைக் கரைகாண வென்னார்க்கூடா
வீறாச்சு யிக்குருவில் சவ்வாதுகாரம்
விளங்கியதோர் நாதவிந்து விட்டேயாட்டி
தாறாச்சு உபரசங்கள் சரக்கிற்பட்டால்
தங்கம்போல் நின்றாடும் வேதைகோடி
ஆறாச்சு சமுத்திரமாய்க் கண்டேயாடி
அனந்தவரை யிவ்வளவென் றடங்காவாறே. (496)

அடங்காத வஸ்துவினா லாடுஞ்சுண்ணம்
அப்பனே அஞ்ஞூற்றி யெட்டுமாத்து
துடங்காத பாதையிதிற் கோடாகோடி
சொல்லுதற்கு யென்னாலே சொல்லப்போகா
முடங்காத சூதத்திற் தங்கத்தையூட்டி
மூதண்டக் கடுங்கார சாரவித்தை
இடங்காத யிதினோடு நாதவிந்து
ஏற்றினால் வஸ்துவென்ற வித்தையாச்சே. (497)

வித்தையிலே வெகுசுறுக்கு வஸ்துவித்தை
விழுந்ததிலே பெருமைவந்த வீறாப்பென்ன
பத்தையிலே லவணமுண்டு சிவத்தைக்கூடி
பாங்கான குருபதத்தில் விந்துவாக
மத்தையிலே சத்தியுட சிவப்பாமெல்லாம்
மகிமையாய்க் குறியதனில் வந்ததினாலையா
செத்தையிலே பட்டதீப் பற்றினாப்போல்
செகமெல்லா மிதினாலே செனித்தவாறே. (498)

செனித்ததென்ன நாதமது சத்தியாச்சு
சேர்ந்துநின்ற சுக்கிலந்தான் சிவமுமாச்சு
செனித்ததென்ன யிதினாலே சீவன்கோடி
சித்தர்முதல் ரிஷிகள்முத லிதினால்தேகம்
செனித்ததென்ன யிதுரெண்டு மென்றுபார்க்கில்
சிகாரமொன்று வகாரமொன்று ரெண்டேரெண்டு
செனித்தரெண்டால் வாதத்தைத் தொட்டுஆட்டி
செகமேழுங் கொள்ளாது தெரிந்திடாதே. (499)

தெரியாத வஸ்துவித்தை சிவயோகிக்காம்
சித்தர்க்காம் ரிஷிகளுக்காம் மற்றோர்க்காகா
வரியாத சடமெடுத்த வல்லோர்க்காகும்
மாயமுற்ற காமிக்கு வம்சம்பாழாம்
தரியாத காமியென்றால் சடத்தைக்கொல்லுஞ்
சாதகமாய்ப் பிறவியிலே தள்ளுந்தள்ளும்
புரியாத வித்தையிது போக்காய்ச்சொன்னேன்
புகழாக அறிந்துமக்காள் பூட்டியாட்டே. (500)

பூட்டரிது யென்றுசொன்னீர் ஆதிவித்தை
புகழான சுண்ணாம்பின் போக்குமெத்தவென்றீர்
காட்டரிது காட்டரிது ஞானமென்றீர்
கைமுறையா யோகத்திற் காணவென்றீர்
மூட்டரிது மூட்டரிது யினங்கண்டுஆடி
முன்னறிந்து பின்னறிந்து யூதரிதுவென்றீர்
நாட்டரிது நாட்டரிது மனஞ்சென்றேறி
நாயகமே யெங்கட்கு நாட்டுமுறைசொல்லே. (501)

வெடியுப்புச் செயநீர்

சொல்லுகிறேன் மக்களே யெல்லாங்கேளு
சுருக்கான வழியொன்று சூட்சங்கேளு
மல்லுகிறேன் வெடியுப்புப் பலந்தான்பத்து
மருவிநின்ற புளிபத்துச் சாரமொன்று
எல்லுகிறேன் சீனமொன்று கல்லுப்பொன்று
யிதுவெல்லா மிடித்துநன்றாய் வில்லையாக்கி
அல்லுகிற தீயிலிட்டா லெறிந்துயெல்லாம்
அப்பனே சுண்ணாம்பாம் பனியில்வையே. (502)

வைத்துடனே செய்நீரா முப்புச்சுண்ணம்
மக்களே சாரத்தி லிந்நீர்விட்டுக்
கைத்துடனே கல்வத்தி லாட்டுஆட்டு
கடுநெட்டாய் நெட்டங்க மட்டுமாட்டு
வைத்துடனே யிதையெடுத்து அண்டவோட்டில்
பக்குவமாய் வைத்துமொரு புடத்தைப்போடு
வைத்துடனே பனியில்வைக்கச் செயநீராகும்
மக்களே கடுங்காரச் செயநீர்தானே. (503)

வெங்காரக் கட்டு

தானென்ற வீரமொன்று பூரமொன்று
சாதகமா யிந்நீரி லரைத்துக்கொண்டு
கானென்ற வெண்காரப் பலகைமீதில்
கலந்தவுப்புக் கலந்தவுப்புக் காயக்காய
வானென்ற ரவிபடவெண் காரங்கட்டும்
மகத்தான முழுக்கட்டு மைந்தாபாரு
கோனென்ற வெண்காரஞ் செந்தூரம்பின்
குணமாக யின்னமொரு குறிசொல்வேனே. (504)

குறியான வெண்காரஞ் சாரநீர்குத்தி
குலாவியதோர் மூன்றிடைதானரைத்துக்கொண்டு
நெறியான துருசியொன்ப திடையின்மேலே
நேராகப் பூசியதை உலரப்போட்டு
மறியான ரவிபடவே பசுமையாகும்
மைந்தனே பின்பதிலே செயநீர்பூசி
செறியான தீமேலே வாட்டுவாட்டு
சேர்ந்ததிலே பச்சைநிற மாகும்பாரே. (505)

பாரப்பா சீனத்தில் வெடியுப்புநீரை
பாய்ச்சியிதைப் பொடிபண்ணி ரவியிற்போட
நேரப்பா சுண்ணாம்பாய் நீறிப்போகும்
நேரான கடுஞ்சுண்ணம் சீனச்சுண்ணம்
சாரப்பா யிதுக்குள்ளே முன்வைத்ததுருசு
சாதகமாய் மூடியதை யடுப்பிலேற்ற
நீரப்பா செத்துமே துருசுகட்டும்
நிலைத்ததப்போ வாதமென்று நினைத்துக்கொள்ளே. (506)

நினைந்ததிந்தத் துருசொன்று சாரமொன்று
நேராக முன்வைத்த காரம்நாலு
முனைந்துயிதில் தாளகந்தா னொன்றுபோட்டு
மூட்டியந்தச் சாரநீர் விட்டேயாட்டி
புனைந்துயிதை மூன்றுபங்கு பண்ணிவைத்து
புகழான அயப்பொடிதான் பத்தொன்றிட்டு
இளைந்துநன்றாய்க் குகையில்வைத்தே ஊதலூது
யேகமணி யாயிருக்கு மெடுத்துப்பாரே. (507)

எடுத்துப்பார் அயந்தன்னை நொறுக்கிக்கொண்டு
இதமாகப் பின்னுமொரு பங்குகூட்டி
மடுத்துயிதைப் பின்னொருக்கால் குகையிலாட்டு
மணிதிரண்டு சத்துப்போ லாகிநிற்கும்
தொடுத்துயிதை பின்னுமொரு பங்குகூட்டி
சுகமாகக் குகையிலிட்டுத் தாக்கியூது
அடுத்துயிதை யுருக்கிப்பார் சவடோயில்லை
அப்பனே பூச்சிதறும் அறிந்துகொள்ளே. (508)

அறிந்துகுகை பார்த்திந்த யிடைக்கித்தங்கம்
அப்பனே கூட்டியொன்றா யுருக்கும்போது
மறிந்துயிந்த யிடைக்கொக்க நாகம்போடு
மருவியிந்த நாகத்திற் காரமிட்டுஆட்டு
செறிந்துநின்று வுருகுமந் திடைக்குலிங்கம்
சீராகக் காரமிட்டுத் தாக்குதாக்கு
நெறிந்துநின்று களங்காகும் ரவிமதியாம்ரெண்டில்
நேராக ஐம்பதுக்கு வொன்றுபோடே. (509)

மும்மூலம்

போடப்பா மாத்தெட்டு புடத்துக்கேகா
புகழ்பெரிய தொழிலையெல்லாம் பிறகுபாரு
நீடப்பா சுண்ணாம்பின் கருவையெல்லாம்பாரு
நேராகக் கட்டினதோர் துருசோகோடி
ஊடப்பா குருவாகுஞ் செந்தூரமாகும்
உத்தமனே சுண்ணாம்பா யூதிப்பாரு
நாடப்பா முன்கட்டுங் காரத்தின்மேல்
நலமாகத் திரிகுணசத் தைலமூட்டே. (510)

ஊட்டியதோர் தைலமெல்லாங் காரமுண்ணும்
உத்தமனே அதில்பிறகு வீரம்பூசி
காட்டியதோர் சீனச்சுண் ணாம்பில்வைத்து
கலந்தெறிக்கச் செந்தூர மாகும்பாரு
மாட்டியதோர் செந்தூரம் நவலோகத்துள்ளே
அப்பனே யன்பதுக்கொன் றிடவேதங்கம்
கூட்டியதோ ரிந்தமுறை முன்னேபார்த்து
தொள்கிமக்காள் மனந்தேறிக் குறியைப்பாரே. (511)

குறியான லெட்சயந்தான் மும்மூலத்துள்
கொள்கியந்தக் கேசரியால் கூடிப்பாரு
நெறியான கீழ்மூலம் பளீரென்றாக்கால்
நெட்டிட்ட ரெண்டும்போ லாறுங்காணும்
பிறியான நடுமூலம் கண்டம்நின்றால்
பிறிகிறதோர் பனிரெண்டில் நாலுங்காணு
மறியான மேல்மூலம் புருவநடுவானால்
மக்களே துவாதசத்தின் வழியோடேறே. (512)

வழியோடே யேறப்பா வாசிகொண்டு
மனஞ்செவ்வையாய் நெட்டிட்டு கலந்துயேறும்
வெளியோடே யேறுமட்டு மனந்தானாசான்
வெளியிலே மனம்புக்கில் வெட்டவெளியுலொண்டு
ஒளியோடே வெளிகூடும் வெளியொளியாய்க்காணும்
ஓகோகோ மூன்றுவகை கடந்துசென்றால்
தளியோடே யுன்மனத்தா யங்கேநிற்பாள்
சதகோடி ரவிமதியாங் காந்திதானே. (513)

பிரபஞ்சம்

காந்தியிலே மயங்காதே தாயைப்போற்று
காட்டுவாள் தமரோடே சென்றுயேறு
சாந்தியிலே அந்தஅகண் டத்தைப்பாரு
தானுமில்லை நீயுமில்லை பொய்யேபொய்யே
ஏந்தியிலே நிற்மலத்தி லடங்கிப்போனார்
யேகமாய் நின்றதொன்று பின்னொன்றில்லை
வாந்தியிலே விழுந்தவண்ணம் போலேயப்பா
மாயப்பிர பஞ்சத்தை விட்டுயேறே. (514)

ஏறப்பா யோகமுதல் ஞானஞ்சொன்னேன்
யேற்காமற் பார்ப்பதற்கு வாதஞ்சொன்னேன்
தேறப்பா வென்றதிலே வழக்காஞ்சொன்னேன்
சேர்ந்துணர்ந்த பெரியோர்க்குச் சித்திமுத்தி
பேறப்பா பெறுங்களென்று வெளியாய்ச்சொன்னேன்
பேய்ப்பிள்ளை யானாலுந் தள்ளமனதற்று
வீரப்பா யெனைப்போலே யார்தான்சொல்வார்
வேதாந்த சாரத்தை மேவிப்பாரே. (515)

மேவியதோர் பராபரமாம் மூலனாயன்
விளங்கியதோர் பதமலரே விரைந்துபோற்றி
ஏவியதோர் கமலமுனி பாதம்போற்றி
யெனையாண்டு ரட்சித்த போகர்பாதம்போற்றி
காவியதோர் காவியந்தான் முக்காண்டஞ்சொன்னேன்
கடைந்ததிலே யெடுத்தயிந்த அஞ்ஞூறுஞ்சொன்னேன்
தாவியதோர் பூரணத்தைக் கைக்குட்காட்டுஞ்
சமுசயங்க ளொன்றுமில்லை சார்ந்துபாரே. (516)

பதினெண் அங்கம்

பாரப்பா யங்கமிதிற் பதினெட்டுஞ்சொன்னேன்
பார்க்கிறதோர் பெரியோர்க்கு அஞ்ஞூறுநன்று
நேரப்பா அஞ்ஞூற்றை மலைதோறுஞ்சித்தர்
நேர்ந்துயிதை யொளித்துவிட்டார் வெளிகாட்டாமல்
சேரப்பா மலைகளிலே நம்முடையவர்க்கம்
செப்பறிய கோடான கோடிபந்து
ஊரப்பா யிருந்தாலே மாயமூடும்
உத்தமனே மலையேற ஞானமாமே. (517)

ஆமப்பா அஞ்ஞூற்றைப் பார்த்தோர்க்கெல்லா
மருளோடு பொருளாகும் அதீதங்காணும்
ஓமப்பா வென்றுநின்ற குண்டலிதானோங்கும்
ஒடுங்கியிந்தக் ககனமுல கத்தைச்சுற்றும்
வேமப்பா நல்வினையுந் தீவினையுங்கெட்டு
வேதாந்த சாரத்தை விரைந்துயேற்றும்
நாமப்பா கண்டதிரு மூலர்பதம்போற்றி
நலமாகச் சொல்லிவிட்டேன் அஞ்ஞூறு முற்றே. (518)

கொங்கணவர் நடுக்காண்டம் - 500.
முற்றிற்று.

உ

பரமபதி துணை

கொங்கண நாயனார் அருளிச்செய்த

கடைக்காண்டம் - 500.

காப்பு

அண்டரண்டங் கடந்தபொருள் நிற்குணமாய் நின்ற
அளவில்லாப் பூரணமே சூட்சா சூட்சம்
எண்டிசையும் பரந்து நிரஞ்சன மேயாகி
ஏக சச்சிதானந்த வாலை ஞானங்
கொண்டதொரு பூரண மெந்நாளுங் காப்பு
குறியான வெளியாளு மொளியாளுங் காப்பு
புண்டரிக வெளியொளியாஞ் சுழினைமேவும்
போதமுறும் வேதாந்தத் தாதிகாப்பே. (1)

மவுன நிலை

ஆதியே தந்தமே தகண்டமேது
அப்புறத்தே நின்ற பூரணந்தா னேது
நீதியேதறிவேது நினைவங் கேது
நேரான சுழினைதனை நினையா தார்க்கு
சோதியேது துரியமென்ற துரியமேது
துரியாதீதத் தடங்குஞ் சூட்சமேது
பேதியா தொருமனமே பிலக்க வேணும்
பிலத்தக்கால் மவுனமது பிலக்குந் தானே. (2)

தேவிபூஜை மகிமை

தானென்ற ஆணவமா மலத்தைப் போக்குந்
தருகாதே கிரியை விட்டு யோகத்தே செல்
மானென்ற பெண்மயக்க மாகாதப்பா
மாயி துரோதாயிவுட வலுமை மெத்த
வூனென்ற திரிகோணத் துள்ளே நின்றாள்
உரைத்துவிட்டாள் ஞானமெல்லா மோகோபாரு
ஏனென்றாற் தேசமெல்லாஞ் சித்தாய்ப்போகு
மெளிதல்ல தேவியைநீ பூசைபண்ணே. (3)

பூசையிலே வெகுகோடி பூசையுண்டு
புகழான மந்திரமோ கோடாகோடி
பூசையிலே வெகுநுணுக்க மறிய மாட்டார்
பூரணமாம் வழலையல்லோ வாமபூசை
பூசையிலே யிதுவல்லோ மறைத்தார் சித்தர்
போக்கறியா ரதினாலே கெட்டுப் போனார்
பூசையென்றால் திரிகோண வாமபூசை
பொன்னான நாற்பத்து முக்கோணந் தானே. (4)

நாற்பத்து முக்கோணம்

தானென்ற நாற்பத்து முக்கோணத்தைச்
சார்வான எந்தனிட பிள்ளாய்கேளு
வானென்ற சதுரமிட்டு ரேகைமூன்று
வளமிதுக்குள் சூரியன்போல் வட்டமிட்டுக்
கானென்ற நவரேகை வட்டத்தைக் கீறி
கைமுறையாய் நாற்பத்து முக்கோணத்தை
நானன்றாய் ரேகை பிரமாணஞ் சொல்வேன்
நன்றாக நெல்லிடை பிரமாணந்தானே. (5)

பிரமாணம் மேல்ரேகை ரவியின்ரேகை
பேறான ரேகையின்மேல் வட்டத்தின்கீழ்
திறமாக ஆறறைநெல் பங்குபோடு
சிறப்பாக ரவியின் கீழாறுபங்கு
அறமான மதிரேகை யதின்கீழ்வீதி
யப்பனே அஞ்சேகால் பங்குபோடு
நிறமான செயரேகை யதின்கீழ்வீதி
நிலைக்கவே மூன்றரைநெல் பங்குபோடே. (6)

போடப்பா புந்தியுட ரேகையின்கீழ்
புகழான ரெண்டரைநெல் பங்குபோடு
ஆடப்பா குருவினிட ரேகையின் கீழ்
அப்பனே நாலரைநெல் பங்குபோடு
சூடப்பா புதனுடைய ரேகையின் கீழ்
சுழன்ற மூன்றே முக்கால் பங்குபோடு
தேடப்பா மந்தனிட ரேகையின் கீழ்
திறமான ஆறுபங்கு தீர்க்கங்காணே. (7)

காணப்பா ராகுவின்கீ ழாறுபங்கு
    கைமுறையாய்க் கேதுவின் கீழாறுபங்கு
தோணப்பா அன்பதுநெல் பங்குமாச்சு
    தொடுகுறி போலின்ன - மொரு குறிசொல்வேன் கேள்
பூணப்பா ரவிரேகை நீளஞ்சொல்வேன்
    புகழாக விருபத்து அஞ்சுபங்கு
ஊணப்பா மதிரேகை நீளஞ்சொல்வேன்
    உத்தமனே மூன்றுபத்து நாலரையேகீறே. (8)

கீறடா செவ்வாயின் ரேகை நீளங்
    கெடியாக விருபத்து ஏழரைதான் பங்கு
கீறடா புதரேகை பதினேழப்பா
    கெடியான குருரேகை பதினொன்றேதான்
கீறடா வெள்ளியுட ரேகை பதினேழு
    கீழாகச் சனிரேகை நீளங்கேளு
கீறடா நாற்பத்தேழரைதான் பங்கு
    கீழ்ராகு மூன்றுபத்து நாலரைதான் பங்கே. (9)

பங்கிருபத் தஞ்சாகுங் கேதுரேகை
    பண்பாக வங்குலமோ பிரமாணந்தான்
நங்கு மிந்தப்படிகீறி கும்பமுனிஅய்யா
    நடுரேகை முனைமய்யம் நன்றாய்ச்சொன்னார்
அங்கதிலே தீட்சைவிதி யிருநூற்றுக்குள்
    அப்பனே திரிகோணம் வகுத்தார் பாரு
சங்கைபெற்ற நாற்பத்து முக்கோணந்தான்
    சாற்றியதோர் வகைகேளு தர்மமாமே. (10)

ஆமப்பா வுட்கோண முக்கோணந் தான்
    அதின்மேலே யெண்கோண மதின் மேற்கேளு
ஓமப்பா தசகோண மதின்மேற்கேளு
    உத்தமனே தசகோண மதின்மேற்கேளு
நாமப்பா பதினான்கு கோணமாகும்
    நாற்பத்து முக்கோண மம்மிட்டாச்சு
காமப்பால் கானல்பால் கொண்டார்க் கல்லால்
    கருத்திலே நினைத்தாலுங் கருமந்தானே. (11)

கருமமெல்லாந் தீர்ப்பதற்கு வகையைக்கேளு
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கபடில்லாமல்
தருமமென்ற சதுர்த்திசைமேற் கோணந்தான்
சம்புவென்ற சிவந்தவர்னஞ் சார்வுசொன்னேன்
வெறுமையெல்லாந் தீருமடா பின்கலையிற் பாரு
வேதாந்த மேற்கோணமதின் கீழ்கோணம்
வர்மமடா சிவந்த வர்ணமதின் கீழ்கோணம்
வளமான வர்மமது கறுப்புத்தானே. (12)

தானென்ற திரிகோண மதின்கீழ் கோணந்
தான்கறுப்பா மிதின்கீழே சிவந்தவர்ணங்
கானென்ற விதின்கீழே கார்மேகம் போல்
கறுப்பான வர்ணமடா அதின்மேற்கேளு
வானென்ற விதின்கீழே வெளுத்த வர்ணம்
வகையாக விதின்கீழே சிவந்த வர்ணம்
கோனென்ற சிவப்பாகு மதின்மேற் கோணங்
கொள்ளையடா வெள்ளை நிறங்கொண்டவாறே. (13)

வாறான விதின்மேலே சிவந்தவர்ணம்
வாய்ப்பான விதின்மேலே கறுத்தவர்ணம்
வீறான விதின்மேலே கறுப்பாம் வர்ணம்
மேற்கொண்டு சிவந்தவர்ணம் பதினான்கு மாச்சு
கூறான தசகோண மேற்கோணந்தான்
கொள்ளையடா வெள்ளைநிறம் பின்கலைக்கீழ்
பேறான கறுப்பிதற் கீழ் கோணந் தன்னில்
பெருமையுற்ற கறுப்பு நிறம் பேசிப்பாரே. (14)

பாரப்பா கீழ்கோணஞ் சிவப்புமாச்சு
பண்பான கீழ்க்கோணம் வெண்மையாகு
மாரப்பா கீழ்க்கோணங் கறுப்பதாகு
மப்பனே மேல்கோணம் வெண்மையாச்சு
சீரப்பா மேற்கோணஞ் செம்மையாச்சு
சிறப்பான மேற்கோணங் கறுத்தவர்ணம்
மாரப்பா மேற்கோணங் கறுமை யாச்சு
வகுத்தவட்ட தசகோணம் வளத்தைப்பாரே. (15)

வளமான விதினுள்ளே தசகோணத்தில்
வாரமுள்ள மேற்கோணம் நீலவர்னம்
களமான பின்கலைக்கீழ் கோணந்தன்னில்
கருமை நிறமிதின்கீழே செம்மையாச்சு
பளமான விதின்கீழே நீலவர்ணம்
பண்பாக விதின்கீழே செம்மையாச்சு
உளமான விதின்கீழே செம்மையாச்சு
உத்தமனே யிதின்கீழே செம்மைதானே. (16)

தானான விதின்மேலே நீலவர்ணமாச்சு
தருவான விதின்மேலே சிவந்தரூபங்
கானான விதின்மேலே கருமையாச்சு
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் தசகோணரூபம்
வானான விதினுள்ளே அட்டகோணம்
வகையான மேற்கோணங் குங்குமத்தின் ரூபந்
தேனான பின்கலைக்கீழ் கோணந் தன்னில்
சிவந்தவர்ணங் கீழ்க்கோண மஞ்சளாமே. (17)

ஆமப்பா வதின்கீழ் நீலமாச்சு
அழகான கீழ்கோணஞ் சிவந்தரூபந்
தாமப்பா மேற்கோணம் நீலவர்ணந்
தயவான மேற்கோண மஞ்சள்வர்ண
மோமப்பா மேற்கோணஞ் செம்மையாச்சு
உத்தமனே அஷ்டதச கோணத்துள்ளே
வாமப்பா வாமியடா வாலைரூபி
மகத்தான திரிகோண மொன்றுதானே. (18)

ஒன்றான கோணமது சிவந்தரூபம்
உத்தமனே முருக்கம்பூவர்ண மொவ்வா
ஒன்றான சீவகளை யிருந்த மார்கம்
உலகெல்லாம் படைத்தழிக்கும் உமைத்தாய்வீடு
ஒன்றான திரோதாயி காமரூபி
யுத்தகணங்களை யடக்குமோர் அரூபி
ஒன்றான திதுக்குள்ளே விந்துவாசல்
ஓமென்ற வாமமா மவுனந்தானே. (19)

மவுனமென்ற திரிகோணம் ரீங்காரபீடம்
வாச்சுதடா நந்திக்கு கொலுவிருக்க
மவுனம்பே ரறிந்தல்லோ தாண்டவங்கள்
மகத்தான நடனமது காணலாகு
மவுனமது நாவினாற் சொல்வதல்ல
வறுமையெல்லா மகற்றிவைத்தாள் மாதா அப்பா
மவுனத்தை யுச்சரித்துக் கிரிகைபூசை
வளமான சக்கரத்தை வகுத்திட்டேனே. (20)

வகுத்திட்டே னாற்பத்து முக்கோணத்தை
வளமான கோணமெல்லாந் தானந்தோறும்
வகுத்திட்டேன் முப்பத்திரண்டு தீட்சை
வகையாகப் பாடிவைத்தேன் கற்பநூறில்
வகுத்திட்டே னிதுவறிந்து கோணந்தோறும்
வரிசையாய் வண்மையுள்ள கோணமெல்லாம்
வகுத்திட்டேன் சிவதீட்சை வரைந்துபோடு
வளமான குங்குமத்திற் சமாதிவையே. (21)

தீட்சை முறை

வையப்பா சிவப்பெல்லாஞ் சத்திதீட்சை
மார்க்கமாய் நீலமெழு சபையின்தீட்சை
செய்யப்பா கறுப்பெல்லாம் மவுனதீட்சை
திறமான பூரணமே நவமுக்கோண
மெய்யப்பா தீட்சை யெல்லாஞ் சீவனிற்க
விளங்கவே பிரணவத்தை வீடுதோறுந்
தொய்யப்பா மகாரத்தை யாருஞ் சொல்லார்
சுழிமுனையின் கண்டத்தே துடர்ந்துபாரே. (22)

பாரப்பா மற்றவைகள் பச்சைவர்ணம்
பரிசுமது பிரணவத்தைப் பத்திவைப்பாய்
ஆரப்பா வட்டத்தின்மேலே கேளு
அங்குலம் பத்ததின்மேலே வட்டமொன்று
சீரப்பா அங்குலம் பத்தா னதின்மேற்
சிறப்பான வட்டமொன்று அதின்மேல் கேளு
சாரப்பா அங்குலம் பத்தானதின்மேற்
சக்கரம்போல் வட்டமொன்று தன்னைக்கீறே. (23)

கீற்றெல்லா மிட்டபின்பு வீதிக்குள்ளே
 கிருபைபெற பெறவென்று ஓம்சிவயநாட்டு
சேர்த்தல்லாமல் வீதிக்குள்ளே கேளு
 சேரவே பதினாலு இதழும்போடு
பார்த்தெல்லா மறுவீதிக்குள்ளே கேளு
 பண்பாக ரெண்டு பத்தோடஞ் சிதழும்போடு
காத்தெல்லா முள்ளடங்கும் இதழ்கள்தோறும்
 கைமுறையாய் அகாரமுதற் ககாரமாமே. (24)

அட்சரமுறை

ஆமடா அன்பத்தோ ரட்சரத்தை
 அஷ்டவிதழ் முதலிருபத்தஞ்சு மட்டும்
நாமடா நாற்பத்தொன்பது வெழுத்தை
 நாட்டுவாய் பிரணவமும் நாட்டத்தீரு
ஓமடா வென்றுவைக்கில் சீவனாச்சு
 உத்தமனே விதின்மே லங்குல மொன்றின்மேல்
தாமடா சதுரமாய் நகாரமாகச்
 சாத்துவாய் நால்வாசல் விட்டுத்தானே. (25)

தானென்ற விதின்மே லங்குல மொன்றின்மேல்
 சார்வாகச் சதுரமொன்று நால்வாசலிட்டு
தானென்ற திவ்வண்ண மூன்றுவரையிட்டு
 தளமான வுள்வீதிக்குள்ளே கேளு
தானென்ற வட்டபெலிதம் மென்றிட்டு
 தருவான மறுவீதிக்குள்ளே கேளு
தானென்ற அஷ்டசத்தி அஷ்டநாகந்
 தருபாதாள திகிரியொடு சாத்தினேனே. (26)

சாத்தினேன் பாலருக்கு மும்மென்றேதான்
 தருகிரிக்கும் பவ்வென்றுங் கிசகெம்மென்றும்
போத்தினேன் ராகுக்கு மங்கென்றேதான்
 புகழாகப் பிரணவங்கொண்டிட்டு வைப்பாய்
தேத்தினே நால்வாசல்தோறுமே கேள்
 சிறப்பாக துவாரபாலா ளிருக்க
வாத்தினேன் உம்மென்று நிருதிமூலை
 யப்பனே கணேசனுக்குக் கெங்கின்றீட்டே. (27)

ஈடாக முகத்தடுக்க மேன்முகத்தில்
ஏகாந்த மூர்த்திக்கு மங்கென்றேதான்
சாடான வாயுவினிற் சுப்பிரமணியன்
சங்கென்று வடபுறத்தில் குபேரன் சண்டன்
வீடாக சவ்வென்று ஈசானத்தில்
வேதாந்த வயிரவற்குங் கென்றேதான்
கூடான கீழ்முகந்தான் கிரிடிபிரிங்கி
கூற்றான சிங்கென்று கூறினேனே. (28)

கூறுகிறே னக்கினிக்குத் தெட்சணாமூர்த்தி
கோலமடா அவ்வென்றே தென்முகத்தில்
மாறினேன் ரிஷிகளுட கொலுவாய் மைந்தா
மகத்தான றிங்கென்று வரைந்திட்டாய்நீ
தேறியே யிதின்வீதி பிங்களைகொண்டேதான்
தெளிவான அட்சரங்கள் சேர்த்துப்போடு
வாறியே பச்சைநிறக் கோணமெல்லாம்
அஷ்டகர்ம அட்சரங்க ளடைத்திடாயே. (29)

அடைத்திட்டே னுள்வீதி முகவாசற்கெதிரே
அம்மம்ம கொடிக்கம்பம் வங்வங்கென்றூணு
வுடைத்திட்டேன் வங்குசிங் கென்றேயூணு
வுத்தமனே பீசவகை யொளிப்பில்லாமல்
படைத்திட்டேன் பிள்ளைகளே யுங்கட்காகப்
பண்பாக பூசைசெய்யச் சக்கரத்தை
விடைத்திட்டேன் வேதாந்த சிரோமணியாய்
வானவெளியாகக் கிரிகையிலே பூசைபண்ணே. (30)

பூசிக்குமுறை

பூசைசெய்ய வகைசொல்வேன் கைமுறையாய்ப்பாரு
புகழான வெளிபூசை கிரிகைபூசை
பூசைசெய்து மவுனத்தே மனமுறைக்கமாட்டாய்
போதமுள்ள யோகத்தைச் செய்யமாட்டாய்
பூசைசெய்ய கிரிகையிலே வகுத்தால் மெத்த
பூட்டெல்லா மனம்நன்றாய் பூணுபூணு
பூசையிலே முதற்பூசை வாமபூசை
பொற்சிலைபோல் பெண்ணைவைத்துப் பூசை செய்யே. (31)

செய்யப்பா பதினாறுவயசுப் பெண்ணாம்
தீர்க்கமுடன் ரெண்டுபத்து வயசுப்பெண்ணாம்
செய்யப்பா மூன்றுபத்து வயசுப்பெண்ணாம்
செல்வமுள்ள நாலுபத்து வயசுப்பெண்ணாம்
செய்யப்பா நாலுதிரம் வழியாய்ச்சொன்னோந்
திடமான முதற்றரமே மகத்தாம்பூசை
செய்யப்பா பெண்தனக்குச் சாபஞ்செய்து
திறமாக முன்னாலும் பின்னாலும்சேராதே. (32)

சேராதே பாய்படுக்கை தன்னிலேதான்
தெளிந்துகொண்டு மூன்றுநாள் விரதமேசொல்
வாராய்கேள் சொல்லுகிறேன் மங்கையர்க்கு
வளமாகப் பச்சைமஞ்சள் ஆடைசேர்த்து
நீராடிப் பட்டுடுத்தி பணிகள் பூண்டு
நீதிபெறப் பூதியிட்டு அகிலுமூட்டி
கோரோசனை கஸ்தூரி குங்குமப்பூ
கும்மென்ற கற்பூரஞ் சவ்வாதுகூட்டே. (33)

கூட்டுவாய் புனுகுடனே பூரஞ்சேர்த்து
கொட்டுவாய் தாழம்பூ தூளிதன்னை
நாட்டுவாய் மருக்கொழுந்து பிச்சிமுல்லை
நண்பான செண்பகப்பூ ஆடைதானுந்
தீட்டுவா யவள்தனக்குப் பன்னீருக்குள்
சிறப்பாக விடுவாடை தேகமெல்லா
மூட்டுவாய் துடைவரைக்கு முடியபூசி
மூன்றுநாள் கழித்தபின்பு நாலாநாளே. (34)

நாலாநாள் பூருவபட்ச நவமியன்று
நன்றடா நாதவிடை வாமபூசை
மாலான வாலையடா சிறுபெண்தேவி
மனமகிழப் பூசைபண்ண வகையைக்கேளு
சேலான வடமுகமாய் பூசைபட்சஞ்
செய்து திடமாக நாற்காலின் பலகைமீதே
மேலாக மெத்தைவிரித் தொலுக்குப்போட்டு
மின்னனையார் தன்னையதின்மேல் வைப்பாயே. (35)

வைப்பாய்நீ யிவ்வண்ணங் கைமுறைதான்செய்யில்
மகத்தான நால்வருமோ நாற்காலாச்சி
மெய்ப்பான தானந்தி பலகையாச்சு
விடங்கொண்ட படநாக மெத்தையாச்சு
கைப்பாக மறவாதே பராபரமேபோலுங்
கயிலாச பராநந்தி மடிமேற்சென்றால்
பொய்ப்பான சதியல்லோ ஆத்தாள் பூசை
பூரணியே காரணியே யென்றுபோற்றே. (36)

போற்றியல்லோ பூசைசெய்ய வகையைக்கேளு
புகழான மெத்தையின்மேல் தாயைவைத்து
போற்றியே யரவபடம் நீர்விட்டாட்டி
பூட்டடா கைகரணஞ் செய்தாற்சித்தி
போற்றியே சிவசூட்சுங் காதில்செப்பு
புகழான மனத்தையல்லோ ஒன்றாய்ச்சேர்த்து
போற்றியே விரலுகிரிற் சனசபரஞ்செய்து
பூணவே பீங்கானிற் றேனைவாங்கே. (37)

வாங்கிறதோர் வகையேது புழுகுபூரம்
வழலையொத்த பரிகாரஞ் சுன்னங்கூட்டாய்
காங்கிசையாய் புழுகுமொரு காசுதூக்கு
கற்பூரங் காரம் பணவிடையேபோடு
பாங்கான பசுத்தழையின் பால்மாகாணி
பண்பான தேனுங்காற்படியேகூட்டி
தேங்காமற் கறுப்பஞ்சாறு படியரைக்கால்விட்டு
திருமந்திரப் படிதான் சேரவாரே. (38)

வாரப்பா பச்சையதிர் படிமாகாணி
வளமாகக் கலக்கியல்லோ வைத்துக்கொண்டு
சேரப்பா தற்சனியிற் தோய்த்துத் தோய்த்து
சிரப்பாக கைகரணஞ் செய்துவாங்கு
கூரப்பா காமிகளை திருத்தியூறி
குமுகுமெனவே வடியுந்தேனை வாங்கு
சாறப்பா பீங்கானிற் றூபதீபந்தான்
காட்டி நாற்காலிக் குள்ளேவையே. (39)

வைத்தபின்பு சலம்விட்டுக் கழுவிப்போட்டு
வாகான செம்பரத்தம் பூவுள்ளாக்கி
நைத்ததின்மேல் மலர்தெரிய விட்டுச்சாத்தி
நன்றாகத் தங்கமொரு பலத்தகட்டில்
மெய்த்திடவே நாற்பத்து முக்கோணத்தை
விளங்கவே வரைந்து கடிதடவாய் மேலாய்த்
தைத்ததிலே தாழம்பூ சென்றொரு கைசாற்றி
செண்பகப்பூ சரஞ்சாற்றி சவ்வாதுசாற்றே. (40)

சாற்றுவாய் தகட்டுக்கு பூரமொடுபுழுகு
சாதிக் கோரோசனை குங்குமப்பூவோடு
சாத்துவா யரையிடையிடையிற் சிவந்தபட்டு
தருவான கொங்கைக்கு வாடைபூசி
சாத்துவாய் முடிக்கண்ட சரமோடு
பதக்கந் தங்கரத்தினக்கட்டு பொட்டுக்காறை
சாத்துவா யிருகாதில் பொற்றோடப்பா
தங்கமணிக் கொப்பணிந் தங்கரைஞாண்பூட்டே. (41)

பூட்டுவாய் மோகனமா முத்துமாலை
புகழான கைக்கடகஞ் சரிகைவிரலாழி
பூட்டுவாய் மணிக்காப்பு பாதமிரண்டுக்கும்
பொற்பணியாம் நூபுரங்கள் பூணச்சாத்தி
பூட்டுவாய் பணிகள்புஷ்பம் பாதமிரண்டுக்கும்
பொற்றகடு குதிகாலின் கீழேவைத்து
பூட்டுவாய் மனத்தையங்கே பாதபூசை
புகழான பெருவிரலிற் புஷ்பஞ்சாத்தே. (42)

சாத்தியபின் ஓமென்ற பூதியிட்டு
ஸ்தன்னியத்திற் சாமளையைத் தியானம்பண்ணி
நேத்தியே யாமளையின் தியானம்பண்ணு
நிலையான திரிபுரையும் புவனையோடு
தோத்தரிக்க யிருபதத்தின் பெருவிரலிற்தியானந்
தோணவே சிரசின்மேற் பரையின்தியானந்
தோத்திரமாம் பஞ்சசத்தி முகத்தியானங்
கூறடா வாமத்தே வாலைதானே. (43)

தானென்றவாலை சிறுபெண்தாய் தேவி
தனைப்பெற்றா யம்மம்மா தசநாதங் கொண்டாய்
வானென்றவாலை யிருந்தாயே யென்று
மவுனத்தே கேசரியா மகண்டந்தன்னில்
ஏனென்ற சுழிமுனையாம் புருவமய்ய
மிடைகீழாய் லட்சியத்தி னியல்புகாணுங்
கானென்ற புருவமய்யத் தஞ்சனேழாய்க்
கண்கொள்ள வெளியிருந்த சிவத்தைக்காணே. (44)

காணப்பா கண்மூடி விழியைத்தானே
கண்டமெனுஞ் சுழிமுனையில் கருத்தைவைத்து
தோணப்பா நேத்திரத்தை யோட்டிப்பாரு
சுகமாகக் கடைக்கண்ணை விரலாலாட்டு
பூணப்பா சூரியன்போல் வட்டமாகும்
புகழாக வொளியினிட பிரகாசம்வீசும்
வீணப்பா மற்றதெல்லாந் தேவிபூசை
வேதாந்த அந்தமிது விளம்பினேனே. (45)

விளம்பினேன் சிவரூப மிதுதானப்பா
வேதாந்த சாயுச்சிய பதமீதப்பா
விளம்பினேன் கிரிகையுட பூசையாலே
வெளிப்பூசை யான்சொன்னேன் சுழினைக்குள்ளே
விளம்பினேன் பிறப்பிறப்பு ரெண்டுமங்கே
விந்துவொடு நாதமங்கே மவுனமங்கே
விளம்பினேன் ஓங்கார வட்டங்கொண்ட
இடமதிலே எட்டும்ரெண்டும் விளங்கும் பாரே. (46)

பார்அப்பா பிள்ளைகளே யுங்களுக்குச் சொன்னேன்
பரமான தசவாலை யோகவாலை
யேரப்பா வாமத்திற் கடிதடத்தில்
ஏகாந்த மாயிருந்த வாலைப்பெண்தான்
சாரப்பா மகாரவித்தை மூன்றொன்றாக்கி
சந்திரகலைக் குள்ளாக சோமவட்டம்
வேரப்பா அசவையுறு மவ்விடமேயன்றி
வேறொன்று மில்லையில்லை வேரைப்பாரே. (47)

வேரான கேசரமா மதின்மேல் உண்மை
வேதாந்தத் திரிகோண மூலா தாரஞ்
சீரான சுழினையிலே நந்தி நந்தி
தெளிந்துபார் பின்கலையில் ரவியி னாட்டந்
தாரான யிடகலையே சந்திரன் வாழ்க்கை
சாதகமாய்ப் பூரித்துக் கும்பித்துத் தான்
பாராதே ரேசித்தார் பண்பதாகும்
பாங்குபெற வாசிதனைப் பகரக்கேளே. (48)

கேளப்பா பூரகத்தால் மாத்திரைதான் ரெண்டு
கெடியான கும்பகந்தான் மாத்திரைதா னாலு
வாரப்பா ரேசகத்தால் மாத்திரைதா னொன்று
வளமாக இப்படியே வாசியோகம்
நாளப்பா வருஷமொன்றிற் சித்தியாகு
நலமான வாலையப்பா மவுனஞ் சொல்வாள்
கோளப்பா வாராது வொருநாளுந்தான்
கூறினே னண்டரண்டங் கூறினேனே. (49)

கூறினே னிப்படியே தேவிபூசை
கொடுத்தாக்கால் தாயங்கே வார்த்தை சொல்வாள்
மீறினேன் தேவிக்கு நெய்பாலன்னம்
வெண்தயிரு பண்டமொடு காய்கறிகளெல்லா
மாறியே படைத்துவைத்து பலகாரங்கள்
வகையாகப் படைத்துவைப்பாய் மாங்கிசங்களோடு
தேறியே நெய்வேத்தியஞ் செய்தபின்பு
தீபதூபங் காட்டிச் சங்கமூதே. (50)

சங்கமொடு செயகண்டி மணியினோசை
சத்தமுழங்குஞ் சின்னங்கள் சார்மத்தாளம்
பொங்கமாய் சோடசங்க ளுபசாரங்கள் செய்து
போதமெல்லாம் நிறைந்திருந்த பீங்கான் தன்னை
அங்கமுடன்தாய் கரத்திற்கொடுத்து ரெண்டு
வங்கையினா லணைத்துப் பாரதனில்வைத்து
கொங்கையிட நடுவாக பூசைசெய்து
கொடுத்திடுவாய் கற்பூர தீபந்தானே. (51)

பரிகல சேடங்கொள்ள

தானான மந்திரத்தை மாறுகால்வாங்கி
சார்வான குருநாதன் கரத்திலேந்திப்
பானான மதியமுதமா மென்றெண்ணி
பரமகுரு நாதனுட புருவமையத்தே
கானான காமகளை மந்திரத்தை
கருணைபெறவே யூட்டியசையாமற் கொண்டே
தேனான தேவிகையிற் கொடுக்கக்கொள்வள்
ஏகமா மவள்பொசித்த சேடம்வாங்கே. (52)

வாங்கியல்லோ குருநாதன் பின்புகொள்வார்
மறுபடிதான் மிஞ்சினதோர் சேடமெல்லாந்
தாங்கியல்லோ சீடருக்குக் கரத்திலீவார்
தன்மையெனும் பிள்ளைகட்கு தயவாய்ப்பேசு
தேங்கியே தெண்டனிட்டு பதங்கை கொண்டு
தேவிதனைப் பூசித்து பூதி சாத்தி
பாங்குடனே துளசிபத்திரந் தலைமேற் கொண்டு
பாங்காக மந்திரத்தை யுட்கொள் வாரே. (53)

வாரமுடன் மந்திரங்கள் கொண்டபின்பு
ஆயிக்குப் படைத்த படைப்பெல்லாம் வாங்கி
சீராக நிர்மாலியஞ் சுத்திபண்ணி
சிறப்பாக எல்லோர்க்கும் அன்னமீந்து
சாரமுள்ள பலகாரங் கனிகளீந்து
தானைமுதற் பின்னைவரை தாகந்தீர்த்தே
பாரமெனும் நாதாதி யொழிந்தார் சீடர்
பத்தியுடன் குருநாதன் பரங்கொண்டாரே. (54)

பரங்கொண்டார் வாலையெனும் பெண்ணாரப்பா
பாவமெல்லா மெய்தவுண்டாள் மோட்சம்பெற்றாள்
தரங்கொண்ட பூசையிது கிறிகைபூசை
சாதித்தால் மவுனமிது யோகபூசை
திரங்கொண்டே செய்யலாம் வழுவாராது
சொல்லாட்டாற் சிதறிப்போஞ் சித்தியில்லை
வரங்கொண்ட புண்ணியர்க்கிந்த நூல்கிட்டில்
வகையாகக் கைமுறையாய்ப் பூசிப்பாரே. (55)

பூசிப்பா ரிப்படியே மவுனத்தாலே
    புகழாக மனத்தாலே தியானஞ்செய்து
பூசிப்பார் சொர்ணகும்பத் தாயையெண்ணிப்
    புகழாக ஸ்தன்னியத்தின் பதத்திலேதான்
பூசிப்பார் பொற்றகட்டில் விக்கிரகத்தில்
    பூமேரு கொண்டகையிற் சாளக்கிராமம்
பூசிப்பா ரிதுக்கெல்லா மனமுறைத்தால்
    புகட்டலாம் புருவமய்யம் புகட்டலாமே. (56)

ஆமப்பா சிவயோகி செய்யும்பூசை
    யவர்க்கெல்லா மனமுறைக்குந் தியானம் பண்ணு
வோமப்பா லோகருக்கு மனமுறைக்க மட்டா
    வுத்தமனே யதினாலே வெளிப்பூசை சொன்னோம்
நாமப்பா வொளிக்கறியோந் தேவிபூசை
    நலமாகச் சொல்லிவிட்டேன் வடுகன்பூசை
தாமப்பா வரவரவே வெவ்வேறுபூசை
    சாதிப்பார் சடாதார வடுகன்தானே. (57)

தானென்ற மூலத்திலறு கோணத்தில்
    சமமான யிடகலையின் கீழ்கோணத்தில்
வானென்ற நிர்வாணி மவுனசூட்ச
    மனக்கியானத் தியானமது வலுக்கப்பூணி
தேனென்ற வபிஷேக மெல்லாஞ்செய்து
    திறமாக வஸ்திராபரணஞ் சாத்தி
மானென்ற புஷ்ப பரிமளங்கள் சுகந்தம்
    வாசமுறுங் கிரீடம்வைத்து வடமாலை சாத்தே. (58)

சாத்தியபின் கயிலாச சட்டமுனி
    நாதன் தருவான சுந்தரானந்தரோடு
தேத்தியபின் னடுக்காவ லாறுசூட்சஞ்
    செப்பினேன் றூலத்தே பிலக்கவென்று
போற்றியே பொங்கலிட்டுக் காய்கறிகளெல்லாம்
    பொரித்துவைத்து மாங்கிஷமு மதுக்குடமும்வைத்து
நாற்றிசையும் பந்தனஞ்செய் பிற்கோணத்து
    நடுவிலே வங்கென்று நாட்டிடாயே. (59)

நாட்டியபின் தாம்பூலம் பால்பழங்கள்
நற்கனிகள் பரமான்னமுடன் படைத்து
தாட்டிகமாய் தீபமொடு தூபங்காட்டி
சகலமெல்லாம் நெய்வேத்யமான பின்பு
பூட்டிடுவாய் மணியோசை சங்கினோசை
புகழான நாதசெயகெண்டி - யோசை
மீட்டியே பிரணவமே யிதுக்குள்ளாதி
மிகுந்த மயேஸ்பரீமூலம் நிர்வாணியென்றே. (60)

வடுகன் பூசை

என்றோது வடுகாயா சுவாகாவென்று
வென்னசொல்வேன் நூற்றெட்டு வுருவிற்சித்தி
நன்றான மூதண்டலேகியத்தை நலமான
மவுனத்தால் தொடுத்து வாங்கு
சென்றாடும் யோகமடா வுள்ளேகொள்ளுஞ்
சித்தனாம் வடுகனங்கே நிருத்தஞ்செய்வார்
வென்றியுள்ள அஷ்டமாசித்தி யெல்லாம்
விளங்கவே கைவசமாய் விள்ளுவாரே. (61)

கணபதி பூசை

விள்ளக்கேள் கணபதியின் பூசைதன்னை
வேதாந்த மூலத்தி லறுகோணத்துள்
பிள்ளையைக்கேள் பின்கலையின் மேற்கோணத்தில்
பிலக்கவே கணேசனுட சூட்சஞ்செய்வாய்
வள்ளலே சகலவபிஷேகஞ் செய்து
வஸ்திராபரணங்கள் பரிமளங்கள் சாத்தி
ஒள்ளியதோர் முடிசூட்டித் தங்கப்பூணூல்
ஊணியே யதிற்சூட்ச முறைக்கச் செய்யே. (62)

செய்யப்பா பொரிகடலை வடை தேங்காயும்
செவ்விளநீர் கரும்பு பால் பரமானங்கள்
உய்யப்பா சர்க்கரைதேன் கனிகளோடு
உத்தமனே தாம்பூல மெல்லாம் வைத்து
மெய்யப்பா கமலமுனி பிரமமுனி
பிட்சாவேதமுனி மூவரையுஞ் சூட்சம்பண்ணி
பையப்பா சகலமது நெய்வேத்தியம்பண்ணி
பண்பாக தீபமொடு தூபங்காட்டே. (63)

காட்டியே மணியோசை சங்கவோசை
கனமான சேகண்டி நாதவோசை
யூட்டியே பிரணவமு முதலாயாவும்
அவ்வுமுவ்வுஞ் சிறீயுஞ் சிவாயகணபதியே
நாட்டி னமாவென்றோது மவுனத்தாலே
நாதாந்த மூலத்திலொளி காண்மட்டுங்
காட்டியே வாசியுட யோகம்பாரு
கணேசனங்கே வார்த்தைசொல்வார் சித்தியாமே. (64)

நந்திபூசை

சித்தியா மஷ்டகர்ம மெல்லாமப்பா
செகசால மந்திரயிந்திர சாலமெல்லாம்
முத்தியாம் நந்தீசர் பூசைகேளு
மூலத்திலறு கோணமேற் கோணத்தில்
பத்தியுடன் மவுனத்தால் நந்திமூர்த்தி
பரமகுரு சூட்சமங்கே திருமூலரங்கே
சத்தியானந்தரங்கே மூவரையும் போற்றி
சகல வபிஷேக முறை வைத்திடாயே. (65)

வத்திரா பரணங்கள் புட்ப பரிமளங்கள்
வளமான முடிசூட்டி தியானம் பண்ணி
பத்தியாய் பால்பழங்க ளிளநீர் தேங்காய்
தோன்று பரமானங்கள் பலகாரங்கள்
வெத்தி பெறச்சக்கரை நெய்வேத்தியஞ் செய்து
விளங்கவே தாம்பூர மிகவே வைத்து
அத்தீப தூபமொடு கற்பூரா லாத்தி
அன்பாக மவுனத்தே பூசை பண்ணே. (66)

பண்ணப்பா மணியோசை சங்க வோசை
பரத்திலே நந்திதனைத் தோத்திரமேபண்ணு
வெண்ணப்பா பிரணவமு மிதனுள் மூல
மென்சிவா நந்தியே நமாவென்றோது
வுண்ணப்பா மூலத்தில் நந்திதானு
முரைத்தாக்கால் மவுனத்தே தெரிசனை முண்டாம்
விண்ணப்பா மூலத்தே யாருஞ் சொல்லார்
வேதாந்த சாஸ்திரத்தை வெளியிட்டேனே. (67)

யோக நிலைமை

வெளியொளியாய் நின்றுதடா சுழினைநாடி
வேதாந்த அந்தத்தே நிற்குணத்தி னாடி
யொளியான விழியாலே மருட்டிப் பாரு
வுத்தமனே கண்கடுத்தா லுருட்டிப் பாரு
தெளிவான சிவனங்கே வார்த்தை சொல்வார்
சித்தியொடு முத்தியெல்லாஞ் சேரச் சொல்வார்
வளியான யசவைகொண்டு இடகலையிற் பாரு
மகத்தான பூரணத்தின் வங்கென் றூதே. (68)

ஊதடா வங்கென்று கும்பித் தேநில்
ஓகோகோ சிங்கென்று ரேசகஞ்செய்
வாதடா வாலைவிட்டா லொன்று மில்லை
வாயுத்தம்பனக் குளிகை வாயில்ப் போடு
போதடா மூதண்ட லேகியம் கொள்
புருவமய்யத் தமர்திறக்கும் புக்கலாம்பின்
ஏதடா வாதுமட்டும் சுழினைபாரு
வேதாந்த வொளிகண்டாற் சித்தியாமே. (69)

சுப்பிரமணியர் பூசை

ஆமப்பா சுப்பிரமணியன் பூசைகேளு
அந்தரமா மூலத்து ளறுகோணத்துள்
நோமப்பா விடகலையிற் சரவணபவா வென்றிட்டு
நாமப்பா மேற்கோணத் துள்ளே
வோமப்பா சரவணபவா வென்றிட்டு
வுள்ளரையிற் விந்திட்டு வங்கிங்கிட்டு
தாமப்பா சண்முகமாஞ் சுப்பிரமணியன்
தன்னையே சூட்சஞ்செய் தியானத்தாலே. (70)

தியானத்தா லபிஷேக மெல்லாஞ் செய்து
சிவந்த வஸ்திரா பரணஞ் சுகந்தஞ் சாத்தி
தியானத்தால் முடிகிரீடம் பரிமளங்கள்
சிறக்கவே மவுனத்தால் திரமாயூணு
தியானத்தால் பரமானம் பால்பழந் தேங்காயுந்
தேனூறு பலகாரந் தாம்பூல முதலாய்
தியானத்தால் நெய்வேத்தியஞ் செய்துகொண்டு
தீபமொடு தூபமிடு தோத்திரஞ் செய்யே. (71)

செய்யவே மணியோசை சங்கவோசை
சேகண்டி நாதவொலி சின்னமூது
வையடா சோறுகறிபானம் அமுகண்ணர்
இடைக்காட்டார் மூவரையு மூலசூட்சங்
கையடா பிரணவமும் வங்சங்கோடு
கங்சுப்பிரமணியா நமாவென் றோது
மெய்யடா வேலனங்கே நிருத்தஞ் செய்வார்
வேண்டியதோர் சித்தியெல்லாம் விளம்புவாரே. (72)

தட்சிணாமூர்த்தி பூசை

விளம்புவேன் தட்சிணாமூர்த்தி பூசை
வேதாந்த மூலத்தி லறுகோணத்தில்
வளங்கிறேன் பின்கலையின் கீழ்கோணத்தில்
வட்டத்தில் திரிகோண ராசியென்றிட்டு
குளம்பாதே யென்னுடனே கோரக்க நாதன்
கூறினேன் குறுமுனி யானந்தரோடு
தளம்பெறவே மூவரையுஞ் சூட்சஞ்செய்து
சாதித்தால் மவுனமங்கே தடைகொள் ளாதே. (73)

மானத பூசை

தடையில்லா மனத்தாலே மானதமாம் பூசை
சாதித்தால் க்ஷணத்துள்ளே சித்தியாகும்
உடையவனா மபிஷேகமெல்லாஞ் செய்து
வுற்றதோர் வஸ்திர - ஆபரணம் புஷ்பம்
விடையமாம் பரிமளங்க ளெல்லாஞ் சாத்தி
வேணபடி பரமான மிரசவர்க் கங்கள்
திடமுறவே தாம்பூல முதலாய்க் கொண்டு
தீபமொடு சாம்பிராணி தூபங் காட்டே. (74)

காட்டியே கற்பூரம் பணிமாறப்பா
கலங்காதே மணியோசை சங்கினோசை
சூட்டியே சேகண்டி நாதவோசை
துய்ய - தாம்பூலம் நெய்வேத்தியஞ் செய்து
பூட்டியே தோத்தரிக்கப் பிரணவந்தான்
புகலுவே னமாவென்று பிரணவத்தாதி
நாட்டியே மறவாதே யதோமுகத்தில்
நலமான சிறீயு மகத்தியா வென்றோதே. (75)

அகத்தியமாரிஷி நமாவென் றென்றோது
அஷ்டசித்திதனை யீவார் குளிகையீவார்
அகத்தியரே காஷாயம் வேடமீவார்
அப்போது சித்தரெல்லாங் கைக்கொள் வார்கள்
அகத்தியரைத் தண்டனிட்டு மேருசெல்ல
யாருக்குந் தடையில்லை யரசேயென்பார்
அகத்தியர்தா மெக்கியத்தில் பிறந்தயோகி
ஆயிரத்தெட் டண்டமெல்லா மாணையாச்சே. (76)

சண்டிகேசர் பூசை

ஆச்சப்பா மூலத்தி லறுகோணத்து
அளவில்லா போகரொடு சண்டிகேசர்
வாச்சப்பா திரோதாயி கீழ்கோணத்தில்
வளமான கருவூ ரானந்தரோடு
பாச்சப்பா மூவரையுஞ் சூட்சஞ்செய்து
பரிவாக வபிஷேக மெல்லாஞ்செய்து
நீச்சப்பா சகல வஸ்திராபரணஞ் சாத்தி
நீதிபெற பரிமளங்கள் சுகந்தஞ் சாத்தே. (77)

சாத்தியே முடிசூடி பால் பரமானங்கள்
சர்க்கரை தேங்காயோடு பலகாரங்கள்
நீத்தியே தாம்பூல நெய்வேத்தியஞ் செய்து
நேரமுடன் தூப தீபங்க ளோடு
போத்தியே மணியோசை சங்கினோசை
புகழான சேகண்டி நாதவோசை
தோத்திரமாமோ மும்மெனவு மாங்வாங்
துரி சண்டிகேசாய நமாவென்றோதே. (78)

ஓதப்பா குபேரனங்கே நிதிகளீவார்
ஓகோகோ வாதமெல்லாம் வாகாய்க் காணும்
வாதப்பா வறுமையெல்லா மோடிப் போகு
மகத்தான யோகமொடு ஞானம் ரெண்டும்
போதப்பா செல்லாது அஷ்ட சித்தி
பொன்னோடு வெள்ளிவித்தை ரெண்டுஞ் சித்தி
யேதப்பா மூலத்தே சண்முகமாம் பூசை
யிதுவுண்டாய் தேவியைப்பின் பூசைசெய்யே. (79)

செய்யவே தேவியங்கே வார்த்தை சொல்வாள்
தேகமெல்லா முத்திபெற மார்க்கஞ் சொல்வாள்
அய்யனே நாங்களெல்லாஞ் சிவனெங்கேயென்று
ஆத்தாளைப் பூசித்தோ மன்பாய்ச் சொன்னாள்
மெய்யான கடைக்கண்ணில் விரலமிழ்த்தி
மெருட்டினால் சிவனங்கே காண்பா யென்றாள்
மையான மனம்பூண வேணு மென்றால்
வளமான சுழினைதனைப் பற்றென்றாளே. (80)

பிரமதேவர் பூசை

பற்றாசை வைப்பதற்கு பிரமதேவர்
பாங்கு சொல்வேன் பூசைவிதி நன்றாய்க்கேளு
சித்தான நாற்கோண மந்தார பீடந்
தேவி சரஸ்வதியோடு பிரமதேவர்
முத்தான வுள்ளத்தே மனத்தியான
மூடியல்லோ பிரமற்குச் சூட்சஞ்செய்து
சத்தான தூலம்விட்டு யோகம்பாரு
சகலவபிஷேக மெல்லாஞ் செய்தபின்பே. (81)

பின்புநீ வத்திராபரணம் புட்பம்
பிரளாதே பரிமளங்க ளெல்லாஞ் சாத்தி
இன்பமுடன் பதமானபால் ரசவர்க்க மிளநீர்
சக்கரை தேங்காய் புலகனிக ளோடு
முன்பாக வைத்தங்கே தாம்பூல முதலாய்
முழக்கமுடன் நெய்வேத்தியஞ் செய்தபின்பு
வன்பாக தீபமொடு தூபங்காட்டி
யஞ்சோடே மூன்றெழுத்தும் அங்கென்றோதே. (82)

ஓதவே பிரமசிஷ்டி தன்னை யீவார்
உத்தமனே அஷ்டசித்தி கைக்குள்ளாச்சு
மாதவே சரசோதி யென்றே யோத
வாச்சுதடா சற்பன்ன பாஷையின் விஸ்தாரம்
வேதரிஷி என்பார்க ளிவர்புவனை யென்பார்
மேலுமிவ ரறியாத அறிவுமில்லை
யாதரவாய்ப் பூசைசெய்து தீர்ந்தால்
அப்புறத்தே மணிபூரகத்தைப் பாரே. (83)

விஷ்ணு பூசை

பாரப்பா பிறைகோண மகாரபீடம்
பாங்கான விஷ்ணுவு மகாலட்சுமியு மொன்றாய்
சேரப்பா இருந்தவர்தா மொன்றாய்நின்றார்
சிந்தையிலே மவுனமாய் சூட்சஞ்செய்வாய்
சாரப்பா வபிஷேக மெல்லாஞ் செய்து
சகல வத்திராபரணஞ் சுகந்தபுட்பம்
வாரப்பா பரிமளங்க ளெல்லாஞ் சாத்தி
வளமாகப் பரமானம் - பாலும் வைத்துவையே. (84)

வையப்பா ரசவற்கம் பலகாரங்கள்
வாகானாம்பூலம் பழம்தேங்காய் எல்லாஞ்
செய்யப்பா நெய்வேத்தியஞ் செய்தபின்பு
திறமாக தூபமொடு தீபங்காட்டி
மெய்யப்பா வெட்டெழுத்துஞ்சாத்தி யங்கொண்டோது
விளங்கவே லட்சுமியும் விஷ்ணுமாவாய்
பொய்யப்பா சொல்லவில்லை புருவமையம்
பூட்டடா திறவுகோ லசவைதானே. (85)

தானென்ற யோகத்தில் வாசிபார்க்கில்
தடையறவே மவுனமுன்னுங் கண்டத்தேதான்
கானென்ன சுழினையடா பிடரிகண்டங்
கைமுறைதா னிவ்வண்ண மாருஞ் சொல்லார்
வானென்ற கேசரியா மவுனமுட்டில்
மக்களே சிவயோகம் வழியேகாணு
மூனென்ற மந்திரமே அனாதிபீட
முரைத்தாக்கால் மவுனமது ஞானமாமே. (86)

ருத்திர பூசை

ஆமப்பா அனாகதத்தில் முக்கோணத்தில்
அப்பனே நடுவேகேள் சிகாரபீடம்
ஓமப்பா ருத்திரனும் பார்வதியுமாக
வொளிபோலே யிருந்தார்கள் உள்ளத்தேதான்
நாமப்பா மனத்தியான பூசைசெய்தோம்
நன்றாக வபிஷேக மெல்லாஞ்செய்து
வாமப்பா வஸ்திராபரணம் புட்பம்
மலரான சுகந்த பரிமளங்கள் சாத்தே. (87)

சாத்துவா யுருத்திரனைச் சூட்சஞ்செய்து
தாம்பூலம் பால்பரமானங்கள் கனிகளோடு
ஏத்துவாய் தீபமொடு தூபங்காட்டி
யேகாந்த புருவமையத் தேற்றிப்பாரு
தோத்தரிக்க எட்டெழுத்துஞ் சாத்தியங் கென்றோது
துரியமென்ற சுழுத்தியிலே மனம்புகாது
நாற்றிசைக்குஞ் சங்கார கர்த்தனாவாய்
நாதாந்தச் சுழினையிலே நாட்டு நாட்டே. (88)

மகேஸ்வர பூசை

நாட்டாத பேருக்கு வாதமென்ன
ஞானமென்ன யோகமென்ன அறிவங்கேது
சூட்டாத லட்சியந்தா னிருந்தாலேது
தொடுகுறியாஞ் சுழினைநந்தி காணாதார்க்கு
காட்டாதே யோகமொடு ஞானமிரண்டுங்
கசடன் என்ற பிள்ளைகட்குச் சொல்லவேண்டா
மூட்டான விசுத்தி யறுகோணந்தன்னில்
முத்தியாம் வகாரவித்தை முறையைக்காணே. (89)

காணப்பா மயேசன் மயேஸ்பரியுமார்க்கங்
கலந்துநின் றகண்டமது சுழினைநாடி
தோணப்பா விதுசூட்சந் தூலங்கேளு
சொல்லுகிறேன் கழுத்துள்ளே பிடரிகண்டம்
வீணப்பா தூலமது வேறிப்பாரு
வேதாந்த வந்தத்தே யாறும்பாரு
லூணப்பா விதுவல்லோ சூட்சமார்க்க
மொளிகண்டால் வெளியாகு முற்றுப்பாரே. (90)

மவுன பூசை

பாருநீ மனத்தியான மவுனபூசை
பண்பாக வபிஷேக மெல்லாஞ்செய்து
சாருவாய் வஸ்திராபரணம் பூட்டி
சகலபுட்ப பரிமளங்க ளெல்லாஞ் சாத்தி
தேருநீ யசங்க மயேசுவர சூட்சம்
நினைவாலே லட்சியத்தி னடுக்கைப் பாரு
காருநீ ரசவர்க்கம் பலகாரங்கள்
கட்டாகத் தீபமொடு தூபங் காட்டே. (91)

காட்டியே நெய்வேத்தியஞ் செய்தபின்பு
கயிலாச தேகமாந் தூலசூட்ச
மூட்டியே யெட்டெழுத்துஞ் சாத்தி வங்கென்றோது
முக்திபெற வாசியொடு வாதம்யோகம்
நாட்டியே கோபமென்ற அக்கினிதான்போச்சு
நலமான கற்பமெல்லாஞ் சித்தியாச்சு
பூட்டியே யட்டகர்ம மவர்க்கேயாச்சு
புகழான வாதமங்கே பொருளுமாச்சே. (92)

ஆச்சப்பா லட்சயமே இடமதாச்சு
வாகார மூன்றுமொன்றாய் சுழினைநாடி
வாச்சப்பா சுழிமுனையிலி லட்சியமாம்வீதி
மவுனமுற்ற வாலையங்கே கொலுவிருந்தாள்
பேச்சப்பா இவள்பூசை வாமபூசை
பிலப்பதற்கு வதனத்திற் சண்முகமாம்பூசை
மூச்சப்பா வற்றிடத்தே சூட்சபூசை
மூவுலகாம் வெளிப்பூசை யொளியைக்காணே. (93)

சதாசிவபூசை

காணப்பா ஆக்கினையே லலாடபீடங்
கயிலாச புருவமய்யஞ் சகலருக்குஞ்சித்தி
பூணப்பா மவுனமிட்ட பிறைபொற்கோணம்
புகழான நடுவிருந்தாள் சதானந்திமணியுஞ்
தோணப்பா இருவருந்தா னொளியாய்நின்றார்
சொர்க்கமென்ற பதவிஇது மவுனத்தோர்க்கு
வீணப்பா மற்றதெல்லாங் கிரிகையாச்சு
மேலா மாதாரமென்ற சூட்சந்தானே. (94)

சூட்சத்தைப் பார்த்தறியார் சொன்னாலுந்தான்
தூலத்தே பார்த்தறிவா ருலகமாடு
சூட்சத்தை யாராலே சோதிக்கப்போந்
துரியமென்ற வதனத்தே சூட்சமெல்லாஞ்
சூட்சத்தை யாராய்ந்து பூசைசெய்தேன்
சுகமாக வாய்க்குள்ளே குளிகைபோட்டு
சூட்சத்தை யபிஷேகமெல்லாஞ் செய்து
சுகந்த வஸ்திராபரணஞ் சூட்சஞ்சாத்தே. (95)

சாத்தினேன் சதானந்தி சூட்சஞ்செய்து
தாய்ப்பேச பூசைசெய்தேன் பரமானம்வைத்து
நேத்தியாய் பால்பழஞ் சக்கரைபலகாரங்கள்
நிட்டையிலே நெய்வேத்திய மார்க்கமீந்தேன்
போத்தினேன் தூபதீபங்கள் காட்டி
புகழாக வெட்டெழுத்தாற் சாத்தி யங்கொண்டே
தேத்தினேன் தேகமடா யோகத்தாலே
சிறப்பான குளிகையினாற் கைக்குள்ளாச்சே. (96)

கைக்குள்ளாஞ் சகலசித்துங் கர்த்தாவேயென்று
கண்கொள்ளா தொளிபார்க்கப் புருவமய்ய
மெய்க்குள்ளே மேலாறுங் கீழாறுந்தான்
வேதாந்த சதாசிவத்தில் பூசைமார்க்கம்
பொய்க்குள்ளாய்ப் போகாது போதஞ்சொன்னேன்
புத்திகெட்ட சித்தர்களே புகலக்கேளு
முக்கியமுடன் பராபரமாம் பதத்தில்நின்ற
முத்தியுமே ஒன்றான பூசைகேளே. (97)

கேளப்பா சரிதையொடு கிரிகையோகம்
கேவலமாஞ் சாலோக சாமீபந்தான்
நாளப்பா சாரூபங்கான மூன்று
நலமான வெளிப்பாமு மொளிப்பாமுந்தான்
வேளப்பா சித்தரொடு சித்தானந்தம்
வேறு விதமாகவே காணாதப்பா
வாளப்பா இடகலைபின்கலை சுழிமுனையோடு
மகாகோடி மூன்றுவிதமாகக் காணே. (98)

காணப்பா இதுகடந்தால் சாயுச்சியமென்பார்
கண்வெளுத்த நிற்குணத்தின் பரந்தானென்பார்
தோணப்பா ஞானமென்பார் கேசரிதானென்பார்
சொல்லுக்கு மெட்டாத பொருள்தானென்பார்
ஆணப்பா அல்லவென்பார் பெண்ணேயென்பார்
ஆச்சரியஞ் சச்சிதானந்தம் யென்பார்
பூணப்பா வேதாந்த அந்தமென்பார்
பொற்சடையோன் கோலமுற்ற பூட்டென்பாரே. (99)

பாரப்பா இதுவெல்லாந் தூலப்பேச்சு
பராபரத்தைச் சொல்லுகிறேன் சூட்சமாக
வாரப்பா சொல்லார்கள் நூலிற்சொல்வா
ராச்சரியஞ் சிரசுநடு சத்தவெள்ளஞ்
சாரப்பா தாமரைப்பூ வாயிரத்தெட்டிதழாய்த்
தத்துவங்கள் சூழ்ந்துநிற்கச் சத்தியெட்டு
வாரப்பா நாடியெல்லாஞ் சூழ்ந்துநிற்க
வாழுமே நாற்பத்து முக்கோணந்தானே. (100)

தானென்ற நாற்பத்து முக்கோணந்தான்
தாமரைக்கா யதின்மேலே நால்வர்காலாய்
வானானாஞ் சதானந்தி பலகையாக
வாசமுறு மனந்தப்பட நாகமெத்தை
பானான வதின்மீதிற் பராபரந்தான்
பரையோடு கூடியொன்றா யொளியாய்நின்றார்
தேனான வமுர்தகளை யுண்டநாதன்
சித்தியெல்லா மிவராலாம் பூசைபண்ணே. (101)

பண்ணப்பா குருசூட்சங் கணேசபீடம்
பரிவான பிரணவத்தின் பீடவட்டம்
ஓண்ணப்பா மவுனமென்பார் சுழிமுனைமேலே
ஓகோகோ புருவமைய மொளியைப்பாராய்
விண்ணப்பா விந்துவல்லோ மவுனசூட்சம்
வேதாந்த சித்தாந்த மெல்லாமாகுங்
கண்ணப்பா பற்றியல்லோ நந்திகாணுங்
கலங்காதே சுழிமுனையிற் கண் கொள்ளாதே. (102)

கண்கொள்ளா திருப்பதென்ன சூடுசூடு
கண்மூடி யுருட்டிப்பார் கடுப்புத்தீரும்
விண்கொள்ளா திருப்பதுண்டோ வேதாந்தசித்தி
மேலெழுந்த அந்தமல்லோ பூரணந்தான்
பண்கொள்ளா ரிசைகொள்ளார் பாடுநூலிற்
பரிபாஷை போலாகும் பாட்டெல்லாந்தான்
நண்பான மவுனமடா பூசைமார்க்கம்
நலமாக வபிசேகமெல்லாஞ் செய்யே. (103)

செய்தபின்பு வஸ்திராபரணம் புஷ்பம்
 சிறப்பான சுகந்த பரிமளங்கள்சாத்தி
செய்தபின்பு பால்பழம் பரமானஞ்
 சர்க்கரைதேங்காய் பழரசவர்க்கம் பலகாரங்கள்
செய்தபின்பு தாம்பூல முதலாய்ச்செய்து
 தீபதூபங் காட்டி கருணைகூறச்
செய்தபின்பு மணியோசை சங்கவோசை
 சேகண்டி ஓசையுடன் தோத்திரம்பண்ணே. (104)

பண்ணப்பா அரியோ மங்சங்சிவாயா
 பராபர தேவாய நமாவென்றோது
விண்ணப்பா சுழிமுனையி லொளியோகாணும்
 வேதாந்தத் தத்துவங்கள் வெளியாய்க்காணு
மொண்ணப்பா பராபரமா மனமுமொண்ணு
 மொத்துப்பார் தம்பனமாங் குளிகை அரசம்நேருங்
கண்ணப்பா அப்பவல்லோ வெல்லாங்காணுங்
 கயிலாச சொர்க்கமென்பார் காணலாச்சே. (105)

ஆச்சப்பா அஷ்டசத்தி யேவல்கேட்கு
 அஷ்டபாலாள் கணங்களெல்லாங் கேட்கும்
ஆச்சப்பா பஞ்சகர்த்தா ளேவல்கேட்கு
 மகத்தான வாதார பூசைமார்க்க
மூச்சப்பா வற்றிடத்திற் சித்தியாகு
 மூதண்ட குளிகையினாற் சித்தியாகும்
பேச்சப்பா இதினாலே கற்பஞ்சித்தி
 பேய்மக்க ளிறப்பதெல்லா மிதினாற்பாரே. (106)

சிதம்பரபூசை

பாரப்பா சிதம்பரத்தில் பூசைகேளு
 பண்பான ரவிவட்ட மெட்டுமிட்டு
நேரப்பா லெழுவீதிக்குள்ளே கேளு
 நேராகக் கும்பமுனி தீட்சைக்குள்ளே
சாரப்பா இதனாட்ட வகையைச் சொன்னார்
 சார்வறிந்து வீதிதொறுந் தானேயிட்டு
காரப்பா வஞ்சுபத்தோ டக்கரமுமிட்டு
 காணவே நடுவெளியோமா மென்றிட்டே. (107)

இட்டபின்பு வட்டத்தின் மேலேகேளு
    என்மக்காள் மூன்றுவரை சதுரமாக
இட்டபின்பு வுள்வீதிக் குள்ளேகேளு
    இலங்கவே யஷ்டகெச மஷ்டநாகம்
அட்டசத்தி பாலரொடு பீசமிட்டு
    வாகாகு மவ்வீதிக்குள்ளே கேளு
திட்டமொடு கணேசனொடு கந்தன்சண்டன்
    திறமான வடுகனொடு துர்க்கைதானே. (108)

தானான க்ஷேத்திரனுங் கிரீடி
    பிருங்கிதரு தட்சிணாமூர்த்தி ரிஷிகளோடு
தானான சித்தரொடு தேவரோடு
    சாதிப்பா யிவர்களிட பீசமிட்டு
கோனான லிங்கத்தில் நேராய்நந்தி
    குருபீசங் கொடிக்கம்பம் பீசமிட்டு
வானான அஷ்டபெலி பீசமிட்டு
    மவுனமாய் நடுவரையில் சிதம்பரத்தைவையே. (109)

வையடா சிவகாமி யவட்குச்சூட்சம்
    வளமாகத் தியானித்து வபிஷேகமெல்லாஞ்
செய்யடா வத்திராபரணம் புஷ்பம்
    சிறந்தபரிமள சுகந்தமெல்லாஞ் சாத்தி
வையடா ஆனந்த நடராய்சூட்ச
    மவுனமென்ற சுழிமுனையில் மனத்தையூணி
மெய்யடா பரமானம் பால்ரசவர்க்கங்கள்
    விளங்கவே மிகப்படைத்து மேவுமேவே. (110)

மேவடா தாம்பூல முதலாய்வைத்து
    விளங்கவே தூபதீபங்கள் காட்டி
மேவடா மணிநாதஞ் சங்கநாத
    மேலான சேகண்டி நாதவோசை
மேவடா தோத்திரத்தை யோமென்றேதான்
    விந்து நாதத்துடனே யவ்வுஞ்சிறீயு
மேவடா அவ்வுங் கிலியுஞ்சவ்வு
    மேலான சிவாயமென்றுஞ் சிவாயமென்னே. (111)

என்னவே சிதம்பரதேவாய நமாவென்று
இஷ்டமுடன் சேவிக்கப் புருவ மய்யத்தே
யுன்னவே யொளிகாணும் வெளிமனமு மொன்றா
யூணவே கண்டாக்கால் வாதசித்தி
யன்னவே காயசித்தி குளிகைசித்தி
யப்பனே மவுனசித்தி வாசிசித்தி
மன்னவே காயசித்தி யோகசித்தி
மவுனத்தே ஞானசித்தி கற்பஞ்சித்தே. (112)

சித்தான அஷ்டசித்தி கைக்குள்ளாகுந்
தேகமெல்லாங் கயிலாச தேகமாகும்
பத்தான ரிஷியாகு மனந்தங்கோடி
பண்பான யுகங்கடிகை யமுர்தஞ்சிந்தும்
மகத்தான வுதரத்தே பாயும்பாயும்
வலமாக வெட்டெட்டாந் திருவிளையாட்டாடுங்
கொத்தான நடராஜர் திருநடனஞ்செய்வார்
கோலங்கள் பலரூபங் கொடுக்குங்கூடே. (113)

கூடுகட்டிக் கொண்டவர்க்குப் பஞ்சகர்த்தாள்
குடியிருப்பு நிசமாகு மாதியந்தம்
ஆடுமப்பா நடனமங்கே பூரணந்தான்
அறிவாலே இத்தனையு மறியவேணும்
வீடுகட்டிப் பிலப்பதற்கு சிவயோகம் வேணும்
விளங்கவே தம்பனமாங் குளிகை வேணும்
பாடுபட வேண்டாங்காண் குளிகை செய்தேன்
பண்பான முதற்காண்ட மைந்நூற்றுள்ளே. (114)

உள்ளபடி தம்பனமாங் குளிகையொன்று
உத்தமனே லகுவாகச் சொல்லிவிட்டேன்
எள்ளளவுந் தப்பில்லை குளிகைபோட்டால்
என்மகனே யோகமெல்லாங் கைக்குள்ளாச்சு
வள்ளலே யோகத்தின் குறியைக் கேளு
மகத்தான ரிஷிசித்தர் சொல்லார் சொல்லார்
கள்ளங்களில்லாமற் சொல்லுகிறேன் கேளு
களவில்லாப் பிள்ளைகட்கு விளம்பிடாயே. (115)

யோகக்குறி

விளம்புகிறேன் பூரகந்தான் முப்பத்திரண்டு
மேலான கும்பகந்தா னறுபத்துநாலு
விளம்புகிறேன் ரேசகந்தான் பதினாறாகும்
விருதான மாத்தரைக ளறியச்சொன்னேன்
விளம்புகிறே னங்வங்வயநமசியென்று - மீறி
யொருதிரஞ்சொல்ல மாத்திரை யொன்றாகு
விளம்புகிறே னிரண்டுதிரம் பூரகஞ்செய்
வெளியொளியை விழிமனத்தால் மேவியூணே. (116)

மேவியே கண்மூடி இறுக்கிப்பாரு
மின்னொளிபோல் காணுமங்கே நந்திமூலந்
தாவியே கும்பகஞ்செய் மாத்திரைக்கு
தருகாதே ஓங்அங்அங்யநமசிவா வென்று
கூவியே நாலுதிரங் கும்பித்தாற்பின்
கூசாமல் பின்கலையில் ரேசகஞ்செய்
சேவியே ஓங்சிங்சிங்சிவாயநமா வென்று
செப்பொருக்கால் மாத்திரை யொன்றாகுந்தானே. (117)

ஒன்றான மாத்திரையால் ரேசகஞ்செய்
உத்தமனே யோகத்தி லிதுவேமூலம்
நன்றான பதினாறுதரமுந் தீர்ந்தால்
நந்தியுறு ரேசகமே பௌரணையத்தொட்டு
சென்றாய் அமாவாசை வரைக்குந்தீரு
சிறப்பான பங்குனி சித்திரை இரண்டில்
அன்றடா அமாவாசியோகந் தீர்ந்தா
லப்பனே மதிதேய்ந்தாம் போலாம்பாரே. (118)

பாரப்பா சோடசமாய் தீருவோர்க்குப்
பண்பாகச் சொல்லிவிட்டேன் யாருஞ்சொல்லார்
சேரப்பா இதுவல்லோ வாசியோகந்
தீர்த்தப்பா கைமுறையாய் தீர்க்கமாட்டார்
காரப்பா என்னூற்குச் சிவனூலுமொவ்வா
கைகண்ட படிசொன்னேன் யோகசாதந்
தீரப்பா ரேசகத்தில் மாத்திரைநாலானால்
திடமான மயிற்சாய்கை சென்றுகாணே. (119)

காணப்பா மாத்திரைதா னூற்றுப் பன்னிரண்டுங்
கைமுறையாய் மாத்திரைதா னன்பத்தாறுந் தீர்ந்தால்
தோணப்பா பிரதமையாஞ் சாதகமே செய்யில்
சோதனையாய் சதுர்த்திவரை சொல்லக் கேளு
பேணப்பா வென்போல வெவருஞ் சொல்லார்
பிலக்குமடா அஷ்டமியிற் பிலத்துப்பாரு
ஊணப்பா மாத்திரையின் குறியைச்சொன்னே
னுத்தமனே அமாவாசை வரைக்குமூன்றே. (120)

ஊணடா பூர்வபட்சம் பிரதமையின் மட்டும்
ஓகோகோ மாத்திரைதா நூற்றுப் பன்னிரண்டுங்
காணடா சம்புவுண்டு விடுகு மார்க்கங்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் வாசியோகம்
பூணடா பௌரணையைத் தொட்டே
சம்புபூட்டிடா யமாவாசை மருநாள்மட்டும்
வீணடா மற்றதெல்லாம் யோகமாமோ
விண்மதியந் தேய்ந்தாப்போ லிடைகலையுமாமே. (121)

இடைகலையே சந்திரகலை மதிதேய்ந்தாப்போ
லிதமாகப் பின்கலையைச் சேர்ந்துபோச்சு
அடையாளஞ் சொல்லக்கேள் பதினாறுமாத
மப்பனே இவ்வண்ணம் யோகந்தீரு
விடையாதே சந்திரகலை தேய்ந்துபோச்சு
வேதாந்த நந்தியைப்போல பேசலாச்சு
உடையாணிபோலிருந்த புரியஷ்டகம்தான்
ஒமுடிந்து போச்சுதடா உண்மைதானே. (122)

உண்மையென்ற பூரணமே தெய்வந்தெய்வ
முற்றகுல தெய்வமெனும் பஞ்சபூதம்
வண்மையென்ற புரியஷ்ட மாய்ந்தபோதே
மனம்பிலத்து பஞ்சகர்த்தாள் மாண்டாரெல்லாந்
தண்மையென்ற சுழிமுனையே பிடரியோகந்
தாக்கியல்லோ விழிமனத்தா லறிவுமாச்சு
கண்மயலாம் யோகத்திற் கடுப்புத் தோன்றுங்
கசக்கிவிழி யுருட்டிவிடு கண்கொள்ளாதே. (123)

யோகத்திற்குப் பத்தியம்

கொள்ளடா மூதண்ட லேகியத்தைக்
கொண்டுகொண்டு கேசரியில் வாசியூது
யெள்ளடா வானாலுந் தருகாவாசி
இரத்தத்தின் தம்பனமாங் குளிகையாலே
வள்ளலே பூரகந்தா னிடத்தேபூரி
வளமாக நந்தியிலே கும்பித்தேநில்
சள்ளடா பின்கலையில் ரேசகந்தான்
கற்றுச்சாகாதே கைமுறையாய்ச் சார்ந்துபாரே. (124)

பார்க்கையிலே அயம்விரித்துச் செந்தூரத்தின்
பரிவாக மண்டலமே கொண்டபின்பு
வேற்கையிலே வல்லாரை யிதுக்குப்பின்கொள்
இன்பதுன்ப மிரண்டுமற்று ஒடுக்கங்காரு
கார்க்கையிலே அறுசுவையுஞ் தள்ளிப்போட்டால்
கடினமில்லை வழலைதனை வாங்கும்போது
மூற்கமாய் வைகாசி மாதந்தொட்டு
முழுமோச வழலைதனை வாங்குவாயே. (125)

வாங்கும்போ தமுரியிலே கடுக்காய்கொள்ளு
வளமாக இருபதுநாள் கொண்டபின்பு
தேங்கும்போ தமுரியிலே மிளகேயுண்ணு
சேரவே யஞ்சுமுதல் நூறுமட்டும்
பாங்குபெற மூதண்ட கசாயந்தன்னை
பரிவாக மாலையிலே பண்பாய்க்கொள்ளு
ஏங்காதே நடுச்சாமம் பசுவின்பால்கொள்
இவ்வண்ணங் கைமுறையாய் இயம்பிடாயே. (126)

இயம்பாத சேதியொன்று சொல்லக்கேளு
இரவிலே நடுநேரம் பாற்சோறுண்ணு
தயங்காதே யித்தையெல்லாம் விட்டுப்போட்டு
தாறுமாறாய் வேறே கற்பந்திண்ணு
முயங்காது கூடிவர மாட்டாதப்பா
முழுமோச மிவ்வளவு மறைத்தார்சித்தர்
தியங்காதே இவ்வண்ணஞ் செய்தபின்பு
திரும்பவுந்தா னின்னமொரு சேதிகேளே. (127)

கேளப்பா கடுக்காயுஞ் சிவதையுமாய்ச்சேர்த்து
    கெடியாகச் சமபாகம் வெண்ணீர்கொள்ளு
நாளப்பா இருபதுநாட் சென்றபின்பு
    நலமாக நாதாந்த அனுபானத்தில்
வாளப்பா சட்டைமுனி கற்பம்நூறில்
    வகையாக வேறுதுறை மார்க்கஞ்சொன்னார்
ஆளப்பா அப்படியே அண்டமட்டும்
    அவர்சொன்ன கைமுறையைக் கொண்டுதேறே. (128)

தேறினா லப்புறத்தே லோகங்கொள்ளு
    திரமான காந்தமுண்ணு அப்பிரகமுண்ணு
கூறினே னதின்பிறகு தங்கமுண்ணு
    கொள்கியபின் நாகமுண்ணு கெந்தியுண்ணு
மீறினேன் அதுவெல்லாந் தளசெந்தூரம்
    வேதாந்த அகஸ்தியமுனி வயித்தியமுந்நூறில்
மாறிலாச் செந்தூரவைப்புச் சொன்னார்
    மடக்கறிந்து நெய்வரும்போ தறிந்துபோடே. (129)

போடடா செந்தூரந் தின்றபின்
    புகழான உபரசங்கள் செந்தூரந்தின்னு
வீடடா பிலத்துதடா வழலைமுதற்கொண்டு
    விளங்கியதோ ருபரசத்தின் செந்தூரமட்டுங்
கூடடா மூதண்ட கிஷாயந்தன்னை
    கொண்டுவரச் சலியாதே தோஷமில்லை
காடடா போவானே னிதுமட்டுங்கொள்ள
    கற்பசித்தி யானபின்பு குகையிற்செல்லே. (130)

செல்லவே சித்தரங்கே யெதிர்க்கமாட்டார்
    ஜெகச்சால சித்தருக்கு மெய்க்குருவாய்க் காணுங்
கல்லடா வுன்தேகஞ் சாவுபொய்பொய்
    கயிலாச தேகமாங் குளிகையோகம்
வெல்லுமே ஞானத்தைக் கைக்குள்ளாக்கும்
    வேதாந்த் சிரோமணியே யென்ற'சொல்வார்
வில்லடா வளைந்தல்லோ அம்புதைத்தாப்போலும்
    விழிமனதே புருவத்தே விளங்கவையே. (131)

வையப்பா நந்திகுரு மூலர்பேரன்
மகத்தான போகருக்குப் பிள்ளையானேன்
செய்யப்பா தீட்சையிலே முப்பத்திரண்டு
செப்பினேன் தூலமடா கடைக்காண்டசூட்சம்
பொய்யப்பா சொல்லவில்லை யாறுபத்தில்
பூட்டினேன் சூட்சமதில் சொல்லவில்லை
மெய்யப்பா சூட்சமதிற் சொல்லவில்லை
விளங்குமடா சூட்சமொரு மூலம்ரெண்டே. (132)

ரெண்டான தேதென்றால் விந்துநாதம்
நேர்ந்த சுழிமுனையல்லோ நந்திமூலங்
கண்டேனான் மூலமங்கே பொருளாய்க்காணுங்
கருவறியாப் பிரமாணஞ் சொல்லக்கேளு
கொண்டாட சிவதீட்சை சூட்சமாகுங்
குருமூலஞ் சத்தியுட தீட்சையாகுந்
தெண்ட னிடுவார்களைப்போல் ஜெகத்தோரெல்லாந்
தீட்சையிலே முப்பத்து ரெண்டுங்காணே. (133)

சிவதீட்சை

காணடா சிவதீட்சை பதினாறாச்சு
கலையிலே சோடசந்தான் பதினாறாச்சு
ஊணடா சிவதீட்சை யுரைக்கக்கேளு
வுத்தமனே சூட்சமொடு மூலம்ரெண்டுந்
தோணடா செவிக்குரைப்பார் பாடவில்லை
தொடுகுறியாம் வாசியைப்போ லொழித்துப்போட்டார்
பூணடா மூலமுத லாறுதீட்சை
புகழான ஒளிமட்டில் தீட்சையஞ்சே. (134)

அஞ்சோடு சிவதீட்சை பதினாறாச்சு
அப்பனே சுழியென்ற மூலாதாரம்
வஞ்சகமா யொளியின்மேல் மூலமென்பார்
வகையாக மவுனத்தே யிருந்துபாரு
அஞ்சாதே யுலகமயக்கதனிற் பட்டார்
ஆகையினா லுலகமெல்லா மழிந்துபோனார்
நஞ்சான சீஷ ருக்கு மூலசூட்சம்
நாட்டாதே தூலத்தின் தீட்சைநாட்டே. (135)

தீட்சையிலே முப்பத்துரெண்டு தூலஞ்
சித்தருக்குப் பாடிவைத்தேன் சூத்திரத்தில்
தீட்சையிலே மூலமொடு தூலசூட்சந்
திடமாக மூன்றுவகை தீட்சைமார்க்கந்
தீட்சையிலே முதற்றீட்சை தூலமோது
தெளிவான சிந்தையுற்றால் மூலமோது
தீட்சையிலே மறுபடிதான் சூட்சமோது
சீஷ ரகந்தெளிந்திடவே செப்பினேனே. (136)

மூலாதார நிலை

செப்புகிறேன் மூலாதாரத்தைக் கேளு
சிறப்பான நாதமொடு விந்துவாயு
வொப்புகிறேன் மூன்றுமொன்றாய் சுழிமுனையுள்ளே
யுத்தமனே நந்தியங்கே கொலுவிருந்தார்
வம்புகிறே னாதாரமே சிவமதாகும்
ஆதியந்த மிவராகுஞ் சூரியவட்டம்
கொப்புகிறே னோரெழுத்து நின்றமூலங்
கோலமெல்லாம் மிகப்படைக்கும் மவுனந்தானே. (137)

மவுனமென்றால் வாய்மூட லல்லவல்ல
மகத்தான ரவியினிட பிரகாசந்தான்
மவுனமென்றால் மூன்றெழுத்து என்பார்மாண்பர்
வாரமா யோரெழுத்தென் றறியார்வட்டம்
மவுனமென்றால் சிவயோக மார்க்கந்தோற்றும்
மற்றதெல்லா மூலமல்ல இருகண்ணாட்டம்
மவுனமென்றால் பிரணவத் தொடாமுமென்ன
வட்டமென்ற மூலமென்னு மார்க்கங்காணே. (138)

காணப்பா சூட்சமென்ற மந்திரங்கேளு
கருணையுடன் பிரணவமும் பிரணவத்தாதி
ஊணப்பா மூன்றெழுத்துஞ் சூட்சமாச்சு
வுத்தமனே மூலமது சிவதீட்சையாச்சு
தோணப்பா சூட்சமது சத்திதீட்சை
சொல்லான முதற்றீட்சை இதுவேமுத்தி
பூணப்பா மூலமது சித்தியாகும்
புகழான சிவயோகம் பூட்டிப்பாரே. (139)

பூட்டிப்பார் சூட்சமந்திரம் சிவயோகந்தான்
போதமுற்ற ரிஷிசித்தர் பதவியுண்டாம்
மூட்டிப்பார் சிவசத்தி இரண்டாந்தீட்சை
முக்கியமாய்ச் சொல்லுகிறேன் பிள்ளாய்கேளு
மீட்டிப்பா ரவிநாத னடுத்தமூலம்
விளங்கவே யபானத்தின் விந்துமூலம்
நாட்டிப்பா ரும்மென்றால் சித்தியாச்சு
நலமான சூட்சமந்திரம் ஓமுமென்னே. (140)

என்னவே சிவசத்தி மனதாம்பூசை
யெளிதல்ல சிவயோகம் பெரியோர்சொல்லார்
உன்னவே இருவிழியின் கீழொன்று
வுய்த்துப்பார் சுவாதிஷ்டானத்தின் ரூபம்
பன்னவே மூன்றான சிவசத்திதீட்சை
பரிவாகச் சிவதீட்சை மூலஞ்சொல்வேன்
நன்னவே நமயவசி சிவயோகந்தான்
அங்கென்றால் சூட்சமடா சிவயோகந்தானே. (141)

தானென்ற மூலத்தாற் சித்தியாகுஞ்
சத்தியுட தீட்சையினாற் சோதிகாணும்
பானென்ற பரஞ்சோதி சூரியப்பிரகாசம்
பாங்கான மானதமாம் பூசையுந்தி
கானென்ற தீட்சையிலே நாலாந்தீட்சை
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் தூலம்விட்டு
வேனென்ற மூலத்தைச் சொல்லக்கேளு
விளங்கவே மனத்தின் பிரமாணந்தானே. (142)

தானான மூலமது பிரணவத்தினோடு
சாற்றுகிறே னகாரமுத லஞ்சுசேரு
பானான லேகியங்கொள் சித்தியாச்சு
பண்பான சூட்சத்தைச் சொல்லக்கேளு
ஒநமா வென்றோது வுருகுபொன்போ
லொளிகாணு முன்போலே இதுவேசித்தி
வானான மனமாண்டாற் பொருளதாகும்
வழங்குதற்கு அறிவல்லோ மூலம்பாரே. (143)

பஞ்சதீட்சை

பாரப்பா அஞ்சாகுந் தீட்சைகேளு
பரிவான சிவதீட்சை பிரணவந்தான்
காரப்பா சிகாரமுத லஞ்சுங்கூட்டி
கண்ணொளியி னிருப்பிடந்தான் சூட்சங்கேளு
வாரப்பா மவுனத்தே யங்சங்கென்று
மனமிறுகச் சிங்கென்று மாட்டியூது
சேரப்பா ரவிமதிபோ லொளிதான்காணுஞ்
சித்தரெல்லாங் கைவசமாந் தீட்சைகேளே. (144)

கேளப்பா இதுவரைக்கு மார்தான்சொல்வார்
கெடியான சித்தர்சொல்வர் ரிஷிகள்சொல்வர்
வாளப்பா வெந்தனுட நூலேசொல்லும்
வாய்ப்பான ஆறாகுந் தீட்சைகேளு
வேளப்பா கண்ணொளியே யங்கென்றூது
வேதாந்தஞ் சித்தாந்தஞ் சூட்சங்கேளு
மூளப்பா வங்சங் கென்றுபாரு
மூவுலகும் பச்சைவர்ண மாகும்பாரே. (145)

பச்சைவர்ணம் போல்காணுந் தேவிரூபம்
பக்தியுடன் சிவயோக மானதமாம்பூசை
மெச்சவே யேழாகுந் தீட்சைகேளு
வெளியல்லோ வொளியென்றும் பிரமாணந்தான்
அச்சையெல்லாம் படைத்தழிக்குஞ் சிவலோகந்தான்
அருள்மூல மந்திரமாஞ் சிவாயமென்னே
வுச்சிதமாஞ் சித்தியதாஞ் சூட்சங்கேளு
வுண்மையுடன் அங்சங்கென் றோதுவோதே. (146)

ஓதியே சிவயோகஞ் சுழிமுனைமீதில்
உத்தமனே ரவிபோலே யொளிகள்காணும்
நீதியாந் தாயங்கே வார்த்தைசொல்வாள்
நிலைத்துநின்ற யெட்டாகுந் தீட்சைகேளு
ஞாதியென்ற நாசிநுனி நந்திநந்தி
நடுவான குண்டலியே சத்திசத்தி
வேதியென்ற மூலமந்திர மொங்வங்கென்று
விளங்குமே சத்திஎட்டாந் தீட்சைக்குள்ளே. (147)

உள்ளபடி சொல்லுகிறேன் சூட்சந்தன்னை
உத்தமனே மவுனத்தா லங்கென்றோது
வள்ளலே பஞ்சவர்ண மாகசத்தி
மானதமாம்பூசை சிவயோகத்திற் காணுங்
கள்ளங்க ளில்லையப்பா கண்ணிற்றோன்றுங்
கருத்தினுள்ளே யுள்ளமென்ற கருத்தைப்பார்க்கில்
விள்ளவே ஒன்பதாந் தீட்சைமூலம்
விளங்கவே வயநமசி யென்றுமேவே. (148)

மேவடா சத்தியுட சூட்சந்தன்னை
விளம்புகிறேன் ஓங்வங்சங் கென்றுதானே
தாவடா மானதமாம் பூசைபண்ணத்
தன்னுருவங் கண்ணாடிபோலே காணுங்
கூவடா சிவசத்தி பத்தாந்தீட்சை
கொள்ளுகிறேன் வெளியொளியி னந்தரத்தே
நாவடா மூலமங்கே நமவசியென்றோது
நாக்கைமேல் நோக்கியந்த வமுர்தங்கொள்ளே. (149)

கொள்ளடா பூரணசந்திரனைப் போலே
கூர்விழியிற் காணுமங்கே சத்திதீட்சை
கொள்ளடா சூட்சமதா யங்சங்கென்றே
கோணாமற் பிராணவாயுவை யடக்கி
கொள்ளடா மானதமாம் பூசைபண்ணு
கோடிசூரியப் பிரகாசந்தான் வீசும்
கொள்ளடா பானமங்கேல கிரிகொண்டேயேறும்
கூவியே தசதீட்சை கூறினேனே. (150)

கூறினேன் சிவசத்தி தீட்சை மூலங்
குருவான ரிஷிசித்தர் கூறார்கூறார்
தேறினேன் ஓம்சிவாயவென்று சொன்னேன்
சித்தியுண்டாஞ் சத்தியுட சூட்சங்கேளு
மாறினேன் ஓம்சிவாயா வென்றுமாறு
மகத்தான புருவத்தினடுவே கேளு
ஊறினேன் தாண்டவங்கள் நடனங்காணும்
உத்தமனே சிவயோக முற்பனமாமெண்ணே. (151)

சடாதார தீட்சை

உற்பனமாய் சடாதார தீட்சைகேளு
ஓகோகோ விந்துநிலைப் பிரமாணந்தான்
நற்பதமாஞ் சுழிமுனை நாடியூடே
நாமிருந்தோங் குருவிருந்தார் சீவகளையங்கே
பொற்பதமே சிவசத்தி துவாதசமாந்தீட்சை
பூட்டுகிறேன் மூலத்தின் சிங்நமாவென்று
கற்பாந்த காலமெல்லாம் நொடியாய்க்காணுங்
கதிரொளிபோல் தேகமதாஞ் சூட்சங்காணே. (152)

காணவே சொல்லுகிறே னங்கென்றோது
காயமது வெண்மையாய்ப் பிரகாசிக்கும்
தோணவே பவளம்போற் சத்திதோன்றுந்
துடியான மானதமாஞ் சதாசிவத்தின்பூசை
பூணவே நாதத்தின் பிரமாணங்கேள்
புகழான பதின்மூன்றாந் தீட்சையூண
நாணவே சிவசத்தி மூலங்கேளு
நன்றாகு மவயவென்று நாடிப்பாரே. (153)

சக்தி சூட்சம்

பாருநீ சத்தியுட சூட்சங்கேளு
பக்தியுட னடுமாறு வயமாவென்று
தேருநீ இருதுடையில் இருபதத்தையேற்றி
தெளிவாக இருகரத்தின் விரல்களாலே
கோலுநீ இருகாலின் பெருவிரலைப்பிடித்து
கூசாமல் வாய்வதனை யுள்ளடக்கிப்பூரி
சாருநீ மவுனத்தை விதிதப்பாமல்
சதாசிவத்தின் தெரிசினை யுண்டாகுந்தானே. (154)

உண்டாகும் நாதாந்தப் பதினாலாந்தீட்சை
உத்தமனே சடாதார சிவசத்திதீட்சை
பண்டாகுஞ் சிவயோக மூலங்கேளு
பரமானந்தப் பொருளே சிவாயமென்ன
கொண்டாகுஞ் சத்தியுட சூட்சங்கேளு
கொடுத்தாண்ட யவசியென்றே கூவுகூவு
சண்டமாருத மெல்லா முள்ளடங்கி
சடைநாதமுற்று ருத்திரனாகுங் கண்ணே. (155)

கண்ணொளியாய் விண்ணொளியைக் காணவேணும்
காயமெனு முருவமே பிரமாணங்கேள்
தன்னொளியே பதினஞ்சாந் தீட்சைமார்க்கஞ்
சாத்துகிறேன் சிவசத்தி தீட்சைமூலம்
பண்ணொளியே பராபரமாஞ் சமாதிரெண்டுஞ்
பாசமா மூலத்தைச் சொல்வேன்கேளு
நண்ணொளியே யங்கென்று நாட்டியூது
நலமான சூட்சங்கள் சிங்கென்றோதே. (156)

ஓதவே லிங்கமங்கே முழங்கும்பாரு
உற்றதே அக்கினிபோற் சொரூபங்காணுங்
காதாரக் காணகண்ட மான்மழுவுமேந்தி
கருணைதிரி நேத்திரமு மரவும்பூண்டு
வாதாடி நடனமிடு மாயியோடே
வளமாக வளர்ந்தவரை லிங்கம்வாழும்
தாதாவென்பார் ரிஷிகள் சித்தரெல்லாந்
தருவான பதினாறாந் தீட்சைகேளே. (157)

கேளப்பா அரூபமே பிரமாணங்கேள்
கெடியான சிவசத்தி தீட்சைமூலம்
வாளப்பா அகாரத்தில் வகாரத்தோடு
மருவவே சிவயோகந் தானாஞ்சித்தி
நாளப்பா சூட்சத்தின் வகையைக்கேளு
நாதாந்த பூரணமாஞ் சிங்வங்சிங்வங்
நீளப்பா சத்தியுட முத்தியுண்டாம்
நின்றநிலைப் பிறப்பிறப்பு மிதிலென்றெண்ணே. (158)

என்றதொரு சிவசத்தி மூலஞ்சூட்ச
மியம்பாதே போனார்கள் சித்தரெல்லாம்
நன்றாகச் சட்டைமுனி சொன்னார்ப்பாடல்
நலமாகத் திருமூலர் கிழித்துப்போட்டார்
வென்றியுள்ள மூலரைநான் தெண்டனிட்டு
வெளியொளிபோல் ஞானத்தை மேவிப்பாட
அன்றெனக்கு அருள்செய்தார் வேதாந்தஞ்சொன்னேன்
அலையாமல் சீஷர்களே யாகங்கட்டே. (159)

யாகசாலை கட்டு முறை

யாகசாலைகள் கட்டவகையைக் கேளு
யானுரைப்பே னுங்களுக்காய் நன்றாய்மைந்தா
வாகான சுற்றகலம் நீளம்வீதி
வாய்ப்பாகச் சதுரமாய்த் தட்சக்கோற்கு
வேகமா யிருபத்துஆறுமுழங் கொண்டு
விளங்கவே தளங்கொண்டு கால்கள்நாட்டி
மோகமுடன் பசுங்கொம்பில் பச்சோலைமேய்ந்து
மூன்றுமுழ வகலத்தில் முகப்புக்கட்டே. (160)

கட்டுவது வடமுகமாய் முகப்புப்போடு
கட்டாக அஞ்சுமுழ நீளங்கொண்டு
தொட்டுநீ யாகத்தை முகடுபெறக்கட்டி
சோம்பாக ஓலையெல்லாந் தெரியாமற்றான்
திட்டமாய்ப் பட்டுவஸ்திரம் விரிந்துகட்டி
சிறப்பாக மலர்புஷ்ப மாலைதூக்கி
ஒட்டுவது முகப்புமுதல் வாசல்தோறு
முத்தமனே குலைவாழை யூன்றிநாட்டே. (161)

நாட்டியபின் மாந்துளிரு மாங்காய்க்கொத்தும்
நலமான கமுகம்பூ தென்னம்பூவுஞ்
சூட்டியதோர் தாழம்பூ செண்பகப்பூ
தூக்கிச் சோம்பாக வெலுமிச்சம்பழச்சரமுந் தாக்கி
பூட்டியே கன்னலெங்கும் நிற்கக்கடடி
புகழாக இளநீர்கள் பொலிவாய்ப்பூட்டி
தாஷ்டிகமாய்ப் பலகனிகள் தமரத்தோடு
சந்தோஷ மோகமதா யாகஞ்செய்யே. (162)

செய்யப்பா யாகம்வளர் சாலைக்குள்ளே
திசையெட்டிற் பெலிப்பீடம் செய்ததின்மேல்
வையப்பா அஷ்டகர்ம அஞ்செழுத்தால்
வளமாக அஷ்டகும்ப மெண்படிநீர்கொள்ள
மெய்யப்பா வெண்குடத்தேன் கழஞ்சிதங்க
மீதுசலம் நிறையவிட்டு விதமாய்ப்பட்டு
வெய்யப்பா எட்டுகும்பத் தேன்கழஞ்சி
தங்கமிட்டு மாந்தளிர் தேங்காய்வையே. (163)

வைத்ததின்மேல் திரிதெற்பை முடிந்துபோடு
வளமாக இரண்டு சாணாகக்கொண்டு
கைக்குள்ளே யஷ்டபாலகரைத் தானே
கனிவாக தியானித் தாவாகனித்து
வைத்திடுவாய் வாசல்தொறுந் துவாரபாலாள்
வாசலுக்கப்புற மென்கும்பம் வைத்து
சத்திபெற வஷ்டகர்மம் கும்பம்போலே
தங்கநீர் வஸ்திரமுஞ் சாரப்போடே. (164)

போட்டந்த மணிதேங்காய் மாந்துளிரும்வைத்து
புகழாக வாசல்தொறு மாவாகனித்து
நாட்டந்த நடுமுகப்பின் நேராய்க்குண்டம்
யாகமது வளர்ப்பதற்கு திரிகோணந்தோண்டி
தேட்டந்த கைமுழமாய்த் தனியவப்பா
கெல்லி சிறப்பாய்ப்பூசி யுலரப்போடு
கூட்டந்த குண்டத்தின் மேல்பக்கத்தே
கும்பகுடம் வைப்பதற்குத் திரளைப்போடே. (165)

திரணையது சதுரமாய் முழவுயரஞ்செய்து
சித்திபெற அஷ்டகர்மத் தாலேகட்டி
திரணையின்மேல் நாற்பத்து முக்கோணத்தை
தியானித்து அதினடுவே விந்துவட்டந்
திரணையது வட்டத்துப் பச்சரிசியிட்டு
சிலமதில் முக்குறுணிகொண்ட கும்பம்வைத்து
அருணனைப்போல் ரூபமங்கே யாவானித்து
அட்டகும்ப முதலாக முப்புரிநூல்சுற்றே. (166)

சுற்றியே யொருபலந்தான் தங்கம்போடு
துடிமீறும் பராசத்தி வருவாளங்கே
முத்திபெற மாந்தளிர் தேங்காயும்வைப்பாய்
மோகனமாஞ் சிவந்தபட்டு வுத்தரீகஞ்
சித்தியதாங் கும்பத்தின் தூறுக்குள்ளே
சிதறாமல் கழஞ்சித்தங்கத் தகட்டில்வைப்பாய்
பத்தியாய் தம்பனத்தால் கும்பம்வைத்து
பாங்கான கும்பமெல்லாம் புழுகுபூசே. (167)

பூசுவாய் சந்தனங்கோரோசனை சவ்வாது
பூரமொடு குங்குமப்பூ பச்சைகூட்டி
வீசவே குளவிந்த மெல்லாமப்பால்
விளங்கியதோர் கும்பத்துக் காபரணம்பூண்டு
வாசமாய் சத்தியங்கே குடிகொண்டேதான்
வாழுகைக்கு மலர்சுகந்த மாலைசாத்து
நேசமுடன் குருசூட்ச மாவானித்து
நிலைநிற்கச் சாம்பிராணி தூபங்காட்டே. (168)

காட்டுமுன்னே யஷ்டகும்பந் தன்னைக்கேளு
கருணைபெறக் காக்கவென்றே பூசைதன்னை
நாட்டுவாய் வாசலிலே துவாரபாலாள்
நலத்தாலே யஷ்டகும்பந் தன்னையெல்லாம்
பூட்டுவாய் பூசையங்கே செய்துகொண்டு
புகழாகப் பின்பல்லோ சூட்சகும்பம்
மூட்டுவாய் முழுப்பூசை யாகஞ்செய்து
மோகமாய் திரிகுண்ட. மூர்க்கங்கேளே. (169)

கேளப்பா குண்டத்திற் சதுரமாக
கெடியாகத் திரணைசெய்து கர்மமெட்டால்
வாளப்பா வெண்டிசையும் பந்தஞ்செய்து
வளமாகக் குண்டலித்தாய் மூலவாலை
ஆளப்பா குண்டத்து ளாவானித்து
அப்பனே திரிபஞ்சாட்சரத்தில் தோத்திரம்
மூளப்பா வசியத்தால் வசியஞ்செய்து
மோசமுற்ற அச்சமறத் தீயைவாங்கே. (170)

வாங்குவா யழைப்பினால் வரவழைத்து
மகத்தான தம்பனத்தால் குண்டத்துள்ளே
சாங்கமாய்த் தம்பித்து மோகனங்கொண்டு
சற்கரை தேங்காய்பழமும் பரமானம்பாலும்
பாங்கான தாம்பூல முதலாய்வைத்து
பரிவாகத் தீபமொடு தூபங்காட்டித்
தேங்காமல் சத்தியங்கே தியானஞ்செய்து
திரமாகக் குருநாதன் செயலைக்கேளே. (171)

செயலென்ன வென்றேகே ளோமகுண்டடத்தடுக்கத்
திருமூலர் குருவாக வடமுகமாய்ச்சென்று
தயவாக நெய்க்குட முன்பதாகத்
தங்கமொரு காசிடைதான் நெய்க்குடம்போட்டு
வயணமா யாகருஷணமாக வோதி
வளமாக ஓமகுண்டந் தன்னைச்சார
நியமாக குண்டத்துள் தங்கமொருகழஞ்சி
நெய்போட்டு நெய்தூவ லாடம் நோக்கே. (172)

நோக்கியே நந்தியுடன் குண்டலியாமா யி
நேரான பின்பிருந்து ஓநமாவென்றோதி
தாக்கியே ஆலரசு மாவித்தியத்தி
தகுதெற்பை யாத்தியொடு வேறுங்கேளு
பாக்கியமா மெரிதுரும்பு மிதுவேயாகும்
பராபரம்போற் குருநாதன் பாங்காய்நெய்யை
வாக்கினால் மந்திரித்து ஓமத்தேதூவு
வளமாக ஓமகுண்டம் வளருந்தானே. (173)

தானென்ற குருநாதன் சரித்திரங்கேளு
தன்னுடலைக் குருசூட்சமாகச் செய்து
கோனென்ற நந்திகுரு சூட்சஞ்செய்தால்
கொடுஞ்சுறுக்காங் குருநாதன் தீட்சையோத
வானென்ற அஷ்டகர்ம மணிகள்பூண்டு
வாசமுடன் காயாசங் கவீனங்கட்டி
தேனென்ற நாவுள்ளே கழஞ்சிதங்கம்போடு
சித்திக்கு மந்திரங்கள் தியானத்தாலே. (174)

தியானமென்றகுருநாதன் சிரசின்மீதிற்
தெற்பையொடு சிவந்தபட்டு ருத்திராட்சம்பூண்டு
தியானமுட னிருகுழையி லாறுகட்டி
செம்பொன்னால் கவசமிட்ட குண்டலமும்பூண்டு
தியானமுற்றக்கண்டத்தி லஷ்டகர்மம்
சேர்மணிகள் கொத்துவடம் நூல்வடமும்பூண்டு
தியானமுற வுள்க்கட்டு மணிக்கைக்கட்டுஞ்
செங்கைவிரல் பவுத்திரமுந் திருவாழிபூட்டே. (175)

பூட்டியே சிவந்த பட்டரைக்குக்கட்டி
புலித்தோலை யதின்மேலே விரித்துக்கட்டி
நாட்டியே பாதத்தில் குறடுபோட்டு
நலமான செம்பொன்னால் கோலுபோட்டு
மீட்டியே் விருதுகட்டி முன்கைமீதின்
விளங்கவே தங்கரவி கடகம்போடு
சூட்டியே ஓமகுண்டம் பின்புசொல்லு
சொற்கவரை பதவியுண்டாஞ் சித்தியாமே. (176)

சித்தியாஞ் சீஷர்முதல் முத்திசேர்வார்
தீட்சையவர் செவிக்குரைத்தால் சித்தியாவார்
பத்தியாய் குருவுக்கிவ்வளவுஞ் செய்தார்
பாங்காகத் தீட்சையெல்லா முபதேசிப்பார்
சத்திபெற ஓமகுண்டந் தன்னைப்பார்த்து
தயவாக நந்தியங்கே முன்வைப்பார்
சூத்திரமாய்ச் செய்யாதே தீட்சைசும்மா
சூர்ந்துநீ கேளாதே கொடுமையாமே. (177)

கொடுமையென்ன வென்றாக்கால் மகத்தாம்பாவங்
கோடிசென்ம மானாலுங் குலக்ஷயமாய்ப்போவார்
கொடுமையப்பா வொருவனைப்போய் ஒருவர்க்காக
சொல்லுமவன் வார்த்தையெல்லாங் கேட்டுக்கேட்டு
அடுமையாய்ச் சென்றுநிற்பா ரன்புகாணார்
ஆசைவகை யெத்தனையோ நாளோநாளோ
செல்லுமப்போ மாணாக்கர் குருவைக்காக்க
பத்திவைத்தா லெத்தனைநாள் செல்லுங்காணே. (178)

காணப்பா பன்னிரண்டு வருஷங்காரு
காக்கையிலே மனத்தையல்லோ சோதிப்பார்பின்
பூணப்பா தனங்கோடி சுண்ணாம்பல்ல
பொக்கிஷங்க ளுண்டாகி லெடுத்துப்போடு
வீணப்பா அல்லவிது குருவின்பின்செல்
வேதாந்தக் குருநாதன் மனதுவேண்டி
யூணப்பா விதுவல்லோ சீஷர்வர்க்கம்
ஓகோகோ காரணமாங் குருவுஞ்சொல்லே. (179)

குருவாக வந்தவரே மெய்க்குருவைக்காணில்
கோடிதன மீந்தாலுஞ் சொற்கபதங்கிட்டுங்
குருவாக சீஷருக்கு நந்திகாட்டி
குண்டலியைக் காட்டியபின் தன்னைக்காட்டி
குருவாகத் தலைவனையுங் காட்டிப்பின்பு
கூறுவார் நரகமொடு சொற்கம்ரெண்டுங்
குருவாகப் புண்ணியமொடு பாவம்ரெண்டுங்
கொடும் பஞ்சபாதகமுங் கூறுவாரே. (180)

கூறுவார் சாபமெல்லாம் நிவிர்த்தியாக
கோலமுறு தாபர சங்கமத்துக்கெல்லாங்
கூறுவார் பிறப்பிறப்பு மூலஞ்சொல்வார்
கூண்டோடே ஏறுதற்கு வழியுஞ்சொல்வார்
கூறுவா ராணோடு பெண்ணிரண்டுங்
கொடியான வூழிவரை யிருக்கக்கற்பங்
கூறுவார் சிவயோகத் தீட்சைமார்க்கங்
குளிகையோடு மவுனமுதற் கொள்ளையாமே. (181)

ஆமப்பா யோகத்தி லனுஷ்டானமில்லை
அம்பரத்தி னொளிகாணத் தீட்சையில்லை
ஓமப்பா வுலகமெல்லாம் பொய்க்குருவாய்ச்சேர்ந்தார்
ஓகோகோ வதினாலே கெட்டுப்போனார்
நாமப்பா வொளிக்கறியோந் தீட்சைசொன்னோம்
நலமான அனுஷ்டான விதியைக்கேளு
நேமப்பா நித்தியகன்ம வனுஷ்டானந்தான்
நிலைமேலே வாராமல் சொல்லக்கேளே. (182)

அனுஷ்டான நிலை

கேளப்பா சூரிய னுதிக்குமுன்னே
கெட்டியாய்ப் பாயில்விட்டுத் தடாகஞ்சென்று
வாளப்பா பூரித்துக் கும்பிரேசி
மலமெல்லாம் வரையறவே யுட்சாடிக்கும்
வேளப்பா வல்லாமல் வேறோர்சேதி
மேற்குமுகப் பிறவிவட்ட மிட்டிருந்து
கோளப்பா கும்பித்து ரேசித்தேதான்
கோடுமுச்சாடணங் கொண்டு மலத்தைப்போக்கே. (183)

போக்கடா வெள்ளத்தா லாகருஷ்ணஞ்செய்து
புத்தரசு சுற்றடியின் பிரத்திவாங்கி
தேக்கடா செலத்தாலே யுட்சாடித்து
திடமாக தட்சணையா லிரேசகஞ்செய்
வாக்கடா மலசுத்தி யானபின்பு
வாய்கழுவி கால்கழுவிச் சுத்தமாகி
றாக்கடா தந்தமுத நூற்றைவாங்கி
நலமாகக் கரியானை யன்பால்வேண்டே. (184)

வேண்டியே தந்தமெல்லாம் விளக்கஞ்செய்து
மீறு மாகருஷ்ணத்தால் நாவழித்து
தூண்டியே பித்தநீரெல்லாம் போக்கி
சுத்திபெற வஸ்திரங்க ளீரந்தோய்த்து
தாண்டியே சலந்தன்னில் ரவியின்வட்டந்
தானிட்டு வொருசகலசாபம் நசியென்று
தீண்டியே சலந்தன்னைச் சிரசில்தூவி
சிவசிவா வென்றேதான் தெளியத்தூவே. (185)

தூவியே புறோட்சித்து ஆகருஷ்ணத்தால்
சுகமாக நந்தியுட சூட்சுஞ்செய்து
மேவியே தீர்த்தமங்கே ஆடிப்பின்பு
விளங்கவே மறுகாலுஞ் சொல்லக்கேளு
தாவியே ஓம்சகலலோக வசியென்று
சார்வாக புறோட்சித்து தீர்த்தமாடி
கூவியே மறுகாலு மிப்படியேதீர்த்தங்
கொண்டு சலம்வாரி நீகரையிலேறே. (186)

கரையிலே யேறினபின் மவுனஞ்சென்றால்
கலங்காதே புறோட்சித்துச்சாட நீர்தோய்த்து
திரமான விபூதிதன்னைத் தீர்த்தம்போடு
சிவாநந்தி யிருந்திடத்தில் ஓமென்றேதான்
கரையிலே நீரருகிலிருந்து கொண்டு
கதிரவன்போல் வட்டமிட்டு ஓமென்றுன்னித்
தரமாக நீரிலே தான் தாவியே நீ
தானதின் மேலேயிருந்து விபூதிசாற்றே. (187)

சாற்றவே வகைகேளு ரவியின்வட்டந்
தண்ணீரில் வளைத்ததின்மே லிதழ்பதினாறிட்டு
போற்றவே திரிகோணம் நடுவேயிட்டு
புகழான ஓங்கார முள்ளேயிட்டு
மாற்றியே பிரணவத்துள் றீங்காரமிட்டு
வளமாக நந்திதெரிசனையே செய்து
தோற்றியே ஓமாங்கணபதியே நமாவென்று
திரமாக விருகரமும் லாடங்கூவே. (188)

அங்கநியாசம்

கூவியே கைகுவித்தத் தினைப்பால்வாங்கிக்
கொண்டு சிரசின்மீது புறோட்சித்தேதான்
மேவியே மூல சடாக்ஷரத்தினாலே
விளங்கவே பதினாறு கலத்திலுந்தான்
பாவியே யனாமிகைக்குமே லிறைதான்
பதறாதே யங்குஷ்ட விரலையூன்றி
கூவியே யங்கத்தினியாசஞ் செய்து
கொண்டபின்பு கரன்னியாசங் கூறக்கேளே. (189)

கரநியாசம்

கேளுநீ எட்டெழுத்தால் கரன்னியாசங்
கெடியாகச் செய்தபின்பு சிரசின்மீதே
வாளுநீ யிரவிவட்டந் தாளத்திறையம்
வாங்கியே வலக்கரத்தால் விபூதிதன்னை
ஆளுநீ ஆகருஷ்ணங் கொண்டுவாங்கி
அப்பனே யிடக்கரத்தாற் றம்பனமாய்வைத்து
நீளுநீ வசியத்தால் குழைத்துக்கொண்டு
நிலையான பிரணவத்தால் நந்திபாரே. (190)

நந்திதன்னை யோமென்று சுழிமுனைமீதில்
நாட்டியே சிவாவென்று திரிகோணமிட்டு
முந்தியே யனாமிகையிற் றிலதமிட்டு
மூலமென்ற வித்தார பிடரிக்குள்ளே
சந்தியாய்த் திலதமிட்டு கண்டத்தின்மேல்
சாற்றியுள்ளே ஓமென்று திலதம்போடு
சிந்தலஞ் சிரசுநடு பராபரந்தானங்கே
தியானமதிற் பத்தியாய்ச் செப்புறேனே. (191)

செப்புகிறேன் பராபரத்தின் தீட்சையினாற்றானே
செங்கைரெண்டி னுகிர்பதிப்பாய் பின்புகேளு
ஒப்புகிறேன் பிறைலாடந் தன்னிற்கேளு
ஓகோகோ சதாசிவதீட்சையினா லய்யா
வைப்புகிறேன் விபூதியதிற் சாற்றிப்பின்பு
வதிமயேஸ்வர தீட்சையாலே கேளு
கப்புகிறேன் கண்டத்தில் விபூதிசாற்று
கனருத்திர தீட்சைவிதி மார்பில்தானே. (192)

மாருக்குப் புயமட்டும் வலுத்திச்சாற்றி
மாலுடைய தீட்சையினா லுந்திமீதில்
சீருக்கு விபூதியதிற் சாற்றிப்பின்பு
சிருஷ்டிக்கும் பிரமனிட தீட்சையாலே
பாருக்குள் சுவாதிஷ்டானத்தைத் தானே
பண்பாகத் தியானித்து முட்டிச்சாற்று
யாருக்குங் குண்டலியாள் கணேசன்தீட்சை
யதினாலே பாதவிரல் திலதம்போடே. (193)

திலதமிட்டுச் செங்கைரெண்டு மாறிமாறி
சடாதார தீட்சையினால் விபூதிசாற்றி
சலியாதே பிடரியின்கீ ழங்குலநாலிட்டு
சாற்றடா விபூதிதன்னை அய்யுமென்றே
மலவாசல்மேலே யங்குலம்பன்னிரண்டு
வாய்ப்பாக விட்டத்தின் கிலியு மென்றே
விலகாதே விபூதியிட்டு விரலாற்றட்டு
மீறவே சவ்வுமென்று விபூதிசாற்றே. (194)

பூசியே இருகரமும் நீரில்தோய்த்து
புனல்வாரி சிரசின்மேல் வட்டஞ்சுற்றி
வாசியோங் கவசாயநமா வென்றுதான்
மறுபடியு மங்கத்தி னியாசஞ்செய்து
தேசியே கரன்னியாசஞ் சிறக்கச்செய்து
தேனுமுத்திரை ஓரெழுத்தில் செவித்துநீரை
யாசியே ஆசமனமோ மென்றேகொள்ள
அப்பனே மூன்றுதிர மறிந்திடாயே. (195)

அறிந் திந்தப்படியெல்லா மானபின்பு
அப்பனே பாவமெல்லா முச்சாடிக்க
பிரிந்தமதிக் கலையாலே மோகனத்தால்
பேசாதே வாங்கிப் பின்கலையினாலே
முறிந் துச்சாடனத்தாலே முழுதும்போக்கு
மோகனத்தால் வசியமெல்லாம் பின்கலையிற்பூரி
செறிந்தபின்பு வறுமையொடு சத்துருவையெல்லாந்
திடமாக நீர்வாரி மாரணஞ்செய்யே. (196)

மாரணமாம் நந்தியிலே மாடமோட்டு
வாகான அழைப்பினால் பாக்கியங்களெல்லாஞ்
சரணமென்றே காத்திருக்கும் மோகனஞ்செய்
தண்ணீரை வாரி இருதரம் புறோட்சித்து
கிரணமெல்லாம் நிறைந்துநின்ற சூரியபூசை
கெடியாகப் பின்கலையில் மயேஸ்வரனார்தீட்சை
பிரணவங்கொண் டரகரா வென்றுவோதி
பிறகு சிவாநந்திதன்னைப் பேணிப்பாரே. (197)

பாரப்பா மறுபடிதான் சிவபூசைசெய்வாய்
பண்பாகத் தேவிதன்னைப் பூசைசெய்வாய்
சேரப்பா கணபதியுஞ் சுப்பிரமணியன்
தெளிவான சண்டேசன் வடுகன்பூசை
யேரப்பா நித்தியகன்மங் காலசந்தியாச்சு
இப்படியே யனுஷ்டான மாலையிலுஞ் செய்வாய்
ஆரப்பா வென்னைப்போலே அனுஷ்டானமார்க்கம்
மறைப்பிலா துரைத்தல்செய்வா ரெந்நூலைப்பாரே. (198)

எந்நூல்தான் கடைக்காண்ட மைஞ்னூற்றுக்குள்
இந்தவகை யனுஷ்டான பூசைமார்க்கம்
சொன்னபடி சீஷருக்கு வுபதேசஞ்சொல்
சுறுக்கடா சீஷரைத்தான் வரவழைத்து
பொன்னோடு வெள்ளியொடு புஷ்பத்தோடு
புகழாக ஓமகுண்டத் தடுக்கவைத்து
நின்னயமாய் தெண்டனிட்டு நிற்கச்சொல்லி
நிமலகும்பக் குடநீரைப் புறோட்சிப்பாயே. (199)

புறோட்சித்துச் சாம்பிராணித் தயிலந்தன்னை
புதல்வனே யென்றேசொல் புருவமய்யத்தே
புறோட்சித்து மனமடா மூலந்தன்னில்
பூட்டடா நந்திகுரு சூட்சந்தன்னை
புறோட்சித்து நீர்த்தாரை யூற்றதான
பொருளே யாவியுடன் மூன்றுங்கேளு
புறோட்சித்து தத்தமவன் தந்தபின்பு
புகழாகச் சிவசூட்சங் காதிலோதே. (200)

காதிலுரை யுபதேசஞ் சத்திசூட்சங்
காலான பூரணத்தின் சூட்சஞ்செப்பி
நீதியிதின்பிறகு வனுஷ்டான நிலைபெற்றால்
நீதமா மாலையுறுந் தீட்சைவைத்து
சாதகமா யதின்பிறகு ரவியின்தீட்சை
தப்பாமல் மூன்றுவகை தீட்சையோதி
சோதியொத்த சடாதார தீட்சையோது
சுகமாகப் பராபரத்தின் தீட்சைசெப்பே. (201)

செப்புகிறேன் மவுனமென்ற வாலைதீட்சை
செய்தபின்பு அஷ்டாங்க வாலைதீட்சை
செப்பினார் மச்சமுனி ஞானநூற்றில்
தீட்சையிது வறிந்துகொண்டே சீஷர்க்கோது
செப்பினேன் சத்தியுட தீட்சையோது
சிவத்தினிட தசதீட்சை பிறகுஓது
செப்பினே னதின்பிறகு சமாதிதீட்சை
சேரவே மண்டலத்திற் சேரஓதே. (202)

ஓதவே புழுக்குளவியாம் போல்வாழு
உத்தமனே குருவினிடம் நின்றுபற்று
சாதனையாய் தசதீட்சையாலே கேளு
சத்தியுடன் நாற்பத்து முக்கோணபூசை
ஆதரவாய் மண்டலத்தில் நாலுபூசை
அண்டரண்டம் ஓமகுண்டந் தன்னைக்கேளு
வேதமுத னெறியஷ்டகர்மம் பூசை
விளங்கவே மண்டலந்தா னதன்முன்செய்யே. (203)

செய்யப்பா சிவபூசை மானதமாம்பூசை
திருவளருங் கும்பகுடம் நித்தியபூசை
செய்யப்பா மறுநாளுஞ் சுத்தஞ்செய்து
திடமாக நிர்மாலிய மெல்லாம்வாங்கி
செய்யப்பா கரணமெல்லா மிப்படியேநன்றாய்
சீஷருக்குத் தீட்சையெல்லாஞ் செப்புமட்டும்
செய்யடா சீஷர்முதற் குருவோடாறுந்
திரமாக மண்டலந்தான் விரதங்காரே. (204)

காரப்பா இப்படியே மண்டலத்தினுள்ளே
காரணமாம் ஞானகுரு தீட்சையோத
ஏரப்பா முப்பத்துரெண்டு தீட்சை
எண்கரண எண்மாலை யெல்லாங்கேளு
சாரப்பா நவபாசங் காதிற்செப்பி
சாத்தடா பின்பல்லோ தீட்சையெல்லாஞ்
சேரப்பா நித்தியமொரு தீட்சையாகச்
சேவிக்கி லுபதேசஞ் செப்பிடாயே. (205)

செப்புகிறேன் சீஷரைத்தான் சேர்க்குஞ்சேதி
தெளிந்துபார் சாதியெல்லாம் நாலேசாதி
செப்புகிறேன் பிரமனென்றும் க்ஷத்திரியனென்றுஞ்
செய்யதோர் செட்டியென்றுஞ் சூத்திரன்தானென்று
செப்புகிறேன் வேதனென்றால் சாஸ்திரத்தில் மாய்வான்
திடமாக நிரந்தரமே குருவாமென்பார்
செப்புகிறேன் ராஜனென்றால் குருவைக்காரான்
திருவேடந் தன்னைப்பழிப்பான் குருவாரென்றே. (206)

என்றதொரு வணிகனென்றால் காசுகள்ள
னென்குருவா மென்றொருநாள் சோறுபோடான்
அன்றியொரு பணங்கேட்கில் லோபஞ்சொல்வான்
ஞானமிந்த மூவருக்கு வாயாதப்பா
வென்றி யுலகத்திலே பதினெண்சாதி
வெவ்வேறே குலபேதங் கோடிசாதி
கண்டான சாதியெல்லாம் நால்வர்ணத்துள்
கண்டறிய வேணுமப்பா சீஷர்காணே. (207)

காணப்பா புத்திகெட்ட மடையருண்டு
கனமனைவி தாய்தந்தை சுற்றத்தோரை
பூணப்பா வைத்தற்கு மொன்றானபின்பு
புகழான திருவேடந் தரித்தோர்க்கு
வேணப்பா வேணபடி தூஷிப்பான்கேள்
மேல்வரம்பு கீழ்வரம்பு எண்ணிச்சேரான்
ஆணப்பா ஆணவத்தால் கெட்டார்கோடி
அறைந்தேனா னிந்தவகை யறியத்தானே. (28)

தானென்ற தீட்சைவைப்ப தாரையென்றால்
தாய்தந்தை தனைத்தொழுதான் விரதங்கொண்டோன்
கானென்ற சிவனடியார் தனக்கன்பாகி
கால்பூசி அன்னமிட்டோ னிரக்கமுள்ளோன்
தேனென்ற மொழியுடையோன் மனதிறப்போன்
சிவபூசை மறவாத சிந்தையுள்ளோன்
நாநன்றா யிப்படியே தீட்சைசொன்னேன்
நம்போலச் சீஷர்வர்க்கம் நல்கிடீரே. (209)

நல்லதொரு சீஷனுக்கு ஒன்றேபுத்தி
நலமுள்ளோன் சொல்லெல்லா மவன்றனக்கு வேரு
அல்லவே இதையறிந்து தீட்சையோத
அப்பனே யிருவர்க்குஞ் சொற்கங்கிட்டும்
வல்லமையாங் காரணமாங் குருவைக்கண்டால்
மக்களே இருபதமுங் கட்டிக்கொண்டு
வெல்லவே தெண்டனிட்டு தீட்.சைகேளு
வேதாந்த ஞானமெல்லாங் கைக்குள்ளாமே. (210)

கைக்குள்ளாஞ் சீஷருக்குத் தீட்சையோதிக்
காதலா யில்லத்துக் கனுப்பும்போது
மெய்க்குள்ளாங் குருசூட்சங் காதிற்செப்பி
விளங்கவே தானனுப்பி யோமகுண்டஞ்
செய்க்குள்ளாஞ் சகலமெல்லா முச்சாடித்து
தேவியுட சூட்சத்தால் குருவுஞ்சென்றார்
பொய்க்குள்ளாங் காரியகுரு பூலோகத்தில்
புகட்டியே பணம்பறிப்பார் பொய்யாய்ப்போச்சே. (211)

போச்சப்பா குறிகாட்டார் வாசியோகம்
புகட்டுவதார் சிவயோகி சித்தர்சொல்வார்
ஆச்சடா எந்நூலே சொல்லவேணும்
ஆரப்பா அப்படிதான் சொல்லக்காணேன்
வாச்சப்பா உங்களுக்கு வாசிப்பார்க்க
மகத்தான நந்தியொளி காணவேண்டி
யேச்சப்பா பின்கலையி லொங்சிங்கென்று
விரவியுரை யுத்திநிலை விரைந்துபாரே. (212)

சூரியயோகம்

பாரப்பா இருவிழியால் பார்த்துபார்த்து
பால்போலாம் பத்துநாள் பார்க்கும்போது
சாரப்பா மண்டலந்தான் தினமிரண்டுகடிகை
தப்பாது வுதயமுதற் சார்வாய்பாரு
வேரப்பா கண்கூசா யோகம்பார்க்கில்
விதமாகுங் கடுப்பில்லைச் சிவயோகம்பார்க்கில்
ஆரப்பா இந்தமுறை யாருஞ்சொல்லார்
ஆச்சரிய மார்புறவே சூரியனாமே. (213)

சூரியன்போல் வட்டமதாய் மார்பில்தோன்றி
துடியாக முதுப்புறத்தே ரவிதான்வீசும்
வீரியந்தா னிதுயோகஞ் சிவயோகத்தால்
விளங்கவே பங்குனி சித்திரையிற்பாரு
நேரியலா யிந்தமுறை செய்தபின்பு
நிலைநின்ற யோகமொன்று சொல்லக்கேளு
சீரியலா மிடகலையி லொங்வங்கென்று
திடமாக பூரணசந்திரனைப் பாரே. (214)

சந்திரயோகம்

சந்திரனைப் பார்ப்பதற்கு வகையைக்கேளு
சடலமது பற்பத்தே சரிந்துகொண்டு
சிந்தையுற மல்லாந்து மதியைப்பாரு
சேர்ந்தநடுச் சாமத்தில் செய்திசொன்னேன்
உந்திபெறும் யோகமென்பார் கண்குளிர்ச்சியாகும்
ஓகோகோ விழியோடே யூடேறாது
விந்திரவி பதினாறுமாதம் பார்த்தால்
யென்சாணும் சாய்கையில்லை நிலைகாணாதே. (215)

காணாதே போனாக்கால் பலனேதென்னில்
கண்ணொளியில் விண்ணொளிதான் காணுங்காணும்
வாணாளு மழியாது நரைதிரைகளில்லை
வாசியுட யோகமெல்லாம் க்ஷணத்திலாச்சு
பூணாதே யித்தைவிட்டு யோகம்பார்த்தால்
பொய்யாச்சு வாசிமுதல் வாதமெல்லாந்
தோணாது சுழினையென்ற மூலந்தன்னை
சொக்கலாம் பெரியோர்கள் சொல்லார்பாரே. (216)

சொல்லான வான்பொருள்தான் சுழினைநந்தி
தூண்டுகோல் குருவாகு மெந்நூல்பாரு
வெல்லாதே போவதில்லை வேதாந்தத்தை
மேட்டியா விட்டாக்கா லொன்றுமில்லை
கல்லாகு முன்தேகம் பொன்னாம்பின்பு
கயிலாச தேகமதாங் கற்பத்தாலே
யெல்லாரும் வழலைமுதற் கற்பஞ்சொல்வா
ரெனைப்போலே வெளியாக இயம்பிலாரே. (217)

அப்பியாசம்

வெளியாகச் சொல்லுகிறேன் அப்பியாசமார்க்க
மீறுகின்ற அபானத்தின் மூலஞ்சித்தி
யொளியாகப் பிரண்டையதின் கொழுந்தைவாங்கி
யுத்தமனே ஐப்பசியுங் கார்த்திகையுங்கொள்ளு
தெளிவாகுந் தொழுகத்தின் மூலஞ்சித்தி
திடம்பெறவே யதோமுகத்தால் மேல்மூலஞ்சித்தி
வளியோடு மேல்மூல முகத்தைச்சொல்வேன்
வாயுவொக்குங் குமிழம்பூத் துண்டந்தானே. (218)

துண்டத்தி னூட்டேறும் புரியஷ்டமெட்டுஞ்
சுகமான கேசரியாம் புருவத்தின்கீழ்
கண்டத்தி னூடேறும் பூரணந்தானாலுங்
கயிலாசந் தனில்மூட்டி வெளியில்ப்பாயும்
பிண்டத்தி னூடேறும் கௌமூலமட்டும்
பேசாதே பன்னிரண்டின் கலையிற்பாய்ந்தே
அண்டத்தி னூடேறுமசவை யெட்டுமதட்டியே
நாலையுந் தானளிக்குந் தானே. (219)

கோமுகாசனம்

அளிக்குமடா சரிதையொடு கிரிதைரெண்டும்
அரிதரிது யோகத்திற் செல்லமாட்டார்
தெளிக்குமடா கோமுகாசனத்தைக் கேளு
சிறக்கவே ரெண்டுமுட்டு மொன்றாய்ச்சேரு
களிக்குமடா குதிரெண்டா லபானங்கார்க்கக்
கட்டாக நெருக்கியே மூலம்பாரு
வொளிக்குமடா புருவமய்யச் சுழினைபாரு
ஓகோகோ வங்கென்று வூணிப்பாரே. (220)

ஊணியே வாசிதன்னை யூதும்போது
வுத்தமனே ரவியொளிபோ லொளிதான்காணும்
பேணியே சிவயோக மார்தான் சொல்வார்
பெரியோர்கள் சொல்லார்க ளரிதேயென்பார்
தோணியே பார்ப்பதற்கு எந்நூல்பாரு
சுகமான சட்டைமுனி ஞானம்பாரு
ஆணியாய் மூன்றெழுத்து மோரெழுத்தாய்நின்றது
அறியார்க ளசவைமுத லறியார்காணே. (221)

கண்ணறியார் மூக்கறியார் காதுங்கேளார்
கருத்தைவைத்துச் சுழினையிலே மனத்தையூணார்
விண்ணறியார் சூட்சத்தைப் பெற்றாரில்லை
வேதாந்தம் வாய்ப்பேச்சால் கைக்குள்ளாமோ
ஒண்ணறியார் மனத்தையங்கே யொண்ணக்கற்றா
னுறவறியா மூதண்ட லேகியந்தான்
நண்ணறியார் தம்பனத்தின் குளிகைசெய்யார்
நாதவிந்துகளை யறியார் சத்திதானே. (222)

சத்தியமாம் சத்தியுட பூசைசெய்தால்
தாயங்கே வார்த்தைசொல்வாள் நந்திகாணு
முத்தியிதை விட்டலைந்த மாண்பர்கோடி
மோகமுற்ற பெண்தேடி யலைவார்கோடி
பத்திவைப்பார் பொன்வெள்ளி பொருளென்றெண்ணி
பாழ்மூன்றுந் தாண்டறியார் பரிபாசாண்டி
சித்திபெற்ற தேதினால் மனத்தினாலே
தெளிவான கண்ணாலே மூக்குநுனியாமே. (223)

மூக்குநுனி மீதிலே மனத்தைநாட்டி
முழுமோசம் வாராமல் வாசியூதி
தாக்குமதி லறிவங்கே யேறிச்செல்லுந்
தம்பனத்தின் குளிகையினால் வாசியுள்ளாம்
நாக்குநுனி மேல்நோக்கி சாதகஞ்செய்
நலமான வாதபித்தஞ் சிரசேறாது
சீக்கரத்தே யொளிகாண வகையைக்கேளு
செப்புறேன் தெளிவாகச் செப்புறேனே. (224)

செப்புகிறேன் திருவிளக்கொன் றெரியும்போது
திரியொன்று தான்கொளுத்தி விளக்கமைத்து
ஓப்புகிறேன் புகைமேலா யொளியைக்காட்ட
யொளிதானே புகையூடே விளக்கிற்செல்லு
மப்புகிற னிப்படியே சச்சிதானந்தி
யருள்தானே சுழினைநந்தி பிரகாசிக்குங்
கொப்புகிறேன் விழியாலே யொளியைக்கண்டு
கூறினேன் சிவயோகக் குறிப்பைத்தானே. (225)

குறிகாட்டு மென்பார்கள் சீஷர்கோடி
குறிப்பாக நந்தியொளி சொல்லிவிட்டால்
நெறியில்லா குருவென்றே நிஷேதஞ்சொல்வார்
நிசமென்ற குருவென்ன நீர்தானென்ன
அறிவில்லாச் சடங்கனென்ற சென்மமென்பார்
அழகான குறிகாட்டி வாசிசொல்லும்
பிரியமாஞ் சித்தரெல்லாம் பிள்ளையாவார்
பிள்ளைமனஞ் சோதித்தும் பேசுவாயே. (226)

குளிகைமுறை

பேசியே குளிகைக்கு வயணங்கேளு
பித்ததினால் பாஷாணம் பெண்ணைத்தள்ளு
வாசிமுதல் குளிகையொடு மவுனஞ்சொன்னால்
மகத்தான குருவென்று தெண்டம்பண்ணு
ராசியொடு ரத்தினங்கள் கையிலீந்து
நங்குருவே தசதீட்சை யோதென்றேசொல்
தேசிகரா யிருந்துகொண்டு வுபதேசித்தால்
திங்கனாலிற் குணங்கள் சேரக்காணே. (227)

யோகத்திற்கு மாதம்

சேரவே சொல்லுகிறேன் சிங்கந்தன்னில்
சிலைகோல் மீன்காளைநண்டு சுளுவோடேழுஞ்
சாரவே மாதத்தால் தோஷமில்லை
தனமேட மீனம்பெண் அவிட்டநட்சத்திரம்
வாரமாங் குருமதியும் புகர்புந்தியோடு
வளமான லக்கினங்கள் மீனமாகு
மாரவே வில்லோடு துலையுங்கன்னி
யஞ்சுமே லக்கினமா மறிந்துகேளே. (228)

பட்சம்பார்க்க

கேளப்பா விதையெல்லாஞ் சித்தர்பாடார்
கெடியாகச் சொல்லிவிட்டேன் பட்சங்கேளு
வாளப்பா பஞ்சமியுஞ் சஷ்டியோடு
வகையான சத்தமியுந் தசமிதானு
மாளப்பா திரிதினகயுஞ் சதுர்த்தியாகு
மாறுவகை பட்சமுத லமுதயோகம்
கோளப்பா வாராது தீட்சைமுதற்பூசை
குருபூசை சிவபூசை கூறநன்றே. (229)

நன்றான நாளோடு வாரமாதம்
நலமான பட்சமொடு லக்கினமுஞ்சொன்னேன்
சென்றாடு மிவ்வண்ணஞ் சென்மிக்குங்காலந்
தெளிவாகப் பிறந்தநா ளிதுக்குள்ளாகி
யொன்றான மனமாகுமவன் யோகியாவா
னூழிகற்பஞ் க்ஷணமாகும் ஞானியாவான்
வென்றியுள்ள கிரகத்தின் சாரங்கேளு
வியாழம் வெள்ளிபுத னென்றே தீட்சையாமே. (230)

இராசியறிய

ஆமப்பா வாக்கிலே யிருந்தாலும்போதும்
அஞ்சுமே சுத்தமா யிருக்கவேணு
நாமப்பா தீட்சைக்கு இதுவெல்லாம்பார்த்து
நாட்டுவாய் சீஷருக்கு ராசிகேட்டு
தாமப்பா சொன்னதெல்லாந் தப்பாமல்கண்டால்
சாதகமாய் பிள்ளையென்று தயவாய்ச்சேரு
ஓமப்பா கிரகங்கள் ராசிநட்பு
வுச்சமாய் கேந்திரத்தி லிருக்கைப்பாரே. (231)

பாரப்பா அறிந்தவகை ராசியோர்கள்
　　பணமில்லைப் பொய்களவு பாசாங்குண்டாம்
நேரப்பா குருவுக்கு முதல்களீந்து
　　நிட்டூரம் பிறரோடே சொல்லிநிற்பான்
காரப்பா வென்றாலும் பற்றமாட்டான்
　　காதில்மெத்த வுலுத்தரை நீசேர்க்கவேண்டாஞ்
சேரப்பா வாமத்தில் பூசைசெய்வார்
　　தேவர்போல் மைதுனத்தில் செல்லுவானே. (232)

செல்லுகிற சீஷரைக் கையணைக்கவேணுந்
　　திரமான குருவென்பா னுலகமாடு
சொல்லுகிறே னுபதேச மென்பார்கோடி
　　தூண்டியே காட்டுதற்குக் குறியைக்காணார்
வெல்லுகிறேன் சிவபூசை மேருச்செய்தார்
　　விளங்கவே சேகண்டி மணியினோசை
யல்லுகிறேன் பணம்பறிக்கப் பெண்டுபிள்ளைவாழ
　　ஆத்தியே சீஷருக் கஞ்செழுத்தென்பாரே. (233)

அஞ்செழுத்து மாறெழுத்து மெட்டெழுத்துமென்பான்
　　அரகரா செத்தெழுத்தை உபதேசிப்பான்
வஞ்சங்க ளில்லையவன் குருநானென்றே
　　மாய்கையினா லழிந்துநிற்பான் மனமொன்றாகான்
தஞ்சமெனு மவன்வயிற்றுப் பிழைப்புக்காகத்
　　தயவுசொல்லுஞ் சீஷருக்குப் பணங்கள்போச்சு
பஞ்சமா பாதகங்கள் மிகுத்துப்போச்சு
　　பாவியிலே கொடும்பாவி கெடுத்தான்பாழே. (234)

பாழான தன்னோடே போச்சுதில்லை
　　பாரிலுள்ள பேர்களையுங் கெடுத்தான்பாவி
கோளானா லிதுவோகேள் நரகமெய்த
　　குருவென்று வுபதேசம் பெற்றபேறு
வாளான வாழ்வரெல்லா மிப்படியேகெட்டா
　　ரளவற்ற ஆசையினாற் பிறப்புள்ளானார்
தேளான பிறப்பேது இறப்பேதென்றால்
　　செப்புகிறேன் பொய்க்குருவே தெளிந்துவாவே. (235)

தெளிந்துவந்தேன் காரியகுரு வென்றேயெண்ணி
திரும்பினேன் காரணமே யென்குருவேஅய்யா
யொளிந்துவந்தே னொளிகாட்டிக் குறியைச்சொல்லு
மொருமொழியா மவுனமென்ற பொருளைச்சொல்லு
மளிந்துவந்தே னும்மிடத்தே யாளாய்க்கொள்ள
அரகரா பரவெளியி னொளியெனக்கு
களிந்துவிடுங் காயத்தை சூட்சமாகக்
கருணைதரு மென்குருவே கடாட்சிப்பீரே. (236)

கடாட்சிக்க வேணுமென்றால் சொல்லக்கேளு
கயிலாச சட்டைமுனி ஞானம்பாரு
கடாட்சிக்கு மூன்றெழுத்து மவுனஞ்சொன்னால்
கைமுறையாய்ச் சொல்லவில்லை சொல்லக்கேளு
கடாட்சித்தா ரெந்தனுக்குப் போகநாதர்
கருவென்ன வென்றாக்கால் வாலைவாலை
கடாட்சித்த மவுனமடா மூன்றெழுத்துங்கேளு
கண்ணடுக்கக் கண்டேனான் மகாரந்தானே. (237)

மகாரமென்றால் மூன்றெழுத்து மவுனவாலை
வாய்மூடல் மவுனமென்றே நீயிராதே
மகாரமொ டகாரமொடு காரங்கூட்டி
மவுனமென்ற வாலையதாம் நந்திமூலம்
மகாரமென்னி லொடுக்கமென்ன ஓங்காரந்தான்
வளமான ரவிவட்ட மானவாறு
மகாரமது விந்துவிலே நாதங்கூடி
மவுனமா யிருந்தநந்தி மூலங்காணே. (238)

மூலமென்றா லபானத்தின் மூலமல்ல
மூர்க்க மயேஸ்பர கண்டமூலமல்ல
மூலமென்றால் பராபரத்தின் மூலமல்ல
முகலாடச் சக்கரத்தின் மூலமல்ல
மூலமென்றால் வாசிகொண்ட நந்திமூல
மூக்குநுனி புருவமய்யத் திடைக்கீழப்பாரு
மூலமென்றால் மவுனமங்கே விந்துவங்கே
மூன்றெழுத்து மொன்றான ஓங்காரத்தே. (239)

ஓங்கார நாதமங்கே யகாரமங்கே
யுகாரமங்கே மகாரமங்கே யொளியுமங்கே
ஓங்கார சம்புவங்கே கேசரியுமங்கே
யுன்மனையா ளிருந்தங்கே யொளியுமங்கே
ஓங்கார வட்டமங்கே றீங்காரமங்கே
ஓடுகிற வசவையங்கே ஐம்பூதமங்கே
ஓங்காரத்துள் ளமர்ந்த பூரணந்தானங்கே
யுத்தமனே பிடரியென்ற கண்டந்தானே. (240)

கண்டமென்பார் சிவமென்பார் சதமாயென்பார்
கலையாம லிடக்கலையிற் பூரியென்பார்
குண்டலியாய் நின்றபொருள் கணேசனென்பார்
குருவிருந்த விடமென்பார் பின்கலைதானென்பார்
பிண்டத்துக் குற்பத்தியது தானென்பார்
பிரணவங்கள் நிறைந்திருந்த சூட்சமென்பார்
அண்டமென்பார் லட்சியமா ரேசியென்பா
ராதியந்த கும்பகமாஞ் சுழினைதானே. (241)

தானென்ற சுழிமுனைதா னார்தான்சொல்வார்
சாதகமா யெந்தனிட நூல்தான்சொல்லுங்
க்ானென்ற அஞ்செழுத்து மிதுக்குள்ளாச்சு
கைமுறைகள் பாடவென்றா லொப்பனையோவில்லை
வானென்ற வேதாந்த குருசொல்லக்கேட்டு
வானகல மலையுள்ள சித்தர்சொல்லார்
ஏனென்றால் கயிலாசங் கொள்ளைபோகும்
என்றவர்க்குஞ் சொல்லார்கள் சித்தர்தானே. (242)

சித்தர்மொழி பேசவென்றால் வெகுநாள்செல்லுஞ்
சித்தரிடங் காத்திருந்து வெகுநாட்சென்று
சித்தரங்கே தீட்சையுபதேச மெல்லாஞ்
செப்பக்கேட்டுத் தமர்தான் தெளிந்துகொண்டு
சித்தாந்தக் கிறிகைவிதம் விட்டுப்போட்டு
தேசங்கள் தனிலிருப்பார் கோடிக்கொன்றாய்
சித்தர்போலே யிருப்பார் தெரியாதார்போல்
செகத்திலே விசாரித்து தீட்சைகேளே. (243)

தீட்சையிலே மவுனமென்ற தீட்சைசொன்னால்
சீஷனுக்குப் பாவம்போம் புண்ணியமாச்சு
தீட்சைவைத்த குருவுக்குஞ் சொற்கமாச்சு
சென்ம சாபல்லியசிந்தை தெளியவாச்சு
தீட்சைவைக்கக் குருவினருள் வாய்க்கவேணுஞ்
செப்புமென்றாற் குருநாதன் செப்பமாட்டார்
தீட்சைவைக்க மனதுவர வுபசாரஞ்செய்
தீவுவர்க்கங் கேட்டதெல்லாஞ் சிறக்கவீயே. (244)

ஈயப்பா கோடிதனங் கேட்டாலுந்தா
னெடுத்தேநீ கொடுத்துவிடு மனம்வைப்பார்பார்
நீயப்பா தேடும்பொருள் தனங்களாத்தி
நிலையான சொற்கபதங் காட்டுமோசொல்
தாயப்பா பிள்ளையப்பா பிழைக்கச்சொன்னோந்
தனந்தேடிப் புதைத்தாக்கால் பரமுண்டாமோ
காயப்பா பழுத்தாக்கால் ரசனையாகுங்
கனியாமல் வெம்பினால் நாசந்தானே. (245)

தானென்ற புவனைத்தாய் தனக்குப்பூசை
தனங்கா லிடக்காலிற் திரிபுரையின்பூசை
வானென்ற வலக்காலிற் புவனைபூசை
வளமான சத்தியுட பாதபூசை
நானன்றாய்ச் சொல்லுகிறேன் கைவண்ணந்தான்
நாற்பத்து முக்கோணஞ் சண்முகமாம்பூசை
தேனென்ற மொழியுடைய தேவிபூசை
சேரவே யறுகோணத் தீர்க்கங்கேளே. (246)

தீர்க்கமாய் நாற்பத்து மூன்றுகோணந்
திடமாகச் சொல்லுகிறே னன்றாய்க்கேளு
கார்க்கவே யறுகோணங் கைவண்ணந்தான்
கைமுறையா யதின்மேலே முக்கோணந்தொட்டு
சேர்க்கவே யறுகோணந் தீரவிட்டு
செல்லவே நடுக்கோணத்துள்ளே கேளு
பார்க்கவே விந்திட்டு வுள்முக்கோணம்
பாங்கான நாற்பத்து முக்கோணமாச்சே. (247)

ஆச்சப்பா விதினுள்ளே றீங்காரமிட்டு
அப்பனே அடுத்த அறுகோணத்துள்ளே
வாச்சப்பா சடாதார தீட்சைதன்னை
வரைந்தெழுதி யதின்மேலே முப்பத்தாறுகோணம்
பேச்சப்பா மேலான சண்முகத்தைத்தொட்டு
பிலக்கவே முக்கோணந் தோறுங்கேளு
நீச்சப்பா சிவசத்தி தீட்சைதன்னை
நேமமாய்க் கைமுறையாய் நிறையத்தாக்கே. (248)

தாக்கான பதினாலு கோணத்துள்ளே
தயவான அஷ்டகர்ம வாலைதீட்சை
நோக்கான அஷ்டசித்தி மூலங்கூட்டி
லோகமென்ற புவனையுட சக்கரந்தானாச்சு
வாக்காதி திரிபுரைக்கு மிதுவேசக்ரம்
வாசமாய்த் தங்கமொரு பலத்தகட்டில்
ஆக்கவே நாற்பத்து முக்கோணத்தை
யறைந்தேனான் சித்தியடா அருமைதானே. (249)

அருவுருவாய் நின்றதிந்தச் சக்கரத்தின்மேலே
ஆதியாம் இதினெட்டு இதின்பேர்கேளு
திருவுருவாம் பதினாறு இதழும்போட்டு
தெளிந்ததின்மே லிருபத்தஞ் சிதழும்போடு
அருவுருவா மன்பத்தோ ரட்சரத்தைமாட்டு
வாகாக விதின்மேலே ரெண்டுபிரகாரந்
தருவுருவாய்ச் சதிரமாய் மூன்றுவரையிட்டு
தப்பாமல் நால்வாசல் தானும்போடே. (250)

போடப்பா வுள்வீதிக் குள்ளேகேளு
புகழான அஷ்டபாலகர்தான் பீசம்
சூடப்பா அஷ்டபெந்த பீசம்போடு
சுகமாக மறுவீதிக்குள்ளே கேளு
நாடப்பா தேவியுட பூசைமார்க்கம்
நன்றாகச் சொல்லினேன் நயந்துபாரு
ஈடாக வென்போல வெவருஞ்சொல்லா
ரென்னூல்போ லெந்நூலு மிதுசொல்லாதே. (251)

சொல்லுவாய் நால்வாசல் தோறுங்கேளு
சேரவே துவாரபாலகர் தான்பீசம்
வெல்லுவாய்க் கொடிக்கம்பம் நந்திபீச
மீறாம வொவ்வொன்று முக்கோணங்கள்
வல்லமையா யொன்றுபோ லெல்லாங்கீறி
வரைந்தெழுது நாற்பத்து முக்கோணந்தானே
சொல்லுவேன் பூசைவிதி கேளுகேளு
சுறுக்கடா பாதத்தின் பூசைதானே. (252)

பூசைதனக் கன்பான பொற்சிலைபோற்பெண்ணை
புகழான நாற்காலிப் பலகைமீதி
லாசனம் மெத்தையொரு களைத்துவைத்து
ஆயியென்ற தாய்பதத்தைக் குறட்டின்மேல்வைத்து
நேசமாய் பதாத்துள் மெத்தைபோட்டு
நிறையவே யபிஷேகஞ் செய்தபின்பு
வாசமாய் விபூதியொடு சந்தனமுஞ்சாற்றி
வளமாகச் செம்பரத்தம் பூவுஞ்சாற்றே. (253)

சாற்றடா தாய்தனக்கு ஆபரணமெல்லாந்
தரிக்கழுத்தில் கண்டசரம் போட்டுக்காறை
சாற்றடா சூரியன்போல் ரத்தினக்கொப்பு
சதிரான குழைக்காதில் பொற்றோடப்பா
சாற்றடா கிரீடமுடி யரைநாண்பூண்டு
தருவான தாய்பதத்திற் கொலுசுபூட்டி
சாற்றடா நூபுரங்க ளெல்லாமிட்டு
சாரவே சிறுகைக்குக் கடையம்போடே. (254)

பூட்டுவாய் பொற்கடகம்பொற்சரிகை முன்கைக்கு
புகழான தங்கத்தின் விரலாழிதன்னை
பூட்டுவாய் பாதவிரற்கெல்லாம் பொன்னாய்
பூட்டுவாய் ஆபரணமெல்லாஞ் செய்து
பூட்டுவாய் சுழினையிலே நந்திசூட்சம்
பூபொதித்து தாய்மனத்தை நிலைக்கப்பண்ணி
பூட்டுவாய் குருசூட்சங் குருநாதன்தான்
பொற்றகட்டின் சக்கரத்தைப் புகழ்ந்துவையே. (255)

வையப்பா பாதத்தின் படமேலையா
வளமாகச் சக்கரத்தி னபிஷேகஞ்செய்து
வையப்பா சந்தனம் விபூதிசாற்றி
வாசமாய் ஞானமொடு கண்படுத்தி
வையப்பா சிவந்தபுஷ்ப மெல்லாஞ்சாற்றி
வளமாக செண்பகப்பூ மாலைசாற்றி
வையப்பா சக்கரத்தின் பாதபூசை
மகத்தான மானதமாம் பூசைபண்ணே. (256)

பண்ணப்பா தூபமொடு தீபங்காட்டி
பரமானம் பால்பழங்கள் ரசவர்க்கங்கள்
நண்ணப்பா பலகாரம் பெரும்படைப்பாயன்னம்
நலமாகப் பொங்கியே பொரித்துவைத்து
வெண்ணப்பா நெய்வேத்திய மெல்லாஞ்செய்து
வியல்பான மணியோசை சங்கநாதங்
கண்ணப்பா சேகண்டி நாதவோசை
கியானமுட னீயிருந்து களிகொள்வாயே. (257)

களிகொண்ட ஆசையடா சுத்திவாங்கி
கருணைபெற வென்றேதான் தாய்கைக்கீந்து
நெளிகொண்ட கும்ப பயோதரத்தில் வைத்து
நேசமாய் பூசித்து கையில்வாங்கி
விளிகொண்ட புருவமய்ய மொளிக்குள்காட்டி
வேதாந்தக் குருநாதன் தாய்கைக்கீந்து
களிகொண்ட மவுனமுடன் தாய்தான்கொண்ட
தன்சேஷங் குருநாதன் கரத்தில் வாங்கே. (258)

வாங்கியே குருநாதன் கொண்டசேடம்
மகத்தான சீஷருக்குக் கரத்திலீவாய்
பாங்கான பிள்ளைகள்தான் கொண்டபின்பு
பதியாகத் துளசிபத்திரங் கையிலீந்து
தேங்காமல் தின்றிருக்க முத்தியாகுந்
தேவிதனக் கன்பான பாதபூசை
யோங்கியே பின்பெல்லா முச்சாடித்து
உத்தமனே நிர்மாலிய மொழியப்பாரே. (259)

ஒழிந்தபின்பு தன்னைமுதற் பிள்ளையெல்லாம்
ஓகோகோ தாய்முதலாய் பசிகளாறி
தெளிந்தபின்பு சிவயோக குருநாதன்தான்
செயிக்கலாஞ் சாம்பிராணித் திலதஞ்சாற்றி
யளிந்தபின்பு களபசுகந்தாதி யீந்து
அவரவர்க்குத் தாம்பூலந் தன்னையீந்து
சுளிந்தகும்ப மவுனமென்ற சூட்சந்தன்னிற்
சொற்குருவின் பீடமென பற்றச்சொல்லே. (260)

சொல்லான மவுனமுற்றால் சீஷரெல்லாஞ்
சொற்கபத மோட்சகதி பெறுவாரய்யா
செல்லான யோனியினாலெழுவகையின்தோற்றஞ்
செப்புகிறே னன்றாகத் தெளிந்துகேளு
கல்லான மலைபாறை தாபரங்கள்
கானங்களாவன சாதி மிருகசாதி
வல்லான·சமூத்திரத்தில் வாழுஞ்சாதி
வகையெல்லாம் பிறந்திறந்த வரிசைகேளே. (261)

வரிசையாய் நவலோகம் நவரத்தினங்கள்
வாகான சரக்குகள் பாஷாணங்கள்
உரிசையாய் மனத்தாலே பொறியினாலே
ஓமென்ற பிரணவந்தான் கோடிப்பிறப்பாச்சு
பிரிசமாய் துக்கத்துக்கே வித்துத்தோன்றி
பிலத்துதடா வுன்பிறப்பு பிறப்புங்கோடி
பரிசிக்க யாராலாஞ் சித்தராலாம்
பஞ்சபாதகம் விளைந்த களையைப்பாரே. (262)

களையான சீவகளை தீபம்போலே
கண்டுதடா வெண்ணைதிரி மாண்டபோது
களையான சீவகளை யெங்கேபோச்சு
கனலொளியின் பூரணந்தா னெங்கேபோச்சு
களையான கதலிகுலை சாயும்போது
காரணமாய் முன்போலே பின்புண்டாமே
களையான சீவகளை பக்கத்தேதான்
கண்வெடித்த கதையாச்சு சீவன்காணே. (263)

காணப்பா இப்படியே பிறப்பிறப்புமார்க்கங்
    கண்டறியார் சாஸ்திரங்கள் சொல்லாதையா
தோணப்பா வேதாந்தஞ் சொல்லிவிட்டேன்
    சொன்னதொரு பாடலெல்லாஞ் சத்தியவாக்கு
பூணப்பா செவிகேட்டுங் கண்தான்கண்டும்
    புகழான வாக்கிலே மொழிந்தபேச்சை
வீணப்பா மனத்தாலும் அறிவினாலும்
    லினங்காத பஞ்சபாதகத் துள்ளாச்சே. (264)

ஆச்சப்பா பஞ்சமா பாதகந்தா
    னப்பனே கோடிசென்ம மாகிப்போகும்
பேச்சப்பா ஆசையெல்லா அளவற்றகர்மம்
    பெருகியே அதுவதுவே சமுத்திரமாச்சு
நீச்சப்பா சமுத்திரத்தை நீஞ்சப்போமோ
    நிலையில்லை கரையில்லை மாயையாட்டு
மூச்சப்பா அற்றிடத்தே க்ஷணத்திற்சித்தி
    முழுப்பாவம் பஞ்சபாதங்கள் போமே. (265)

பாவவழி

பாதகங்கள் போமென்னிற் பாவமென்ன
    பரமான வென்குருவே யருளிச்செய்வீர்
சூதகமாம் நாதத்துள் விந்துபூத்து
    சுகம்போலே யிருந்துதடா வதுவேபாவம்
பேதையரைப் பெண்டுவைத்து மைதுனமேசெய்து
    பிறந்தாயே யவள்வயிற்றுட் சென்மித்தேதான்
மாதாவே யென்தாயே கொடும்பாவிநீதான்
    மகவாகப் பிறப்பட்டால் ஞானமாமே. (266)

ஞானமா மென்றீரே மலடுமெத்த
    நாட்டிடீ ரிதுவெல்லா ஞானந்தானோ
தானமாம் நெல்லுக்குள் பதர்போனாக்கால்
    சாயுச்சிய பதமங்கே கிட்டிப்போச்சோ
வேனமாய்க் கோடானுகோடி சென்ம
    மெடுத்தல்லோ இதுமலடு வென்றாலேது
கூனராய் குருடராய் செவிகேளாராய்
    கூறுகெட்ட வுலுத்தராய்க் கசடராச்சே. (267)

உலுத்தரா யீயாராய் குணமில்லாராய்
ஊமைகளாய் முடவராய் நொண்டியாகி
பிலுத்தராய் கைமுறிந்த சப்பாணியாகி
பேதித்த மனதாகிப் பெண்ணாசைக்குள்ளாய்
குலுத்திரமே படைத்த நெஞ்சவஞ்சராகி
கூறுகெட்ட பிறப்பாச்சு கொடுமாபாவம்
விலுத்தங்கே குறிநாதத்துள்ளே புக்கில்
விட்டகுறை யிப்படியே தூக்குங்காணே. (268)

விட்டகுறை யொழிவதெப்போ பாதகங்கள்
மேலான பாவமது ஒழிவதெப்போ
திட்டமுட னென்குருவே சொல்லவேணுஞ்
சிறுபிள்ளாய் சொல்லுகிறேன் கேளுகேளு
அஷ்டகர்ம சிவயோகக் குருவைக்காரு
ஆண்டு பன்னிரண்டாகி லருளிச்செய்வார்
செட்டிகள்போல் திரியாதே குருவைக்காரு
திரமாகச் சோதிப்பாய் சீஷர்க்காயே. (269)

சீஷனா மெனத்தேர்ந்தால் மவுனஞ்சொல்வார்
சிற்றெறும்பு வூறையிலே கற்குழிந்தாப்போலே
பாசமங்கே வைக்கவைக்கப் பாவமெல்லாம்
பர்வதம்போல் பஞ்சுவைத்து அணுவளவுதீயை
நேசமுடன் வைத்தகதை போலேயாச்சு
நிலைத்துநின்ற குருவுக்கு மனங்கோணலாகா
வேசைமனம் போலாகி யலையாதேநீ
வேதாந்த குருபதத்தை மேவுமேவே. (270)

மேவவே தசதீட்சை யுபதேசங்கேளு
வேதாந்த சத்தியுட பூசைகேளு
மேவவே யஷ்டகர்ம மறுவகையுங்கேளு
விசுத்தியென்ற சுழிமுனையி னாட்டங்கேளு
மேவவே சிவபூசை மார்க்கங்கேளு
மேலாகத் திரியாதே தன்னைக்கேளு
மேவவே தலைவனைக்கேள் புவனைக்கேளு
வெளியான பூரணத்தி னிலையுங்கேளே. (271)

நிலவரமா யிருந்தவகை யெல்லாந்தானே
நேசமாய்ச் சொன்னாக்கால் சித்தனாவாய்
தலைவனா நீயுமப்போ தன்னைக்காண்பாய்
சமுசார மாயையெல்லாந் தவறுண்டேபோம்
உலைமெழுகா யுள்ளமெல்லா முருகிக்காரு
வுத்ததொரு சீஷனென்றே குருநாதன்தான்
அலையாமல் ரத்தினம்போ லறிவைச் சொல்லி
அந்தரமா மறிவதனை யறிவிப்பாரே. (272)

அஷ்டகர்மம்

அந்தரமாஞ் சுழினையிலே நந்திவாழ்க்கை
ஆதார ஆனந்தரூபங் காணுஞ்
சுந்தரமா மஷ்டகர்மஞ் சித்தியாகுந்
தொழிலான மாந்திரிகஞ் சித்தியாகுஞ்
சிந்தையுமோ பராபரத்திற் சித்தியாகுந்
தேவியுட தசதீட்சை சித்தியாகும்
வந்ததொரு அணிமாவுங் கிரிமாவோடு
வளமான லகுமாவு மகிமாவோடே. (273)

வசீகரசித்தி

மகிமாவும் பிறாத்தியொடு பிறாகாமியந்தானும்
வசியத்தோ டீசுரத்தோ டெட்டுஞ்சித்தி
சுகிமாவு மிவர்களுட ஏவலாகுஞ்
சொல்லுவே னஷ்டகர்மங் கைமுறைதான்கேளு
முகியான வசீகரத்தின் சித்திகேளு
மூர்த்தியாம் வில்லை மாப்பலகைமீதின்
மகிழவே வசிமநய வென்றேசொல்ல
வாச்சுதடா இருபத்தஞ் சறையுளாமே. (274)

ஆமப்பா ரேகைதா னாறுகீறி
யப்பனே ஆறுவரை குறுக்கேகீறி
நாமப்பா இருபத்தஞ் சறைக்குளெல்லா
நாட்டடா இருபத்தைந் தட்சரத்தை
ஓமப்பா அறைதோறு மெழுத்துக்கெல்லா
ஓமென்றே பிரணவத்தைச் சுற்றிக்கட்டி
தாமப்பா மேல்ரேகை சூலங்கீறி
தப்பாம விருபத்துநாலு சூலத்துக்கும்
வேமப்பா ஸ்ரீயென்று மேலேகட்டி
விளங்கவே ஐங்கார மீறப்பூசே. (275)

மீறவே முல்லைப்பூ தன்னைச்சாற்றி
வித்தையெல்லாஞ் சீரணித்து அவ்வையாலே
கூறவே வெளியொளியாய்ப் பிரணவமுன்னாக
கூவுதற்கு வசிமநய வென்றுவோதி
தேறவே கிழக்குமுகமா யிருந்து
சேவிப்பா யாயிரத்தெண்ணுரு பதினாறுக்கும்
மாறவே ருத்திராட்சமணி பதினாறுக்கும்
வாகாக முகமணிதான் குளிகைகட்டே. (276)

கட்டப்பா ரசகுளிகை வசீகரமாங்குளிகை
கண்டவுட லஷ்டகர்மஞ் சித்தியாகும்
விட்டப்பா செல்லாதே வசீகரமேசித்தி
மேலான வசியத்து ளெட்டுமாடுங்
கொட்டப்பா தேளென்றால் நேரஞ்செல்லுங்
கொடுஞ்சுறுக்குக் குளிகையுட மார்க்கந்தானும்
அஷ்டசித்தி கைக்குள்ளாங் கர்மமெட்டும்
அகஸ்தியர்க்குச் சித்தியடா அறிந்துபாரே. (277)

மாரணம்

அறிந்துபார் மாரணத்தின் கர்மஞ்சொன்னேன்
அத்திமரப் பலகையிலே சக்கரத்தைக்கீறி
செறிந்துபார் மநயவசி யென்றுள்ளிட்டு
திடமாக முள்போலே கைமுறையாய்ச்செய்து
வெறிந்துபார் ஐங்காயம் மேலேபூசி
வெகுசுறுக்கா யெருக்கம்பூ மாலைசாற்றி
முறிந்துவிடு தென்கிழக்கு மூலைபார்த்திருந்து
மூன்றுபத்து நாபிமரமணிதான் செய்யே. (278)

பேதனம்

செய்யப்பா பதினாறு மணிதான்மூர்க்கந்
திடமாக ரசகுளிகை முகமணியாய்க்கட்டி
மெய்யப்பா வாலையுடன் மநயவசியென்று
வெற்றியே யாயிரத்தெட் டுருவிற்சித்தி
வையப்பா பேதனத்தின் கர்மங்கேளு
வாகான தில்லைமரப் பலகைமீதி
உய்யப்பா சக்கரத்தை நன்றாய்க்கீறி
உத்தமனே ஐங்காய மூணப்பூசே. (279)

ஊணவே வநசியமவென் றுள்ளிட்டு
வுறவாட்டு திருவாத்திப் பூவைச்சாற்றி
தோணவே தென்முகமா யிருந்துகொண்டு
சுகமாக வாலையுடன் வநசியமவென்று
நாணவே யெட்டிமர மணிதான்செய்து
நலமாகப் பதினாறு மணிக்குங்கேளு
பூணவே பேதனமாம் ரசக்குளிகைகட்டு
புகழாக ஆயிரத்தெண் ணுருவிற்சித்தே. (280)

ஸ்தம்பனம்

சித்தான ஸ்தம்பனத்தின் கர்மங்கேளு
சீரான வாலிமரப் பலகைமீதின்
முத்தாகும் யவசிமநவென் றறையிலிட்டு
மூலமுதல் கைமுறையாய் தெளிந்துகீறு
பத்தான ஐங்காய மேலேபூசி
பரிவாக வெள்ளலரிப் பூவைச்சாற்றி
கொத்தாக வாலையுடன் யவசிமநவென்று
கூறுவாய் தென்மேல்மூலை நோக்கே. (281)

வித்துவேஷணம்

நோக்கியே தாமரைக்காய் மணிபதினாறுக்கு
மருவுரசத் தம்பனத்தின் குளிகைமுகமணியாய்
தாக்கியே யாயிரத்தெட் டுருவிற்சித்தி
தப்பாது வித்துவேக்ஷணத்தைக் கேளு
பாக்கியமாம் பாதிரிகைப் பலகைமீதிற்
பண்பாக யமவநசியென் றறையுள்ளிட்டு
ஆக்கியே ஐங்காய மேலேபூசி
அப்பனே செவ்வலரிப் பூவைச்சாற்றே. (282)

சாற்றியே மேல்முகமா யிருந்துகொண்டு
தயவாக வாலையுடன் யமவநசியென்று
போற்றியே யிலந்தைமணி பதினாறுக்கும்
பூட்டுவாய் ரசகுளிகை முகமணியாய்
தேற்றியே சகலமெல்லாம் வித்துவேஷிக்குஞ்
செப்புவா யாயிரத்தெண் ணுருவிற்சித்தி
யேற்றியே சகலவுச்சாடனத்தைக் கேளு
இதமான பலாப்பலகை இணக்கிச்செய்யே. (283)

உச்சாடனம்

இணக்கியே பலகைசெய்வா யகலநீளம்
ஏகசமனங் குலமோ நாலாகத்தான்
பணைக்கவே இருபத்தஞ் சறையுங்கீறி
பத்தியா யசிமநவவென் றுள்ளிட்டு
வணைக்கவே ஐங்காய மேலேபூசி
யப்பனே காட்டுமல்லி மலரைச்சாற்றி
பிணக்கவே வாலையுடன் யசிமநவவென்ன
பெருவாழ்வு நிதிக்கோண மூலைப்பாரே. (284)

பாரப்பா வாய்வான மூலைநோக்கி
பதறாதே துளசிமணி பதினாறுக்கும்
நேரப்பா ரசகுளிகை முகமணியாய்க்கட்டி
நிலவரமா யாயிரத்தெண் ணுருவிற்சித்தி
காரப்பா தூபமொடு தீபந்தானுங்
கற்பூராலாத்தி யொடு கட்டாய்ச்செய்து
சேரப்பா அஷ்டகர்மஞ் சித்தியாகச்
செப்புகிறேன் குருநாதன் திறத்தைக்கேளே. (285)

திறமான தங்கரவிக் கடகம்போடு
சேர்ந்த பவித்திரம்போடு விரலாழிபோடு
வறமான பாதரட்சை குறடுபோடு
அப்பனே அஷ்டாங்க வழிகள்பூணு
நிறமான வாறுகட்டிக் கலசம்போடு
நேசமா யுட்கழுத்தில் ரசமணியைக்கட்டு
மறவாதே கணுக்காலிற் கொலுசுபோடு
வாசமா யிருகரமு மணிகள்கட்டே. (286)

கட்டியே காஷாயங் கவிசனமேபூண்டு
கரமீதில் ருத்திராட்ச மணிகள்பூண்டு
கிட்டினாசன மறையிற் றரித்துக்கொண்டு
கிருபைபெற புலித்தோலின் மேலிருந்து
வட்டியாய் பரமவாசனத் திருந்து
அகாரமுத லுகார பிரளயத்திருந்து
எட்டுவகை கர்மமெல்லாம் நன்றாய்ச்சேவி
யெளிதல்ல சித்தருக்கென் றெடுத்தவாறே. (287)

மோகனம்

வாறான மோகனத்தின் கர்மங்கேளு
வாகான வாலிமரப் பலகைமீதில்
கூறான இருபத்தஞ் சறையுங்கீறி
கொண்டதிலே நயவசிமவென் றுள்ளிட்டு
பேறாத வைங்காய மேலேபூசி
பித்தகாஞ் செம்பரத்தம் பூவைச்சாற்றி
வீறான வாலையுட னஞ்சுங்கூட்டி
மிளகுமணி பதினாறில் விரும்பவோதே. (288)

ஓதடா ரசகுளிகை மணியாய்க்கட்டி
வுத்தமனே யாயிரத்தெண் ணுருவிற்சித்தி
யேதடா வென்றாக்கா லொன்றுமில்லை
இலங்குகுரு நாதன்மொழி பற்றவேணும்
ஆதரவா யணைப்பதற்குக் கர்மங்கேளு
அப்பனே வெள்ளைநாவல் பலகைமீதில்
போதமெல்லாம் நிறைந்த சியமவநவென்று
பூட்டியே ஐங்காயமேலே பூசே. (289)

பூசியே தாழம்பூ மலரைச்சாற்றி
புகழாய் ஓம்ஆம் ஔவும் சியமவநவென்று
ஈசான முகநோக்கி யிருந்துகொண்டு
இச்சைபெறப் படிகமணி பதினாறுக்கும்
வாசமாய் ரசகுளிகை முகமணியாய்க்கட்டி
வழங்கவே யாயிரத்தெண் ணுருவிற்சித்தி
பூசையிலே யிதுவல்லோ வொளியைக்காட்டும்
பூட்டெல்லா மிதுபூட்டு திறந்திட்டேனே. (290)

திறந்திட்டேன் சீஷருக்கு இப்படியேசெப்பு
செத்தபிண மானாலும் திரும்பிப்பேசும்
மறந்திட்டே னெண்ணாதே மக்கள்வேண்டி
வழங்கவே யஷ்டகர்மங் கைமுறையாய்ச்சொல்லும்
பிறந்திட்டார் பிள்ளைகளே யுங்களுக்குப்
புத்திபேசுகிறேன் முப்பத்து ரெண்டுறுப்புங்
கறந்திட்ட படியாக சென்மித்தாக்காற் காலனுக்கு
உயிர் கொடுக்கக் காட்டொணாதே. (291)

ஒண்ணான மனமல்லோ பிலக்கவேணு
உற்றகுரு தெரிசனையைப் பெறவேவேணுங்
கண்ணாலே யொளியல்லோ காணவேணுங்
கற்பமுண்டால் சாகாம லிருக்கவேணும்
பண்ணான வெந்நூலைப் படிக்கவேணும்
பார்மகனே ஞானமெல்லாம் நன்றாய்த்தோணும்
உண்ணாத வமுர்தமல்லோ வுண்ணவேணும்
உற்றகுரு நாதனுட வுண்மைகேளு. (292)

உண்மையென்ற பொருளுரைக்கச் சொல்லக்கேளு
வுதிரமெனுஞ் சீவகளை தன்னைச்சொல்வார்
வெண்மையென்ற வித்தென்னு மகாரபீடம்
வேதாந்தச் சிவனிருந்தார் சுழினைக்குள்ளே
கண்மையென்ற கண்ணனும் மகாரபீடங்
கருத்துறவே உகாரமது கண்ணிற்றோன்றுந்
தண்மையென்ற குருபரந்தான் ரவியொளியைக்காணுஞ்
சாதகமாய் பிள்ளைகளே சாதிப்பீரே. (293)

யோகவகை

சாதிக்கும் யோகத்தின் வகையைக்கேளு
தப்பாமற் சொல்லுகிறே னப்பியாசிக்க
வோதிக்கும் பாலன்ன மொருபோதுண்டு
வுத்தமனே மலசலங்கள் வாறபோது
பேதிக்கும் போமலத்தை அபானவாய்வால்
பிலக்கவே யிறுக்காதே அமுரிதானுஞ்
சோதிக்கும் பாய்படுக்கை யிடக்கைதலைகீழாய்
துயிலுவா யிருகாலு மடக்காதென்னே. (294)

என்னவே விந்துதனை யிகழவேண்டாம்
எடுத்ததுக்கெல்லா மாசை பண்ணவேண்டாம்
பின்னமா யபினிகள்ளு கொள்ளவேண்டாம்
பேரான கற்பங்கள் கொள்ளும்போது
கன்னவே திருமந்திரங் கொள்ளவேண்டாம்
கடும்புகையாய்க் கஞ்சாவைக் குடிக்கவேண்டா
மென்னவே கற்பமுதல் யோகம்ரெண்டும்
ஏறாது புத்தியினாற் தேறுவாயே. (295)

சரியை

புத்திதா னிப்படியே நடந்துகொண்டாற்
போதகமாம் யோகசித்தி கைக்குள்ளாச்சு
பத்தியிந்தச் சரிதையொடு கிரிகையோகம்
பரமான ஞானமொடு நாலுங்கேளு
வத்தியிந்தச் சரிதையுடன் குணத்தைக்கேளு
வப்பனே தேகமாம் நாதத்தாலே
சுத்தியிந்த வாய்வாகும் விசையினாலே
தொல்லுலக முண்டாச்சு சரிதைவாழ்வே. (296)

கிரியை - யோகம் - ஞானம்

சரிதையிலே கிரிகையுடன் குணத்தைக்கேளு
தருவான விந்துவினாற் தேயுமீறி
சரிதையிலே சலராசி லிங்கபீடஞ்
சரிதையிலே யோகத்தின் குறியைக்கேளு
சரியாம் விந்துவுட னாதங்கூடி
தத்துவமெல்லாம் பிறந்த நாடியாலே
சரிதையிலே ஞானத்தின் கருவைக்கேளு
தருவுள்ளத்தே யமர்ந்த கணேசன்தானே. (297)

கணபதியே பஞ்சபூதத்தின் கீழாய்
கெடியாகப் பிறப்பிறப்பாய் வளர்ந்தஞானி
கணபதியே பெண்பிள்ளை யாண்பிள்ளையென்று
கீழ்வாசல் புக்கியே யண்டபிண்டமானார்
கணபதியே யோனிரண்டும் வினைதான்ரெண்டும்
கிருபையுற்ற பூரணமாங் கரைகன்டோரில்லை
கணபதியே தாபரமுஞ் சங்கத்தோடு
கெடியா மிந்நூல் விரதமேழுந்தானே. (298)

தானென்ற சரிதையிலே நால்விதமுஞ்சொன்னேன்
தப்பாமல் கிறிகையுட விபரங்கேளு
வானென்ற வல்லபையாஞ் சத்திநாத
மகத்தான வித்துடனே கூடும்போது
தேனென்ற ருசிபோலே சடலந்தூக்கி
சிவபீட மாருதமாந் தீயிலேறுங்
கானென்ற சாமீபங் கருணையென்று
கண்டுசொன்னேன் கிறிகையுட யோகங்கேளே. (299)

கேளப்பா தசநாத வாய்வுக்கெல்லாங்
கிருபையென்ற வாதியென்றே கிண்டிப்பார்க்கும்
வாளப்பா தசகாரிய மென்றேவாழும்
வாசனையாங் கிரிகையிலே ஞானங்கேளு
வாளப்பா அட்சரங்கள் தன்னைப்பற்றி
ஆசையா யிரண்டிலுந்தா னறியப்போகும்
வேளப்பா கிரிகையிலே முக்குணமுஞ்சொன்னேன்
மேலான யோகத்தை விளம்புறேனே. (300)

விளம்புகிறேன் ரவிமதியுஞ் சுழினைக்குள்ளாய்
விண்ணாட்டங் கண்ணாட்டம் விசையினாட்டம்
விளம்புகிறே னறிவாலே நாடிமூன்றும்
விரும்பியே செட்டுப்போல் வாசியோகம்
விளம்புகிறேன் யோகத்தில் ஞானங்கேளு
வேதாந்த நந்தியல்லோ மூலத்தீயில்
விளம்புகிறேன் தசநாடி கடந்தயோகம்
வேறான மூக்குநுனி மேவிப்பாரே. (301)

மேவினேன் யோகத்தி - லிருகுணமுஞ் சொன்னேன்
வெளியொளியாய் முப்புரமும் புரத்தினூடே
மேவினேன் மண்டலங்கள் மூன்றினாலே
வேதத்தி னந்தமங்கே நடனமங்கே
மேவினேன் புருவமய்யத் தமர்வாசலங்கே
மெய்ஞ்ஞான மென்பதெங்கே யதிலேபுக்கி
மேவினேன் மெய்ஞ்ஞான நாடிவாய்வால்
விந்துவினால் பூரணமே ஞானமாமே. (302)

ஆமப்பா தசகாரிய நூ தூலநாடி
ஆசையாம் பசுபதி பாசத்தோடு
தாமப்பா மூன்றுவகை மும்மூன்றாச்சு
சாதகமாய்க் கூடினபின் ஒன்றாய்ப்போச்சு
வோமப்பா தசகாரிய முற்றுப்பாரு
வொளியாவ திதுக்கல்லோ தசதீட்சைசொன்னேன்
நாமப்பா விதுவெல்லாஞ் சித்தியாக
நாட்டினேன் சாபங்கள் நிவிர்த்திசெய்யே. (303)

சாபநிவிர்த்தி

செய்யப்பா அகஸ்தியர் சாபந்தன்னை
தீர்ப்பதற்கு வகைசொல்வேன் கேளுகேளு
மெய்யப்பா ஓம்ஔவும் உவ்வுங் கூட்டி
விளங்கவே அகஸ்தியர்சாபம் நசிநசியென்று
உய்யப்பா பன்னீராயிர முருவேறித்தான்
ஓம்நமசிவாய மென்றே யோதினாலுந்
தொய்யப்பா சொற்கபத முண்டாமப்பா
துடியான நவசித்தாள் சாபங்கேளே. (304)

கேளப்பா பிரணவமாம் பரைவாலைதானுங்
கெலிக்கவே சிவாயநமா நவசித்தர்சாபம்
வாளப்பா நசிநசியென்றுரைப்பாய் முன்போல்
வாச்சுதடா மந்திரமெல்லாஞ் சித்தியாகு
நாளப்பா யேழுவகை சாபந்தீர்க்க
நாட்டினே கெசசாப நிவிர்த்திகேளு
தேளப்பா கொட்டுதல்போல் சாபமெல்லாந்
தீப்பொறியைப் பஞ்சில்வைத்த கதைபோலாச்சே. (305)

ஆமப்பா ஓம்சீயும் கெசசாபம்நசிநசி
யப்பனே முன்போலே யுருவிலேற்று
வோமப்பா போகர்சாபம் நிவிர்த்திகேளு
ஓம்சிவய சுக்ரசுக்ரசாபம் நசிநசியென்றோது
நாமப்பா முன்போலே சேவிப்பாய்பின்
நான்முகப் பிரமசாபம் நிவிர்த்திகேளு
தாமப்பா ஓங்சங்வங் பிரமதேவர்
சாபம் நசிநசியென்று தாக்கிடாயே. (306)

தாக்கவே ஹரிசாபம் நிவிர்த்திகேளு
தயவாக ஓம்அங்சங்வங் கென்றேதா
னாக்கவே விஷ்ணுசாபம் நசிநசியென்றே
யதட்டியே சேவிக்கச் சித்தியாகும்
போக்கியே ருத்திரன் சாபத்தைநீக்கப்
புகலுவே னாலெழுத்துஞ்சாத்தி யங்கொன்றோது
ஏற்கவே நசிநசியென் றோதும்போது
எடுத்ததொரு மூலியெல்லாஞ் சித்தியாமே. (307)

சித்தியாம் வாதமொடு வாசிமூலந்
 தெய்வமா மந்திர அஷ்டகர்மந்தானுஞ்
சித்தியாங் கற்பங்கள் குளிகையோகஞ்
 செடத்தினுள்ளே பஞ்சகர்த்தா ளாதியந்தஞ்
சித்தியாம் நந்தியொடு மனமுந்தேறுந்
 தீட்சைமுத லனுஷ்டானஞ் சிவபூசைதானுஞ்
சித்தியாஞ் சக்கரங்கள் மானதமாம்பூசை
 தெசதீட்சை கவனமுதற் சிக்கும்பாரே. (308)

சிக்கவே மயேசுவரத்தின் சாபம்நீக்க
 செப்பினே னாலெழுத்துஞ்சாத்தி யங்கொ ன்றோது
சிக்கவே நசிநசியென் றன்பாயோது
 தேறவே சதாசிவத்தின் சாபம்நீக்கி
சிக்கவே சாத்தியத்தால் முன்போலோது
 திடமாக நவசாப முருவையேற்றி
சிக்கவே லட்சத் தெண்ணாயிரத்தில்
 தெளிவாகு மொளிபெறலாஞ் செயங்கண்டீரே. (309)

கண்டேனா னிப்படியே சாபம்நீக்கி
 கைகண்ட படிசொன்னேன் களவில்லாமல்
விண்டேனா னுங்களுக்கா யெந்தன்மக்காள்
 விண்ணொளியைக் கண்ணொளியால் மேவிப்பார்த்துக்
கொண்டேனான் லட்சியத்தின் நந்திபேச
 குண்டலித்தாய் கண்டத்தில் கூர்ந்து பார்த்து
அண்டமுதற் பதமளவு மளித்தாள்கன்னி
 யாசைவைத்தான் மோகம்வைத்தே னாண்டேன்நானே. (310)

ஆண்டிருந்தோ மவுனத்தைச் சுழினையுள்ளே
 யாடுகிற வழிமார்க்கம் வாசிபார்த்தேன்
பூண்டிருந்தேன் மனதையங்கே ஒட்டிப்பார்த்தேன்
 புருவமய்யத் தமர்திறந்து போனேன்மேலே
தாண்டிடும்போ தறுசபையுஞ் சுற்றக்கண்டேன்
 சஞ்சரிக்க மாட்டாமற் றவறிவந்தேன்
தூண்டினேன் விளக்கொளியைச் சூட்சங்கண்டேன்
 சொற்கபதங் கைகொண்டேன் துயர்வென்றேனே. (311)

வென்றேநான் சரிகைமுதற் கிரிகைரெண்டும்
வெட்டினேன் திரோதாயி மாயையெல்லாஞ்
சென்றேநான் மேருவிலே கேசரியைக்கண்டு
தெளிந்தேனான் மனந்தன்னை யறிவிலூட்டி
ஒன்றேநா னென்றபொருட் சம்புநாத
மோகோகோ மூன்றுமொன்றா யூணிப்பாரு
வென்றேநா னுங்ககளுக்கு வித்தைகாட்டி
யென்னசொல்வே னாலினுட வியல்புதானே. (312)

தானென்ற ஞானமடா சூத்திரன்தான்சாதி
தனக்கல்லோ மவுனத்தின் வினையாம்பத்துங்
கானென்ற யோகமெல்லாங் கைக்குள்ளாகுங்
கண்ணாட்டஞ் சுழினையிலே காந்திகாண்பான்
வானென்ற வுலகமெல்லா மயக்கமென்ற
மவுனமென்ற வாலைதன்னை வணங்கிச்செய்யே
தேனென்ற பூசையுமோதி சித்தியாகுந்
தேறுவான் சூத்திரன் றொட்டேறுவானே. (313)

ஏறுவான் வணிகனென்றால் யோகத்தேதா
னெளிதல்ல வென்றேதான் மவுனத்தையூணி
கூறுவான் ராஜரிஷிக் கிரிகைமேலே
கொண்டேறிச் சரிதையிலே பிரமகுலமானான்
மீறுவான் பிரமபட்ட மங்கேயாகி
விருதாக அடியறிந்து முடிகண்டோர்க்கு
ஆறுவான் கடிகையொன்றாம் பிரமரிஷியாகும்
ஆதியென்ற யோகமடா பிரமந்தானே. (314)

பிரமரிஷி யென்பதற்கு ஆராலாகும்
பிதற்றாதே சூத்திரனாஞ் சாதிக்காகும்
பிரமரிஷி யென்றுமனம் பேணியேறும்
பிள்ளைகளைச் சேகரிக்க மனதுபூணும்
பிரமரிஷி யானேனா னெங்கள்குலமெல்லாம்
பேரப்பா நந்திமுதற் சித்தரெல்லாம்
பிரமரிஷி யானவர்கள் நாலாஞ்சாதி
பெருநாலாம் பதங்கொண்டு பிறந்தோங்காணே. (315)

காணப்பா கோடான கோடிசாதி
கண்டதிலே யாயிரத்தொன்றாகுஞ் சூத்திரன்
பூணப்பா வறிவாலே சாதிகண்டு
போதியப்பா தசதீட்சை சொன்னாற்பத்து
மூணப்பா தசமெங்கு முலகமாடு
வுரையறியா வுலுத்தருக்குத் தீட்சையோத
வாணப்பா பேணப்பா ரெண்டுங்கண்டு
அறிந்தோது மவுனத்தை யறியத்தானே. (316)

அறிவா னவனென்றால் ஆணோசொல்லாய்
அப்பனே பெண்ணென்றால் பெண்ணோசொல்லாய்
குறியான பெண்தா னிரண்டுங்கண்டு
கொங்கணரே யென்குருவே சொல்லவேணு
நெறியான நாள்தனிலே யோர்ந்துசொல்லு
நிரையான சோதிரிஷி நூலைப்பாரு
சிறுவா கேளான வொளிகண்டு தீட்சை
செப்பவல்லோ மனதுரைக்குந் தீர்க்கமாமே. (317)

தீர்க்கமிந்தக் குறியறிந்து குறியைக்காட்டு
சேய்தனக்கு பழுதுவாராதப்பா கேளு
பார்க்கவிந்தப் பெண்யோனி செனித்தபேர்க்கு
பார்மகளோ பேதையென்ற புத்தியாகுங்
கார்க்கவிந்து குறியறிந்து தீட்சைவைப்பாய்
கைமறந்து மாண்டவர்கள் கோடாகோடி
ஏற்கவிந்தப் படியறிந்து சுழினைகாட்டி
யேறுவான் வாசியின்மே லேறுவானே. (318)

தூலயோனி

ஏறுதற்குத் தூலமென்றுஞ் சூட்சமென்று
மியல்பான மூலமென்று மூன்றுயோனி
தேறுதற்கு மூன்றுவகை யோனிதன்னை
செப்புமய்யா வென்குருவே செப்பவேணுங்
கூறுதற்கு வனுபோக விந்துநாதங்
கூடியே சென்மித்த மூலநாடி
மீறுதற்கு யோனிதன்னை யறியார்லோகர்
மேலான தூலமென்ற யோனிதானே. (319)

தானென்ற தூலமென்றும் யோனிதன்னைச்
சாற்றுகிறேன் சொல்லக்கேள் பூமிதன்னில்
கானென்ற பூமிசென்மம் பிறக்குமன்று
காரியகுரு சோதிரிஷி சாஸ்திரத்தில்
தேனென்ற நால்யோனி லக்கினங்கள்ராசி
செப்பியே சாதகந்தான் கூட்டச்செய்வார்
கோனென்ற விதுதானே தூலயோனி
கூறுகெட்ட நால்யோனி யிதுதான்பாரே. (320)

சூட்சயோனி

பாரப்பா சூட்சமென்ற யோனிதன்னை
பண்பாகச் சிரசுதயமான போது
சாரப்பா ராசியொடு லக்கினங்கள்
தருவான நாற்கரண யோனிசூட்சம்
வாரப்பா இந்தவகை யோனியாகா
வளமான சூட்சாதி சூட்சமூலஞ்
சேரப்பா விந்தங்கே செனிக்கும்போது
செப்புகிறேன் மகத்தான யோனிகாணே. (321)

காணவே போகாது சூட்சாதிசூட்சம்
கருணைவைத்து என்குருவே சொல்லவேணுந்
தோணவே லகுவாகச் சொல்லுவேன்கேள்
தோன்றவே பிறந்தநாள் யோனிதொட்டு
பூணவே முந்நூரு நாளிற்றானே
பாழாக வெண்ணிப்பா ரன்றைக்கேதான்
நானப்பா அன்றைக்கி ராசிநாள்
இலக்கணங்கள் யோனிமுதல் நாட்டிப்பாரே. (322)

பாரப்பா சுபதினத்திற் பஞ்சாங்கத்தை
பண்பாக சோதிரிஷி நூலைப்பாரு
நேரப்பா சிரசுதயந் தன்னைத்தொட்டு
நிலவரமாய்ச் சொல்லக்கேள் நாதவிந்து
சாரப்பா சென்மாந்திரந் தன்னைக்காண
சாற்றினேன் பதினெண்ணாயிராங் கடிகையாகுஞ்
சேரப்பா சென்மாந்திர யோனிமார்க்கம்
தினவார நட்சத்திர யோனிபாரே. (323)

யோனியிந்த சூட்சாதி மூலசென்மம்
யோகம்போல் சொல்லிவிட்டேன் சூத்திரயோனி
மேனியிந்தவகை யறிந்து சீடர்க்கோது
மேதினியின் குருக்களைப்போல் விள்ளாதேநீ
ஞானியிந்த முறைமைகண்டே நாலாம்பாதம்
நாட்டுவாய் சாயுச்சிய சாதிசூத்திரன்
மோனமென்ற மவுனமவன் தனக்குச்சித்தி
முப்பாழே கைவண்ண முத்தியாமே. (324)

முத்தியென்ற மூன்றுவகை தீயைச்சொல்லு
முப்பாழின் வகைசொல்லு முடிவைச்சொல்லு
புத்திகெட்ட மாணாக்காள் சொல்லக்கேளு
புகலாதே யாருக்கு மவுனமூலம்
சத்தியென்ற குண்டலியாஞ் சுழினைநந்தி
தற்பரமாம் பின்கலையே சித்தனந்தி
பத்தியென்ற விடகலையே சச்சுதானந்தி
பாரிதுவே முப்பாழா முத்தியாகுஞ்
சுத்தியென்ற லகிரியொடு குளிகைபோட்டு
சூட்சாதி மூலத்தே துறந்திட்டேனே. (325)

துறந்திட்ட சூட்சமென்ன மூலமென்ன
தூலமென்ன குளிகையிலே மூன்றுஞ்சொல்லு
துறந்திட்ட தென்குருவே காரணந்தான்
துகைப்பேச்சால் சொன்னாக்கால் வகைதோணாது
துறந்திட்டே னுங்களுக்குத் தாய்சொல்லக்கேளு
சூட்சமென்ற குளிகையதாஞ் சுழினைநந்தி
துறந்திட்டேன் பின்கலை ரவியினந்தி
தோன்றியதோர் கமலினியாங் குளிகைதானே. (326)

தானென்றா மதிநந்தி யிடைகலைக்கு
தடையற்ற சொரூபமென்ற குளிகையாகு
மானென்ற மூன்றாலே வாசியோகம்
வைப்பறிந்து குறிகாட்டி தீட்சையாலே
கானென்ற குருவின்மொழி தப்பாவண்ணங்
கைமுறையாய் அமாவாசை மட்டும்பாரு
பானென்ற சுயம்பில்வந்து பிட்சையேற்பாய்
பஞ்சிடவே நாம்வைத்த பாங்குமாச்சே. (327)

பாங்கான சுயம்பென்ன பிட்சையென்ன
பரமதிரு மூலருட பேராற்சொல்லும்
சாங்கமாய்ச் சொல்லக்கேள் மாணாக்காளே
சட்கோண வதனமடா வுள்முக்கோணம்
ஓங்காரங் குடியிருந்த மவுனநந்தி
யுத்தமனே குண்டலியாஞ் சத்திபீட
மாங்கார லாடக்கண் வேதாந்தந்தா
னறிவான் குருவங்கே யரிதுதானே. (328)

அரிதப்பா சொல்லுதற்குச் சித்தர்சொல்லார்
ஆச்சரியஞ் சிவன்சொல்லார் மூலர்சொல்லார்
அரிதப்பா ரிஷிசொல்லார் பெரியோர் - சொல்லார்
அரகரா செவியினிட மறிந்துபாரு
அரிதப்பா மூக்குநுனி வாயுவாச்சு
அந்தவிழி நந்திகண்ட தேயுவாச்சு
அரிதப்பா வாயுயுள்ளே யப்புமாச்சு
அப்பனே பிரிதிவு தானறியக்கேளே. (329)

கேளப்பா பிரிதிவி பிரமபீடம்
கேசரமென்றே புகல்வார் சொல்லாரய்யா
வாளப்பா சதாசிவப் பிரமமென்பார்
வாகான புருவமய்யத் தடியைக்காட்டார்
நாளப்பா கோடிசென்று நவில்வார்கேளு
நாட்டாத குருவாலே சீடர்மாண்டார்
ஆளப்பா சொல்லக்கேள் லாடநேத்திர
மடியான பிரிதிவியின் பிரமங்காணே. (330)

காணப்பர் சட்கோண சூட்சஞ்சொன்னேன்
கண்டு - சொன்னேன் சுயம்பிதுதான் சொல்லக்கேளு
பூணப்பா நந்தியிலே பெலிகொண்டேதான்
பூகழான திரிகோணச் சுழினைமீதிற்
பேணப்பர் பிட்சைதனை யெடுத்தபின்பு
பிலத்துநான் மேலாறுங் காணவேண்டி
தோணவே மலவாசல் மூலாதாரஞ்
சோதித்தேன் குண்டலியை சோதித்தேனே. (331)

சோதியென்ற களையாலே மூலாதாரந்
துடிகண்ண கஞ்சன் மாலரன்மயேச
னீதியுட னிவ்வோர்கள் சுவாதிஷ்டானம்
நிலையான மணிபூரக மனாகதம்விசுத்தி
வாதியென்ற கண்டரென்பா ரவர்கள்தாமும்
வழியோடே யறுசபையும் வாசிபார்த்தே
னாதியென்ற சுழினையா லாறுங்கண்டே
னப்பனே மேலாறு மலைந்திட்டேனே. (332)

அலைந்திட்டே னாக்கினையின் சதாநந்திபார்வை
யண்டமென்ற சுழினையின்மேற் புருவமையத்
துளைந்திட்டேன் கால்தலையா யுய்த்துப்பார்த்தேன்
ஒளிபெற்ற சித்தர்கள்தான் மறப்பையெல்லாங்
களைந்திட்டேன் பொறியஞ்சும் புலன்கொள்ளாமற்
காலோடு தலையறிந்து மேலேபார்த்தேன்
விளைந்திட்டேன் ஞானமெல்லா மொளியாய்க்கண்டேன்
வேதாந்தப் பூரணத்தை மேவினேனே. (333)

மேவியதோர் பூரணத்தின் கரைகொண்டோரார்
மெய்க்குளிந்த புரியஷ்டம் வினோதவித்தை
கூவியதோர் சபையேழுங் குடியாய்நின்று
குடிலமாய் பூரணத்தை மதியிலாட்டி
சாவிறத்துக் கொத்தவண்ணம் நாலும்பாழாய்ச்
சடலமல்லோ தீயில்வெந்து சாம்பலாச்சு
பாவிகா ளித்தனையு மாருஞ்சொல்லார்
பஞ்சமலங் கொண்டிருந்த பருவங்காணே. (334)

பரிசமென்ன சடலமென்பா ருடலமென்பார்
பாழ்நாற்றக்கட்டை யென்பார் கேளுமென்பார்
பரிசமென்ன சத்தியென்பார் சூட்சங்காணார்
பேய்மக்காள் சீவகளை நாதபீடம்
வருஷமென்ன வொன்றாலே தாயார்யோனி
மாதவிடை ரத்தமெல்லா மாதந்தோறுந்
தெரிசனையா சீவசத்தி பட்சமொன்று
செங்கமல மலர்ந்திருக்குஞ் சேர்வார்விந்தே. (335)

விந்துபுகு மேருதர மேவிக்கூடி
விசையான பூரகத்தால் வாயுவேகந்
தெந்தனமாய்ப் போகாது மாதம்பத்தில்
திரட்டியிடு முறுப்போடு தத்துவங்கள்
வந்துபுகுஞ் சபையேழு மாதாவுக்குள்
மாயையுடனே சென்றார் கர்த்தர்பீட
முந்தனக்கித்தனை யறியவுரையைச் செய்தே
னோகோகோ விந்துசிவன் தலைவனாமே. (336)

தலைவனா மென்பதற்கு நாதவிந்து
தமர்வாச லடுத்திருக்குஞ் சுழினையோரம்
நிலையிதா மென்றுசொல்லா ரிஷிகள்சித்தர்
நேசமுறக் கால்வில்ளார் வாசிபார்க்க
அலைவதே னிச்சடல மாகாதென்பார்
அத்துவிதமாய்ப் போனா லேதுண்டாகும்
உலைவதா யேதாலு மொன்றைநாடி
யொன்றைவிட்டு தர்க்கங்கள் பேசுவாரே. (337)

பேசியென்ன பேசாமல் வந்ததென்ன
பெற்றபேர் விட்டகுறை இல்லாவிட்டால்
வாசியென்ன யோகமென்ன மவுனமென்ன
மாடென்ன பெண்டென்ன மக்களென்ன
நாசியென்ன மூக்குநுனி நடுத்தானென்ன
நாதமென்ன வொன்றுமில்லை யென்பார்மாடு
தோசியவன் செனிக்கும்போ தமைந்தநாதம்
சொர்க்கவிந்து வுட்புகுந்த வேளைதானே. (338)

வேளையிலே விட்டகுறை யுண்டானக்கால்
வேதாந்த நந்திதனைக் குறியில்காட்டி
சாளையமாய்ப் போகாமல் தன்னைக்காட்டி
சச்சிதானந்த வெளி ரவியைக்காட்டி
கோளையெல்லாங் கக்கவைத்துத் தமரைக்காட்டிக்
கூர்பார்க்கத் தொடுகுறியாஞ் சுழினைகாட்டித்
தாளைநினைவாய் திறந்து வமுர்தமூட்டி
சாதிக்க யோகத்தின் வகையைச்சொல்லே. (339)

சொல்லப்பா ஓங்கார சூட்சந்தன்னை
   சூரியன்போல் வட்டமதா யிருக்குமென்று
சொல்லப்பா வென்னைப்போ லாருஞ்சொல்லார்
   சுகமாக வுங்களுக்கே சொன்னேனப்பா
சொல்லப்பா வதனவட்டமுட சூட்சந்தான்
   தொடுகுறிபோற் சண்முகமா மறுகோணத்தை
சொல்லப்பா விதினுள்ளே முக்கோணத்தை
   துண்டமெனுங் கண்டநுனி சொர்க்கந்தானே. (340)

சொர்க்கபத மாகியிந்தவெளி யொளியைக் - கண்டார்
   தூண்டிலிட்ட குருத்தனையே சூட்சஞ்செய்து
சொர்க்கபதந் தனைப்பாரு வாசியோகஞ்
   சூட்டப்பா குளிகைபோ லகிரிகொண்டு
சொர்க்கபதந் தெரிசனையா மாடுங்கூத்து
   தொடுகுறியாய் நடனமிட்டேன் கூத்துங்காணுஞ்
சொர்க்கபதங் குருவுனக்கு வருளிச்செய்தால்
   துரியம்போங் காயமெல்லாஞ் சொர்னமாமே. (341)

சொர்னமே தேடுதற்கு வாதமுத்தி
   தொடுகுறியுப்பாம் வழலைசூட்சங் கண்டார்
சொர்னமே கொடுக்குமடா சதாசிவத்தின்வைப்பு
   தொட்டேறக் கற்பூரஞ் செயநீராகிற்
சொர்னமடா நீருமதிற் சூதம்நீருந்
   துரிசிவெள்ளை பாறையுப்பு சுன்னத்தாட்டு
சொர்னமாஞ் சுன்னத்திற் றனுப்பாற்சூடன்
   சுரோணிதமாம் பூநீறு வூசிநீரே. (342)

ஊசிநீ ருப்போடே முப்பூவாச்சு
   வுயிராகுங் கற்பூர முண்டால்வாதி
வாசியோகத்தினிலே யமுர்தங்கொள்போல்
   வழலை மூன்றேவாங்க வன்னந்தன்னை
யாசியா மன்னபேதி யுப்பாம்வண்ண
   மமுர்தமா மிதையுண்ண வழலையமுர்தந்
தேசியாங் குருவண்டு புழுகும்பட்டார்
   சித்திபெற்ற வழலையுப்புச் சுண்ணமாமே. (343)

ஆமப்பா வீரமிடு வழலைவீரம்
அண்டரண்டங் கடந்தாடும் வாதஞானி
காமப்பால் பச்சையொடு பவளஞ்சேர்ந்தால்
கண்விழித்து மூடுமுன்னே நவலோகம்பொன்னாந்
தாமப்பா ரசதங்க பற்பமாகுஞ்
சாதித்துக் கடுகளவாய்க் கொண்டுதேறு
வோமப்பா தேகமெல்லாந் தங்கமாகு
முத்தமனே சுன்னத்தி னுப்புவேகம்
நாமப்பா சுழினையில் நந்தியொப்பாம்
நங்குருவாம் நாலாம்பொன் னாகுங்காணே. (344)

காணவே சண்முகமாந் தேவரெல்லாங்
கைமுறையாய் ரோமரிஷி சட்டைநாதர்
பூணவே தவறாமல் சூட்சஞ்சொன்னார்
புகழாக மனமுரைக்க லட்செயத்தைச்சொன்னார்
தோணவே சகலசித்தி கைக்குள்ளாகுந்
தொட்டேறத் திருமூல நாயன்தானே
பேணவே அன்னூற்றில் ஞானஞ்சொன்னார்
பிழைப்பதற்குக் கைமுறைக் கென்னூல்பாரே. (345)

பஞ்சமலம்

பாரப்பா பஞ்சமலஞ் சொல்லக்கேளு
பரிவான பிரிதீவியு மப்புந்தேயும்
நேரப்பா வாயுட னாகாசமஞ்சு
நிறுத்துகின்ற பொறிகேளு நாசிவாய்கண்
சாரப்பா மெய்யோடு காற்றை யறியலாச்சு
தன்தூலப் புலன்கேளு சத்தமொடுபரிசஞ்
சேரப்பா ரூபரச சூட்சந்தேகந்
தெளிவான கெந்தமொடு மஞ்சும்பாரே. (346)

பூதப்பெயர்

ஆச்சப்பா பூதத்தின் பேரைக்கேளு
அப்பனே பிரமனொடு மாலுருத்திரன்
வாச்சப்பா மயேஸ்பரனுஞ் சதாசிவனுங்கூடி
மகத்தான சிவபஞ்ச பூதமாச்சு
நீச்சப்பா விவர்களுட கமலங்கேளு
நிறையான முதல்சடையி னிதழ்தானாறு
மூச்சப்பா ரண்டான சடையிற்கேளு
முக்கியமுள்ள பத்திதழா மூன்றிற்கேளே. (347)

மூன்றான சபைதனிலே யிதழ்பன்னிரண்டு
மூர்க்கநாலாஞ் சபையி லீரெட்டாகு
நீண்டான சபைஅஞ்சி லிதழ்தானிரண்டு
நிஷ்டையாஞ் சடத்தினிதந் தானேசொன்னே
னூன்றிய சக்கரத்தி னியல்புகேளு
வுத்தமனே முதற்றானங் கோணம்நாலுந்
தாங்கியே ரெண்டாந் தானத்தைக்கேளு
நாகரிகமான பிறை கோணந்தானே. (348)

தானான மூன்றாந் தானங்கேளு
தடையில்லா முக்கோணந் தன்னைப்பாரு
தேனான நாலாந் தானத்தைக்கேளு
சிறப்பான வறுகோணஞ் சென்றுகாணுங்
கோனான வஞ்சாந் தானத்தைக்கேளு
குளிர்ந்தமதி பிறைகோண மிதினோடஞ்சு
வானான வந்தந்த சக்கரத்தைச்சொன்னேன்
வாளுமட்சரம் நமசிவாய மென்னே. (349)

என்னவே புரியஷ்டம் பஞ்சபூத
மிதினோடே நாதவிந்து சத்தியொன்று
நன்னவே புரியஷ்ட மெட்டுமாச்சு
நலமான பூரணத்தின் மார்க்கங்கேளு
பன்னவே யொளிப்பாழும் வெளியின்பாழும்
பாங்கான வெளிப்பான நிற்குணத்தின்பாழு
முன்னவே சீவகளை யதினாலாட்ட
முற்பனங்கே ளவத்தையஞ்சு மூணிப்பாரே. (350)

ஊணவே லலாடமதிற் சாக்கிரந்தானொன்று
வுத்தமனே கண்டத்தில் சொற்பனந்தானொன்று
பூணவே மார்பின்கீழ் சுழுத்தியொன்று
புதல்வனே யுந்தியிலே துரியமொன்று
வீணாத் தண்டினிலே துரியாதீதம்
விளங்கவே சுவாதிஷ்டானத்திற் பாரு
காணாத மணிபூரகத்தின் மோனங்
காத்தசங்கார மநாகத்தின் மேலே. (351)

மேலான விசுத்தி வளிமார்க்கம்விண்ணா
மாக்கினையும் புருவமய்ய மாகுமப்பா
காலான தவ்விடத்தே சுழினையாகுங்
கண்ணாடி யொளிகண்டால் மோக்ஷமாச்சு
சேலான குருபதத்தைத் தொண்டுபண்ணு
தீட்சைவைக்கும் வேளைவந்தால் மவுனஞ்சொல்வார்
மாலான மாயையறு மாசைவிட்டு
மாண்டாலுங் குருவிடத்திற் சொர்க்கங்காணே. (352)

சொர்க்கபதங் காண்பதற்கு வழியேசொல்லுஞ்
சுழினையென்ற மூக்குநுனி பிரகாசிக்குங்
தர்க்கமிதிற் செய்யாதே கண்தூங்காதே
சலியாதே மெலியாதே சாபியாதே
கர்க்கவென்ற கக்கிஷங்க ளஷ்டகர்மம்
கடினமென்று போகாதே சாகாதேகேள்
வர்க்கமென்ற குலவர்க்கம் நாளெண்ணாதே
மனம்புத்தி ஆங்கார மாளஓதே. (353)

ஓதப்பா மவுனத்தால் வாசிகொண்டு
வுண்மையுள்ள வுன்பாச மொழிந்துபோச்சு
வோதப்பா கவலையெல்லா மெங்கேபோச்சு
விகடம்விட்டு பரத்தினிலே செல்லலாச்சு
சூதப்பா மிகப்படைத்த சிந்தையோர்க்கு
சொல்லாதே சூட்சத்தைச் சொன்னால்தோஷம்
போதப்பா க்ஷணத்திலே ரவியினாட்டம்
பூட்டியே தெரிசிக்கப் போதிப்பாயே. (354)

போதிப்பாய் முக்குணமும் பூண்டுபார்த்து
புத்தியுள்ள மனம்பார்த்து பொருளைக்காட்டி
சாதிக்க வகைசொல்லும் வாசியோகஞ்
சாதித்தால் தசதீட்சை சாரச்சொல்லும்
வாதிக்க மென்பதெல்லாம் லலாடமீதே
யங்கென்று வறிவங்கே நந்தியாகு
மேதுக்கு இத்தனையுங் கற்கப்போமோ
யென்றிருந்தா லொன்றுமில்லை யிளப்பந்தானே. (355)

இளப்பமென்ற தொக்கென்பார் தூய்மையென்பா
    ரிதுவல்லோ சடலமென்பார் சவந்தானென்பார்
வளப்பமென்ற தூலத்தை மாயச்செய்து
    வழியோடே வொளிகண்ட சூட்சமாகா
ரளப்பமென்ற ரோஷத்தைத் தள்ளமாட்டார்
    ஆதியந்தந் தனையுரைத்து நிலைக்கமாட்டார்
குளப்பமென்ற திறோதாயி மாயைபூண்டு
    கூறுகெட்டார் ஞானத்தின் குறியற்றாரே. (356)

குறியற்ற பசுவினிட கோலங்கேளு
    கோடான கோடிசென்ம மெடுத்தேயாடுங்
குறியற்ற குண்டலியிற் கணேசனாத்மாக்
    கொடும் பஞ்சமா பூததேவதைக்கீழாய்
குறியற்று வபானவா யடுக்கநின்றால்
    குத்திரமாய்க் குடியிந்தான் மாயைமூடி
குறியற்ற குணத்தாலே யாசாபாசங்
    கொண்டாட்ட மனந்தவரைக் கோடியாமே. (357)

கோடியென்றா லனந்தமதி லிலக்கமில்லை
    கொடியபஞ்ச பாதகந்தான் விளைந்தபாத
மாடியதோர் கூத்தெல்லாஞ் சொல்லக்கேளு
    வப்பனே தேவரோ மேற்காதாமும்
நாடியதோர் மானிடமாய் மிருகமாகி
    நதியில்வள ரூர்வனமாய்ப் பறவையாகி
வாடியதோ ரூர்வனமாய் மரங்களாகி
    மலைகல்லாய் மணிபூண்டாய் வகுத்தவாறே. (358)

வகுத்திட்ட நவலோக ரத்தினங்கள்
    வாடையுற்ற பரிமளங்கள் மலர்சுகந்தந்
தொடுத்திட்ட விதுகளிலே மனத்தின்பாசந்
    துடர்ந்தேறிச் செல்லுமதி லாசைபூண்டு
பகுத்திட்ட யோனியொடு தீனியாலும்
    பசியிறந்து போவதெல்லாம் பிறப்பேதய்யா
மகத்துவந்தா னிவ்வாசை பதியின்மூன்றால்
    மவுனமென்ற ஓங்காரவட்டங் காட்டே. (359)

வட்டத்திற் சூட்சாதி சூட்சங்காட்டு
 மகாரமென்பார் அகாரஉகாரத்தை யுள்ளே
யெட்டிரண் டென்பார் தமிழிலக்கம்பத்தி
 யிதுவல்லோ பரவெளிக்கு ளேறுமார்க்க
மஷ்டகர்மங் குளிகைகொண்டு சித்தியாக்கி
 யதினாலே பதியறிந்து அதுவுமாளுந்
திட்டமுடன் பரத்தினிலே மனதுமீளுந்
 தெளிவானா லறிவேறுஞ் செப்பினேனே. (360)

செப்பினார் கும்பமுனி தீட்சைபாரு
 தெளிவாகு மச்சமுனி ஞானம்பாரு
ஒப்பான சட்டமுனி தீட்சைபாரு
 ஓகோகோ நந்தியுட தீட்சைபாரு
நப்பிறே னால்வருட ஞானம்பார்த்தால்
 நகலாது வறிவங்கே பரத்தில்மீளுந்
தப்பதிலே யேதுமில்லை சடாதாரத்தின்
 சக்கரத்தின் மவுனசத்தி பூசைகேளே. (361)

கேளப்பா வறுகோண முள்முக்கோண
 கெடியான தூலமிதிற் சூட்சங்கேளு
நாளப்பா மேற்கோணத் துள்ளேகேளு
 நல்லதொரு பிறைகோணம் யகாரபீடம்
வேளப்பா விட்டகலை மேற்கோணந்தன்னில்
 விந்திட்டு வதினுள்ளே முக்கோணந்தான்
வாளப்பா ஓங்காரங் கணேசன்பீசம்
 வாய்ப்பான திடகலைக் கீழ்க்கோணம்பாரே. (362)

பாரப்பா விதனுள்ளே நாற்கோணந்தான்
 பண்பாகச் சிஷ்டிக்கும் பிரமபீடஞ்
சேரப்பா நகாரத்தின் மேலாய்நின்றால்
 திடமாகக் கீழ்கோணஞ் செப்பக்கேளு
நேரப்பா விதனுள்ளே மதிகோணத்து
 நிசமாக லக்ஷுமிக்கு மாலின்பீடங்
காரப்பா மகாரமதின் மேலேநின்றால்
 கருத்துறவே பின்கலைக்கீழ் கோணந்தானே. (363)

தானென்ற கோணத்து வித்துக்குள்ளாய்
சாத்தடா திரிகோணத் துள்ளேகேளு
வானென்ற சங்கார ருத்திரபீடம்
வளமாகுஞ் சிகாரமிதின் மேலேநின்றால்
கோனென்ற பின்கலைமேற் கோணத்துள்ளே
குறிப்பாக விந்திட்டு அதுக்குள்கேளு
தேனென்ற வறுகோணம் சரவணபவாவென்று
தேறிதுக்குள் விந்திட்டு சூத்திரஞ்சாத்தே. (364)

சாத்தடா சாயுச்சியஞ் சூத்திரனுக்காகுஞ்
தருவான வேதாந்த ஞானமாகுந்
தேத்தடா சூத்திரனே தேகந்தன்னை
சித்த மயேஸ்பர - பூசை சிறக்கும் - வேத
மாற்றடா கருவியெல்லாம் வகாரமன்றி
மற்றொன்று மில்லையடா மனத்திற்காணு
வாத்தடா வறுகோணத் துள்ளேகேளு
வப்பனே குண்ட லியாம் விந்துள்ளாச்சே. (365)

ஆச்சப்பா விதுக்குள்ளே முக்கோணந்தா
னாச்சரியம் றீங்கார மகாரபீட
மூச்சப்பா மவுனமென்ற சத்திவாலை
மோகன கெணாசத்தி யிருந்தாள்பாரு
நீச்சப்பா யிவள்தனையே பூசைபண்ணு
நிலையான சடாதார தீட்சையாலே
வாச்சப்பா போச்சுதுனக் கின்பசித்தி
மாயையெல்லாந் தவறுண்டு மவுனமாச்சே. (366)

ஆச்சப்பா சூரியன்போல் வட்டமிட்டு
வதின்மேலே யிதழெட்டி லஷ்டசத்திபீசந்
தாமப்பா யிதின்மேலே சதுரரேகை
தப்பாமல் மூன்றுவரை ரெண்டாம்வீதி
வாமப்பா மவுனவீதிக்குள்ளே கேளு
மகத்தான யஷ்டபெலி அஷ்டநாகம்
ஓமப்பா வயிரவர்கள் கீரியப்பால்
உத்தமனே யிவர்களுட பீசம்போடே. (367)

போடப்பா மறுவீதிக் குள்ளேகேளு
புகழான தேவரோடு ரிஷிகள்பீசந்
தேடப்பா நால்வாசல் தோறுங்கேள்
திரமான துவாரபாலாள் வீசந்தா
னாடப்பா சந்நிதியிற் கொடிக்கம்பம்பீசம்
நாட்டடா நந்தியுட பீசந்தானுஞ்
சூடப்பா கெணாசத்தி தீட்சையாலே
சுகமான வபானத்தில் தோன்றிடாயே. (368)

தோன்றிடுவாய் மவுனத்தில் மானதமாம்பூசை
சுகமாக வபிஷேக மெல்லாஞ்செய்து
வூன்ற வஸ்திரஆபரணஞ் சாத்தி
வுத்தமனே சுகந்தபரிமளங்கள் சாத்தி
ஏன்றதொரு தூபமொடு தீபங்காட்டி
யின்பமுற நெய்வேத்தியஞ் செய்தபின்பு
கான்றமன மொருமித்த பேர்க்குஞானக்
காட்சியரு ளம்பரையே அம்மாவென்னே. (369)

அம்மனே மாதாவே தாயேதேவி
அண்டமே பிண்டமே யாதியான
அம்மனே யந்தரியே அருள்மெய்ஞ்ஞான
வற்புதமே நிற்குணமே யளவில்லாத
அம்மனே யுமையவளே பார்வதியே கெவுரி
ஆரணங்கே பூரணியே ஞானமீறும்
அம்மனே திரோதாயி நீலிசூலி
அகளங்கமாயி யிந்திர சாலித்தாயே. (370)

தாயே பராபரையே சர்வசத்தி
சங்கரியே சுந்தரியே தாண்டவஞ்செய்
மாயே கிர்பாகரியே மானேதேனே
மானனையே பேதையே பெதும்பைப்பெண்ணே
ஆயியே மங்கையே மடந்தையென்னு
மரிவையே தெரிவையே பேரிளம் பெண்ணான
காரியே நற்கனியாங் கண்ணேமின்னே
காரிகையே மாலினியே கமலவாழ்வே. (371)

கமலியே வாணியே கபாலியான
கற்பகமே நற்பதமே கருத்துள்ளாகும்
விமலியே காரணியே வேதத்தாயே
விளக்கொளியே ரவியொளியே காந்திமீறும்
அமலையே மதியொளியே முப்பாழாளே
வப்புறத்தே நின்றதொரு சுடரேசோதி
நிமலையே நிட்களமே வடிவொப்பில்லா
நேமியே காமியே நெறியேயென்னே. (372)

நெறியான வைம்பொறியே புலனஞ்சான
நெஞ்சியே வஞ்சியே நிஷ்டைகூருங்
குறியான சுழினையே பின்கலையேயின்பக்
கொழுந்தான விடகலையே குண்டலியேதேறும்
வெறியான லகிரியே வமுர்தம்நின்ற
விண்ணொளியே கண்ணொளியே விசையேபூவே
அறிவான தூலமே சூட்சமூல
மண்ட பகிரண்டமே யாத்தாளென்னே. (373)

ஆத்தாளே அம்பிகையே யானந்தாயி
அஷ்டசத்தி வஷ்டதுர்க்கி யஷ்டபாலி
பூத்தாளே போதகமே நின்றவேதப்
பொக்கிஷமே கக்கிஷமே யப்பொருளேயாவி
காத்தாளே மெய்ப்புடலைக் கருவேநந்தி
காமியே வாமியே யோமரூபி
யேத்தாளே சற்பணியே தேவதேவி
யிந்திராணியே யுமையே யிருளேயென்னே.. (374)

இருளான மாயையுற்ற மனிதவாழ்வே
யேகமே சச்சிதானந்தித் தாயே
யுருளான சகடமே யூர்வனவேதேறே
யுத்தமனே நந்திவாழு மூர்வனவேதானில்
மருளான மிருகமே தாபரமேயெண்ணா
வானவே பறப்பனவே மேருவேசொற்சத்தி
திருவான பஞ்சசத்தி பஞ்சபூத
தெய்வமே சிவசிவனே சிவமேயென்னே. (375)

சிவமான சீவகளை யடங்குங்கூடே
    தேகமே நவத்துவாரச் சடமேகாயம்
பவமான பாதகமே புண்ணியஞான
    பக்குவமே லலாடமே பிரமவாழ்வே
தவமான பேரின்ப முத்தியான
    சத்தியே முத்தியே கருவேசீவன்
தவமான தொக்குடம் பேசுக்குலமேஞான
    சத்துருவே மித்துருவே தர்மியென்னே. (376)

தர்மியே ரட்சிமனமேநவசித்தபதி
    தன்மனமே யொண்ணாகித் தழைத்தாயம்மா
வெர்மியே சராசரமே மேலேகீழே
    விளங்கு நூலான்வளே சாத்திரங்கள்பொங்கி
கர்மியே காமகளை கூடேவீடே
    காந்தியே தீப்புகையே கனலேபாணி
வர்மியே பூமியே வளியேசத்த
    மானிடமே சங்கமெல்லா மனமாமில்லே. (377)

இல்லென்று மாடமென்று மிரவியென்று
    மிறப்பதற்குப் பிறப்பதற்கு முயிராய்ரெண்டுங்
கல்லென்றும் வானென்றுங் கடலென்றுந்தான்
    கனிந்த சுவையாறு வகைரசமுமாகி
சொல்லென்றும் நாவென்றுந் தோத்திரமேயென்றுந்
    துரியாதீதத்தின் வரைசாக்கிற மென்றும்
வெல்லென்றுங் கொல்லென்றும் வதியாமென்றும்
    வெட்டவெளி யாயிருந்த வேறாயென்னே. (378)

வேறாகி மண்டலந்தான் மூன்றுமாகி
    வேராகித் தூராகி வித்துமாகி
மாறாகி கொம்பாகித் தளிருமாகி
    மலராகிப் பிஞ்சாகி காய் பழமுமாகி
நீறாகி நீறுமுன்பே சுக்கானாகி
    நிஷ்டையுமாய் நித்தியமா யோகமாகிப்
பேறாகிப் பேறன்றி பித்துமாகி
    பித்தாகிப் பிறப்புமாய்ப் பிணியுமாமே. (379)

பிணியுமாய் வறுமையுமாய்க் கலியுமாகி
பேதலிப்பாய் மனமாகிப் புந்தியாகி
மணியுமா யோசையுமா யுண்ணாக்காகி
வழலையாய் வாதமாய் வாயுவாகி
தணியுமா யுயர்ச்சியுமாய்த் தத்துவங்களாகி
தானென்றுந் தலையென்றூ மறிவதாகி
யணுவுமாய் மேருவுமா யணுவுளணுவாகி
யுந்தரமாய்ச் சொற்கமாய் நரகமாயே. (380)

நரகமாய்க் கிருமியா யிரதமாகி
நவலோகப் பொன்னோடு வெள்ளியாகி
தவமான நவரத்தின மணிகளாகி
சாலோக சாமீப சாரூபமாகி
திரமான சாயுச்ய பதமுமாகி
செடியாகிப் பூடாகிச் சேறுமாகி
பரமாகிச் சீவனுமாய் நாரியாகிப்
பற்றமாய்ச் சிற்றமாய்ப் பகலுமாயே. (381)

பகலாகி ராவாகி மதியுமாகி
பல்லாயிரங் கோடி யண்டமாகிச்
சுகமாகித் துக்கமுமா யாவுமாகித்
துடக்காகி துடக்கற்ற சோதியாகி
யிகமாகிப் பரமோட்ச சத்தியுமாகி
யின்பமதாய்த் துன்பமுமா யெல்லாமாகிச்
சகமாகிக் கொடுப்பதற்கு வன்புமாகி
தாயாகி மகவாகித் தந்தையாயே. (382)

தந்தையா யாணாகிப் பெண்ணுமாகி
தராகத்தி னலியாகிப் பெலியுமாகி
விந்தையாய்ப் பெருமையாய்ச் சிறுமையாகி
மேதினியெல்லாம் நீயாய் நானுமாகி
சிந்தையா யுன்மனதா யென்மனமுமாகித்
தெளிவாகி தெளிவில்லாச் சென்மமாகி
யெந்தையாய் சத்தாகி சித்துமாகி
யேகமா நந்தியென்று போற்றே. (383)

போற்றுவதுந் தானாகிப் பொருளுந்தானாய்
புரியஷ்ட பூரணமா யெட்டுநாலா
யேத்துவது மனத்துள்ளாய் கண்வாய்மூக்கா
யிருசெவியாய்த் தூலமொடு சூட்சமாகி
மாற்றுவது சூட்சாதி மூலசூட்சம்
மவுனமாய்க் கெவுனமாய் வளர்பிறையாய்த்தேய்ந்தே
மாற்றுவித்திற் பாசம்வைத்தும் ஞானம்வைத்து
மாளுவதுந் தாளுவதுந் தாய்நீயென்னே (384)

நீயானா யண்டமுதற் பதமெண்பதுந்தா
னிலைத்துநின்றா யுயிர்க்குயிரா யெங்குந்தானே
நீயானா நவக்கிரகம் வாரமேழும்
நேசமா யிராசியொடு பன்னிரண்டும்
நீயானா நட்சத்திர மிருபத்தேழும்
நேசமாய்ப் பட்சமொடு கரணயோக
நீயானாய் நால்வேத மாறுசாத்திரம்
நிலையான பதினெண் புராணமென்னே (385)

என்றுலகம் பிறக்கவெண்ணெண் கலைக்கியானந்தா
மிப்படியே சற்பன்னபாஷைக ளோர்கோடி
என்றுசொல்லக் கோடியென்றா லக்கோவில்லை
யெடுத்தெடுத்த சாஸ்த்திரமோ லக்கோவில்லை
யென்றுநான் பார்ப்பதற்குக் காலமில்லை
யிமையோட்டி விழிக்குமுன்னே படைத்தழித்தாயம்மா
யென்றுனையே தோத்தரிக்க மந்திரந்தான்
லக்கமில்லைக் கரைகண்டோரில்லை தானே. (386)

தானென்ற மந்திரங்க ளெல்லாம்நீதான்
சரிதைநீ கிரிகைநீ யோகம்நீயே
தானென்ற ஞானம்நீ ஞானானந்தமென்னுட்
சனிப்பிக்கு மோங்காரங் கடந்தாய்நீயே
வானென்ற பதிபமூர்த முண்ணநீயே
மவுனம்நீ யொளியும்நீமாய்கைநீயே
கோனென்ற பிரமனீ யரசனீயே
குறிபார்க்குஞ் செட்டிநீ சூத்திரனீயே. (387)

சூத்திரனீ யதிலிருந்த குருவும்நீயே
தோத்தரிக்க நாவுநீ ருசியும்நீயே
கோத்திரநீ குலங்கள்நீ குன்றும்நீயே
கோடான கோடிசெந்தும் பரிசம்நீயே
பாத்திருந்தே யுட்புகுந்த விந்தும்நீயே
பாவம்நீ புண்ணியம்நீ பாசம்நீயே
சாத்திரம்நீ சமுத்திரம்நீ பூமிநீயே
சாலோக சாமீப சாரூபம்நீயே. (388)

சாரூப சாயுச்சிய பதமும்நீயே
தற்பரைநீ சிற்பரைநீ யென்தாயும்நீயே
மேருவெனு மண்டம்நீ பிண்டம்நீயே
விளக்கொளிநீ தீபமும்நீ வெளியும்நீயே
வேரும்நீ நடுவும்நீ முதலும்நீயே
விண்ணொளிநீ கண்ணொளிநீ விண்ணும்நீயே
போரும்நீ சேனைநீ கலாபம்நீயே
புத்தியும்நீ சித்தமும்நீ மனமும்நீயே. (389)

மனத்துள்ளே தத்துவங்க ளெடுக்கும்நீயே
வாணாள்நீ நாடிநீ யங்கநீயே
தினத்துள்ளே ஒடுங்குகின்ற வாவிநீயே
தெசமென்ற பதமெல்லாம் வாழ்க்கைநீயே
தனத்துள்ளே யொடுங்கும்நீ யாமளையும்நீயே
சாமளைநீ தன்பதத்தின் புவனைநீயே
யினத்துளே திரிபுரைநீ யதன்வாழ்க்கை
யிமய பஞ்சசத்திநீ யேகம்நீயே. (390)

ஏகமென்ற மவுனசத்தி சுழினைநீயே
யிடையோடு பின்கலைநீ வாசிநீயே
மோகமென்ற யிந்திராணி ரம்பைநீயே
மூவுலக மயக்கமுறு வசியம்நீயே
ஆகமென்ற வசியம்நீ ய்ழைப்பும்நீயே
யாதி வித்துவேஷண முச்சாடனமும்நீயே
தேகமென்ற மாரணம்நீ தம்பனமும்நீயே
சித்தான வேதனம்நீ பேதனமும்நீயே. (391)

பேதனமோ டெட்டுவகை சத்திநீயே
பிள்ளைநீ யன்னைநீ பேதைநீயே
பாதமும்நீ முடியும்நீ நடுவும்நீயே
பத்தியும்நீ யாட்கொள்ளும் பரையும்நீயே
சாதகமாய் வாசியுட கருவும்நீயே
சாதித்து மேலேற்று மறிவும்நீயே
போதமும்நீ நாதமும்நீ போரும்நீயே
பூரணானந்த சிவயோகம் நீயே. (392)

சிவயோக ரிஷிகளுட மனமும்நீயே
தெளிவுநீ யளிவுநீ தளிவும்நீயே
அவயோக சமுசார வாழ்க்கைநீயே
யடைக்கலம்நீ நட்பன்றி பகையும்நீயே
தவமீறுங் காரணம்நீ காரியமும்நீயே
சச்சிதானந்த வெளித் தாயும்நீயே
சவமாகப் போனபின்பு சடலந்தீயாய்
சாம்பலாய் நீற்றிவிட்ட தருவும்நீயே. (393)

தருவும்நீ சுவையும்நீ தாகம்நீயே
சாலநீ கால்நீ வருடநீயே
கருவும்நீ யுருவும்நீ கடையும்நீயே
கனமென்றும் பாக்கியம்நீ வறுமைநீயே
குருவும்நீ சீஷனும்நீ சமானம்நீயே
கொண்டதொரு கோலம்நீ கூற்றும்நீயே
அருவும்நீ யுருவும்நீ யைங்காயத்தை
அதிரூபச் சுடராக்கு மாத்தாணீயே. (394)

நீயென்றும் நானென்றும் வேறில்லாத
நிட்களமே வடிவுநின்ற நேமியோமி
மாயென்று மவுனத்துள் ளாயியென்றும்
வங்கென்றுஞ் சிங்கென்றும் உங்கென்றுந்தான்
சீயென்றும் நாயென்றுங் கடையேயென்றுந்
தீயென்றுங் குண்டலியாந் தேவியென்றுந்
தாயென்றுஞ் சேயென்றுந் தந்தையென்றுஞ்
சாத்தரிது எத்தனையோ வுன்பேர்தானே. (395)

உன்னுடைய பேரேது வேதுங்காணேன்
லோகத்தே ரிஷிகள்சித்தர் மவுனமென்பார்
என்னுடைய பிறப்பிறப்பி லேதுங்காணே
னேதையா னெடுத்துரைப்பேன் மகாரமென்றார்
தன்னுடைய நாமமென்பா ரோங்காரமென்பார்
சகாரமென்ற சத்தியென்பா ரிஷிதானென்பார்
மின்னுடைய காந்தியென்பா ரதிசூட்சமென்பார்
வேதாந்தப் பிரணவமே யென்றுபோற்றே. (396)

போற்றியவள் கால்பிடிக்கத் தூங்குவான்பார்
பொன்னுருக்கு மொளிபோலே மேலேவீசும்
போற்றியவள் கொலுவிருந்த மவுனபீடம்
பூணுதற்கு சுழினையோ கண்ணோட்டம்பார்
போற்றியே யவள்மனது முன்மனதுநேராய்
பூரணமாங் கேதுவென்றும் ராகுவென்றும்
போற்றியவள் கண்டத்தி லாபரணம் பூண்டாள்
புருவமையத் தாயாரைப் பூசிப்பாரே. (397)

பூசித்தே யிப்படியே தோத்திரஞ் செய்வாய்
பூரணத்தே கேசரத்தே வார்த்தைசொல்வாள்
ஆசித்தே கன்னியுட மாதந்தன்னி
லப்பனே நவராத்திரி யன்றைக்கேதான்
பாசித்தே தசமியெட்டுந் தேவிபூசை
பண்பாகச் செய்திடிலோர் மவுனந்தங்கும்
வாசித்தர் மைந்தர்கேள் வாமபூசை
மகத்தான பூசையிலே தெரிசிப்பாரே. (398)

தெரிசனைபெற்றே யருளச்சிவனைக் காண்பாய்
தெளிவாகுஞ் சுழினையிலே ரவிபோற்காணும்
பரிசிக்க விதுதானே பரமோட்சமாகும்
பாதகம்போம் பாவம்போம் தர்மியாவான்
வாசிக்கு மதியமுர்தஞ் சிந்துஞ்சிந்து
மனத்திலே யிதுவெல்லா மடக்கம்பாரு
குருவுக்குங் குருவான ஞானமாவான்
கூறுவாய் சீஷருக்குக் குருவைத்தானே. (399)

குருகாட்டிக் குருவிருந்த சூட்சதேகங்
    கூறுகின்ற குருவைப்போற் குருத்தியானக்
குருகாட்டித் தொனிகண்டால் சீஷன்தானே
    கோடிதன மீந்தாலும் பரத்திற்சேர்ப்பான்
குருகாட்டி சுழினைரவி வன்னிமதிமூன்றுங்
    கூர்ந்துநின்ற வொளிபோலே வெளியைக்கண்டால்
குருகாட்டிக் குருவினிழ றனையேபூட்டிக்
    கொண்டவனே சொற்கபதங் கொண்டானென்னே. (400)

சொற்கபத மாவதென்ன குருவேசொல்லுஞ்
    சொல்லக்கேள் சுழினையடா நந்திபீடஞ்
சொற்கபதந் துரியமது வெளியைக்கண்டால்
    சொல்லுகிற குருவதிலே யதிசூட்சந்தான்
சொற்கமது சிவலோகந் தன்னையப்பா
    சொல்லுகின்ற கடையேனை சூட்சதேகஞ்
சொற்கமதிற் சிறந்தல்லோ குருவுந்தானாய்
    சுடரொளியைக் கண்டுடனே சூட்சமாமே. (401)

ஆமப்பா சூட்சமா யிருந்தசத்தி
    யருவுமில்லை யுருவுமில்லை யம்மாவென்றே
நேமப்பா சடாதார தேவிபூசை
    நேசித்தேன் பூசித்தேன் நினைவாய்க்காணும்
வாமப்பா தேவிப் பிரசன்னமாவாள்
    மவுனமென்ற சுழினையிலே வணங்கிப்பாரு
தாமப்பா கேட்டதெல்லா மிந்தாவென்பாள்
    தந்தபின்பு சுழினைவிட் டனுப்புவாயே. (402)

வாயார மனதார வொருமைகொண்டு
    வசீகர வுச்சாடனந்தான் மவுனங்கூர்ந்து
தாயாரைக் கேசரத்தே சாரச்செப்பித்
    தன்னுடைய சீஷருக்குத் தன்னைக்காட்டி
காயாத பழமாகச் சிவனைக்காட்டி
    கருத்துறவே சிவசூட்சங் காதிற்செப்பி
சேயாகக் குருவாகத் தேவிசூட்சஞ்
    செப்பியே யனுஷ்டானஞ் செப்புவாயே. (403)

செப்பிடவே தீட்சையெல்லாங் கைக்குள்ளாகுந்
தீர்ந்தபின்பு தேவியுட நிர்மாலியுங்க
ளொப்பிடவே சண்டேசர் பூசைசெய்து
வுத்தமனே தன்னைமுதற் பெண்கள்பிள்ளை
வைப்பிடவே குருசேஷங் கொண்டபோதில்
மகாகோடி பாவமெல்லாஞ் சொல்லக்கேளு
மெய்ப்பிடவே மேருவைப்போ லுயர்ந்தபஞ்சில்
மிளகளவு நெருப்பிட்ட கதைபோலாச்சே. (404)

ஆச்சப்பா விதுவல்லோ சிவயோகமார்க்க
மறியார்க ளுலகத்தோர் ஞானப்பேயர்
மூச்சப்பா வற்றவிடங் காணார்பாவி
மூளுமா வெறிவில்லாக் காயக்கூடும்
பேச்சப்பா தர்க்கமிட்டு சமையமெல்லாம்
பேய்க்கூத்தா யலைவார்கள் மவுனந்தோணார்
வாச்சப்பா குருவந்து வுபதேசித்து
மவுனத்தைப் பார்த்தறியார் மாயைதானே. (405)

தானென்ற கூற்றனுயிர் கொள்வானென்பார்
சாருமுன்னே தர்மங்கள் செய்வோமென்பார்
கானென்ற வுயிர்போகிற் பாவபுண்ணியங்
கையோடே வருமென்பார் பாவமீறில்
மானென்ற நரகத்தே மாட்டுமென்பார்
மகத்தான புண்ணியமே மிகுந்துநின்றால்
கோனென்ற சொற்கபத முண்டாமென்பார்
கூறான விருவினையின் பயன்காணாரே. (406)

பயனாவ தேதென்றால் முந்நூல்சொல்லும்
பார்மகனே திருமூலர் பாடல்சொல்லுஞ்
செயலாவ தேதுமில்லை சுழினைநாட்டஞ்
சிவனிருக்கும் பீடமது சொற்கமேரு
வயணமது ஆர்சொல்வார் சித்தர்சொல்வார்
மாநிலத்தில் சித்தாந்தக் குருவேசொல்வார்
நயமான வென்குருவே நந்திபீடம்
நாலான பதமதுவே பிரமந்தானே. (407)

பிர்மமென்ற ப்ரப்பிர்மம் புருவமையம்
பிதற்றாதே யெவ்விடத்து மொளிகளில்லை
பிர்மமென்ற திதுதானே வொருமனதாய்நில்லும்
பின்னுமில்லை முன்னுமில்லை வுற்றுப்பார்க்க
பிர்மமென்ற கண்ணாட்ட மெங்கேபாயும்
பேச்சதினாற் காண்பதில்லை யுற்றுப்பார்க்கில்
பிர்மமென்ற லலாடக்கண் ணொளியைக்கண்டால்
பிலத்துதடா பிராணனென்ற வாயுத்தானே. (408)

வாய்வேதான் பிராணனென்றீ ரய்யரேநீர்
வகுத்துரையு மென்குருவே மூலர்பேர்பேர்
வாய்வான பூரணந்தான் சீவகளைமார்க்கம்
வளமான நாலினுட விபரத்துள்ளாம்
வாய்வான சூட்சமொன்று புருவமையத்தில்
வளர்ந்தகொலு பீடமங்கே ரூபியாகும்
வாய்வான திதுதானே சீவகளையென்றீர்
வழிமார்க்கம் வேறென்றீர் பிராணன்தானே. (409)

பிராணன்தா னிருப்பதுவே மெய்தான்சொன்னீர்
பேசாமற் றூங்கையிலே சொற்பனத்தில்வைத்த
பிராணன்தா னிங்கிருக்க வடியேன்தானே
பேறெழப்பாய்க் கயிலைக்குப் போனேனய்யா
பிராணன்தான் சுகதுக்கங் கொண்டேயோடிப்
பின்னொருவன் வந்தங்கே தேகந்தட்ட
பிராணன்தா னோவதுவும் இரண்டேயாச்சோ
பெருஞ்சித்தா வென்குருவே யருள்செய்வீரே. (410)

அருளென்ற மாணாக்காள் சொல்லக்கேளு
ஆத்மாதான் சுழினையென்ற புருவமைத்துப்
பொருளென்ற நாதாந்த விந்துக்குள்ளாய்
போதமென்ற பூரணந்தான் வுதிக்குமாறு
விருளென்ற வைம்பொறியு மதிலேபுக்கி
விதத்திலே தசநாதங் கரணத்தோடே
மருளென்ற பித்தத்தா லலாடமீது
வசனிக்குங் கண்தூங்குஞ் செவிகேளாதே. (411)

கேளாது நாவங்கே ரசனைதோணா
கெடியான வாக்கிருணங் கோணந்தோணா
கோளான பரிசமது மரம்போலேதான்
கொண்டிருக்கு மிதினாலே பிராணன்போமோ
தேளான மனத்தாலே பொறியஞ்சாலே
திரமான துட்சூட்சம் புலன்களாலே
தூளான வவத்தையினாற் சொற்பனங்கண்
தோற்றுவிக்குஞ் சன்னியினாற் காணலாச்சே. (412)

ஆச்சப்பா விதனாலே நினைவுள்ளாதி
யந்தந்தப் பொறிநினைவா லதிலும்புக்கி
போச்சப்பா சாக்கிரத்தே கரணநாடிப்
பூண்டதினால் சீவகளை பூரணந்தான்
பேச்சப்பா விரண்டாகக் கனவிற்கண்டாய்
பேய்மக்கா ளுங்களைத்தா னென்னசொல்வேன்
வாச்சப்பா வெங்கெங்குஞ் சீவனொன்று
மயங்காதே யறிவுகுரு வாகக்காணே. (413)

அறிவுகுரு வாமென்றீ ரார்தான்சொல்வா
ரய்யரே கொங்கணரே யென்னசொல்வே
னறிவுகுரு வாமென்றா ரப்பால்சிந்தை
யாவதற்கு முறவுண்டோ மரத்தினிற்கு
மறிவுகுரு வானசெயல் சொல்லவேணு
மடிக்கடியே பேசுகிறே னெண்ணவேண்டாம்
மறிவுகுரு வானசெய லுரைக்கிறேன்கே
ளப்பனே யொன்றான மனதுகாணே. (414)

காணப்பா மனமொன்றாற் பொறிபாயாமல்
கயிலாச நந்தியுறுஞ் சுழினைதன்னிற்
பூணப்பா விழியிரண்டும் பூட்டிப்பார்க்கிற்
போதமென்ற வறிவாச்சு மனத்தினாண்மை
வீணப்பா பொறியான புலன்வாய்வாலே
வேதாந்தம் புக்காமற் பாவமாகுந்
தோணப்பா ரெண்டறியச் சொன்னேன்கேளு
சுகதுக்க மிதனாலே சொல்லலாமே. (415)

சொல்லக்கேள் கண்கண்டு செவிதான்கேட்டுத்
துண்டமுறக் கெந்தங்கள் வாசமோந்து
மல்லக்கேள் நாவாசை யானவாறும்
அப்பனே மனத்தியான மானவாறும்
வெல்லக்கேள் சிற்றின்பக் கிரிகைவாழ்வும்
வேதாந்த மனத்தோர்க்கு வொழியும்வாறுஞ்
சொல்லக்கே ளவத்தையினால் விசுத்தியுள்ளே
சென்றிருக்கும் பாவசிந்தை தெளிந்துகாணே. (416)

தெளிந்துகொள்ள வாராலாங் கொங்கணரே அய்யா
திருமூலர் பேரனுக்குச் சீஷமூர்த்தி
யளிந்துவிடுங் காயத்தை யும்மைப்போலே
யாயிரத்தென் மாற்றுவர்னமாகச் செய்வார்
களிந்துவிடும் வாசிதனைக் கட்டுமார்க்கங்
கைமுறைதா னார்க்குவருங் குறியைக்காட்ட
சளிந்துவிடும் பிள்ளைகளை யுயரவேத்துஞ்
சற்குருவே யுபதேசஞ் சாத்துவீரே. (417)

சாத்துறேன் வாசியுட கருவைக்கேளு
தற்பரமாஞ் சுழினையிலே மனத்தையூணி
நேத்திரமே பிரியாமல் நேர்ந்துபார்க்க
நிலையற்ற புரியஷ்ட முள்ளாய்நிற்கு
மாற்றுறேன் பூரணந்தா னாலுந்தானே
வப்பனே வோடோடி யுள்ளேபாய்
மாத்துறேன் பூரணத்தை மவுனந்தாக்கி
வரிசையாய் நாலுமங்கே முப்பாழ்பாரே. (418)

பாருநீ யிப்படியே வாசியோகம்
பார்க்கையிலே மவுனமது பிலக்குஞ்சித்தம்
காருநீ சூடுகொண்டா லுள்ளங்காக்குங்
கலசப்பால் நெய்யுடனே கலந்துபூசு
சேருநீ கொடுப்பை பிளியாரைவெந்த
சிறப்பாக மிளகுசாறாகக் கொள்ளு
சாருநீ கடுநெல்லி வேம்புமஞ்சள்
சாதிக்காய் மிளகோஷ்டந் தன்னைவாங்கே. (419)

வாங்கியே யமுரியினா லரைத்துக்கொண்டு
வையாவின் பாலிலே கரைத்துக்கொண்டு
தாங்கியே பட்சமதில் முழுகுவாய்நீ
- தனியாவின் நெய்முழுகு வாரந்தோறுந்
தேங்கியே பசும்பயறு வெந்நீராடு
சிரசிலே நீரைவிடு சுழினைபாரு
பாங்காகக் கண்மூடிப் பாருபாரு
பார்க்கையிலே யிருகண்ணும் பஞ்சுகேளே. (420)

கேளப்பா கையாலே விழியூணியசைத்து
கேசரியில் மனமோட்டி யாட்டிப்பாரு
நாளப்பா வக்கினிபோல் முருகம்பூப்போல்
நயனத்திற் காணுமடா சொற்கமோட்சம்
வாளப்பா விதுவல்லோ கருணைவீடு
வாச்சுதடா வுந்தனுக்கு மைந்தாகேளு
கேளப்பா கோபமென்ற தீயைநீற்றுங்
கொடும்பாவந் தனையறுக்குங் கெதிகொள்வாயே. (421)

கெதியென்ற பரகெதிதா னிதுதான்மைந்தா
கனலொளிபோ லிப்படிதான் காணவேணும்
பதியென்ற சேதியொன்று சொல்லக்கேளு
பகலவன்தா னுதிக்குமுன்னே சுத்திசெய்து
விதியென்ற பிரமலாடத்தை நோக்கி
விளங்கவே சூரியனைக் கண்ணாற்பார்த்து
துதியென்ற பின்புசுழிமுனைக் கண்ணாடி
தொடுகுறிபோ லலாடத்தில் மனத்தையூணே. (422)

ஊணியே கரந்தனில் விபூதிவாங்கி
ஓகோகோ பூசையிலே கனற்போல்காந்தி
தோணியே மாதளம்பூப் போலேகாணுஞ்
சொற்கபத முண்டாச்சு பாவம்போச்சு
நாணியே பாதகங்க ளெல்லாம்போச்சு
நானென்ற வாணுவம்போய் சித்தனாவாய்
வாணியே சொயம்பாடு மணித்தாயங்கே
வார்த்தை சொல்வாள் நந்தியிடம் வாழென்பாளே. (423)

வா ழுகிறோஞ் சித்தரொடு ரிஷிகளெல்லா
மகத்தான கற்பூரதீபம் போலே
வா ழு கிறோங் காயத்தை யொளிபோலாக்கி
வப்பனே கருவிடையுஞ் சொல்லக்கேளு
தா ழுகிறோ மென்றெண்ணிச் சலியாதேநீ
சந்திரனுஞ் சூரியனுஞ் சரீரமேவ
நீ ழுகிறோஞ் சுழினையிலே அங்சங்கென்று
நேர்முகமா யரசனங்கே யோடும்போதே. (424)

ஓடுகிற வேளைகண்டு ராக்காலத்தே
யுத்தமனே தீபம்போல் கற்பூரத்தி
னாடுகிற வொளிகாட்டி யொளியைப்பாரு
நானான்கு திங்களிலே தேகமெல்லாஞ்
சூடுகிற செம்பரத்தம் பூப்போலாகுந்
துடியான விளக்கொளியிற் சாய்கையில்லை
சாடுகிற மண்டலமே பார்க்கும்போது
தன்வயிற்றே புடைகிளம்பி வொளிகண்டோமே. (425)

ஒளிகண்டோம் ராக்காலம் நாளொன்றுக்கு
வுற்பனமாய்க் கடிகைரெண்டு தீபம்பார்த்து
வெளிகண்டோம் பண்புசேர் சுழினைமேலே
வேதாந்த லலாடவிழி யொளிகண்ணாட்டம்
விளிகண்டோம் பரத்தினுட விசாலங்கண்டோம்
மெய்க்குள்ளே தத்துவங்க ளெல்லாங்கண்டோம்
களிகண்டோம் பூரணத்தி லூஞ்சலாடி
கயிலாசத் தேகமா யிருந்திட்டோமே. (426)

இருந்திட்டோ மிப்படியே கோடியூழி
யெங்களுக்குக் கடிகையொன்று முக்காலாச்சு
வருந்திட்டோஞ் சூட்சமென்ற குளிகைதன்னை
வகுத்துரைத்தேன் தீபமதிரவியோடு மூன்று
விருந்திட்டோம் பூரணத்துக் கல்விப்பாடு
விளம்பரிது மூன்றுவகை குளிகைசூட்சம்
மருந்திட்டோ மதுதானே யேதுமில்லை
வப்பனே குளிகையிந்த வாட்டம்பாரே. (427)

ஆட்டமென்ற சூட்சத்தின் குளிகைசொன்னே
னாதித்தன் கமலினியாங் குளிகைசொன்னே
னோட்டமென்ற சந்திரகலை விளங்கவாழு
மொளியவே சொரூபமணி குளிகைசொன்னே
னாட்டமென்ற கண்ணாடி முக்குளிகைகண்டேன்
ரசமான வமுர்தமெல்லா முண்ணப்பெற்றேன்
கூட்டமென்ற பிள்ளைஞ்ஞூற் றைம்பத்தேழ்வர்
கொள்கினா ரிந்திரவிசுட ரிம்மூன்றே. (428)

சுடர்காட்டி யதிலிருந்த வொளியைக்காட்டி
சொற்கபத மேலான ரவியைக்காட்டி
பிடர்காட்டி பிடரியென்ற சுழினைக்கண்டம்
பேரொளியை மனத்தூணிப் பிறையைக்காட்டி
படர்காட்டி மதிக்கொழுந்தின் பாதங்காட்டி
பரிசுபெற்ற வாதியந்தம் நடுவுஞ்சொன்னே
னிடர்காட்டிக் கால்தலையாய் சிவயோகத்தை
யிடகலையி லிருத்திநன்றா யூதென்றேனே. (429)

நன்றாக விவ்வளவுஞ் சொன்னீரய்யா
நாயேனை யெந்நாளுந் தான்தற்காக்க
வென்றேதான் மனதுவைத்தீர் மூலயோக
வேதாந்தச் சிரோமணியே குருவேஐயா
வொன்றான வைஞ்ஞூற் றைம்பத்தென்பிள்ளை
யோடுமுடிந்து போகாமல் வலதுகொண்டு
சென்றேனான் வளர்த்தெடுத்த ஞானபோதர்
சிவசிவா வென்றெனக்கு தீட்சைவையே. (430)

வையென்றாய் தீட்சைகளைச் சொல்லவேதான்
வாய்ப்பேச்சோ வெளிதாச்சோ மவுனஞானத்
தையென்று நிருத்தமிடச் சிவனைகாட்டத்
தங்கமொரு மலைபோலே குவிந்தாலுந்தான்
மெய்யென்ற ரசவாதஞ் சத்திபேதி
வேதிக்க வகையெல்லாஞ் சொன்னாலுந்தான்
ஐயென்ற பிரமரொடு க்ஷத்திரியர்வணிகர்
ஆசைவைப்பா ரல்லாது வன்பிலாரே. (431)

அன்பான பிள்ளையெந்தப் பிள்ளைசொல்லு
மய்யரே வென்குருவே யறியவேணும்
பொன்போலப் புத்தியுள்ள சீஷாகேளு
புகலுகிறேன் சூத்திரர்க்கு தீட்சைசொல்வோ
மென்போலே சறுவமெல்லா மறியவாளா
வெண்ணினார் சொல்லக்கேளு தானசூத்திரன்
தன்போலக் குருசாய்கை நிழல்போலச் சொல்வான்
தனங்கோடி யீவதற்கு மனமொன்றானே. (432)

மனமொன்றா னுயிரெல்லாம் நாமேயென்பான்
மற்றுமுள்ள தாவரமு நானேயென்பான்
தனமென்ற முதலெல்லா மாசையோரான்
சற்குருவே காத்திருக்கச் சலியானய்யா
நினவென்றா லறிவிலே பத்திநிற்பான்
நிற்குணமாம் பரவெளியைத் தெளிந்துபார்ப்பான்
சினமென்ற கோபமொரு நாளுமில்லான்
திருவேடச் சித்தர்களைப் பழித்திடான்காண். (433)

காணப்பா தாய்தந்தை தாரம்பிள்ளை
காதலுற மனம்வையான் சிவாலயங்கள்பாரான்
பேணப்பா வலஞ்சுற்றான் மாய்கையில்லான்
பிறதாபப் பேச்சுரையான் மவுனியாவான்
தோணப்பா தீனியுட வாசைகொள்ளான்
தோகையர்கள் தொல்யோனி யாசைகொள்ளான்
பூணப்பா பொன்னாசை தன்னையேலான்
போக்கற்ற விரதங்க ளனுஷ்டியானே. (434)

அனுஷ்டியான் கொக்கோக மதன்சாஸ்திர
மளவற்ற நால்வேதஞ் சிப்பிசாஸ்திர
மனுஷ்டியான் பரதமொடு வயித்தியசாஸ்திர
மப்பனே மாந்தரிகங் கெணிதசாஸ்திரம்
அனுஷ்டியான் ஆறுவகைத் தொழிலுங்கல்லா
னலமான சிவதீர்த்த மப்பேதென்பா
னனுஷ்டியா னண்டபகிரண்ட மெல்லா
மாசைவுற்ற மாய்கையென்பா னன்பன்தானே. (435)

தானென்ற வாணுவத்தை நந்திமூட்டி
தானெரிப்பான் வாயினாற் சிவயோகத்தால்
மானென்ற மகமாயி வாமதேவி
மாதாவைப் பூசிக்க கருமந்தப்பான்
தேனென்ற வெண்ணாமலகரி யுண்ண
தெளிவான சிந்தைபெற்றோ மொன்னார்கும்பிட்டுங்
கானென்ற செங்கையோன் கற்பங்கொள்ளான்
கர்மவான் தன்மையுள்ளான் செயலைப்பாரே. (436)

செயலான மகராச பிரமரிஷியாவான்
சித்தர்களெல்லா மகிழச் சித்தனாவான்
நலமான சாயுச்ய பதமாம்ஞான
நாலான பூரணத்தின் சூத்திரயோனி
மயமான சூத்திரனே மவுனஞானி
மற்றுள்ள முச்சாதி சரிதைவாழ்க்கை
மியல்பான சிவரூபந் தன்னைக்காணா
னிகத்திலே குருவென்றே யிருப்பார்காணே. (437)

காணப்பா சொல்லக்கேள் லோகவாக்கியக்
காரியகுரு வாயிருப்பார் தீட்சைசொல்வார்
பூணவே சேகண்டி மணியினோசை
பொற்றவள சங்கமொடு தொனிகளார்ப்ப
தோணவே ஓமகுண்டம் கர்மப்பூசை
சொல்லிமெக்கச் செய்திடுவார் கருவில்லாமல்
வேணபடி தீட்சையிலுங் கருவில்லாமல்
வெள்ளிசெய்யுங் கைமுறையில் கருவில்லாதே. (438)

கருவென்ன வென்குருவே சொல்லவேணுங்
கைமுறையில் கருவென்ன சொல்லவேணுந்
திருவென்னுந் தீட்சைகரு சொல்லவேணுஞ்
செப்பக்கேள் மாணாக்காள் குறியைச்சொல்வேன்
குருவென்னும் பரம்பராநந்தி மோனங்
குருகொண்ட சுழினையிலே கூர்ந்துபாரு
தருவென்றுங் கைமுறையிற் கருவைக்கேளு
சத்தியங்கே மேவுதற்குத் தங்கந்தானே. (439)

தங்கமன்றிக் கைமுறையைப் பணங்கள்காசு
தான்வைத்தே தீட்சைசெய்வார் சத்தியில்லை
வுங்களுக்காய் சொல்லிவிட்டேன் தீட்சைமூல
மொருகோடித் தனமீந்துஞ் சொல்லாரய்யா
சங்கையுடன் சற்குருவை யடுத்துக்காரு
சாபங்கள் தனையழித்து சாபஞ்சொல்லார்
மங்கையரைச் சேராதே மயலாகாதே
மாண்டிடவோ புத்திசொன்னேன் வாழென்றேனே. (440)

வாளுகிற காரணமாஞ் சீஷர்தன்னை
மகத்தான குருமார்க்கஞ் செய்யவேண்டி
வாழுகிற குருவெங்கே சமாதிதீட்சை
யடங்கியே பிரமவழி லிங்கமாகி
நீளுகிற சீஷருக்குக் குகையைக்கார்க்க
நேமநிஷ்டை யபிஷேகப் பட்டங்கட்டு
சூளுகிற காரணமா யாகசாலை
தோன்றவே கட்டிநடு குண்டஞ்செய்யே. (441)

செய்யப்பா சீஷருக்குப் பட்டங்கட்ட
தீட்சையிலே முப்பத்து ரெண்டுஞ்செப்பி
வையப்பா தங்கரவிக் கடகம்போடு
வாகான தங்கரவி பவுத்திரம்போடு
மெய்யப்பா தங்கரவிக் கொலுசுபோடு
விளங்கவே யஷ்டகர்ம மணிகள்பூணு
தையப்பா ருத்திராட்ச வாகுமாலை
தன்மணி யைம்பத்தாறு கோர்வைதானே. (442)

கோர்க்கையிலே

கோர்க்கையிலே முகமணிக்குக் குளிகைகேளு
கொத்தாகச் சரமெட்டுங் கூறக்கேளு
சேர்க்கையிலே யிடைக்கிடையிற் பவளஞ்சேரு
சிறப்பாக வாகுசரங் கோத்தொன்றுக்கு
பார்க்கையிலே நூற்றெட்டு மணிதான்சேர்வை
பண்பாகக் குளிகையெட்டு முகத்திற்சேரு
வேர்க்கையிலே மணிகட்டுப் பன்னிரண்டு
விடைக்கிடையிற் றங்கரவிக் குளிகைசேரே. (443)

சேரப்பா தங்கரவிக் குளிகைதானே
சித்திசெய்யும் விராகனிடை மணியாய்ச்சேரு
சேரப்பா விரலாழி வட்டத்துள்ளே
சிறக்கவே ரசகுளிகை தன்னைநன்றாய்
பாரப்பா தங்கத்தா லனைத்துக்கட்டு
பண்பாக வுள்க்கட்டு ருத்திராட்சங்
கோரப்பா பருமணியாய் முப்பத்திரெண்டு
கோர்த்திடையில் துளசிமணி கோர்த்துப்போடே (444)

போடந்த விருகலைக்கு குளிகைசேரு
புகழாக ருத்திராட்ச மாறுகட்டி
நாடந்த பொன்னாலே கவசந்தானும்
தங்கரவிக் கம்பியிலே கோர்த்துப்போட்டு
தேடந்த திருமேனிக் கடுக்கனப்பா
சிறப்பான ருத்திராட்சஞ் செட்டிலொன்று
கூடந்த ரசகுளிகை கடுக்கனொன்று
கோப்பான தங்கரவிக் கடுக்கனொன்றே. (445)

கடுக்கனிலே முச்சோடு காதில்போட்டுக்
கம்மீதில் ருத்திராட்சங் கோர்வையஞ்சு
வடுப்படா மணியாக நூறெட்டுஞ்சேர்
வகையாக அஞ்சுவகைக் கோர்வைக்குந்தா
னெடுப்பாக முகமணிக்கு குளிகைசேரு
விடைக்கிடையில் பணவிடையில் மணிதான்தங்கந்
தொடுப்பாக துளசிமணி கோர்வைரெண்டு
துலங்கவே நூற்றெட்டுஞ் சொல்லக்கேளே. (446)

கேளடா முகமணிக்கு குளிகைசேரு
கெட்டியா யிடைக்கிடைக்கு முத்துக்கோரு
வாளடா தங்கமொரு பலத்தகட்டில்
வளமாக நாற்பத்து முக்கோணத்தை
நாளடா வரைந்ததனை லலாடமீதில்
நந்திதிரு மூலரென்றே பட்டங்கட்டு
கோளடா வாராமல் ஓமகுண்டங்
குறிப்பான பிறவியென்று வளர்ப்பாயோட
மூளடா கும்பத்திற் குருவைத்தியானி
முத்திபெற வாருதிசெய் பின்புதானே. (447)

தானென்ற சீஷனங்கே தீர்த்தமாடி
தன்காலிற் குறடிட்டுக் காயாஷந்தான்
மானென்ற கவிசனமா யரைக்குக்கட்டி
மகத்தான புலித்தோலை தரித்துக்கொண்டு
தேனென்ற ஓம குண்டடந் தன்னிற்சேர்ந்து
தெளிவாகத் தெண்டனிட்டு குருவைநோக்கு
கோனென்ற கும்பநீர் புரோட்சித்தேதான்
குருநாதன் பதஞ்சென்னி கொள்கையாமே. (448)

ஆமப்பா நாற்காலிப் பலகைமீதி
லப்பனே சீடனைத்தா னிருக்கச்சொல்லி
தாமப்பா சாம்பிராணித் திலதம்போடு
சகலபிஷேக மெல்லாந் தானேசெய்து
வேமப்பா நெய்வேத்திய மெல்லாஞ்செய்து
வேக சச்சிதானந்த மூர்த்தியென்று
நாமப்பா நாமமென விபூதிசாத்தி
ரசகுளிகை விரலாழி தன்னைப்பூட்டே. (449)

தன்னையல்லோ போதித்தும் சிவனைநோக்கித்
தருவாகவே சூட்சந் தானாய்க்கொண்டு
பின்னையல்லோ தூபமொடு தீபங்காட்டி
பொற் கற்பூராலாத்தி தன்னைக்காட்டி
சொர்னபுஷ்பந் தன்னைச்சாற்றி யுபசாரங்கள்
சோடசங்கள் பதினாறுஞ் செய்தபின்பு
நன்னயமாய் சீஷரெல்லாந் தெண்டஞ்செய்ய
நந்திகுரு வபிஷேகப் பட்டங்கட்டே. (450)

கட்டியதோர் சீஷர்தொழுங் குருநாதன்தான்
கதிசீஷ பிள்ளைகட்குப் பூதிசாத்தி
நிஷ்டை யனுஷ்டானவிதி செய்யுங்காலம்
நேராகச் சீஷரெல்லாம் பொற்பூவைத்து
பட்டாபிஷேகமே பூண்டகுரு வென்று
பாதமலர் தனில்வீழ்ந்து முத்திசேர்வார்
திட்டமுடன் பின்பல்லோ சீஷர்க்கெல்லாஞ்
சிவனொளியைக் கண்ணுறவே தெரிசிப்பாரே. (451)

தெரிசிக்குந் தெரிசினைதான் சொல்லவேணுஞ்
சிவமான கொங்கணரே குருவேஐயா
பரிசிக்கு மாணாக்காள் சொல்லக்கேளு
பார்நந்தி சுழினையிலே உற்றுப்பாரு
பொருள்சிக்கும் பூரணத்தின் பெருமைகாணும்
பொன்னிருக்கும் வர்ணமெனப் பூணக்காணு
மருள்சிக்கு மோட்சகெதி நாமேயாச்சு
வானோடு மறுமையு மொன்றாய்க்காணே. (452)

காணப்பா சேதியொன்று சொல்லக்கேளு
கங்கையொரு பாத்திரத்தில் விட்டுக்கொண்டு
பூணப்பா மங்கென்றே யவ்வுங்கூட்டி
புகழான கடிகைரெண்டு பூணப்பாரு
தோணப்பா மண்டலத்தில் முகங்காணாது
சுகமாகப் பதினாறுமாதம் பார்த்தால்
பேணப்பா சடலமெல்லாஞ் சாய்கையில்லை
பிலத்துதடா காயத்தை யொளிபாயாதே. (453)

ஒளிகாண வொளிபாயா துடலமெல்லா
முத்தமனே சித்தமுறும் பதவியாச்சு
வெளிகாண வம்பரத்தே வெளியுமாச்சு
வேதாந்தஞ் சித்தாந்தம் வெளியாய்ப்போச்சு
களிகாண மூக்குநுனி மேலேகேளு
கயிலாச பார்நந்தி காணலாச்சு
சுழிகாண புருவமையத் தமரிலேறிச்
சுகாதீதச் சிலம்பொலியைக் காணலாச்சே. (454)

ஆச்சப்பா நால்வேத மாறுசாஸ்திரம்
அப்பனே பதினெண் புராணமெல்லாம்
போச்சப்பா வறுபத்துநாற் கலைக்கியானந்தான்
பொறியிட்ட பஞ்சுபோற் பூதமெல்லாம்
வாச்சப்பா சரசுவதி தோத்திரஞ்செய்வாள்
மகாலட்சுமி யடப்பங் கட்டிநிற்பாள்
பேச்சப்பா சீஷருக்கு தீட்சையோதி
பிலக்கவே நவசாபந் தீர்த்துச்சொல்லே. (455)

சொல்லடா வதன்பிறகு அஷ்டகர்மஞ்
    சுகமாகச் சித்தித்தா லனுஷ்டானத்தைச்
சொல்லடா காலைசந்தி மாலைசந்தி
    சுறுக்கான சடாதார தீட்சையோதி
சொல்லடா மேல்மூல வறுகோணத்தைச்
    சூட்சத்தைப் பற்றினபின் தூலத்தாறுஞ்
சொல்லடா மவுனத்தால் பூசைசெய்யத்
    தோன்றியபின் அஞ்சுவித தீட்சையோதே. (456)

ஓதப்பா பஞ்சபூதத்தின் வாழ்க்கை
    யுத்தமனே சண்முகமாம் வதனபூசை
ஓதப்பா விதுவெல்லாஞ் சித்தர்சொல்லா
    ருங்களுக்காய்ச் சொல்லிவிட்டேன் சித்தாய்போக
ஓதப்பா வதன்பிறகு தசமாந்தீட்சை
    யுரைத்தபின்பு சூட்சத்தைப் பற்றச்சொல்லி
ஓதப்பா மூலத்தைப் பற்றச்சொல்லு
    வுண்மையுடன் குருபதத்தை யூணச்சொல்லே. (457)

சொல்லான சுழினையிலே குருபாதந்தான்
    சூட்சமிது தூலமிது மூலமிதுமூன்றும்
வில்லானதே வளைந்தம்பு தைத்தாப்போல்
    வேதாந்த வெளியொளியை மேவிப்பார்க்க
வல்லாதே மனக்கண்ணா லலாடம்நோக்க
    வகைசொல்லிக் குளிகைதனை கையிலீந்து
வெல்லாதே போவதில்லை வேதாந்தத்தை
    மேவியே பாராட்டால் சாம்பலாச்சே. (458)

சாம்பலாய்ப் போகுமடா சடலந்தானுந்
    தையலார் மோகத்தால் சினங்களெல்லாம்
வேம்பாகுஞ் சுழினைதனைப் பற்றினாக்கால்
    வீணான பெண்கள்மயல் வெந்துபோச்சு
சோம்பாதே கோபமெல்லாம் வெந்துபோச்சு
    சுழினையென்ற நந்திசிவந் தன்னைப்பார்த்து
தாம்பான தாயென்றே வாமபூசை
    சாதித்தால் தையல்மயல் தருகிப்போச்சே. (459)

போமடா திரோதாயி மாய்கையெல்லாம்
புண்ணியரே யுங்களுக்குப் பூட்டுச்சொன்னே
னாமடா திறவுகோல் சுழினைநந்தி
அப்பனே சீஷருக்குச் சொல்லுமப்போ
தாமடா சகலத்தி னகலங்கேளு
சாத்திறேன் சாணெட்டு நீளமீராறு
ஏமடா சிரசுமேற் கூடாரம்போ
லெண்டிசையும் விரித்துநன்றா யிருக்கச்சொல்லே. (460)

இருக்கவே குருநாதன் முன்பாய்த்தானே
யிதமாகச் சீஷனைத்தா னடுக்கவைத்து
விருக்கவே யிடதுகுதி மூலத்தூட்டி
யின்பமாய் வலமுமிட மிருக்கச்சொல்லி
யிருக்கவே சத்திசிவ மொன்றாய்காண
வேந்திழையார் நாதமதிற் கற்பூரமிட்டு
விருக்கவே செவிநெஞ்சு கூடக்கூட்டு
யிருந்தபின்பு நாலாநாள் சித்தியாமே. (461)

சித்தியாந் தெளிவாக விறுத்துக்கொண்டு
சேரதிலே சாம்பிறாணித் தயிலம்நேராய்
முத்தியாங் கோரோசினை குங்குமப்பூ
முழங்கவே கால்படிக்குக் கழஞ்சிவீதம்
சத்தியாந் திருமந்திர மெட்டுங்கொண்டு
சாரவிடு தேனுமதி லெட்டுக்கொன்று
சுத்தியாக் கோஷ்டமது கழஞ்சுதன்னை
சுகமாகப் பெண்முலைப்பால் விந்திலாட்டே. (462)

ஆட்டுவாய் கீரிகட்டை துளசிச்சாற்றா
லரைத்துநீ யொருகழஞ்சு கூடப்போட்டு
மூட்டுவாய் குழம்பாகத் தயிலந்தன்னை
முத்திபெறச் சித்திபெற நெத்திக்கண்ணில்
தீட்டுவாய் திலதமங்கே யிட்டபின்பு
சீஷனுட விருவிழியுஞ் சுழினைபார்க்க
காட்டுவாய் குருநாதன் கடைக்கண்ணிற்றான்
கைவிரலா லமிழ்த்தியே யழுத்துவாயே. (463)

வாயப்பா சூரியன்போற் பிரகாசிக்கும்
 வட்டமாய்த் தோணுமடா மவுனந்தானும்
நீயப்பா நானப்பா வென்பதில்லை
 நிசித்தவிடஞ் சிவயோகம் தெரிசத்தேதான்
காயப்பா பழமாக விராசனைப்போல்
 களிந்து பத்திபெறுகருணை மிகவுமுண்டாந்
தாயப்பா வார்த்தைசொல்வாள் சொற்கமோட்சந்
 தான்லபிக்குங் குருநாதன் தன்னைப்போற்றே. (464)

போற்றென்று வுபதேசம் வாலைதீட்சை
 புரிவாகச் சொல்லியபின் யோகசித்தி
முத்தென்று முத்தியுடன் கடந்தஞான
 முடியடியாய்க் கண்டபின்பு மோட்சமாச்சு
மற்றொன்று மில்லையப்பா யோகம்ஞானம்
 வாச்சுதடா சீஷனுக்கு மருவிப்பார்த்து
சித்தென்ற சித்தெல்லாம் வசமாய்ப்போகுஞ்
 சிவயோகந் தன்னாலே தெளிந்துகாணே. (465)

தெளிவான சீஷருக்கு குருநாதன்தான்
 திரமாக மாத்திரைக்கோ லமுச்சாணுந்தான்
அழியாமல் யோகசாதனையின் வெட்டி
 வப்பனே வெள்ளிகட்டும் பிரம்பினோடு
பளியாத வுப்புசரஞ் சிவாக்கினைக்கு
 பத்தமுடனே யடுத்துப் பாதரெட்சை
கழியாமல் குறடீந்து வரைக்குக்கட்ட
 காயசித்தி ஞானசித்தி கருவைக்கேளே. (466)

கருவான தேதென்றால் தங்கரைநாண்பூட்டி
 காயாசங் கவுசன்மே தரிக்கச்சொல்லு
பெருவாழ்வு கண்டகோடாலி யீந்தே
 பிறதாபச் சட்டைமுனி மக்களென்றார்
இருவாவா வென்பார்கள் மடியில்வைத்தே
 யென்குருவே சுந்தரானந்தா வென்பார்
குருவாகக் கம்பிளியின் சட்டைபூண்டார்
 கொத்தடுமை யாவார்கள் சித்தர்தானே. (467)

தானென்ற சடலமெல்லாம் நாற்றபாண்டந்
தசைநரம்பு மூளைரெத்தந் தண்ணீர்பாண்டங்
கானென்ற புழுக்கூடு வெலும்புரோமங்
காமமோர் பொய்க்கூட்டுக் கடவாவீடு
பானென்ற வொன்பது திட்டிப்பாழாம்
பீற்றல் பாவமிகவே படைக்கும் விந்துநாதங்
கோனென்ற பஞ்சபாதகம் விளைக்குங்
குலமான தாபர சங்கத்திற்றானே. (468)

சங்கமென்றா லெழுதோற்றம் யோனிநாலு
தாபரத்தி னிலைபேரா மரங்கள்பூடு
வங்கமென்ற கலக்காவே யவராசைக்கு
மளவில்லைக் கரையில்லைக் கணக்குமில்லை
மங்காத மலக்கூடு காணத்தினாட்ட
மாயையிலே சென்றிருக்கு மனந்தானப்பா
வங்காரப் பெண்ணாசை தன்னைக்கொண்டு
மாளுகின்ற தின்னாசை வைக்குங்காணே. (469)

காணப்பா விச்சடல நம்பவேண்டாங்
கடைகெட்ட சென்மமிது நமனுக்கேது
பேணப்பா வென்குருவே போகர்பிள்ளை
பிறப்பிறப்போ வில்லையென்றீர் நமனங்கேது
மாணாக்காள் சொல்லக்கேள் விந்துநாதம்
வாயுவுடன் வைத்திடும்போ தமைத்தவாழ்க்கை
தோணப்பா சொல்லக்கேள் புரியஷ்டத்தால்
சுகமாக சீவகளை வீணாய்ப்போமே. (470)

வீணிலே போயங்கே சுழுத்திக்குள்ளாய்
மேலான நந்தியுட நமன்தான்காணும்
யூணிலே நமனிடத்தை யுற்றச்சொன்னீ
ருத்தமனே யென்குருவே சூட்சமென்ன
காணிலே னென்றாயே சொல்லக்கேளு
காலடா விடகலைதான் மதிதோய்ந்தாப்போல்
நாணிலே புருவமையக் கூற்றனில்லை
நாடினேன் சூட்சமதி லிறக்குந்தானே. (471)

இறக்குமிடம் பிறக்குமிடஞ் சொன்னீரய்யா
வெளிதல்ல லென்குருவே நன்றாய்ச்சொன்னீர்
மறக்குமிட மில்லையினி யுன்பதத்தைவாழ்த்தி
யெந்தன் சிரசுமேற் கொண்டேனய்யா
பிறக்குமிட முன்வயிற்றில் பிறந்தேனையா
பேரான கடைப்பிள்ளை யென்றுவாழ்த்தி
திறக்குமிட முபதேசஞ் செய்யவேணுந்
தேங்காயுந் தெட்சணையும் வைக்குறேனே. (472)

வைக்கிறேன் மேருப்போல மலைகளெல்லாம்
வாதத்தில் வேதையிடுஞ் சத்தபேதி
வைக்கிறேன் தாம்பிரமொடு தீபபேதி
வளமான கனபேதி பரிசபேதி
வைக்கிறேன் சிவபேதி வாயுபேதி
மகத்தான ரவிபேதி மதியின்பேதி
வைக்கிறேன் நவபேதி யொன்பதையுமய்யா
மவுனமென்ற தீட்சைக்குத் தியானந்தான்காணே. (473)

காணவே வேதைமுறை சொல்வேனன்றாய்
கயிலாச வர்க்கமடா நாங்களெல்லாம்
பூணவே யெங்களுக்கு வேதமார்க்கம்
பொன்மாத்து வாயிரத்தஞ்ஞூறு மோடும்
நாணவே நவபேதி யிடுவோம் நாங்கள்
நன்றான மரந்தொட்டு செடிபூமரங்கள்
காணியிடை செந்தூரங் கோடிமட்டுங்
கனகமாய்ச் செய்திடுவோ மின்னங்கேளே. (474)

கேளப்பா பூமியொடு வந்தரத்தின்மட்டுங்
கெடியாகப் பொன்னாக்கி விடுவோமாயை
வேளப்பா மாணாக்கா வென்னசொன்னாய்
மெய்யாவி பொருள்மூன்றுந் தத்தஞ்செய்தால்
வாளப்பா வென்றுசொல்லி மவுனதீட்சை
வைத்திடுவோந் தங்கத்தால் காப்புக்கட்டி
நாளப்பா வார்த்தையிட்டுக் காலம்போனால்
நான்மவுனஞ் சொல்வதெப்போ நாதவாழ்வே. (475)

நாதாந்தப் பேரொளியே குருவேஐயா
நந்தியருள் செய்யவோர் தாரைவாங்கும்
வேதாந்தப் பேரொளியே யாட்கொள்ளவேணும்
விளங்கவே கடைப்பிள்ளை யாகவாழ்வேன்
போதாந்த நற்சீஷா சொல்லக்கேளு
பூரணமா மதிபோலே கண்ணில்காணு
மாதாந்த மதின்கடிகை ரண்டுகேளு
மாதமென்றாற் பதினாறு மாதங்காணே. (476)

பதினாறு மாதந்தா னிரவிதன்னைப்
பற்றவே யுதையத்தில் ரவியைப்பாரு
செதினாறும் பார்க்கையிலே மவுனவீடு
செகமெல்லா மடங்கவே வொளிதான்வீசு
மதிகோ்டி வன்னமடா மாதளம்பூ
வன்னமலரொக்குங் காந்தியங்கே மனங்கூசாதே
விதினாறுங் கோடிபட்டம் பிரமமாகில்
விளங்கக்கே ளிப்பலன்தா னொடியொன்றாச்சே. (477)

ஆச்சப்பா விப்படியே மவுனமூல
மளவிட்டுக் கரைகண்டோ ரில்லையப்பா
நீச்சப்பா மவுனத்தை யாருஞ்சொல்லார்
நீயெனக்குக் கடைப்பிள்ளை யாகச்சொன்னேன்
மூச்சப்பா வற்றிடத்திற் குளிகைபோட்டால்
மூவுலகு முருக்கம்பூ வர்னமாகும்
வாச்சப்பா அகார உகாரத்தோடு
மகார சிவமாயிருந்த வஞ்சும்பாரே. (478)

அஞ்செழுத்து மூன்றெழுத்தி லடங்கிப்போச்சு
அப்பனே மூன்றெழுத்தும் யோகமாச்சு
விஞ்சையிது சாயுச்சிய மிகுந்தவீடு
விண்ணாட்டங் குடியிருக்கு மில்லமாச்சு
சஞ்சீவி யுடற்கூடு விட்டுப்பாயுஞ்
சாரூபம் பெற்றிருந்த மவுனவாழ்க்கை
தஞ்சமென்ற மூன்றெழுத்தின் குறியைக்கேளு
சாத்துறே னிடகலை உகாரந்தானே. (479)

தானென்ற பின்கலை யகாரவீடு
தாயிருந்த மகாரமடா சுழினைவீடு
கானென்ற சுழினையின்மேற் புருவமையத்தே
கண்ணொளியாய் விந்துவுட நாதங்காணு
மானென்ற வாமியடா புருவமேலாய்
வட்டங்க ணாடிவிழி மருவிப்பார்க்கில்
கோனென்ற வட்டத்தில் நடுவேநின்ற
குமரியவள் வாலையடா சிறுபெண்காணே. (480)

சிறுபெண் போலேயிருப்பா ளாத்தாள்பாரு
செகமெல்லா மவளுடைய கூத்துக்கூத்து
வுறுதியுடன் சொன்னீரே கொங்கணரே அய்யா
வுருவமோ அருவமோ சொல்லவேணும்
பொறுமையுறிற் சுரூபமென்னில் வடிவுசொல்லும்
பூரணமே யென்குருவே பூணுவேனான்
வெறுமைதனைத் தீர்த்தொளிக்கு மவுனபீடம்
வேதாந்த நிற்குணத்தைச் சொல்லக்கேளே. (481)

கேளப்பா வுருவமென்றா லழிந்துபோச்சு
கிரிகையது யோகிக்கு வெளியாய்க்காணும்
வாளப்பா சொரூபமென்றா லருணகாந்தி
மவுனமென்றால் சுழினையிலே மனதூணிப்பாரு
வேளப்பா நிற்குணமே சுழினைநாடி
மெய்யான நிருமலமே மூலசூட்ச
மாளப்பா நிரஞ்சனமே யொளிவுதேக
மப்பனே கத்திநடு வோடும்பாரே. (482)

ஓடுகிற கத்தியது தூளாய்ப்போகு
மோகோகோ வேதாந்த ஞானதேகம்
நாடுதற்குப் பூரணத்தை நாடிநாடி
நமனானோன் சுழினையிலே மாண்டுபோனா
னாடுகிற கூத்தெல்லாம் பூரணத்தின்கூத்து
வண்டரண்டத் தடாகமட்டும் வளைத்தேயாடு
தேடுகிற தேட்டெல்லாம் ஞானத்தேட்டு
சித்தமுற மவுனத்தின் மோட்சந்தானே. (483)

தானென்ற மோட்சமதாஞ் சாயுச்சியத்திற்
தானேறி நின்றவனே யோகஞானி
தேனென்ற ஞானியென்றால் சடலம்போனான்
சிவநிலையில் நின்றிடுவான் பரத்திற்சேர்வான்
கானென்ற பரகெதிதான் பெற்றாராகில்
கயிலாசங் குடியிருப்புக் கனகதேக
மானென்ற யோகியென்றால் சடலம்பேணி
வாய்வதனை யுண்டிடுவான் கற்பந்தானே. (484)

கற்பந்தா னனந்தவரைக் கோடியாக
கயிலைசத்த சாகரமும் கருதிப்போவான்
கற்பந்தா னாதிதொட்டு வந்தமட்டுங்
கைமுறையாய்த் தவறாது தின்பாரய்யா
கற்பந்தா னவமிருத்து தனையதட்டி
கைமுறையா யறுசுவையுந் தனத்திப்போட்டு
கற்பந்தான் கொண்டோர்க்கு குருவைக்காத்து
கமலிரெண்டுந் தோணாது கருதுவானே. (485)

கருதியே வாலைமுத லஞ்சுதீட்சை
கட்டாக வுபதேசஞ் செப்பக்கேட்டு
குருவினிழற் சாய்கையென்பார் வைத்துக்கொண்டோர்
கற்பசித்தி யோகசித்தி ஞானசித்தி
பெருவாழ்வு சித்தனெனப் பேருஞ்சொல்வார்
பிதற்றாதே குருபதத்தைத் தொழுதுகாக்கில்
கருவிருந்த விடங்காட்டி நாதங்காட்டி
கயிலாச தேகமாய் வாழென்பாரே. (486)

பாரப்பா குருவுக்குச் சீஷன்தானோ
பாவங்கள் தனைவிளைத்தால் நரகஞ்செல்வான்
சேரப்பா குருவுக்குச் சீஷன்தானே
செய்கருமந் தனைவிளைத்தால் சொற்கமெய்தும்
வாரப்பா குருவுக்குச் சீஷன்தானே
வளமாக மனதுவர நடந்தானாகிற்
பேரப்பா தேட்டுடனே யெமதூதாள்தான்
பின்பாரா தோடுவர்காண் பேணுவாயே. (487)

பேணுவாய் காரணமாங் குருவைக்கண்டால்
பிதற்றாம லொருமனதாய் வாரம்வைத்து
பூணுவாய் மோட்சபதந் தன்னையீவார்
பூதலத்தில் மேனாம்பாய் போகாதேநீ
காணுவாய் ராசாக்கள் கருதிக்காத்தால்
காசினியெல்லாஞ் செனிக்குந் தேவநீதி
தோணுவாய் தீட்சைபெற்றால் ராசாக்கடானுஞ்
சொற்கபதந் தனைச்சொல்வார் பாவம்போச்சே. (488)

போச்சென்று சொன்னீரே கொங்கணரேஅய்யா
புகழாக நானுமொரு ராசபுத்திரன்
ஏச்சென்ற பாவமென்றா லிலக்கோவில்லை
யிடும்பனென்ற கெடும்புத்தி கணக்கோவில்லை
வாச்சென்ற பாவமெல்லா மாளுமோதான்
சற்குருவே சீவகளை சொற்கமாமோ
காச்சென்ற சுழினையிலே நந்திகாணிற்
கரைகொள்ளாப் பாவமெல்லாங் கழன்றுபோமோ. (489)

போமப்பா ராசாவை நம்பினபேர்கோடி
புகழாக வவரவரே செய்பாவங்க
ளாமப்பா ராச்சியங்கள் செய்பாவங்க
ளப்பனே விதுவெல்லா மிலக்கில்லாமல்
தாமப்பா ராசாவினிடத்திற் சாருந்
தவறுண்டு போவதுதா னருமைமெத்த
வேமப்பா சுழிமுனையிற் காந்திபெற்றால்
வெறும்பாழாய்ப் போகுமடா பாவந்தானே. (490)

தானென்ற கொடும்பாவந் தீர்க்குமாசான்
தருமத்தின் வழிசொல்லி கருணைவைப்பான்
ஊனென்ற மந்திரமே யுபதேசித்து
யுண்மையுடன் சுழினையிலே யிருக்குமென்று
கோனென்ற சிவரூபங் கண்ணிற்காட்டி
கோபமென்ற முனைபோக்கி யாசைபோக்கி
நானென்ற வாணுவங்கள் தன்னைப்போக்கி
நாடுவார் குருநாதன் மோட்சந்தானே. (491)

நாடுகின்ற சுழிமுனையிற் குறியுஞ்சொன்னேன்
நடுவான புருவமய்ய வொளியுஞ்சொன்னேன்
தேடுகின்ற சித்தாந்த கிரிகைசொன்னேன்
திருட்டுவித்தைக் குருக்களிட திறமுஞ்சொன்னேன்
பாடுகிற வேதாந்தப் பண்புசொன்னேன்
பரஞான முத்திரையும் பலமாய்ச்சொன்னேன்
ஆடுகிற புரியஷ்டக் கருத்துஞ்சொன்னே
னாதார மாறுமுதற் பரஞ்சொன்னேனே. (492)

பரமான லலாடத்தின் போதஞ்சொன்னேன்
பசுபதி பாசஞ்சொன்னேன் தசகாரியமுஞ்சொன்னேன்
திறமான யோகத்தின் மாத்திரைகள் சொன்னேன்
தேவியுட பூசைவிதி கற்பஞ்சொன்னேன்
சரமான விடகலையும் பின்கலையுஞ்சொன்னேன்
தலைகீழாய்க் கொண்டிருந்த மூலஞ்சொன்னேன்
புரமான முப்புரமுப்பாழுஞ் சொன்னேன்
பூரணத்தி னிலைசொன்னேன் பொருட்சொன்னேனே. (493)

பொருளோடு அருள்சொன்னே னுருவஞ்சொன்னேன்
போதத்தின் சொரூபமொடு அருவுஞ்சொன்னேன்
திருவான மகாரத்தின் மவுனஞ்சொன்னேன்
சிவனோடு சத்திபிரகாசஞ் சொன்னேன்
கருவான கண்ணாட்ட மனக்கண்சொன்னேன்
கண்ணொளியால் விண்ணொளியைக் காணச்சொன்னேன்
னிருவினையாம் பிறப்பிறப்பு மார்க்கஞ்சொன்னேன்
யோகமொடு பரஞ்சொன்னேன் ரவிசொன்னேனே. (494)

ரவியோக மதியோக மொளியின்யோகம்
நந்தியோக மிதுநாலு நன்றாய்ச்சொன்னேன்
தவியாமற் சடலத்தின் சாய்கைசொன்னேன்
சரிதையொடு கிரிகைரெண்டுந் தள்ளச்சொன்னேன்
சிவமான தீட்சையிலே மூலசூட்சஞ்
செப்பினேன் தூலமொடு வட்சரங்கள்
அவமான காரியக்குருக்களையுஞ் சொன்னே
னஷ்டகர்மஞ் சித்திசொன்னே னகஞ்சொன்னேனே. (495)

அகமான சூட்சமாந் தேகஞ்சொன்னே
னழியாத முத்திசொன்னேன் சீடர்சேர்க்கச்
சுகமாகச் சாயுச்சிய சூத்திரஞ்சொன்னேன்
தோணவே நட்சத்திர ராசிசொன்னேன்
பகமான வாமத்தின் தேவிபூசை
பதமான நாற்பத்து முக்கோணஞ்சொன்னேன்
மகமொக்குங் குண்டலித்தா யோமஞ்சொன்னேன்
மலியாகக் கலியினிட வளஞ்சொன்னேனே. (496)

வளமான தீட்சைவைக்க விரதமெல்லா
மவுனம்போ லொளியாமல் வெளியாச்சொன்னே
னுளமான யிச்சத்தி நாமஞ்சொன்னே
னுரைக்கவே நாதவிடை லகிரிசொன்னேன்
விளமான குருவுக்கு லட்சணமுஞ்சொன்னேன்
விருதான கோபங்கள் தள்ளச்சொன்னேன்
தளமான முக்குளிகை மூலஞ்சொன்னேன்
சாதனைக்கும் விரதமொடு நாள்சொன்னேனே. (497)

நாளோடு லக்கினங்கள் பட்சஞ்சொன்னேன்
நாடவே யனுஷ்டான விதிகள்சொன்னேன்
வாழவே குருசூட்ச மார்க்கஞ்சொன்னேன்
வதனத்தி லாதார மாறுஞ்சொன்னேன்
வேளான சுயம்பினிலே பிட்சையேற்ற
வேதத்தின் சங்கரண வேடஞ்சொன்னேன்
பாளான தத்துவங்க ளறியச்சொன்னேன்
பஞ்சபாதக பாவம்பலஞ் சொன்னேனே. (498)

பலமான புண்ணியத்தின் சொற்கஞ்சொன்னேன்
பாழான நரகத்தின் வகையுஞ்சொன்னே
னலமான சிதம்பரத்தின் பூசைசொன்னே
னாடாத சீஷனுட குணமுஞ்சொன்னேன்
புலனாக மூலருட பூசைசொன்னேன்
புகழ்பெறவே சாபங்கள் நிவிர்த்திசொன்னே
னலையாம லப்பியாச மார்க்கஞ்சொன்னே
னப்பனே பாசம்விட்ட குறைசொன்னேனே. (499)

விட்டகுறை யாலேதான் தேவிதோத்திரம்
  விளம்பினேன் பொறிபுலன்கள் கரணம்வாயு
பட்டணமா மண்டலங்க ளண்டபிண்டம்
  பரமபதம் பெறவேண்டிச் சொன்னேனய்யா
நிஷ்டையெல்லா மொன்றான ஏகவஸ்து
  நெடுமாலி னட்சரமே மவுனபீடம்
வட்டமதென் றோரெழுத்தை யறியச்சொன்னேன்
  மகத்தான ரவிவட்ட மானவாறே. (500)

வாறான சாஸ்திரத்தி லாறுகாண்டம்
  வகையாகக் குறுக்கியதில் மூன்றுகாண்டங்
கூறான கடைக்காண்ட மிந்தஞானங்
  கொட்டினே னைஞ்ஞூறு சீஷர்க்காக
வீறான நடுக்காண்ட மஞ்ஞூறு சொன்னேன்
  வேதையிட்டு முதற்காண்ட மஞ்ஞூறு சொன்னேன்
தாளான முத்தருக்கு மூன்றுசூஸ்திரந்
  தப்பாமற் சோடசமுந் தெளிந்து முற்றே. (501)

கொங்கணவர் கடைக்காண்டம் - 500.
முற்றிற்று.

☆☆☆☆☆

கொங்கணவர்

அருளிய

நடுக் காண்டம்

க
டை
க்
கா
ண்
ட
ம்

தாமரை நூலகம்
எண்.7, என்.ஜி.ஓ. காலனி, வடபழனி, சென்னை – 600 026.